R.R. No. 322
A50 (B)

வெளியீடு—9—7—1968]
Issued—9—7—1968]

MADRAS STATE ARCHIVES
6458/L
FORT ST. GEORGE, MADRAS

# தமிழக சட்டப் பேரவை நடவடிக்கைகள்
# MADRAS LEGISLATIVE ASSEMBLY DEBATES

777

## பணித்துறை வெளியீடு
## OFFICIAL REPORT

சனிக்கிழமை, 1967 நவம்பர் 25
Saturday, 25th November 1967

தொகுதி VI—எண். 2
Volume VI—No. 2

©
தமிழக அரசு
1968
©
GOVERNMENT OF MADRAS
1968

சட்டப் பேரவைத் துறை
சென்னை-9
Legislative Assembly Department
Fort St. George, Madras-9

1, 31 N67
N67:6.2
64979

V211,31 N67
N67.6.2

## உள்ளடக்கம்.


| | பக்கங்கள் |
|---|---|
| 1 வினாக்கள்-விடைகள் .. .. .. .. .. | 103–137 |
| 2 அறிவிப்புகள்— | |
| (i) பேரவை அலுவல் .. .. .. .. | 137 |
| (ii) தமிழ்நாடு நில அபிவிருத்திக் குழுவிற்குத் தேர்தல் .. .. .. .. .. | 138–139 |
| (iii) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா .. .. .. .. .. .. | 139 |
| (iv) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா .. .. | 139–140 |
| (v) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்த மசோதா | 140 |
| 3 அரசுனர் தீர்மானம்— | |
| தமிழ்நாடு நில அபிவிருத்திக் குழுவிற்குத் தேர்தல் .. | 138 |
| 4 அரசினர் மசோதாக்கள்— | |
| (1) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா .. .. .. .. .. .. | 139 |
| (2) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா .. .. .. | 140 |
| (3) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்த மசோதா .. | 140 |
| 5 1967–68-ம் ஆண்டு தமிழக மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி .. .. .. | 141-239 |
| 6 பேரவை முன் வைக்கப்பட்ட ஏடுகள் .. .. .. | 239–240 |




64979

## தமிழக சட்டப் பேரவை

---

*சனிக்கிழமை, 1967 நவம்பர் 25*

*சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. சி. பா. ஆதித்தனார் அவர்கள் தலைமையில், பேரவை கூடியது.*

### 1. வினாக்கள்—விடைகள்

#### வெள்ளிக் குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப் பேரவைக் கூட்டத்தின் முதல் அலுவல் "வினாக்கள்—விடைகள்". உறுப்பினர்கள் கேட்கின்ற வினாக்களுக்கு மாண்புமிகு அமைச்சர்கள் விடை அளிப்பார்கள்.

*வினா எண்கள் 430-லிருந்து 433 வரை தள்ளிவைக்கப்பட்டன.*

#### *Medium of instructions in Colleges.*

* 434 *Q.*—THIRU K. VINAYAKAM :
THIRU K. CHEEMAICHAMY :
THIRU V. K. KOTHANDARAMAN :
THIRU R. KARUPPIAH :
THIRU A. M. RAJA :
THIRU R. PONNAPPA NADAR :
} Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government proposes to introduce the Regional Language as the medium of instruction at the University Degree Course level from the next academic year 1967–68?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : நடப்பு ஆண்டிலிருந்து பி.ஏ. படிப்பில் கலைப்பாடங்களைத் தமிழிலும் கற்பிக்கும் முறையை இயன்ற அளவுக்கு எத்தனை கல்லூரிகளில் செயலுக்குக் கொண்டு வர முடியுமோ அத்தனை கல்லூரிகளிலும் செயலுக்குக் கொண்டுவரக் கருதப்பட்டுள்ளது.

THIRU K. VINAYAKAM : Whereas English language is considered to be a window through which one can see the entire world and world affairs and whereas knowledge of English language makes a man perfect and makes him a first class citizen of the world, may I know why this Government should hurry with the policy of introducing the regional language at the college level?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கல்லூரிப் பாடங்களைத் தமிழிலே சொல்லிக் கொடுக்கவேண்டுமென்ற கருத்து அவசரமாக எடுக்கப்பட்ட முடிவு அல்ல. 1960-லே முறைப்படியாக எடுத்துக்கொள்ளப்பட்ட முடிவு. ஆங்கில அறிவு ஒவ்வொருவருக்கும் இருக்கவேண்டும் என்பதை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுகிறது. அந்த முறையில் படிப்படியாக ஆங்கிலத்தோடுகூட தமிழிலும் பாடங்களைப் பயிற்றுவிக்கவேண்டும் என்ற முறையில் புகுமுக வகுப்புகளில் கலைத் துறையில் சொல்லிக்கொடுக்கப்பட்டு வருகிறது. பி.ஏ. வகுப்பிலும் கலை, அறிவியல் துறைகளில் படிப்படியாக முயற்சி எடுக்கப்படுகிறது.

**திரு. கே. வினாயகம் :** கல்வித் துறையைப் பொறுத்தவரை கடந்த 20 ஆண்டுகளாக கல்வி அமைச்சர்களாக வருகிறவர்கள் கல்வித்துறையிலே புதிய மாறுதல்கள் செய்வது சரித்திரமாகப் போய்விட்டது. அதனாலே எந்தவிதப் பயனும் இல்லை என்று மாணவர்கள் சொல்வது இந்த அரசுக்குத் தெரியுமா ? தமிழைப் புகுத்த வேண்டுமென்று சொன்னது மாணவர்களாக எடுத்துச் சொன்னதா ? அல்லது அதைப் புகுத்தவேண்டுமென்ற அரசியல் வாதிகளின் ஆசையின் விளைவாக வந்ததா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** பாடங்களை வகுக்கின்ற முறை மாணவர்கள் யோசனைப்படி கையாளப்படுவதில்லை; கல்வித்துறை வல்லுநர்களின் பரிசிலனையின் பேரில்தான் செய்யப்படுகிறது. கல்வித்துறைக்கான கன்சல்டேடிவ் கமிட்டியிலே பல கல்வித்துறை வல்லுநர்களும், பல்கலைக்கழகத் துணைவேந்தர்களும் சேர்ந்து ஏகமனதாக ஏற்றுக்கொண்டு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தமிழ் மொழியிலே பாடங்களைச் சொல்லிக்கொடுப்பது என்பது சிறந்த குறிக்கோள்; ஆனால், அவசரப்பட்டு எந்த முடிவும் எடுக்கப்படவில்லை. படிப்படியாக அதற்கான முயற்சிகள் எடுக்கப்படவேண்டுமென்ற அடிப்படையிலேதான் தமிழிலே சொல்லிக் கொடுக்கின்ற முயற்சி மேற்கொள்ளப்படுகின்றது.

**திரு. கரு. சிமைச்சாமி :** சார், சமீபத்திலே நடந்த ஆங்கில மொழி இருக்கவேண்டுமென்று சொல்லக்கூடிய மாநாட்டிலே ஆங்கிலம் காலவரையறையின்றி நீடிக்கவேண்டுமென்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இது அரசாங்கத்திற்கு வந்ததா ? இதைப்பற்றி அரசு என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்தலைவர் அவர்களே, கல்வியில் ஆங்கிலத்தினுடைய இடம் எது என்பதை அறிவதற்காகக் கூட்டப்பட்ட அந்த மாநாட்டிலே நானும் கலந்துகொண்டு அதைப் பற்றி இந்த அரசின் கொள்கை என்ன என்பதை விளக்கிக் கூறியிருக்கிறேன். தமிழ் மொழியிலே பாடங்களை சொல்லிக்கொடுப்பதற்கான முயற்சிகள் எடுக்கும்போது காலவரையறை எதுவும் இன்றி படிப்படியாக எடுக்கப்படும். அதேமாதிரி ஆங்கிலமும் என்றென்றும் இருக்கத்தக்க வகையில் மூன்றாவது வகுப்பிலிருந்து ஆங்கிலத்தைச் சொல்லிக்கொடுக்கக்கூடிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்று கூறப்படுகிறது.





**திரு. வி. கே. கோதண்டராமன் :** தாய் மொழியிலே பயிற்சி பெறுவதன் மூலமாக பெரிய மேதாவிகளாக மாறியிருக்கிறார்கள் என்பது வெளிநாடுகளில் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. ஆகவே, அந்த அடிப்படையில் உடனடியாக தமிழ் மொழியிலே பயிற்சி கொடுப்பதற்கு—படிப்படியாக என்று சொன்னால் எத்தனை வருஷங்கள் என்று சொல்ல முடியாது—எவ்வளவு சீக்கிரத்தில் முடியுமோ அவ்வளவு சீக்கிரத்திலே ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கனம் உறுப்பினர் கூறுகின்ற அத்தகைய கருத்தின் அடிப்படையில்தான் தமிழ் மொழியிலும், வட்டார மொழியிலும் பாடமொழியிருப்பது நலம் என்று முயற்சி எடுத்துக் கொள்ளப்பட்டுவருகிறது. படிப்படியாக என்று சொன்னதற்குக் காரணம் புத்தகங்களைத் தயாரிக்க வேண்டும், சொல்லிக்கொடுக்கின்ற ஆசிரியர்கள் பயிற்சி பெற வேண்டும். தமிழிலே சொல்லிக் கொடுப்பதற்குத் தேவைப்படுகின்ற அளவிற்கு பல துறைகளில் தமிழில் நூல்கள் இல்லாமல் இருக்கின்றன. ஆகையால் படிப்படியாக என்று சொல்லும்போது முயற்சிகள் ஆண்டுக்கு ஆண்டு எந்தெந்த வகையிலே மேற்கொள்ளப்படும் என்பது யோசிக்கப்பட்டுவருகிறது.

**திரு. ஆர். கருப்பையா :** தற்போது தமிழைப் போதனா மொழியாகக் கொண்ட இடங்களில் மாணவர்கள் போதுமான அளவு அட்மிஷனாகவில்லை. இன்னும் பல இடங்களில் காலியாக இருப்பதால் தமிழை போதனா மொழியாக ஏற்றுக்கொள்ளாத காரணத்தால் ஆங்கிலமும் தொடர்ந்து போதனா மொழியாக இருக்கவேண்டுமென்ற கருத்தை இந்த அரசு ஏற்றுக்கொள்ளுகிறதா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அவைத்தலைவர் அவர்களே, ஒதுக்கப்பட்ட 7,500 இடங்களில் 4,600 மாணவர்கள்தான் தமிழ் பாட மொழியில் சேர்ந்தார்கள். அதிகமாக ஒதுக்கப்பட்டிருக்கிற அளவிற்கு மாணவர்கள் வரவில்லை என்ற குறைபாடு இருக்கிறது. அவர்களுக்குச் சலுகை தருவதற்காக தமிழைப் படித்து பட்டம்பெற்று வருகிறவர்களை அரசாங்க உத்தியோகங்களில் எடுத்துக்கொள்வதற்கு எந்தெந்தத் துறைகளில் தமிழை எடுத்துக்கொண்டிருக்கிறோமோ அந்தந்தத் துறையிலே நியமிப்பதற்கு முதலிடம் தரலாம் என்று யோசிக்கப்பட்டு வருகிறது. இதைப்பற்றி திட்டவட்டமான முடிவு எடுத்த பிறகு அறிவிக்கலாம்.

**திரு. ஏ. எம். ராஜா :** தமிழைப் பயிற்சி மொழியாக்கும் முயற்சியில் அரசு நடவடிக்கை எடுத்துவரும் நேரத்தில் பல்கலைக் கழகத்தின் துணைவேந்தராக தமிழில் ஆர்வம் உள்ள ஒருவரை நியமிக்க அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** எந்த சூழ்நிலையில் துணைவேந்தரை மாற்றினால் என்ன நிலைமை ஏற்படும் என்று ஆராய்ந்து நிறைவேற்றவேண்டும். அப்படி மாற்றுவதினால் அது நிறைவேறும் என்று சொல்வதற்கில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. ஆர். பொன்னப்ப நாடார் கேட்பதற்கு உரிமையுள்ள துணை வினாவை அவர் இருக்கையில் இல்லாததால் திரு. பி. ஜி. கருத்திருமன் கேட்பார்.

**திரு. பி. ஜி. கருத்திருமன் :** தமிழ் போதனா மொழியாகக் கூடிய நிலைமையிலே விஞ்ஞான பாடங்களை ட்ரான்ஸ்லேஷன் செய்து புத்தகங்களை எழுதுவதன் மூலமாக அதற்கான ஊக்கமும் ஆக்கமும் கொடுக்க முடியும். அந்த வகையில் இலக்கியத்திலே மட்டுமின்றி விஞ்ஞானத்திலும் ஆர்வம் காட்டும் வகையிலே இரட்டிப்பு மடங்கு ஊதியத்தையும் கொடுப்பதற்கு சர்க்கார் யோசிக்குமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** அறிவுத்துறையில் பட்டம் பெற்றவர்கள் அதிகமான பேர்கள் வரவேண்டும் என்பதற்காகத்தான் (ப்யூரோ ஆப் டமில் பப்ளிகேஷன்ஸ்) தமிழ் வெளியீட்டுக்கழகம் ஒன்று அமைத்து அதன் மூலம் 180 புத்தகங்கள் வெளியிட்டிருக்கிறது. அறிவியல் துறையில் தமிழ் மொழியில் பயிற்சி பெறுவதற்கான ஊக்கமும் ஊதியமும் அளிக்கப் பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : Hon. Speaker, Sir, I am sure that the Government is aware that the Central Government's educational policy of advocating colleges to have the regional language medium as enunciated by the Hon. Dr. Trigun Sen is a very dangerous step because with regional language at the collegiate level, students will unlearn what little English they have already learnt. In view of this and in view also of the fact that this State Government wants retention of English at the Centre, which has been very clearly specified, will this Government come forward and tell us what concrete steps they are going to take to see that English is maintained at the collegiate level in addition to Tamil so that students may attain a high standard of learning and be able to correspond in English so far as the Central Government's work is concerned?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, இந்திய அரசினுடைய கல்வி அமைச்சர் அவர்கள் சில கருத்துக்களை வெளியிட்டிருக்கிறார்கள். அதைப்பற்றி திட்டவட்டமான முடிவு எதையும் இந்திய அரசு மேற்கொள்ளவில்லை. மாநில அரசினுடைய கருத்துக்களை இந்திய அரசு கேட்டுக் கொண்டு வருகிறது. கல்வி அமைச்சர்கள் மகாநாட்டில் இந்தக் கருத்துக்கள் எடுத்துச் சொல்லப்பட்டன. ஐந்து ஆண்டு காலத்திற்குள் பல்கலைக்கழகப் படிப்பில் எல்லா பாடங்களையும் அந்தந்த வட்டார மொழிகளிலேயே நடத்த வேண்டும் என்ற ஒரு திட்டம் கொண்டுவரப்பட்டது. தமிழக அரசின் சார்பில் நான் சொன்னது





என்னவென்றால், அந்தக் காலவரைக்குள் எந்தப் பணியும் நிறைவேற முடியாது. நம்முடைய குறிக்கோள் இறுதியில் தாய் மொழியிலேயே, வட்டார மொழியிலேயே பல்கலைக்கழக மாணவர்கள் படிப்பைப் பெறவேண்டும் என்பதுதான். அது பல ஆண்டு காலத்திற்குப் பிறகு தான் நிறைவேற முடியும். படிப்படியாக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆங்கிலத்தைப் பொறுத்த வரையிலும் பல மாநில அமைச்சர்களும் பல்வேறு கருத்துக்களை எடுத்துத் தெரிவித்தார்கள். சில மாநில அரசு அமைச்சர்கள் ஆங்கிலத்தை அறவே நீக்கிவிட வேண்டும் என்ற கருத்தைத் தெரிவித்தார்கள். சில மாநில கல்வி அமைச்சர்கள் 6-வது வகுப்பிலிருந்து தொடங்கி 8-வது வகுப்போடு ஆங்கிலத்தை நிறுத்திவிடவேண்டும் என்று சொன்னார்கள். இன்னும் சில கல்வி அமைச்சர்கள் 9-வது வகுப்பிலிருந்து தொடங்கி 11-வது வகுப்பில் ஆங்கிலத்தை நிறுத்திவிடவேண்டும் என்று கூறினார்கள். தமிழக அரசு ஏற்கனவே கொண்டிருந்த கொள்கை அடிப்படையில், இது வரையில் கடைப்பிடிக்கிற கொள்கையின் அடிப்படையில், மூன்றுவது வகுப்பிலிருந்து தொடங்கி கட்டாயமாக இரண்டாவது மொழியாக ஆங்கிலம் சொல்லிக்கொடுக்கப்படும் என்ற கருத்து உடனடியாக தமிழக அரசினால் ஏற்றுக்கொள்ளப்படும் என்று கல்வி அமைச்சர்கள் மாகாநாட்டில் நான் திட்டவட்டமாக எடுத்துச் சொல்லியிருக்கிறேன். அதற்குப் பிறகு கருத்துக்களை கேட்டறிந்த போதும் கூட, இதே கருத்துத்தான் தமிழக அரசின் கருத்து என்று திரு. திருகுண சென் அவர்களுக்கு எழுதி அனுப்பியிருக்கின்றேன்.

**திரு. எஸ். இராமச்சந்திரன் :** பேரவைத் தலைவர் அவர்களே, புட்டிப் பாலைவிட தாய்ப் பாலே சிறந்தது என்பது இயற்கை நியதி. கிண்டி பொறி இயல் கல்லூரி ஆசிரியர்களுக்கு செத்துப்போன சமஸ்கிருத மொழியை கட்டாய பாடமாக வைத்திருப்பது சர்க்காருக்குத் தெரியுமா? அதை உடனடியாக நீக்க சர்க்கார் உத்தரவிடுமா?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** கிண்டி பொறி இயல் கல்லூரியில் சமஸ்கிருத மொழியை கட்டாய பாடமாக வைக்கவில்லை. அங்கே ஆராய்ச்சி கூடத்தில் ஆராய்ச்சி செய்வதற்காக விரும்புகிறவர்கள் மட்டும்தான் சமஸ்கிருத மொழியை எடுத்துக் கொள்கிறார்கள். அந்த வகையில் என்ஜினியரிங் தத்துவத்தைப் பற்றி தெரிந்து கொள்வதற்காக சில மேற்கோள்களுக்காக சமஸ்கிருத மொழி பயிற்சி ஆசிரியர் ஒருவர் அங்கே வைக்கப்பட்டிருக்கிறார். கட்டாயமில்லை. விருப்ப பாடம் தான். ஓய்வு நேரத்தில் சொல்லிக் கொடுக்கிற நேரத்திற்கு மட்டும்தான் ஊதியம் பெறுகிற அளவில் சமஸ்கிருத ஆசிரியர்கள் விளக்கம் தருகிறார்கள். கட்டாய பாடமாகப் புகுத்தவில்லை.

**திரு. எ. பாலசுப்பிரமணியன் :** தமிழகத்தைப் பொறுத்தவரையில் கல்வி, நிர்வாகம், நீதி ஆகிய மூன்று துறைகளிலே தமிழை தனக்குள்ள உரிய மொழியாகப் பெறுவது ஆங்கிலத்திலிருந்து

[1967 நவம்பர் 25

பெற வேண்டியிருக்கிறது என்ற விஷயத்தை மனதில் கொண்டு, அதற்கு வேண்டிய விரைவான நடவடிக்கைகளை எடுப்பதுபற்றி அரசு உத்தேசித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அதற்கான அடிப்படையில் பணிகள் உருவாக்கப்பட்டு வருகின்றன. தமிழை பல்வேறு துறைகளிலும் புகுத்துவது ஆங்கிலத்தின் துணை மூலம் அதைப் பெற முடியும் என்ற அந்த வகையிலே, ஆங்கிலம் பெற்ற இடத்தை எந்தெந்த வகையில் தமிழ் ஆட்கொள்ளலாம் என்ற முயற்சிகளை படிப்படியாக இந்த அரசு மேற்கொண்டிருக்கிறது.

திரு. ஆலடி அருணா : தலைவர் அவர்களே, தமிழ் மொழியை மட்டுமே பயிற்சி மொழியாக்க தமிழக அரசு முயற்சிக்கும் இந்தத் தருணத்தில் இந்தி மொழியை மட்டுமே பயிற்சி மொழியாகக் கொண்ட கல்லூரிகளை ஒவ்வொரு மாநிலத்திலும் ஆரம்பிப்பதற்கு மத்திய அரசு திட்டமிட்டிருக்கிறது. அத்தகைய திட்டம் இந்த மாநில அரசின் பயிற்சி மொழிக் கொள்கைக்கு முற்றிலும் முரணாக அமைந்திருக்கிறபடியால், இந்த சூழ்ச்சியை முறியடிக்க தமிழக அரசு என்ன நடவடிக்கை எடுக்க இருக்கிறது?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தமிழகத்தைப் பொறுத்த வரையில் அப்படி ஒரு கல்லூரி அமைக்கக்கூடிய ஒரு திட்டம் இப்பொழுது இல்லை. அப்படி ஒரு திட்டம் வரும்பொழுது, அதைப்பற்றிய கருத்தைத் தெரிவிக்கலாம்.

திரு. க. இராமமூர்த்தி : கல்லூரி பயிற்சி மொழியைப் பொறுத்த வரையிலே விரும்புகிறவர்கள் தமிழைப் பயிற்சி மொழியாகக் கொள்ளலாம் என்று சொல்வதைவிட அத்தனை பேர்களும் கட்டாயமாக தமிழை பயிற்சி மொழியாகக் கொள்ளவேண்டும் என்ற ஏற்பாட்டை செய்யக்கூடாதா? உடனடியாக அப்படி ஒரு சட்டத்தை தமிழக அரசு கொண்டுவருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : கனம் உறுப்பினர் அவர்கள் தெரிவித்தபடி கட்டாயமாக தமிழைப் பயிற்சி மொழியாக்க வேண்டும் என்று கூறுவதற்கு முன்னால், பல முன்னேற்பாடுகளை நாம் மேற்கொள்ளவேண்டிய நிலையில் இருக்கிறோம். நீந்தத் தெரிந்துகொள்ள முயல்கிறவர்கள் நீந்துவதற்கு முன்னால் பல இடர்ப்பாடுகளை கடந்து பிறகு நீந்தக் கற்றுக் கொள்ள வேண்டியிருக்கிறது. அப்படிப்பட்ட இடர்ப்பாடுகளை நாமும் சிலபல ஆண்டுகளுக்கு பல்வேறு கட்டத்தில் கடந்து செல்ல வேண்டியவர்களாக இருக்கிறோம். உடனடியாக எல்லோரும் தமிழிலேயே படித்துத் தீரவேண்டும் என்று சொல்ல வேண்டுமென்றால், அதற்கான பல முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டியிருக்கிறது. அதற்குத் தகுந்த பாட நூல்கள் உருவாகவேண்டும். படித்ததை எடுத்துச் சொல்வதற்கு ஆசிரியர்கள் வேண்டும். அதற்கான பேராசிரிய பெருமக்களைப் பெறவேண்டும். அப்படியே



1967 நவம்பர் 25]

பெற்றாலும், அவர்களை ஏற்றுக் கொள்வதற்கு பல்வேறு வகையான நிலையங்கள் ஆங்காங்கு அமையவேண்டும். அரசாங்கம் அதற்கான செயல்களை மேற்கொள்ளவேண்டும். இப்படி பல முன்னேற்பாடுகளைச் செய்யவேண்டும். அவைகளைச் செய்து முடித்தால் தான் இதைக் கட்டாயமாக ஆக்க முடியும். இப்பொழுது விருப்ப பயிற்சி மொழியாக தமிழை ஆக்கி, மெல்ல மெல்ல கொண்டு வருகிற முயற்சியில் அரசாங்கம் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : உயர்நிலைப் பள்ளிகளில் இஷ்டப் பாடமாக இந்திப் பாடமும் சிறப்புத் தமிழ் பாடமும் கற்றுக் கொடுக்கப்படுகிறது. ஆனால், சிறப்புத் தமிழுக்கு என்ன பாட திட்டம் என்பது இன்னும் அங்கீகரிக்கப்படவில்லை என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : சிறப்புத் தமிழ் கற்றுக் கொடுப்பது என்ற திட்டம் இந்த ஆண்டு தொடக்கத்திற்குப் பிறகுதான் வகுக்கப்பட்டது. அதற்கான பாட திட்டத்தை ஒரு குழு ஆராய்ந்துகொண்டிருக்கிறது. ஆராய்ந்து முடிந்ததற்குப் பிறகு, அது அமுலாக்கப்படும். இப்பொழுது மூன்று பீரியட்களில், ஒரு பீரியட் செய்யுளுக்கும், ஒரு பீரியட் உரை நடைப் பகுதிக்கும், இன்னொரு பீரியட் மொழி பெயர்ப்புக்கும் மேற்கொள்ளலாம் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது.

திரு. கரு. ராம. கரியமாணிக்கம் அம்பலம் : தமிழைப் பாட மொழியாக்குவது படிப்படியாகத்தான் செய்ய முடியும் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். படிப்படியாகச் செய்வது என்றால் எத்தனை வருடங்களுக்குள் தமிழை பாட மொழியாக்கி விட முடியும் என்று அமைச்சர் அவர்கள் கூறமுடியுமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : எத்தனை வருடங்களுக்குள் என்று திட்டவட்டமாகச் சொல்வதற்கில்லை. எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தமிழைப் பாட மொழியாக்க வேண்டும் என்ற ஆவல் இருக்கிறது. பேராசிரியர்களும், மாணவர்களும், மற்றவர்களும் எவ்வளவுக்கு எவ்வளவு ஒத்துழைக்கிறார்களோ அந்த அளவுக்கு இது விரைவுபடுத்தப்படும்.

திரு. கே. விநாயகம் : தமிழ் மொழியை பாடமொழியாக்குவதற்கு நான் விரோதி அல்ல. இருந்தாலும், புகுமுக வகுப்பில் பலரும் தமிழிலே கற்றுக்கொண்டால், அப்படி தமிழிலே படித்து வருகிறவர்களுக்கெல்லாம் அதிகமான சம்பளம் தருகிறோம் என்று சொல்லியும்கூட, போதிய அளவுக்கு மாணவர்கள் வராதது எதைக் காட்டுகிறது? ஆதலால் இதை ஏன் வற்புறுத்த வேண்டும்? உங்கள் கட்சியை ஆதரிக்கிற ஒரு பெரிய அரசியல் தலைவரே காட்டுமிராண்டி மொழி இந்தத் தமிழ் மொழி என்று சொல்லியிருக்கிறார்களே? அதே மாதிரி வடக்கே ஒரு கல்வி அமைச்சர் அவர்கள்

"English is a language of knowledge whereas regional languages are all languages of passion and emotions"

என்று சொல்லியிருக்கிறார்களே, அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா ?

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இந்தக் கருத்தையெல்லாம் வருகிற புதன் கிழமை சொல்லலாமே ?

**திரு. கே. விநாயகம் :** 'பெர்டினென்டாக' இருப்பதால் இப்பொழுது சொன்னேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, ஒரு தலைவர் காட்டுமிராண்டி மொழி என்று கூறினார் என்றால், இத்தனை நாட்களும் அவரோடு இருந்த தலைவர்தான் அந்தத் தலைவர். அவர் கூறுகிற கருத்துக்கள் அத்தனையும் நாங்கள் ஏற்றுக்கொள்கிறோம் என்ற பொருள் அல்ல. அந்தக் கருத்தைச் சொன்னவர் பெரியார் ராமசாமி அவர்கள். அவர்கள் சொல்லுகிற பல கருத்துக்களிலிருந்து நாங்கள் இன்னமும் வேறுபட்டுத்தான் இருக்கிறோம். சிலபல கருத்துக்கள் ஒத்துவருகிற நிலைமையில் இருக்கிறது. வேறுபட்ட கருத்துக்களில் இந்தக் கருத்தும் ஒன்று என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுதும் ஆதரிக்கிற நிலைமையில் தான் இருக்கிறார். இப்பொழுதும் அவர் தலைவர் காமராஜை ஆதரிப்பதாகச் சொல்லுகிறார். அதனால் எங்களுக்கு எவ்வளவு பாதகம் இருக்கிறதோ அவ்வளவு பாதகம் உங்களுக்கும் இருக்கிறது. இன்னொருவர் மற்றொரு கருத்தைத் தெரிவித்ததாக எடுத்துச் சொன்னார்கள். அது அவர்களுடைய கருத்தே தவிர, திட்டவட்டமாக ஒப்புக் கொள்ளப்பட்டு; ஏற்றுக் கொள்ளப்பட்ட கருத்து அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. வி. கே. கோதண்டராமன் :** சார், தமிழை போதனை மொழியாகக் கொண்டுவரக்கூடிய நேரத்திலே, அது தனியார் துறைக் கல்லூரிகளிலும் கொண்டுவரப்படுகிறதா அல்லது பொதுத் துறைக் கல்லூரியில் மட்டுமே கொண்டுவருவது என்று உத்தேசமா, தனியார் துறைக் கல்லூரியிலும் ஏற்பாடுகள் செய்யப்படுகின்றனவா ?

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தலைவர் அவர்களே, எல்லாத் துறைக் கல்லூரிகளிலும் கொண்டுவரவேண்டும் என்பது தான் உத்தேசம். அதற்காகத்தான் கோயம்புத்தூர் போன்ற இடங்களிலும், தனியார்த் துறை கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத்தின் மூலம் ஒரு வகுப்பாவது தமிழில் மாணவர்கள் படிக்கக் கூடிய வசதி செய்யப்பட வேண்டும் என்று வற்புறுத்திச் சொல்லப்பட்டிருக்கிறது.

**திரு. பெ. சௌந்தரபாண்டியன் :** தலைவர் அவர்களே, தமிழை பாட மொழியாக ஆக்க, புதிய அரசு இதுவரை என்னென்ன முன் ஏற்பாடுகள் செய்திருக்கிறது.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** நான் முதலிலே குறிப்பிட்டது போல, புகுமுக வகுப்பிலே பொருளாதாரம், போன்ற பாடங்களை, அரசாங்கக் கல்லூரியானாலும், தனியார் கல்லூரியானாலும் தமிழிலேயே கற்பிக்க வேண்டும் என்பதுதான்





திட்டம். அதன் பிறகு பி.ஏ. வகுப்பிற்கு வருகிறவர்களுக்கு, ஒரு பிரிவாவது தமிழில் பாடம் சொல்லிக் கொடுக்க ஏற்பாடுகள் செய்யப்படவேண்டும் என்பது திட்டம். மேலும், அப்படித் தமிழில் படித்துவருகிறவர்களுக்கு, அரசாங்க உத்தியோகங்களிலே என்னென்ன சலுகைகள் தரலாம் என்பது பற்றியும் அரசு ஆலோசித்துக் கொண்டு இருக்கிறது.

**திரு. கே. பி. எஸ். மணி :** சார், அமைச்சரவர்கள் சொன்னார்கள். 7,000 சொச்சம் இடங்கள் மாணவர்களுக்கு ஒதுக்கப்பட்டதில், 4,000 சொச்சம் மாணவர்கள் தான் சேர்ந்திருக்கிறார்கள் என்று. அப்படிக் குறைவாக மாணவர்கள் சேருவதற்குக் காரணம்; தமிழிலே பயிற்சி பெறுவது சிரமமாக இருக்கிறது என்பதனாலா? அல்லது தகுதியுள்ள பாடபுத்தகங்கள் இல்லாததாலா ? அல்லது வெறுப்பினால் வேறு வழியில்லாமல் இந்தப் பாடம் எடுத்தால்தான் காலேஜில் சேரலாம் என்கிறதால் தயக்கம் இருக்கிறதா ? என்பதையெல்லாம் புனராலோசனை செய்து, அதுபற்றி விசாரித்தறிய ஒரு குழு அமைக்க சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் :** தமிழினிடத்தில் வெறுப்பினால் சேரவில்லை என்று சொல்வதற்கில்லை. தமிழிலே படிக்க வேண்டும் என்கிற ஆர்வம் நிறைய மாணவர்களிடம் இருக்கிறது. ஆனால், அப்படிப் படித்த பிறகு பின்னால் வாழ்க்கையில் நிலைமைகள் எப்படியிருக்குமோ என்கிற ஐயப்பாடு இருப்பதால், மாணவர்கள் தமிழிலே படிக்க முன்வரவில்லை. உறுதியாக வேலை கிடைக்கும் என்கிற உத்தரவாதம் இருந்தால், இன்னும் அதிகமான மாணவர்கள் வருவார்கள். இன்றைக்கு ஐந்தாறு ஆண்டுகளுக்கு முன்பு, 40 அல்லது 50 மாணவர்கள்தான் இந்தப் பாடமொழிப் படிப்பிற்கு வந்தார்கள். சென்ற ஆண்டில் 4,600 மாணவர்கள் முன் வந்திருக்கிறார்கள், இந்த ஆண்டு இன்னும் அதிகமாக இருக்கும். அது பற்றி புள்ளி விவரம் பின்னால் கொடுக்கிறேன், ஆகவே, ஆர்வம் வளர்ந்திருக்கிறது என்பதைத் தெரிவிக்கிறேன்.

**திரு. வ. ஜார்ஜ் :** ஆன் எ பாயின்ட் ஆப் ஆர்டர், சார், ஒவ்வொரு அங்கத்தினரையும், சபாநாயகர் அழைத்த பிறகுதான் அவர் கேள்வி கேட்க வேண்டும் என்று இருக்கும் போது, ஒரு அங்கத்தினர் வேண்டும் என்றே, உபகேள்வி கேட்க அழைக்காமல் இருப்பது ஒழுங்கா, முறையா என்று கேட்க விரும்புகிறேன். ஏனென்றால், 25 நிமிஷமாக, கையைக் காட்டிக் கொண்டு இருந்தும் தலைவருடைய உதவியாளர் குறிப்பிட்டும் தலைவர் தலையை அசைப்பதையும் கவனித்தேன். அப்படிச் செய்வது சரியா, ஒழுங்கா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** ஒழுங்கா இல்லையா என்று தெரிந்துகொள்ள, விதி 38, உள்விதி (2)-ஐப் படிக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். அடுத்த வினா எண் 435.

[1967 நவம்பர் 25

* 435 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state whether the Government are getting any financial aid in a big way from the Central Government to meet the expenses for translating text books in regional languages so that education at all levels and in all fields could be imparted in regional language?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : இல்லை.

*திரு. கே. விநாயகம்* : சார், சமீபத்திலே கூடிய கல்வி மாநாட்டில், டெல்லியில் நமது மத்திய கல்வி அமைச்சர், அதிகமாகத் தொகை தருவதாகவும் அதற்கான ஏற்பாடுகளை மாநில சர்க்கார் செய்ய வேண்டும் என்றும் சொல்லியிருப்பது அமைச்சருக்குத் தெரியாதா ? அந்தத் தொகையைப் பெற்றுக் கொண்டு, பாட புத்தகங்களை மொழி பெயர்க்க தேர்ச்சியடைந்த ஆசிரியர்கள் இல்லையா ? மொழிபெயர்க்கத் தத்தளிப்பது எதனால் ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : கல்வி அமைச்சர்கள் மாநாட்டில், மத்தியக் கல்வி அமைச்சர் ஒவ்வொரு வட்டார மொழிக்கும் ஒரு கோடி ரூபாய் கொடுப்பதாகவும், மொத்தம் 18 கோடி மொழிப் பயிர்ச்சித் திட்டங்களுக்கு கொடுக்க இருப்பதாகவும், நிதி இலாகா அதை ஒப்புக் கொண்டதற்குப் பிறகு திட்டங்களைக் கொடுப்பதாகவும் குறிப்பிட்டார்கள். நிதி இலாகா கல்வி அமைச்சருக்கு இன்னும் ஒப்புதல் தரவில்லை. ஒப்புதல் வராததால், ஒரு கோடி ரூபாயும் வரவில்லை. ஒரு கோடி ரூபாய் வராததால் முயற்சி எடுக்கவில்லை. அந்தப் பணம் வந்தால், தத்தளிக்க வேண்டிய அவசியம் ஒன்றும் இல்லை. இங்கே ஆற்றல் படைத்தவர்கள் இருக்கிறார்கள். அந்த ஒரு கோடி வருமானால், அதையும் இன்னும் மேலும் சில கோடிகளும் செலவழிக்கக் கூடிய திட்டம் தரலாம் என்கிற துணிவோடுதான் இந்த அரசு பணியாற்றுகிறது.

*திரு. ஆர். நாகசுந்தரம்* : ஐயா, மத்திய சர்க்காரிடமிருந்து பிராந்திய மொழிக்கு அதிகமாக நிதி உதவி கிடைக்கிறதா அல்லது இந்தி மொழிக்கு அதிகம் கிடைக்கிறதா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : அதைப் பற்றி முடிவு வரவில்லை. ஒவ்வொரு மாநிலத்திற்கும் ஒரு கோடி தருவதாகக் குறிப்பிட்டபோது, இந்தி மாநிலங்கள் ஐந்து இருப்பதால், ஐந்து கோடியைப் பெறக் கூடிய வாய்ப்பு இருக்கிறது ஆகவே, மாநில அடிப்படையில் அல்லாமல், மொழி அடிப்படையில் இருக்கவேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டது. அதைப் பரிசீலிப்பதாகவும் மத்திய கல்வி அமைச்சர் சொல்லியிருக்கிறார்கள்.

* 436 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether it is a fact that Madras University has permitted the colleges affiliated to it to start separate sections for Tamil medium B.A. Degree Courses in humanities; and

(b) if so, the suitable incentives to persuade students to join this course ?



1967 நவம்பர் 25]

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : (அ) ஆம்.

(இ) எல்லாப் பாடங்களையும் தமிழிலேயே படிக்கும் முறையில் சேரும் மாணவர்களுக்குத் தனிச் சலுகைகள் எவையும் கொடுக்கப்படவில்லை.

THIRU K. VINAYAKAM : Sir, may I know whether the subjects which are to be taught in the regional language at the B.A. level will include Science, Psychology, Philosophy and other technical subjects ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : தலைவர் அவர்களே, முதலிலே, ஆரம்ப கட்டத்திலே ஊக்கம் தரும் வகையில் ரூ. 30 ஸ்டைபெண்ட் தரப்பட்டது. அதற்குப் பிறகு இப்பொழுது மாணவர்கள் அதிகமாக வருவதால், அது நிறுத்தப்பட்டது. பி.ஏ. வகுப்பில் எல்லாப் பாடங்களையும் போதிக்கும் நிலை இல்லை. 'ஹியுமானிடிஸ்' என்று சொல்லப்படும் பாடங்கள் வட்டாரமொழியில் போதிக்கும் வகையில் வழி செய்யப்பட்டுள்ளது. புகுமுக வகுப்பில், அறிவியலையும் தமிழிலேயே போதிக்க இயலுமா என்று கவனிக்க, அந்தத் துறைப் பெரியவர்களை விரைவில் கூட்டி யோசனை கேட்டு, அவர்கள் அது செய்யலாம் என்று சொன்னால், புகுமுக வகுப்பில் அடுத்த ஆண்டு அந்த வகையில் பாடங்களைக் கொண்டு வரவும், அதற்குப் பிறகு பி.ஏ., பி.எஸ்.சி. வகுப்பிலும் கொண்டு வர மெல்ல மெல்ல முயலவேண்டும் உடனடியாக கொண்டுவரக்கூடிய சூழ்நிலை இல்லை.

*திரு. பெ. மலைச்சாமி* : தலைவர் அவர்களே, தற்போது வேளாண்மைக் கல்லூரிகளில் தமிழையும் ஒரு பாடமாக வைத்திருக்கிறார்கள். அதைப்போல பொறியியல் கல்லூரி, மருத்துவக் கல்லூரி ஆகிய கல்லூரிகளில் தமிழையும் ஒரு பாடமாக வைக்க அரசு முன்வருமா ?

*மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்* : அதுபற்றி பரிசீலனை எதுவும் இல்லை. கனம் உறுப்பினர் கூறிய கருத்தை மு.ப. 9-30
ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ளலாம்.

THIRU K. VINAYAKAM : Are the Government aware of the fact that the students are a bit timid about taking regional language as the language of instruction at the collegiate level because it would not in future afford them employment facilities in our State, not to speak about outside our State? They are not sure whether after graduation through the regional language medium they will be suitably employed on a par with the students who have taken instruction through the English medium. Will the Government come forward to ensure the possibility of recruiting regional language medium graduates in preference to other graduates? If this is done, there will not be any difficulty in taking to regional languages.

[1967 நவம்பர் 25

இருக்கக் கூடிய விவசாயிகளை சோவியத் நாட்டிற்கு அனுப்ப அரசாங்கத்திற்கு எண்ணம் உண்டா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது விவசாயிகளை அமெரிக்காவுக்குத்தான் அனுப்புவதாக இந்த அரசு மத்திய அரசாங்கத்திற்குச் சிபாரிசு செய்திருக்கிறது. செலவை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்ள முன்வந்தால், சோவியத் ரஷ்யாவுக்கும் விவசாயிகளை அனுப்பலாம்.

*Pesticides*

THIRU P. MALAICHAMY :
* 438 Q.—THIRU K. VINAYAKAM : } Will the Hon. the
THIRU S. DURAISAMY :
Minister for Agriculture be pleased to state—

(a) whether there is any proposal of spraying insecticides and other medicines from the sky by the help of planes on the pest affected crops; and

(b) whether this experiment was tried in our State and if so, the results thereof ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** (அ) ஆம்.

(இ) வேர்க்கடலைப் பயிரைப் பிடிக்கும் சிவப்பு கம்பளிப்பூச்சிகளை அழிப்பதற்காக விமானம் மூலம் மருந்து தெளிக்கும் வேலைகள் 1961-ம் ஆண்டிலிருந்தே நமது மாநிலத்தில் நடைபெற்று வருகின்றன. அதன் விளைவுகள் ஊக்கமளிப்பதாய் உள்ளது; பொதுமக்கள் பாராட்டுகின்றனர். நெற்பயிர்மீது விமானம் மூலம் மருந்து தெளிக்கும் வேலைகள், முதன்முறையாக திருநெல்வேலி மாவட்டத்தில் 1967 ஜனவரி, பிப்ரவரியில் 11,179 ஏக்கர் பரப்பளவில் மேற்கொள்ளப் பட்டன. இறுதி முடிவுகள் எதிர்பார்க்கப்படுகின்றன.

**திரு. கே. விநயகம் :** ஆகாய விமானம் மூலம் பயிர்கள்மீது மருந்து தெளிக்கிற வேலை வடக்கேயிருக்கிற சில மாகாணங்களிலே வெற்றிகரமாக நடந்திருப்பதற்குக் காரணம் பரவலாக நிலமும், பயிர்களுக்கு நடுநடுவே செடிகள் இல்லாததுமே காரணமாகும். தமிழகத்திலே இருக்கிற சின்னச்சின்ன நிலங்களுக்கு நடுநடுவே அதிகமாக மரம், செடிகள் இருப்பதாலே இந்த ஆகாய விமானம் சுலபமாகப் பறக்க முடியாதென்று விமான ஓட்டிகள் சொன்னதாகவும், ஹெலிகாப்டர் மூலம்தான் சுலபமாக மருந்து தெளிக்க முடியும் என்று சொன்னதாகவும் கூறுகிறார்களே, அதை அரசாங்கம் பரிசீலித்து பார்த்ததா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஆகாய விமானம் மூலம் மருந்து தெளிப்பதிலே எந்தவிதமான சங்கடமும் இருப்பதாக விமான ஓட்டிகள் தெரிவிக்கவில்லை. அந்தமாதிரியான ஆகாய விமானத்தில் ஏறி, நானே திண்டிவனம் பகுதியில் மருந்து தெளிப்பதைப் பார்த்தேன். இருபுறங்களிலும் முதலில் நீலக்



1967 நவம்பர் 25]

கொடி பிடிக்கிறார்கள்; மருந்து தெளிக்க ஆரம்பிக்கிறார்கள். வெள்ளைக் கொடி பிடிக்கும் பகுதியில் மட்டும் தெளிக்கிறார்கள். சிவப்புக் கொடி பகுதியில் மருந்து தெளிக்காமல் விட்டுவிடுகிறார்கள். அங்குதான் குளம், குட்டை, நீர்நிலைகள், மரம், செடிகள் முதலியவை இருக்கின்றன. மிகவும் ஒழுங்கான முறையில் மருந்து தெளிக்கிறார்கள். என்னைப்போலவே சுகாதார அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் கோயம்புத்தூரிலே மருந்து தெளிக்கும் நிகழ்ச்சியை துவக்கி வைத்திருக்கிறார்கள். நண்பர் விநயகம் அவர்கள் விரும்பினால், அவரையே ஆகாயவிமானத்திலேற்றி மருந்து தெளிக்கும் முறையை நேரில் காண்பிக்கச் செய்கிறேன்.

**திரு. சு. துரைசாமி :** சட்டமன்றத் தலைவர் அவர்களே, பூச்சி மருந்து தெளிப்பவர்கள் தனிப்பட்ட கம்பெனிகள் வைத்திருக்கும் ஆகாயவிமானம் மூலமாக மருந்து தெளிக்கும் முறையை எடுத்துவிட்டு, விவசாய இலாகா மூலமாக ஆகாயவிமானம் வாங்கி தெளிக்கும் திட்டம் ஏதாகிலும் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** விவசாய இலாகா சொந்தமாக ஏரோப்ளேன் வாங்கக்கூடிய அளவுக்கு அதன் நிதி நிலைமை சரியாக இல்லை. தனிப்பட்ட கம்பெனிகளிடம் வாடகைக்கு எடுக்கப்படும் ஆகாயவிமானத்திற்கு மத்திய சர்க்கார் சிறிது உதவி செய்கிறது. விவசாயிகள் சிறு தொகை தருகிறார்கள்.

**திரு. பெ. மலைச்சாமி :** தலைவர் அவர்களே, இதுவரை எத்தனை மாவட்டங்களில் இந்தமுறை நடைமுறைக்குக் கொண்டுவரப் பட்டிருக்கிறது ? அதற்கான செலவை உழவர்களிடம் எந்த முறையில் வசூலிக்கப்படுகிறது ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இதுவரையிலும் கோயம்புத்தூர், தென் ஆற்காடு, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் இந்த முறை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. ஆகாய விமானத்திற்காகும் மொத்தச் செலவில் மூன்றில் இரண்டு பங்கை மத்திய சர்க்கார் ஏற்றுக்கொள்கிறது. மீதி ஒரு பங்கை விவசாயிகள் ஏற்றுக்கொள்கிறார்கள். பூச்சி மருந்துக்கான செலவில் 65 சதவீதத்தை விவசாயிகள் ஏற்றுக்கொள்கிறார்கள்; மீதி 35 சதவீதத்தை ராஜ்ய சர்க்கார் ஏற்றுக்கொள்கிறது.

**ஹாஜி ம. மு. பீர் முஹம்மது :** பேரவைத் தலைவர் அவர்களே, வானவூர்தி வழியாக பூச்சி மருந்து தெளிப்பது விவசாய அபிவிருத்திக்கு உறுதுணையாக இருக்கிறது என்ற காரணத்தினால் நாட்டிலுள்ள எல்லா விவசாயிகளும் இவ்வசதியைப் பயன்படுத்திக்கொள்ள விரும்புகிறார்கள். விவசாயிகளுக்கு நன்மை செய்வதையே தன்னுடைய குறிக்கோளாகக் கொண்டு அதில் முனைந்திருக்கிற நமது தமிழகச் சர்க்கார் இலவசமாகவே வானவூர்தி

[1967 நவம்பர் 25

மூலமாக பூச்சி மருந்து தெளிக்கின்ற நிலையை ஏற்படுத்தி விவசாயிகளுக்கு நல்ல பயன் ஏற்படும்படியாகச் செய்ய ஆலோசனை செய்யுமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழக சர்க்கார் விவசாயிகளுக்கு உதவி செய்வதில் முனைந்திருக்கிறது என்று கனம் உறுப்பினரே ஒத்துக்கொண்டதற்கு நன்றி. இப்படி பூச்சி மருந்து தெளிப்பதற்கு விவசாயிகளிடம் இருந்து ஒரு சிறிய அளவுக்கு தொகை வசூல்செய்வது பற்றி அவர்களிடம் இருந்து எந்தக் குறையும் வரவில்லை. மாறாக எங்கள் பகுதிக்கு விஸ்தரியுங்கள், எங்கள் பகுதிக்கு விஸ்தரியுங்கள் என்றுதான் கேட்டு வருகிறார்கள். இலவசமாகவே தெளிப்பது என்றால் ராஜ்ய சர்க்காருக்கு கூடுதலாகச் செலவாகும். இன்றைக்கு இருக்கிற பொருளாதார நிலையில் இலவசமாகத் தெளிக்க அரசுக்கு நிதி வசதி இல்லை. 35 சத விகிதம் ஆக நம்முடைய உதவியை உயர்த்தி இருப்பதன் காரணமாக இந்த ஆண்டே தமிழகச் சர்க்காருக்கு 10 லட்சம் கூடுதலாகச் செலவாகியிருப்பதை கனம் உறுப்பினர்கள் அறிவார்கள்.

திரு. பி. ஜி. கருத்திருமன் : கனம் சபாநாயகர் அவர்களே வானவூர்தி மூலமாக பூச்சி மருந்து தெளிப்பது என்பது மிகவும் வரவேற்கத்தகுந்த அம்சம் தான். இதில் ஏற்படுகிற பாதகம் என்னவென்றால் எல்லா இடத்திலும் ஒரே தரமாக பயிர், ஒரே நிலையில் வளர்ந்திருக்கும்படியான பயிர் இருந்தால் விமானம் மூலமாகப் பூச்சி மருந்து தெளிப்பது எல்லோருக்கும் பயன் அளிக்கும். ஓரிடத்தில் பயிர் முற்றியிருக்கிறது. ஓரிடத்தில் நடவுகூட ஆகவில்லை. ஓரிடத்தில் சரியான நிலையில் இருக்கிறது என்கிறபோது விமானம் மூலம் மருந்து தெளித்துவிட்டு எல்லோரும் பணம் கொடுக்கவேண்டும் என்கிறபோது நடவு ஆகாத வயல்காரர்களுக்கு நஷ்டம் ஏற்படுகிறது. ஆகவே, ஏக காலத்தில் நடவு செய்த பகுதிகளுக்குத்தான் விமானம் மூலம் மருந்து தெளிப்பது யாருக்கும் பாதகம் இல்லாதிருக்கும்.

அடுத்து, பூச்சி மருந்து தெளிப்பதற்கு ஆகும் செலவில் மூன்றில் ஒரு பகுதி மத்திய சர்க்காரும், ஒரு பகுதி ராஜ்ய சர்க்காரும், ஒரு பகுதி விவசாயிகளும் தருவது என்று சொல்லி விவசாயிகளிடம் ஏக்கருக்கு 10 ரூபாய் தான் வசூலிக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. ஆனால், இன்றைக்கு அதிகாரிகள் ஏக்கருக்கு 16 ரூபாய் தரவேண்டும் என்று அறிவித்திருக்கிறார்கள். இது சரியல்ல. முன்பு பொதுமக்களிடத்தில் சொன்னதுபோலவே ஏக்கருக்கு 10 ரூபாய் வசூலிப்பதற்கு சர்க்கார் உத்தரவிடுவார்களா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் எதிர்க்கட்சித் தலைவர் சொன்னதுபோல பயிர் ஒரே ரகமாக இருந்தால்தான் பூச்சி மருந்து தெளிக்க முடியும் என்று விமானிகள் சொல்கிறார்கள். விவசாய இலாகா தலைவரும் சொல்கிறார். அதன்காரணமாக



1967 நவம்பர் 25]

ஒரே ரகப் பயிர் உள்ள இடங்கள்தான் பூச்சி மருந்து அடிக்க தேர்ந்தெடுக்கப்படுகின்றன. தஞ்சை மாவட்டத்தில் பூச்சி மருந்து விமானம் மூலமாக அடிக்க முடியாமல் இருப்பதற்குக் காரணம் பயிர்கள் ஒரே நிலையில் இல்லாமல் இருப்பதுதான். ஆகவே, கனம் எதிர்க்கட்சித் தலைவர் குறிப்பிட்டதுபோல், ஏககாலத்தில் பயிர் இல்லாத இடங்களில் மருந்து தெளிப்பதாகச் சொல்கிற குற்றச்சாட்டு தவறானது.

அடுத்து, மத்திய சர்க்கார் இதற்காகும் செலவில் 3-இல் 2 பகுதியை ஏற்றுக்கொள்கிறார்கள். ஒரு பகுதிதான் ஏற்றுக்கொள்கிறார்கள் என்கிற விவரமும் தவறானது. அடுத்து, ஏக்கருக்கு 10 ரூபாய்தான் வசூலிக்கப் படுகிறது. அவர் பகுதியில் எப்படி 16 ரூபாய் வசூலிக்கிறார்கள் என்பது தெரியவில்லை. அதுபற்றியும் பரிசீலனை செய்து, அந்தச் செய்தி உண்மையாக இருக்குமானால் அந்தத் தவறைத் திருத்தி பத்து ரூபாய் தான் வசூல் செய்ய வேண்டும் என்பதற்கு முயற்சி எடுக்கிறேன்.

திரு. என். கிட்டப்பா : தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் இப்போது பயிரிடப்பட்ட சம்பாப் பயிருக்கு கும்பகோணம், நன்னிலம், மாயவரம் தாலுக்காக்களில் புதுவகையான பூச்சி விழுந்து பயிர்கள் நாசமாகிவருவது சர்க்காருக்குத் தெரியுமா ? அதுபற்றி ஏதேனும் தடுப்பு நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : குறுவை காலப் பயிரில் எந்தவிதமான பூச்சித் தொல்லையும் ஏற்படவில்லை. ஆனால், சம்பாப் பயிருக்கு பூச்சி விழுவதை ஆடுதுறை ஆராய்ச்சி நிலையத்திலேயே கவனிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, உடனடியாக அது பற்றி கவனிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. கோவையில் இருந்து நிபுணர்களை அந்தப் பகுதிக்கு அனுப்பி பூச்சித் தொல்லையை ஒழிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதி அளிக்கிறேன்.

திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : பூச்சி விழும்போது மருந்து தெளிப்பது எல்லோரும் கட்டுப்பாடாகச் செய்யவேண்டிய காரியம். சிலர் தங்கள் பயிருக்கு வேண்டாம் என்று சொல்லலாம், அதன் நன்மை தெரியாது. ஓரிடத்தில் மருந்து தெளித்து, மற்ற இடத்தில் மருந்து தெளிக்கவில்லை என்றால், தெளிக்காத பகுதியில் இருந்து மீண்டும் இந்தப் பகுதிக்குப் பூச்சி விழக்கூடும். ஆகவே, பெஸ்ட் கண்ட்ரோல் ஆக்ட் ஒன்று ஏற்படுத்தி பூச்சி விழுந்துள்ள பகுதியில் எல்லா இடங்களுக்கும் பவர் ஸ்ப்ரேயர் மூலம் மருந்து தெளிக்க சர்க்கார் யோசிக்குமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கனம் அங்கத்தினர் சொல்வது தகுந்த யோசனைதான். பூச்சி விழும் பகுதியில் ஏககாலத்தில் மருந்து தெளிப்பதுதான் பரவலான நன்மையைத் தரும். எனக்குத் தெரியும். கடலூர் பகுதியில் விமானம் மூலம் மருந்து தெளிக்கிறபோது, கிராமத்து விவசாயிகள் ஒரு மகஜர்

[1967 நவம்பர் 25

கொடுத்தார்கள். மருந்து தெளிப்பதனால் பயிர் நாசமாகிவிடுகிறது என்றார்கள். இப்படித் தெளித்தால் வரிகொடா இயக்கம் கூட ஆரம்பிக்க நேரிடும் என்றும் தெரிவித்தார்கள். அதுபற்றி மாவட்ட கலெக்டர் விசாரித்தபோது, விவரம் தெரிந்த ஒன்றிரண்டு விவசாயிகள் முன்கூட்டியே தங்கள் நிலத்திற்கு மருந்து தெளித்து விட்டார்கள். விமானத்தின் மூலம் தெளிக்கிற போது தங்களுக்கு இரட்டிப்புச் செலவு நேரிடுமே என்று ஒன்றும் தெரியாத விவசாயிகள் பலரிடம் தவறாகச் சொல்லி கையெழுத்து வாங்கிக் கொடுத்தார்கள் என்பது தெரிந்தது. கனம் அங்கத்தினர் சொன்னபோது, எல்லா விவசாயிகளும் பவர் ஸ்ப்ரேயர்ஸ் உபயோகித்தால் நல்லது. அவர்களால் வாங்க முடியாது என்பதற்காகத்தான் பஞ்சாயத்து யூனியன்களுக்கு 3 பவர் ஸ்ப்ரேயர்ஸ் வைக்க ஏற்பாடு செய்யப்படுகிறது. இதன்மூலம் பரவலான நன்மை ஏற்படும்.

**திரு. அ. ஆறுமுகம் :** இதற்கு முன் இருந்த அரசு ஒரு குறிப்பிட்ட மாவட்டத்தில் மட்டும் மருந்து தெளித்து வந்த நிலை இருந்ததே ? அதற்குக் காரணம் என்ன ? நமது அரசு எல்லா மாவட்டங்களுக்கும், எல்லா கிராமங்களுக்கும் இந்த வசதி கிடைக்க வகை செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** சென்ற அரசு திருநெல்வேலியில் மருந்து தெளித்திருக்கிறது. கோவையில் தெளித்திருக்கிறது. ஒரு குறிப்பிட்ட பகுதிக்குத்தான் தெளித்தது என்பது சரியான வாதம் அல்ல. கனம் அங்கத்தினர் எந்தப் பகுதியில் பூச்சி விழுந்திருக்கிறது, எங்கே மருந்து அடிக்கவேண்டும் என்று சொன்னால் அதுபற்றி பரிசீலனை செய்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் :** எங்கள் பகுதியில் பருத்திச் செடிக்குச் சமீபத்தில் பூச்சி மருந்து ஹெலிகாப்டர் மூலம் தெளிக்கப்பட்டது. என்னுடைய அனுபவத்தில் பார்க்கும் போது பருத்திச் செடிக்கு மருந்து தெளிக்கும் முறை அங்கு இருக்கிற நிலைக்கு ஏற்ற மாதிரி இல்லை. இதனால் அங்குள்ள விவசாயிகள் அத்தனை பேருக்கும் தொல்லையும் நஷ்டமும் ஏற்படுகிறது. மத்திய சர்க்கார், மாகாண சர்க்கார் உதவித் தொகையோடு கூட குடியானவர்களிடமிருந்து ஒவ்வொரு தடவைக்கும் ரூ. 16 வீதம் ஐந்து தடவை, ரூ. 80 வசூல் செய்யப்படுகிறது. அதனால் எந்தவிதமான பலனும் இல்லை. மாவட்ட கலெக்டர் அவர்களிடம் இதைப் பற்றிப் புகார் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அந்த விளக்கத்தை இப்போது வேண்டுமானாலும் நான் அமைச்சர் அவர்களிடத்தில் கொடுக்கத் தயாராக இருக்கிறேன். இதைப் பற்றி அமைச்சர் அவர்கள் அறிவார்களா?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** கனம் அங்கத்தினர் அவர்கள் குறிப்பிட்ட மாதிரி கோவை, பொள்ளாச்சி ஆகிய இடங்களில் பருத்திச் செடிக்குப் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டது. நான் ஆரம்பத்தில் குறிப்பிட்டது போல், ரூ. 9,27,000 செலவில்



1967 நவம்பர் 25]

இந்தத் திட்டத்தை நிறைவேற்றி வருகிறோம். மத்திய சர்க்கார் ரூ. 3,07,000 செலவையும், ராஜ்ய சர்க்கார் ரூ. 1,07,000 செலவையும், விவசாயிகள் ரூ. 5,00,000 செலவையும் ஏற்றுக் கொள்வது என்ற அடிப்படையில் பூச்சி மருந்து தெளிக்கும் காரியம் மேற்கொள்ளப்பட்டது. பருத்தி பயிரிடுபவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடுதான், பெரும் செலவை ராஜ்ய சர்க்கார் ஏற்றுக்கொண்டிருப்பதோடு, மத்திய சர்க்கார் மானியத்தையும் பெற்று செலவழித்து வருகிறது. விவசாயிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற நோக்கத்தில்தான் செய்யப்படுகிறதே தவிர, தொல்லை கொடுக்க வேண்டுமென்ற நோக்கத்தில் இது செய்யப்படவில்லை. கனம் அங்கத்தினர் அவர்கள் கூறியது போல், இதுவரை எந்தவிதமான புகாரும் வரவில்லை. புகார் வந்தால் பரிசீலிக்கப்படும். விவசாய இயக்குநர் அவர்களுடனும், பூச்சி மருந்து தெளிக்கிற அதிகாரிகளுடனும் கலந்து பேசி பரிகாரங்கள் தேட வேண்டிய அவசியம் இருந்தால் பரிசீலிக்கலாம்.

**திரு. கொளத்தூர் கோதண்டம் :** செங்கற்பட்டு மாவட்டத்தில் இதுவரை விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்கப்படவில்லை. பூச்சி பிடிக்காமல் பாதுகாப்பு முறையாக விமானம் மூலம் ஏதாவது மருந்தைத் தெளிக்கும் திட்டத்தைச் செயல்படுத்த முடியுமா ? விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிக்க காலதாமதமானால் பஞ்சாயத்து யூனியன்களுக்கு பவர் ஸ்ப்ரேயர்ஸாவது அதிகமான அளவில் கொடுக்க அரசாங்கம் முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** பயிரைப் பாதுகாக்க வேண்டுமென்ற நோக்கத்தோடுதான் செங்கற்பட்டு மாவட்டத்திலும் பூச்சி மருந்தை விமானம் மூலம் தெளிக்கும் காரியத்தை நானே நேரில் சென்று துவக்கி வைத்திருக்கிறேன். வட ஆற்காடு மாவட்டத்தில் ஒரு பகுதியும் செங்கற்பட்டு மாவட்டத்தில் ஒரு பகுதியும் சேர்த்து கிட்டத்தட்ட 25,000 ஏக்கரில் பூச்சி மருந்து தெளிக்கும் காரியம் நடைபெற்றிருக்கிறது. பயிர் பாதுகாப்புக்கு முன் கூட்டியே ஏற்பாடு செய்வதுதான் விமானம் மூலம் பூச்சி மருந்து தெளிப்பது. செங்கற்பட்டு மாவட்டத்தில் வேறு எங்காவது பூச்சி மருந்து தெளிக்க அவசியம் இருந்தால், அதைப் பற்றிக் கனம் அங்கத்தினர் அவர்கள் அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்தால் நடவடிக்கை எடுக்கலாம்.

**திரு. கே. விநாயகம் :** செங்கற்பட்டு மாவட்டத்தைப் பொறுத்த வரையில், அந்த மாவட்டத்திலே நானும், முன்னாள் முதலமைச்சரும், இந்நாள் முதலமைச்சரும் ஆகிய மூன்று பேரும் பிறந்ததன் காரணமாக அங்கே பயிர்களுக்குப் பூச்சி பிடிப்பதில்லை என்ற கருத்து அமைச்சர் அவர்களுக்கு இருக்கிறதா? அப்படி எண்ணிக்கொண்டு அந்த மாவட்டத்தைப் புறக்கணிக்காமல் அந்த மாவட்டத்தின் வடக்குப் பகுதிகளுக்கும் பூச்சி மருந்து அடிக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** ஏற்கனவே இருந்த முதலமைச்சர் வேண்டுமானால் இதைப் பற்றிக் கவனிக்காத நிலை இருந்திருக்கலாம். முதல் முதலிலே பாம்பூர் பிர்க்காவிலேதான் பூச்சி மருந்து தெளிக்கப்பட்டிருக்கிறது. இதைப்பற்றி அந்த வட்டார எம். எல். ஏ.-க்களுக்கெல்லாம் தெரியப்படுத்தப்பட்டது. கனம் விநயகம் அவர்களுக்கு இது பற்றித் தெரியாததற்காக வருந்துகிறேன். திரு. விநயகம் அவர்கள் திருத்தணியில் நின்றதால் அங்கு பூச்சி அதிகமாகப் பரவியிருந்தால் அந்தப் பகுதியையும் கவனிக்கலாம்.

* 439 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether there is any proposal to manufacture pesticides for the benefit of farmers?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இல்லை.

**திரு. கே. விநயகம் :** முன்பு கேட்ட கேள்விகளுக்குப் பதில் அளித்ததில் இருந்து பூச்சி மருந்து தயாரிக்கும் ஃபாக்டரிஸ் ஆரம்பிக்க வேண்டியது அவசியம் என்று விளங்குகிறது. அதற்கு நம்முடைய அரசில் போதிய அளவு நிதி இல்லையென்றால், மத்திய சர்க்காரிடம் இதைப்பற்றி எடுத்துச்சொல்லி மானியம் பெற்றுவது அதற்கான தொழிற்சாலையை ஆரம்பிக்க முன் வருவார்களா ?

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** இப்போது கோவையிலும், கோயில்பட்டியிலும், ஆடுதுறையிலும் இதற்கான ஆராய்ச்சி நிலையங்கள் துவக்கப்பட்டிருக்கின்றன. பூச்சி மருந்தை எந்த முறையில் உண்டாக்குவது, கலப்பது என்பது பற்றியெல்லாம் ஆராய்ச்சி நடைபெற்று வருகிறது. அந்த ஆராய்ச்சி வெற்றி பெற்றவுடன் கனம் அங்கத்தினர் ஒத்துழைப்பு, மத்திய சர்க்காரிலிருந்து நிதி பெற்றுத் தருவதற்கு இருக்குமானால், அதற்கான தொழிற்சாலையை ஆரம்பிப்பதில் எங்களுக்கு ஆட்சேபனை இல்லை. இந்த விஷயத்தில் கனம் அங்கத்தினர் அவர்கள் ஒத்துழைப்புக் கொடுத்ததற்காக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன்.

**திரு. கே. விநயகம் :** அண்மையில் காஞ்சிபுரத்தில் நடந்த விவசாயிகள் மாநாட்டில், நமது முதலமைச்சர் அவர்களும், விவசாய அமைச்சர் அவர்களும் கலந்து கொண்டார்கள். அங்கே, விவசாயிகளுக்குத் தேவையான அளவு மருந்துகள் கிடைப்பதில்லை என்று எடுத்துச் சொல்லப்பட்டது. இந்த மருந்து கிடைப்பது குறைவாக இருக்கிறதா அல்லது மருந்து விநியோகம் செய்வதிலே கோளாறு இருக்கிறதா ? குறைவாக இருந்தால், அதிக அளவு ஷேர், கோட்டா மத்திய சர்க்காரிடமிருந்து கேட்டுப் பெறுவதற்கு முயற்சி எடுக்கப்படுமா ?



**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி:** பூச்சி மருந்து கிடைப்பதிலே எந்தவிதமான தகராறும் இல்லை. தேவையான அளவுக்குப் பூச்சி மருந்து வருகிறது. (திரு. கே. விநயகம்: நான் யூரியாவைப் பற்றிச் சொன்னேன்.) யூரியா என்பது உரம். உரத்திற்கும் பூச்சி மருந்திற்கும் வித்தியாசம் தெரியாமல் . . .

THIRU K. VINAYAKAM : He is making a mistake. He is wrongly quoting me.

THE HON. THIRU A. GOVINDASAMY : I am not wrongly quoting him.

THIRU K. VINAYAKAM : He gives to the House the impression that I do not know the difference between pesticide and fertiliser.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திரு. விநயகம் அவர்கள், 'தன்னிலை விளக்கம்' கூற விரும்பினால், பிறகு கூறிக் கொள்ளலாம்.

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** உரத்திற்கும் பூச்சி மருந்திற்கும் அவர்களுக்கு வித்தியாசம் தெரியாது என்று நான் சொல்லவில்லை. அவர்கள் கேள்வி கேட்கும்போது சொன்னது பூச்சி மருந்தைப் பற்றி. அவர்களுக்கு விவரம் தெரியாது என்ற அந்த அளவுக்கு நான் சொல்லமாட்டேன். அவர்களைப் பற்றி அவ்வளவு குறைவாகச் சொல்லமாட்டேன். பூச்சி மருந்தைப் பற்றியவரை எந்தவிதமான குறைபாடும் கிடையாது. தேவையான அளவுக்கு ஒவ்வொரு பஞ்சாயத்து யூனியனுக்கும் கொடுக்கப்பட்டிருக்கிறது. எந்தப் பகுதியில் கிடைக்கவில்லையோ, அங்கிருந்து உடனடியாக அரசாங்கத்திற்கு எழுதினால் நிச்சயமாகக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். யூரியா கிடைக்கவில்லை என்ற குறைபாடு ஓரளவு இருந்தாலும் கூட, உயர் ரக நெல்லை விளைவிப்பவர்களுக்கெல்லாம் தேவையான அளவுக்கு கார்டு மூலம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் எந்த விதமான குறைபாடும் கிடையாது.

## புது போலீஸ் நிலையங்கள்

* 430 வினா—திரு. ஈ. எம். நடராசன் : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோவை மாவட்டம், பவானி தாலுகாவில் அதிகமான அளவில் நடைபெறும் கிரிமினல் குற்றங்களைக் குறைக்கும் வகையில் அங்கு போலீஸ் நிலையங்கள் அதிகமாக ஏற்படுத்தும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

**மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :** இல்லை.

[1967 நவம்பர் 25

* 431 வினா—திரு. சு. துரைசாமி: மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஒரு லட்சத்திற்கு அதிகமான மக்கள் தொகையுள்ள திருப்பூரில் ஒரு காவலர் நிலையம் உள்ளது போதாது என்றும் இரண்டு காவலர் நிலையங்கள் ஏற்படுத்தவேண்டும் என இன்ஸ்பெக்டர்-ஜெனரல் ( I.G. ) அரசுக்குத் தெரியப்படுத்தியுள்ளாரா ?

(இ) ஆம் எனில், அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

* 432 வினா—திரு. பெ. மலைச்சாமி : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மேலூர் வட்டம், செந்துறையில் ஒரு புதிய காவல் நிலையம் (Police Station) அமைக்க ஏதேனும் செயற் குறிப்பு உண்டா?

(இ) ஆம் எனில், எப்போது அமைக்கப்பெறும்?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) இல்லை.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

## அரசினர் கைரேகைப் பதிவுக் கழகம்

* 433 வினா—திரு. மா. பா. சாரதி : மதிப்பிற்குரிய முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தமிழக அரசாங்க கைவிரல் ரேகை பதிவு அலுவலகம் பற்றி மதிப்பீடு கமிட்டி (Estimate Committee) ஆய்வுரை, பரிந்துரை வழங்கியுள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : (அ) ஆம்.

(இ) மதிப்பீட்டுக் குழுவின் (1963-64) பரிவுரைகளை ஒட்டி சென்னைப் போலீஸ் இன்ஸ்பெக்டர்-ஜெனரல், வேலூர் கைரேகை பதிவுக் கழகப் பணியாளர்களின் சம்பள வீதத்தை மாற்றியமைக்கச் செயற்குறிப்புகளை அனுப்பினர். அவை நீண்ட ஆய்வுக்குப்பின் மறுக்கப்பட்டன.

திரு. மா. பா. சாரதி : கைரேகைப் பதிவு நிலையம் நீண்ட நாட்களாக வேலூரில் இருப்பதாலும், பலர் அங்கேயே வசிப்பதாலும், அதை வேலூரில் இருந்து மாற்றாமல் இருப்பதற்கு,



1967 நவம்பர் 25]

அப்படி ஏதாவது ஒரு சந்தர்ப்பம் பின்னால் ஏற்பட்டாலும் அதை அரசு மறுக்குமா ?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கேள்வி, அவர்களுக்கான சம்பள விகிதத்தைப் பற்றியது. அது வேறு இடத்திற்குக் கொண்டு செல்லப்படுமா என்பது பற்றி தனிக் கேள்வி கேட்டால் பதில் அளிக்கப்படும்.

திரு. எஸ். ஜே. ராமசாமி : போலீஸ் இலாகாவிலேயே இது மிக முக்கியமானதொரு இலாகா. இந்த இலாகாவை இன்னும் விரிவுபடுத்தினால் மற்றயிடங்களில் திருடுகள் நடைபெறுவதைக் கண்டு பிடிக்க ஏதுவாகயிருக்கும். ஆகவே, இந்த இலாகாவை விரிவுபடுத்திச் சீர்திருத்தம் செய்ய தமிழக அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கைரேகை இலாகா குற்றவாளிகளைப் பற்றியது. குற்றங்கள் அதிகரிக்கும் என்று உறுப்பினர் கருதுவதற்காக வருந்துகிறேன்.

## ஆபாச சுவரொட்டிகளுக்குத் தடை

* 440 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்<br>
திரு. கே. விநயகம் :<br>
திரு. டி. மார்டின் :<br>
} மதிப்பிற்குரிய

அரிஜன நல-செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) ஆபாச சினிமாப் படங்களையும், ஆபாச சுவரொட்டிகளையும் தடுக்கும் உத்தேசம் ஏதேனும் உண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) & (இ) ஆபாசத் திரைப்படங்கள் காண்பிப்பதைத் தடுப்பதற்கான அதிகாரம் மாநில அரசிடம் இல்லை. ஆபாச சுவரொட்டிகளும் திரைப்பட விளம்பரங்களும் வெளியாவதைத் தடுக்க இம்மாநில அரசு ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருக்கிறது. திரைப்பட ஆபாசச் சுவரொட்டிகள், விளம்பரங்கள் ஒட்டுவதைக் கண்காணித்துக் குற்றவாளிகள் மீது இ.பி.கோ. 292-ம் பிரிவின்கீழ் நடவடிக்கை எடுக்குமாறு சென்னை நகரப் போலீஸ் ஆணையருக்கும், சென்னை கலெக்டரைத் தவிர மற்ற கலெக்டர்களுக்கும் கட்டளைப் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. இதைக் குறித்துத் தம் கீழுள்ள போலீஸ் அதிகாரிகளுக்கும் கட்டளை பிறப்பிக்குமாறு போலீஸ் துறைத் தலைவரும் கேட்டுக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

திரு. வி.கே. கோதண்டராமன் : இப்போது ஆபாச சுவரொட்டிகள் விஷயத்தில் நடவடிக்கைகள் எடுக்குமாறு போலீஸ் அதிகாரிகளுக்குக் கட்டளையிடப்பட்டுள்ளதாக அமைச்சர் அவர்கள்

கூறினார்கள். ஆனால், இன்றைக்கும் சுவரொட்டிகளைப் பார்ப்போமானால் எந்த அளவிற்கு ஆபாசமான படங்கள், சுவரொட்டிகள் இருக்கின்றன என்பதைப் பார்க்க முடியும். ஆகவே, இதுவரையிலும் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என்பதைத்தான் அதிலிருந்து அறிய முடிகிறது. ஆகவே, கடுமையான உத்தரவை உடனடியாகப் போடுவதன் மூலம் நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இதுவரையில் ஆபாசம் எது என்கிற ஒரு வரையறை செய்கிற முறை போலீஸ் அதிகாரிகளுக்குத் தெரியாமல் இருந்தது. ஆனால், எது ஆபாசம் என்பதை வரையறுக்கின்ற முறையில் சமீபத்தில் அரசு, ரெவின்யூ போர்ட் முதல் மெம்பர் திரு. எஸ். ஆர். கய்வார் அவர்களைத் தலைவராகவும், போலீஸ் கமிஷனர் அவர்களைச் செயலாளராகவும் கொண்டு திரைப்பட நிலையங்கள், சினிமா படப்பிடிப்பு நிலையங்கள், பட உற்பத்தியாளர்கள், அத்தொழிலில் ஈடுபட்டிருக்கிறவர்கள் இவர்களைச் சேர்ந்த ஒரு தனிக் குழுவை நியமித்து, இன்று அந்தக் குழு ஒரு முடிவு எடுத்திருக்கிறது. சற்றேறக் குறைய தணிக்கையாளர்கள் எந்தெந்தச் சட்டங்களை அடிப்படையாக வைத்து தணிக்கை செய்கிறார்களோ அதையே இந்த விளம்பரங்களுக்குக் கூட எடுத்துக் கொள்ளலாம் என்ற முடிவில் அவர்கள் புதிய நியதியை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அது இன்னும் முடிவாக்கப்படவில்லை. அது முடிவான பிறகு, அது ஏற்றுக்கொள்ளப்பட்டால், தகுந்த அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டு அதன்மூலம் நடவடிக்கைகள் எடுக்க முடியும்.

திரு. கே., விநயகம் : ஆபாச சுவரொட்டிகள் விஷயத்தில் எது ஆபாசம் என்று கருதப்படுகிறதோ அந்தச் சுவரொட்டிகளை முதலில் சென்னை பூராவிலும் ஒட்டி விட்ட பிறகு யாராவது அதை ஆபாசம் என்று சொல்கிறார்களோ அல்லது இந்தக் குழு சொல்கிறதோ அதன் பிறகுதான் அது ஆபாசம் என்று கருதப்படுகிறது. பின் அதன் மேல் காகிதம் ஒட்டுவது அல்லது மறைப்பது என்று இப்படி நடக்கிறதென்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமா? உதாரணமாக " தி டென்த் விக்ட்டிம் " என்ற படம் இப்போது நடக்கிறது. சுவரொட்டிகள் ஒட்டப்பட்டு இப்போது மறைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, முன்னதாகவே போலீஸ் அதிகாரிகளோ அல்லது இந்தக் கமிட்டியோ சுவரொட்டிகளையெல்லாம் தணிக்கை செய்து அவர்கள் சரி என்று சொன்ன பிறகுதான் ஒட்டப்பட வேண்டுமென்று உத்தரவு இடப்படுமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : நான் அதைத்தான் விளக்கமாகச் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நான் சொல்லும்போது எங்கு கவனித்துக் கொண்டிருந்தார்களோ தெரியவில்லை. நான் கூறியது, இன்றுள்ள முறையில் தடுப்பு செய்ய முடியவில்லை. ஆபாசம் என்றால் எது என்று நிர்ணயிக்கப்படவில்லை. அதை நிர்ணயிக்கத்தான் இன்று ஒரு குழு அமைத்திருக்கிறோம். அந்தக் குழு இன்று அவற்றைப் பரிசிலனை செய்து சில விதி முறைகளை யெல்லாம் உருவாக்கிக் கொண்டிருக்கிறது. அவை உருவாக்கப் பட்ட பிறகு அந்த விதி முறைகள் தகுந்த அதிகாரிகளுக்கும் ஏனையோருக்கும் அனுப்பப்படும். பிறகுதான் அவர்கள் அதைத் தடுக்க ஏதுவாகயிருக்கும். அதுவரை இப்படிச் செய்கிற நிலையில்தான் அரசு இருக்கிறது.



திரு. என். எஸ். வி. சித்தன் : தற்போது வெளி வருகிற தமிழ்ப் படங்கள் பலவற்றை குடும்பத்தோடு சென்று பார்க்க முடியாத அளவிற்கு இனக் கவர்ச்சி அதிகமாக இருக்கிறது. இதைப் பார்க்கிறபோது தணிக்கைக் குழு என்று ஒன்று உண்மையிலே இருக்கிறதா என்ற ஐயம் எழுகிறது. ஆகவே இனிமேலாவது தணிக்கைக் குழுவின் சட்டதிட்டங்களை சற்று கடுமையாக ஆக்கும்படி மத்திய அரசுக்கு மாநில அரசு கருத்து தெரிவிக்குமா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இது வரையில் மத்திய அரசுதான் தணிக்கைக் குழுவை உருவாக்கிக் கொண்டு வருகிறது. மத்திய அரசு உருவாக்கும தணிக்கைக் குழுவில் இந்த மாநில அரசைக் கேட்காமலேயே அவர்கள் உறுப்பினர்களைச் சேர்த்து விடுகிறார்கள். ஆகவே தணிக்கைக் குழுவிற்கும் இந்த மாநில அரசுக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை. தணிக்கைக் குழுவில் இருப்பவர்கள்தான் அதைக் கவனித்துக் கொள்ள வேண்டும்.

திரு. இராம. அரங்கண்ணல் : இனக் கவர்ச்சியைத் தூண்டுகிற வகையில் சுவரொட்டிகளை ஒட்டுகிறவிதத்தில் நம் தமிழ்ப் படங்களைவிட வட இந்தியப் படங்கள், ஆங்கிலப் படங்கள் இவைகளின் போஸ்டர்கள்தான் அதிகமாக இருக்கின்றன. அவற்றைப் பார்க்கிறபோது அவ்வகைப் படங்களை விநியோகிக்கிறவர்கள், தமிழ் படங்களை தயாரிக்கிறவர்கள், ஆங்கில, வட இந்தியப் படங்களை விநியோகிக்கின்றவர்கள் இவர்களையெல்லாம் கூட்டி வைத்து கலந்து பேசி இதுபற்றி ஏற்பாடு செய்வதற்கு அமைச்சர் அவர்கள் ஏதாவது முயற்சி எடுத்துக் கொண்டார்களா?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : எந்தப் படமாக இருந்தாலும்சரி, ஆங்கிலப் படமாகயிருந்தாலும் சரி, இந்திப் படங்களாக இருந்தாலும் சரி, அவற்றில் வருகிற காட்சிகளைத் தணிக்கை செய்வது இன்று நம் மாநில அரசின் பொறுப்பாக இல்லை. ஆனால் மாநில அரசு பிரத்தியேகமாக இப்படிப்பட்டதொரு குழுவை உருவாக்கியிருக்கிறது. அந்தக் குழு கொடுக்கிற நல்ல விதிமுறைகளை வைத்துத்தான் இனி அதிகாரிகளுக்கு அந்த விதிமுறைகளைத் தந்து அதன்படி நடவடிக்கைகள் எடுக்கமுடியும. விரைவில் அந்தக் குழுவில் விதிமுறைகள் பற்றி தெரிந்து அவற்றை அதிகாரிகளுக்குத் தந்து நடவடிக்கைகள் எடுக்க இந்த அரசு முன்வரும் என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

[1967 நவம்பர் 25

**திருமதி கே. பி. ஜானகியம்மாள்** : சமீப காலத்தில் நம் நாட்டுப் பண்பு, நாகரீகம் இவற்றிற்கு விரோதமாக அமெரிக்க நாட்டு நாகரீகத்தைப் புகுத்தக்கூடிய முறையில் ஆபாசமான நடனங்களும் காட்சிகளும் அளிக்கக் கூடிய சினிமாப் படங்கள் அதிகரித்து வருவதைப் பார்க்கிறோம். இவற்றைத் தடுப்பதற்கு, மத்திய தணிக்கை போர்ட் இம்மாதிரி ஆபாசக் காட்சிகளை தணிக்கை செய்து அகற்றி விடுமாறு நம் அரசு மத்திய அரசைக் கேட்டுக் கொள்ள உத்தேசமுண்டா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : வெளிநாட்டுப் படங்களை தணிக்கை செய்வது மத்திய அரசுதான். இருந்தாலும் எந்தப் படமாகயிருந்தாலும் ஆபாசமான காட்சிகள் இருக்குமானல்—அவை இந்திப் படமோ அல்லது ஆங்கிலப் படமோ அல்லது வெளிநாட்டு படமோ எந்தப் படமாயிருந்தாலும், தமிழ் படமாயிருந்தாலும் சரி அவை நம் மாநிலத்தில் ஓடிக்கொண்டிருந்தால்—அந்தக் காட்சிகளை தடுக்கத்தான் இப்படிப்பட்ட ஒரு குழுவை அரசு நியமித்திருக்கிறது. அந்தக் குழுவின் முடிவு விரைவில் தெரிவிக்கப்படும். அப்படி தெரிவிக்கப்பட்ட பிறகு அதிகாரிகள் அதற்கேற்றவாறு நடவடிக்கைகள் எடுத்துக் கொள்வார்கள்.

**திரு. எஸ். இராமச்சந்திரன்** : இந்தியத் துணைக் கண்டம் பல்வேறு இன மக்களையும், மொழி மக்களையும் கொண்டுள்ளது மட்டுமல்லாமல் பல்வேறு கலாசாரம், நாகரீகம் உள்ள மக்களைக் கொண்டிருப்பதால் மத்திய அரசின் சென்சார் போர்ட்டுக்குப் பதிலாக ஒவ்வொரு மாநிலத்திற்கும் சென்சார் போர்ட் இருந்து அந்த மாநில மக்களின் நாகரீகத்திற்கேற்ற வகையில் இவர்கள் செயல் படவேண்டியிருப்பதால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : இது வரையில் மத்திய அரசுதான் தணிக்கைக் குழுவையெல்லாம் உருவாக்கிக் கொண்டு வருகிறது. சமீபத்தில் நான் டெல்லி சென்றிருந்தபோது மதிப்பிற்குரிய மத்திய அமைச்சர் திரு. கே. கே. ஷா அவர்களிடம் பேசி மாநில அரசைக் கலந்து தணிக்கைக் குழுவை நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டேன். அடுத்த முறை வருகிற குழுவில் மாநில அரசின் ஒப்புதலைப் பெற்று யார் யாரை வைத்துக் கொள்வது என்பது குறித்து பானல் ஆஃப் நேம்ஸ்—ஐ அனுப்பி வைத்தால் தணிக்கைக் குழுவில் சேர்த்துக் கொள்கிறேன் என்று சொல்லியுள்ளார். அப்படி நாம் கொடுக்கிற உறுப்பினர்களை வைத்து இம் மாநிலத்தின் பண்பு, கலாசாரம், நாகரீகம், இவற்றின் அடிப்படையில் வைத்துக் கொள்கிற காட்சிகளை வைத்துக்கொண்டு தேவையற்ற காட்சிகள் இருக்க இடமில்லாமல் ஆக்கலாம்.

**திரு. மா. இராசாங்கம்** : தலைவர் அவர்களே, தமிழகத்தின் சார்பாக இந்தக் குழுவில் இருக்கின்ற உறுப்பினர்கள் யார் யார்? அவர்களை நியமிப்பது மத்திய சர்க்காரா அல்லது மாநில சர்க்காரா?



1967 நவம்பர் 25]

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : கடந்த மாதம் போட்ட குழுவிலே கூட நமது மாநில சர்க்காரைக் கலந்து ஆலோசிக்காமல்தான் மூன்று பேர்களை அவர்கள் போட்டிருக்கிறார்கள். அதை நான் வன்மையாகக் கண்டித்துச் சொல்லி விட்டு வந்திருக்கிறேன். அடுத்த முறை போடுகின்ற குழுவில் நிச்சயமாக நமது மாநில சர்க்காரின் ஒப்புதலையும் அங்கிகாரத்தையும் பெற்றுத் தான் போடுவதாக அவர்கள் உறுதி அளித்து இருக்கிறார்கள்.

**திரு. சி. கோவிந்தராசன்** : தலைவர் அவர்களே, சில பத்திரிகைகளில் ஆபாசமாக எழுதுவதும் சித்திரங்கள் போடுவதும் நடைபெற்று வருகிறதே, அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்கப்படுமா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : பத்திரிகைகளிலோ அல்லது வேறு எந்த வகையிலுமோ ஆபாசம் இருக்குமானல் இ.பி.கோ. 292-வது பிரிவின் கீழ் நடவடிக்கை எடுக்கப் போலீசாருக்கு அதிகாரம் இருக்கிறது.

## மாவட்ட விளம்பர அலுவலகங்கள்

* 441 வினா—திரு. க. இராமமூர்த்தி : மதிப்பிற்குரிய அரிஜன நல செய்தித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

விளம்பரத் துறையின் கீழ் உள்ள, மாவட்ட விளம்பர அலுவலங்களுக்கு மத்திய சர்க்கார் மானியம் ஏதேனும் வழங்கப் படுகிறதா?

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து** : இல்லை.

## பரோலில் விடப்பட்ட கைதிகள்

* 422 வினா—திரு. டி. மார்டின் : மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மத்திய சிறையிலிருந்தும், திருச்சி மத்திய சிறையிலிருந்தும் 1—4—1967 முதல் 1—7—1967 வரை பரோலில் விடப்பட்ட கைதிகள் எத்தனைபேர்?

(இ) அவர்களில் ராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எத்தனை பேர்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : (அ) மதுரை மத்திய சிறையிலிருந்து—16.

திருச்சி மத்திய சிறையிலிருந்து—32.

(இ) ராமநாதபுரம்மாவட்டத்தை சேர்ந்தவர்கள் 11.

[1967 நவம்பர் 25

## மாநிலத்திலுள்ள சிறைச்சாலைகள்

***443 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

1952-க்கு பிறகு நமது ராஜ்யத்தில் எத்தனை சப்-ஜெயில்கள், மத்திய சிறைகள் புதிதாக கட்டப்பட்டன, ஜில்லாவாரியாக?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1952-ம் ஆண்டிற்கு பிறகு இம் மாநிலத்தில் மத்திய சிறைச்சாலையோ அல்லது மாவட்ட சிறைச்சாலையோ, எதுவும் புதிதாகக் கட்டப்படவில்லை. ஆனால் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோயிலில் 1956-ஆம் ஆண்டில் ஒரு சிறிய சிறைச்சாலையும் தக்கலையில் 1962-ம் ஆண்டில் ஒரு சிறிய சிறைச்சாலையும் மட்டுமே கட்டப்பட்டன.

**திரு. வி. கே. கோதண்டராமன்:** இந்த சிறைச்சாலைகளை, ஏற்கனவே இருந்த சர்க்கார் எந்தெந்த விதத்தில் எல்லாம் சீர்திருத்தி அமைக்கவேண்டுமோ, அதைச் செய்யவில்லையென்று அமைச்சரவர்கள் சொன்னார்கள். இன்றையதினம் வந்திருக்கக்கூடிய இந்த சர்க்காராவது எந்தெந்த விதத்தில் அவற்றை அபிவிருத்தி செய்ய வேண்டுமென்று உத்தரவிட்டுள்ளது? அல்லது இனிமேல் செய்ய உத்தேசம் இருக்கிறதா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** மத்திய சிறைச்சாலையில் இட நெருக்கடி இருப்பதாக முடிவு செய்யப்பட்டு பாளையங்கோட்டை சிறையை மத்திய சிறைச்சாலையாக மாற்றும்படி ஒரு ஏற்பாடு செய்திருக்கிறது. அதை விரிவாக்கினால் சிறைச்சாலையில் இருக்கும் இடநெருக்கடி குறையும்; வசதி பெருகும்.

***444 வினா—திரு. வி. கே. கோதண்டராமன்:** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திருச்சி மாவட்ட மார்க்கெட் கமிட்டியார் 1959 முதல் திருச்சி சப்-ஜெயில் கட்டடத்தை காலி செய்து தங்களுக்கு கொடுக்க வேண்டுமென்று கேட்டு வருவது உண்மையா?

(இ) ஆம் எனில், அதன் மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) திருச்சிராப்பள்ளியில் உள்ள சிறப்புத் துணைச் சிறைச்சாலையை அதன் தற்போதைய இடத்திலிருந்து திருச்சி மத்திய சிறையை அடுத்துள்ள ஓர் இடத்தில் கட்டப்படவிருக்கிற புதிய கட்டிடத்திற்கு மாற்ற முடிவு செய்யப்பட்டுள்ளது. அக் கட்டிடம் கட்டுவதற்கான நிதி ஒப்பளிப்பு இன்னும் வழங்கப்படவில்லை.



1967 நவம்பர் 25]

**திரு. வி. கே. கோதண்டராமன்:** சார் அதை வழங்குவதாக உத்தேசம் உண்டா? அல்லது எவ்வளவு காலத்திற்குள் அதை வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** இந்த சப்-ஜெயில் மாற்றப்பட வேண்டுமென்ற கொள்கை அனைவராலுமே ஒப்புக் கொள்ளப் பட்டிருக்கிறது. அதற்கான எஸ்டிமேட் தயாரிக்கப்பட்டிருக்கிறது. அது Part II Scheme -இல் சேர்க்கப்பட்டு, நிதிவசதி ஏற்படும்போது, மேற்கொள்ளப்படும்.

***445 வினா—திரு. மா. பா. சாரதி:** மதிப்பிற்குரிய சட்ட கூட்டுறவு அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) இந்த ராஜ்யத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளதா?

(இ) எங்கு, எப்பொழுது ஏற்படுத்தப்படும்?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** (அ) ஆம்.

(இ) விவரங்கள் இன்னும் முடிவாக்கப்படவில்லை.

**திரு. மா பா. சாரதி:** தலைவர் அவர்களே, எந்தெந்த மாவட்டத்தில் ஏற்படுத்த உத்தேசம் இருக்கிறது? அதையாவது இப்போது சொல்ல முடியுமா?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** புழல் கிராமத்தில் ஏற்படுத்த வேண்டுமென்று திட்டமிட்டு, நிலம் எல்லாம் பெற முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது. அதற்கு ஆகக்கூடிய செலவுத் தொகை ஒதுக்கப்பட வேண்டும். நிதிவசதி ஏற்படும்போது இது மேற்கொள்ளப்படும்.

THIRU K. VINAYAKAM: In the event of opening of open air prisons, what type of prisoners will be housed there? Will they be criminals involved in murder, arson, looting and similar crimes—they should be prevented from escaping from such prisons—or will they be those sentenced for light offences?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** குற்றங்களைப் பொறுத்த வரையில், கைதிகளை அவரவர்களுடைய பண்புகளுக்கு ஏற்றவாறு சிறைச்சாலைகளில் பிரித்து வைக்கிறார்கள். புதிய சிறைச்சாலை உருவாக்கப்படும்போது எந்தெந்தக் கைதிகள் என்று தீர்மானிக்கப்படும்.

**திரு. ந. தருமலிங்கம்:** சட்டப் பேரவைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலைகளை வசதி ஆகவும், சொகுசாகவும் ஆக்கிவிட்டால் அதிகம் பேர் குற்றம் செய்துவிட்டு சிறைச்சாலைக்கு வரக்கூடும் என்பதால் சிறைச்சாலைகளில் அதிக வசதிகளை ஏற்படுத்துவதை நிறுத்திவைக்கும் எண்ணம் இந்த அரசுக்கு உண்டா?

**(விடை இல்லை)**

[1967 நவம்பர் 25

### *Abolition of Urban Land Tax*

*446 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU G. GOMATHISANKARA DIKSHIDAR : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state whether there is any proposal to abolish or drop completely the Urban Land Tax?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : இல்லை.

THIRU K. VINAYAKAM : Are the Government aware that the citizens of Madras have been experiencing a lot of harassment and difficulty in the matter of paying Urban Land Tax and that when the party now in power, including the present Minister for Law and Minister for Revenue, was in the opposition, it was urging the then Government to abolish this tax entirely?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : ஒரு வரியைப் போடும்போது மன்றத்திலே பல கருத்துக்கள் சொல்லப்படுகின்றன. முடிவாக ஜனநாயக முறையில் ஒரு முடிவு எடுக்கப்படுகிறது. இதுபற்றி மீண்டும் பரிசீலனை செய்ய வேண்டும் என்றால், இந்தச் சட்டமன்றத்தில் வேறு முறைகளில் கொண்டுவரலாம்.

DR. H. V. HANDE : Sir, is the Government aware that there have been distinct and specific cases of harassment of a number of poor landlords, especially people who own very small extents of land, that a number of complaints were voiced in the Press and that the Chief Minister gave an assurance that they will be looked into and proper steps taken to prevent the recurrence of such incidents? In view of these, will the Government tell us when this harassment will be removed, when the levy of Urban Land Tax arbitrarily and based on fantastically high valuation will stop and whether the collection of the whole tax due for the past five faslis in one lump sum will be prevented so that there may not be serious harassment to the public?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : வரி எவ்வளவு போட வேண்டுமென்று சட்டத்திலே விளக்கம் தரப்பட்டிருக்கிறது. அந்த வரியை வசூலிக்கும் விதத்தில் சில கஷ்டங்கள் இருப்பதாக நம்முடைய முதலமைச்சர் அவர்களிடத்திலே சொல்லப்பட்டது. அதற்குப் பின்னால் இந்த அரசாங்கம் பரிசீலனை செய்து, வரியைக் கொஞ்சங் கொஞ்சமாகச் செலுத்தலாம் என்று உத்தரவு போட்டு இருக்கிறது. இந்த வரியை நிர்ணயிப்பது விஷயமாக அவரவர்கள் மனுக் கொடுத்து இதுபற்றிச் சொல்லலாம். அதற்குப் பிறகு அந்த அதிகாரி முடிவு செய்கிறார். அந்த அதிகாரி சரியாக முடிவு செய்யவில்லை என்றால், நீதிமன்றத்திற்கு (ட்ரிப்யூனல்) சென்று முடிவு செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறது.

THIRU K. VINAYAKAM : In the matter of assessment of Urban Land Tax in the City, is the Government aware that some formula has been evolved by which lands in Mylapore and Thyagarayanagar have been valued at the tantalisingly low figure of six thousand and seven thousand rupees, lands in Teynampet, a backward area, valued at twelve thousand and sixteen thousand rupees and lands in Nungambakkam, very near the residence of the Chief Minister, valued at eight thousand rupees? The disparity is so much and will the Government go into the question once again and evolve a scientific formula for the valuation of the lands?



1967 நவம்பர் 25]

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : சட்டங்களைப்பற்றி கனம் அங்கத்தினருக்குத் தெரியும். எந்தெந்த இடத்திற்கு எவ்வளவு மதிப்புப் போட வேண்டுமென்று சட்டத்திலே கூற முடியாது. அப்படிக் கூறினால் அந்தச் சட்டம் செல்லுபடியாகாது. மார்க்கெட் வால்யூவுக்கு ஏற்றபடி நிர்ணயிக்கலாமென்று பொதுவான கொள்கையைத் தான் சட்டத்திலே சொல்ல முடியும். அந்தக் கொள்கை சொல்லப்பட்டிருக்கிறது. அதை முடிவு செய்வதற்கு அதிகாரிகள் நியமிக்கப்பட்டு இருக்கிறார்கள். அந்த அதிகாரி தவறாக நிர்ணயிக்கிறார் என்றால், நிச்சயமாக நீதி மன்றத்திற்கு எடுத்துச் செல்ல வாய்ப்பு இருக்கிறது.

**திரு. இராம. அரங்கண்ணல்** : சார், ஏழைகளைப் பாதிக்காத வகையில் இந்த வரி இருக்க வேண்டும் என்று சட்ட மன்றத்தில் எடுத்துச் சொல்லியும் கூட அப்போது இருந்த சர்க்காரால் பிடிவாதமாகப் போடப்பட்ட வரியாகும் இந்த வரி. இந்த வரி சம்பந்தமாக நகரத்தில் உள்ள பல மக்களிடையில் பல தரப்பட்ட கருத்துக்களும் அபிப்பிராயங்களும் சொல்ல வேண்டுமென்ற ஆசை இருக்கிற காரணத்தினால் இந்தச் சட்ட மன்றக் கூட்டத் தொடருக்குள் இது சம்பந்தமாக ஒரு சட்ட மன்றக் கமிட்டி போட்டு அதனுடைய அபிப்பிராயங்களைக் கேட்டு இதைப் பற்றிப் பரிசீலனை செய்ய அரசு ஒப்புமா ?

**மாண்புமிகு திரு. செ. மாதவன்** : நான் முன்னரே சொன்னேன். ஒரு சட்டம் இருக்கிறது. அந்தச் சட்டத்திற்கிணங்க வரி போடப்பட்டிருக்கிறது. அதை மாற்ற வேண்டுமானால் அதற்குரிய முறைகள் நமது விதிகளில் இருக்கின்றன. அதைப் பின்பற்றலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, is the Hon. Minister aware of the fact that a series of writ petitions are still pending in regard to this matter before the High Court and till the writ petitions are disposed of, will the Government be pleased to stop the collection of the Urban Land Tax to give exemption to such of those plots which are small viz., 1-1/2 grounds. Is he also aware of the fact that the Hon. Chief Minister has given an assurance to the persons who submitted petitions to him that the collections would be stayed or would be collected in such a way as not to collect the entire five-year assessment in one lump sum. What is the tangible relief which the Hon. Chief Minister proposes to give to the land-owners of the City of Madras?

THE HON. THIRU C. N. ANNADURAI : My hon. Friend, as usual, has coupled two or three things in his speech. One is about the abolition of the Urban Land Tax itself. Another is that the

[1967 நவம்பர் 25

writ petition is pending. If the writ petition goes against us, there is no need to abolish it because then there will be no tax. With regard to my assurance given to the petitioners, what I have assured them is this. Whatever rigours of that tax will be looked into and alleviated. They pleaded with me that there were small plots of one ground or half a ground and so to levy the Urban Land Tax on those small plots would be regressive. I admitted it and I asked the officers to work out a scheme under which the rigours of that tax would be reduced. For instance, there may be a slab system for people owning one or half a ground. There may be exemption for one ground or a smaller amount may be levied for one or two grounds. I hope my hon. Friend understands graded taxation and the officers are looking into it. Another thing is that there was a complaint that they had been asked to pay it in a lump sum. I have asked them to pay it in several instalments and the Minister in charge of it has also given the same answer. I think that is being carried out. If there are still any rigours of that tax, representations can be made to me and I will certainly look into them.

THIRU K. VINAYAKAM : Are the Hon. Chief Minister and the Hon. Minister for Law aware of the fact that one assessee who having paid the tax demanded from him, has been harassed and his doors have been removed from his house and then deposited in the Collector's Office? It was only after his representations to the Government that he had already paid the tax and after the intervention of the Government, the doors were restored to him. What action was taken against that erring official?

THE HON. THIRU C. N. ANNADURAI : That officer was asked to explain his conduct and the latter part of my hon. Friend's statement viz., that the door was restored, is what the Government did.

*Re-organization of Revenue Department*

* 447 Q.—THIRU K. VINAYAKAM :
THIRU L. BALARAMAN : } Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(a) has the Government effected any retrenchment or re-organisation in the Revenue Department;

(b) if so, what are those details, how many officers have been affected by such reorganisation; and

(c) is it a fact that all the posts of Additional Personal Assistants to the Collectors in the districts have been abolished as a measure of effecting economy in the Department?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) வருவாய்த்துறையில், அரசிதழ் பதிவு பெற்ற சில பதவிகளை எடுத்து விட அரசு ஆணையிட்டுள்ளது.



1967 நவம்பர் 25]

(இ) பத்து கூடுதல் நேர்முக உதவியாளர்கள் பதவிகளும், அவரவர்களுக்காக இருந்த சுருக்கெழுத்துத் தட்டச்சர்கள், ஏவலர்கள் போன்ற பணியாளர்களின் பதவிகளும் எடுத்துவிடப்பட்டன. இக் கேள்வியின் பிற்பகுதிக் கேள்வி எழவில்லை.

(உ) ஆம்.

THIRU K. VINAYAKAM : Sir, may I know from the Government how many people were actually retrenched or affected by the methods adopted by them? Regarding Additional Personal Assistants, were they given alternative jobs or were they left to the whims and fancies of the Government?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சில பதவிகள் எடுக்கப்பட்டன. பதவிகளை எடுத்து விட்ட காரணத்தினால் அவர்களுடைய வேலை போகவில்லை. பதவிகள் மட்டும் ஒழிக்கப்பட்டுள்ளன, கூடுதலாக உள்ளன என்ற ஒரே காரணத்திற்காக.

திரு. இல. பலராமன் : தலைவர் அவர்களே, ஒரு அதிகாரியை அவர் செய்கிற வேலையிலிருந்து தற்காலிகமாக நீக்கி சிறிது காலத்திற்குப் பின்னால் அதே வேலையை அவருக்குத் தந்திருக்கும் நோக்கம் என்ன என்று தெரிந்து கொள்ள ஆசைப்படுகிறேன். இதுபோன்று எத்தனை அதிகாரிகள் திரும்ப நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : தாற்காலிகமாக நீக்கப்பட்டது என்பதல்ல. சில பதவிகள் கூடுதலாக உள்ளன என்று பதவிகள் ஒழிக்கப்பட்டன. அந்தப் பதவிகளில் இருந்துவந்த நபர்கள் வேலையில் இருக்கிறார்கள்.

திரு. டி. எஸ். ஆதிமூலம்: சார், ரெவின்யூத் துறைக்கு ஏராளமான பொறுப்புக்கள் இருக்கின்றன. அப்படியிருக்கும்போது அந்தத் துறையில் உள்ள ஆர். டி. ஓ.-க்களை தாசில்தார்களாகவும் தாசில்தார்களை டெபுடி தாசில்தார்களாகவும் மாற்றிப் போட்டு அவர்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். சர்க்கார் வேலையில் பாதி வேலையை ரெவின்யூ இலாக்காதான் செய்கிறது. ஆகவே அனுதாபத்துடன் கவனித்து அவர்களுக்கு ரெஸ்டோரேஷன் கொடுக்க இந்தச் சர்க்கார் முன்வருமா?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கலெக்டர்களுக்குப் பல உதவியாளர்கள் இருந்தார்கள். கூடுதல் உதவியாளர்கள் பதவி தேவையில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. எந்த ஆர்.டி.ஓ.-வும் மாற்றப்படவில்லை. கூடுதலாக இருக்கும் பதவிகளை ஒழிக்கும் போது அதனால் ஏற்படக் கூடிய விளைவுகள் இருந்தால் அவைகளை ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

THIRU K. VINAYAKAM : While I am perfectly aware that no permanent Government servant can be removed from service for no invalid reasons, are the Government aware of the fact that

there is a fear lurking in the minds of the Government servants that after this Government have come into power, they are being retrenched or degraded instead of being promoted or upgraded. Are there such instances? Will the Government make a categorical statement regarding the reorganisation of departments?

THE HON. THIRU C. N. ANNADURAI : I admit that there is a fear in the minds of certain officers that they would be retrenched and that fear is naturally due to the propaganda carried on irresponsibly by certain individuals.

*Medical College for Salem*

*448 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Central Government have offered to open a Medical College at Salem; and

(b) if so, whether the State Government have agreed to it?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா:* (அ) நாளிதழ்களில் இவ்வாறான செய்திகள் வந்துள்ளன. ஆனால் இந்திய அரசிடமிருந்து அதிகார பூர்வமான கடிதம் ஏதும் இதுவரை கிடைக்கவில்லை.

(இ) இக் கேள்வி எழவில்லை.

*திரு. ஏ. எம். ராஜா :* சட்ட மன்றத் தலைவர் அவர்களே, சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதை விரைவுபடுத்தத் தமிழக அரசு மத்திய அரசை வற்புறுத்துமா ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* அதுபற்றிப் பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது.

DR. H. V. HANDE : Sir, has any Committee of the Government of India or the University Grants Commission or the Indian Medical Association come and inspected the site in Salem and given its opinion to the State Government? What is the basis on which we are to presume that the Central Government are going to start a Medical College there ?

THE HON. THIRU S. J. SADIQ PASHA : No Committee has come and inspected the site at Salem.

THE HON. THIRU C. N. ANNADURAI : I may add that in my talks with the Union Health Minister, he gave us a hint to understand that he would look very favourably the proposal regarding Salem Medical College.

*திரு. ஈ. ஆர். கிருஷ்ணன் :* ஐயா, மத்திய சர்க்காருக்குச் சேலத்திலே மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கு விருப்பம் இல்லை என்று தெரிகிறது. மாநில சர்க்காராவது உடனடியாகச் சேலத்தில் ஒரு மருத்துவக் கல்லூரியை ஏற்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடுமா?



*மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை :* கனம் உறுப்பினர் அவர்கள் ஏற்கெனவே சேலத்தில் இருக்கிற தொகையோடு கூட இன்னும் 15 லட்சம் ரூபாய் திரட்ட முயற்சி எடுத்துக்கொண்டால் மாநில சர்க்காரோ, மத்திய சர்க்காரோ யாராவது அதிலே தலையிட்டு நிச்சயமாக மருத்துவக் கல்லூரி அமைக்க வழிவகை ஏற்படும்.

*" Boys' Town " at Kodambakkam*

*449 Q.—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether it is a fact that the City Police Department proposes to run a " Boys' Town " at Kodambakkam, Madras ?

*மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா :* ஆம்.

THIRU K. VINAYAKAM : What are the salient features of this " Boys' Town " and what is the mania or fascination which the Police Department attaches to Kodambakkam to locate it there? மூற் பகல் 10-30

THE HON. THIRU S. J. SADIQ PASHA : In April 1964 the Government sanctioned the purchase of a plot measuring one ground and 477 square feet in the Kodambakkam-Pudur area of the State Housing Board for locating the new Boys' Town.

THE HON. THIRU C. N. ANNADURAI : May I add that the mania or fascination for the Police to open a Boys' Town there will be similar to the fascination that my hon. Friend **Mr. Vinayakam** has got for opening a first-class hotel there?

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* வினாக்கள்—விடைகள் முடிவடைந்தன.

[குறிப்பு—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிகுறி (*) இடப்பட்டிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

## 2. அறிவிப்புகள்

### (i) பேரவை அலுவல்

*மாண்புமிகு பேரவைத் தலைவர் :* 24—11—1967-ல் நடைபெற்ற அலுவல் ஆய்வுக் குழுவின் தீர்மானத்தின்படி இக் கூட்டத் தொடரில் நடைபெறவிருக்கும் அலுவல்களின் அட்டவணை அச்சிட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் கண்ட வரிசைப்படி, அலுவல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும் என்று அறிவிக்கிறேன்.

3. அரசினர் தீர்மானம்

தமிழ்நாடு நில அபிவிருத்திக் குழுவிற்குத் தேர்தல்

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** தலைவர் அவர்களே, தமிழ் நாடு நில அபிவிருத்திக் குழுவிற்கு மூன்று உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்குக் கீழ்க்கண்ட தீர்மானத்தை நான் முன் மொழிகிறேன் :—

"1959-ம் ஆண்டு தமிழ்நாடு நில அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியின் கீழ், உணவு—விவசாயத் துறையில் 1963, டிசம்பர், 19-ம் தேதியன்று வெளியிட்ட 3671-ம் எண் ஆணையில் கண்டுள்ளபடி அரசினர் அமைத்த தமிழ்நாடு நில அபிவிருத்திக் குழுவின் உறுப்பினர்கள் பதவியில் ஏற்பட்ட வெற்றி டங்களில் நியமனம் செய்வதற்கு—

1. திரு. ஆர். கிருஷ்ணசாமி நாயுடு, எம். எல். ஏ.,
2. திரு. ஆர். ராஜகோபாலசாமி, எம். எல். ஏ.,
3. திரு. ஏ. தியாகராசன், எம். எல். ஏ.,

ஆகிய உறுப்பினர்களை மேற்படி குழுவின் உறுப்பினர்களாக இப் பேரவை தேர்ந்தெடுத்தபடியிறுலும்,

மேற்கண்ட பிரிவின் (2) உட்பிரிவைச் சேர்ந்த (f) பகுதியில் குறிப்பிட்டுள்ள உறுப்பினர்களின் பதவிக்காலம், மேற்படி பிரிவின் (5) உட்பிரிவைச் சேர்ந்த ( ) பகுதியின்படி, 1966, நவம்பர் 30-ம் தேதியன்று முடிவடைந்து விட்டபடியாலும்,

1959-ம் ஆண்டு தமிழ்நாடு நில அபிவிருத்தித் திட்டங்கள் குறித்த சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 31/1959) 8-வது பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவின் (f) பகுதியையொட்டி, மாண்புமிகு பேரவைத் தலைவர் குறிப்பிடும் ஒரு தேதியன்று மேற்கண்ட குழு வின் உறுப்பினர்களாக இருக்கும்படி சட்டப் பேரவையின் மூன்று உறுப்பினர்களை இப் பேரவை தேர்ந்தெடுக்க வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப் பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

தமிழ்நாடு நில அபிவிருத்திக் குழுவிற்குத் தேர்தல்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** திருத்தம் நிறைவேறியது. மாண்புமிகு அமைச்சரவர்கள் கொண்டு வந்துள்ள தீர்மானத்தை உறுப்பினர்கள் எல்லோரும் ஒருமனதாக ஏற்றுக் கொண்டிருக் கிறார்கள் என்று கருதுகிறேன். எனவே, தேர்தல் நடை பெறு வதற்கு ஒற்றை மாற்று வாக்கு முறைப்படி, பேரவைத் தலைமை வகுத்துள்ள விதிகளுக்கு இணங்க நிலவள வளர்ச்சிக் குழுவிற்கு (The Madras Land Improvement Board) வேட்பாளர்கள், நியமனத் தாள்களை 27—11—1967 தேதி திங்கட்கிழமை மாலை 5





மணிக்குள், செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத் தாள்கள் வேண்டுவோர் செயலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

வேட்புத் தாள்கள் 28—11—1967 செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு, ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும். விலகிக்கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் அன்று பிற்பகல் 2 மணிக்குள் விலகிக் கொள்ள வேண்டும்.

வேட்பாளர்களின் எண்ணிக்கை நிரப்பப்பட வேண்டிய வெற்றி டங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது மூன்றுக்கு, மேற்படுமாயின் 29—11—1967 புதன்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே, உறுப்பினர்களின் ஓய்வு அறையில், வாக்குப் பதிவு நடைபெறும்.

(iii) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1967-ம் ஆண்டு, மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா வை இந்தப் பேரவைக்குக் கொண்டுவருவதற்கு, மேன்மைமிகு ஆளுநர் அவர்கள், தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள். எனவே, அம் மசோதாவை பேரவைக்கு அறிமுகப்படுத்த, மாண்பு மிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்.

(v) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு மோட்டார் எரிபொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதா

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** 1967-ம் ஆண்டு மோட்டார் எரி பொருள் (ஸ்பிரிட்) விற்பனை வரி விதிப்பு (திருத்த) மசோதாவை அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இம்மசோ தாவை நான் அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப்படுத் தப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(iv) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1967-ம் ஆண்டு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவை, இந்தப் பேரவைக்குக் கொண்டுவருவதற்கு, மேன்மைமிகு ஆளுநர் அவர்கள், தமது

இசைவைத் தெரிவித்துள்ளார்கள். எனவே, அம்மசோதாவை பேரவைக்கு அறிமுகப்படுத்த மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

(2) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதா.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1967-ம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (மூன்றும் திருத்த) மசோதாவைப் பேரவைக்கு அறிக்கப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன் :** தலைவர் அவர்களே, இம் மசோதாவைப் பேரவைக்கு அறிமுகப் படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம்மசோதா அறிமுகப் படுத்தப்பட்டது.

2. அறிவிப்புகள்—தொடர்ச்சி

(௩) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்த மசோதா.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 1967-ம் ஆண்டு நிலச் சீர் திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்த மசோதாவைப் பேரவைக்கு அறிமுகப்படுத்த, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சரவர்கள் அனுமதி கோருவார்கள்.

4. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி

(3) 1967-ம் ஆண்டு தமிழ்நாடு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்த மசோதா

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** 1967-ம் ஆண்டு நிலச் சீர்திருத்த (நில உச்ச வரம்பு நிர்ணயித்தல்) திருத்த மசோதாவை அறிமுகப்படுத்த பேரவையின் அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, அனுமதி வழங்கப்பட்டது.

**மாண்புமிகு திரு. செ. மாதவன்:** தலைவர் அவர்களே, மசோதாவைப் பேரவைக்கு அறிமுகப்படுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இம் மசோதா அறிமுகப் படுத்தப்பட்டது.



5. 1967-68-ம் ஆண்டு தமிழக மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கை மீது விவாதம்—தொடர்ச்சி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று மாலையிலும் கூட்டம் உண்டு என்பதைத் தெரிவித்துக் கொள்ளுகிறேன். மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கை மீது இப்போது விவாதம் தொடர்ந்து நடைபெறும்.

*** திரு. கா. வேழவேந்தன் :** பெருமதிப்பிற்குரிய பேரவைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1967-68-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை குறித்தும் அதையொட்டிய துணை நிதிநிலை அறிக்கை குறித்தும் நம்முடைய மாண்புமிகு கல்வி, தொழிலமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த உரையின் மீது என்னுடைய கருத்துக்களையும் சொல்லிக் கொள்வதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை நான்கு முக்கியமான காரணங்களுக்காக நாம் வரவேற்க வேண்டியவர்களாக இருக்கிறோம். முதல் காரணம், இது வரை மின்சாரத் துறை என்று சொன்னாலே 'வெட்டு', 'வெட்டு' என்கிற வார்த்தைகள் அடிக்கடி வந்து அதன் மூலமாக நாட்டிலே பல குழப்பங்கள் இருந்த நிலை மாறி இனி வெட்டு என்பதே இருக்காது, மின்சாரக் கட்டுப்பாடு என்பதே இருக்காது என்கிற சூழ்நிலையை உருவாக்கி இருக்கின்ற தமிழக அரசினுடைய நிலைமையை நாமெல்லாம் பாராட்ட வேண்டியவர்களாக இருக்கிறோம். அது மட்டுமல்ல, கோடை காலம் என்று வருமானால், கோடையின் சூடு மட்டும் அல்ல, தொழிலகங்களில் வேலை நிறுத்தமும், ஊர்வலங்களும், போராட்டங்களும் அதை ஒட்டி மற்ற தொழிலகங்களிலே தொழிலாளர்கள் பல்வேறு அனுதாபப் போராட்டங்களிலே ஈடுபடுவதும் இனி இல்லை என்ற ஒரு நல்ல சூழ்நிலையை இந்த அரசு உருவாக்கியிருக்கிறது. ஆகவே இந்த நிதி நிலை அறிக்கையை முதல் கட்டத்திலே இந்த விவாதத்திலே வரவேற்க வேண்டியவர்களாக இருக்கிறோம்.

இரண்டாவதாக, கிராமப் பகுதியிலே இருக்கிற பம்புசெட்டுகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பது குறித்து நாம் பார்ப்போமானால் கடந்த 7 மாதங்களில் மட்டும் ஏறத்தாழ 26,000 விசை ஏற்றங்களுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருக்கிறது என்ற பூரிப்பான செய்தி நமக்கெல்லாம் நல்ல மகிழ்ச்சியை அளிக்கிறது. பொதுவாக இப்படிப்பட்ட நல்ல வளர்ச்சி இருக்க வேண்டுமென்று எல்லோருமே எதிர்பார்த்தோம். அந்தச் சூழ்நிலை உருவாகியிருப்பது நமக்கெல்லாம் பெருமகிழ்ச்சி அளிப்பதாக இருக்கிறது.

மூன்றாவதாக, நாம் பாராட்ட வேண்டிய செய்தி ஒன்று இருக்கிறது. தனிப்பட்ட உரிமதாரர்கள் அமைச்சர் அவர்களுடைய அறிக்கையிலுள்ளபடி அவர்களுடைய பல்வேறு ஸ்தாபனங்களில் சரியான வகையில் செயல்படாத நிலைதான் இருந்து கொண்டிருக்கிறது. தமிழக அரசு பொறுப்பேற்றுக்கொண்ட பின்னர்

தஞ்சை மாவட்டத்திலிருந்த மூன்று உரிமங்களை தேசிய மயமாக்குகின்ற நம் கையகப்படுத்துகின்ற திட்டத்தைக் கொண்டு வந்தது. இன்னும் 5 உரிமங்கள் தனியார் கையில் இருக்கின்றன. அவற்றையும் தமிழக அரசு வெகு விரைவிலே தேசிய மயமாக ஆக்க வேண்டுமென்கிற என் பணிவான கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான்காவதாக, இந்த மின்சார வாரியத்தில் அடங்கியிருக்கிற தொழிலாளிகளுடைய குறைகளை நீக்குவதற்கும், தொழிற்சங்க ரீதியாக அவர்களுக்குரிய சட்ட திட்டங்களை உரிய வகையில் அமுல் படுத்துவதற்கும், அவர்களுடைய குறைகளை வெகு விரைவிலே களைவதற்கும் நீண்ட நெடுங்காலமாக அவர்களுக்குள்ள பல குறைகளை நீக்குவதற்குமான திட்டங்களை வகுத்திருக்கிறார்கள். அது நமக்கெல்லாம் மகிழ்ச்சியைத் தரக்கூடிய செய்தியாக அமைகிறது. பொதுவாக எடுத்துக் கொண்டால், தமிழக அரசு மிகப் பெரிய முதலீடு போட்டிருக்கின்ற ஒரு துறை இந்த வாரியமாகும். இதற்காக ஏறத்தாழ ரூ. 300 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. காரணம், நம்முடைய நாட்டிலே இருக்கிற இருட்டைப் போக்குவதற்கு மட்டுமல்ல, பசியைப் போக்க வேண்டுமென்பதற்காக, வேலையில்லாத் திண்டாட்டத்தைப் போக்கவேண்டும் என்பதற்காக, மின்சக்தி பல்வேறு துறைகளில் பயன்படுத்தப்படுகிற காரணத்தினால், அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த வகையிலே நான் ஒன்று சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். கடந்த கால ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தவர்கள் மின்சக்தியை எந்த வகையிலே அதிகம் பெற்றாலும், எதிர்காலத்தில் போதாமையை நீக்க வேண்டும், குறைந்த அளவில், யூனிட் செலவிலே அதை எப்படிப் பெற முடியும் என்பதைப்பற்றி அதிகமாகக் கவலைப்பட்டவர்களாக இருக்கவில்லை; அனல் மின்சார நிலையங்களை நாம் முழுவதும் பயன்படுத்துவதற்கு இத்தனை காலம் ஆகிறது என்பதை ஒரு குற்றச்சாட்டாக நான் சொல்ல ஆசைப்படுகிறேன். மலைப் பகுதிகளிலும், குன்றுப் பகுதிகளிலும், அருவிகளிலும்தான் இதுவரைக்கும் மின்சார நிலையங்களை ஏற்படுத்தியிருக்கிறோம். என்னூர் அனல் மின்சார நிலையத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, கல்பாக்கம் அனல் மின்சார நிலையத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, தூத்துக்குடி அனல் மின்சார நிலையத்தை எடுத்துக் கொண்டாலும் சரி, கோரிக்கைகள் விடப்படுவதும், பதில் சொல்லப்படுவதுமாகவே இருந்து வந்திருக்கின்றனவே தவிர, அந்தத் திட்டங்களெல்லாம் உற்பத்தித் துறையில் நல்ல முன்னேற்றம் எய்தியதாக இல்லை. அண்மையில்தான் கல்பாக்கம், என்னூர் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு செயல்படுவதற்குரிய வகையில் மாறிக் கொண்டு வருகின்றன என்ற பூரிப்பான செய்தி நமக்கு வந்திருக்கிறது. ஆனாலும், தூத்துக்குடி அனல் மின்சாரத் திட்டம் இன்னும் செயல்படுத்தப்படாமல் இருப்பதும், திட்டத்தில் சேர்க்கப்படாமல் இருப்பதும் வருத்தத்துக்குரிய செய்தியாக இருக்கிறது. அதைப்பற்றி மத்திய அரசுக்கு நாம் நல்ல வகையிலே பரிந்துரைத்து, அந்தத் திட்டத்தையும் காலதாமதமின்றி நிறைவேற்ற வேண்டிய நிலையில் நாம் இருக்கிறோம். அப்படிச் செய்தால் தான் மைசூரிலிருந்து மின்சாரம் எதிர்பார்ப்பதும், மற்றும் இனி தட்டுப்பாடு ஏற்படுமோ என்ற ஐயமும் நம்மை விட்டு நீங்கும்.



நான் இன்னொன்றும் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். நெய்வேலி மின்சாரத் திட்டத்திலிருந்து இன்னும் போதிய அளவு அதிகமான மின்சாரத்தை நாம் பெற முடியாத நிலையில் இருக்கிறோம். இயற்கைத் தாய் தன்னுடைய மடியிலே ஏராளமாக நிலக்கரிச் சுரங்கத்தை வைத்துக் கொண்டிருக்கிறாள். ஆனால், போதிய இயந்திர வசதிகள் இல்லாத காரணத்தினால், போதிய நுணுக்க வசதிகள் இல்லாத காரணத்தினால் அதிகமான அளவு மெகவாட் மின்சாரத்தை நாம் பெற முடியாத நிலையில் இருக்கிறோம். வெண்ணெயை வைத்துக் கொண்டு நெய்க்கு அலைவது போன்ற நிலையில் இருக்கிறோம். அந்த வகையிலே மத்திய அரசு அதில் மேலும் கவனம் செலுத்தினால், நெய்வேலித் திட்டத்தின் மூலம் மட்டுமே நாம் பெறுகிற மின்சாரம் நம்முடைய தேவையைப் பூர்த்தி செய்து, மற்ற மாநிலங்களுக்கும் மின்சாரம் வழங்கக்கூடிய நிலையினை உருவாக்க முடியும் அந்த வகையில் நம்முடைய மாநில அரசு மத்திய அரசிடம் அதிகமாக வற்புறுத்த வேண்டிய கட்டத்தில் நாம் இருக்கிறோம். பொதுவாக உற்பத்தியைப்பற்றி என்னுடைய கருத்துக்களை நான் முதலில் சொன்னேன்.

மின்சாரம் வழங்குவதைப்பற்றி நம்முடைய மின்சார வாரியம் மிகவும் கவனமாக இருந்தாலும், பல்வேறு வகையில் இன்னும் கிராமப்புறங்களில் குறைபாடுகள் இருந்து கொண்டிருக்கின்றன. முன்பெல்லாம் மின்சாரம் வழங்கப்படாத கிராமம் இல்லை, விளக்கு எரியாத கிராமம் இல்லை என்று சுவரொட்டிகள் மூலம் விளம்பரப்படுத்தப்பட்டிருந்தாலும், என்னுடைய கும்முடிப்பூண்டி தொகுதியில் 100-க்கு 50-க்கு மேற்பட்ட கிராமங்களுக்கு இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. ஆந்திர எல்லையோரத்தில் இருக்கிற அந்தக் கிராமங்கள் இன்னும் இருளில் மூழ்கிக் கிடக்கின்றன. ஆகவே, தெரு விளக்குகள் அமைப்பதில் மின்சார வாரியம் குறிப்பாக கிராமப் பகுதிகளில் மனம் கனிந்து ஆதாயத்தை மட்டுமே கருதாமல் இன்னும் மின்சாரத்தைத் தாராளமாக வழங்க வேண்டும் என்பதுதான் என்னுடைய பணிவான வேண்டுகோள்.

மேலும், இப்பொழுது போடப்பட்டிருக்கிற விளக்குகள் சரியாக எரிவதில்லை. இப்பொழுது உபயோகப்படுத்துகின்ற அந்தக் குண்டு பல்புகள் மற்றவர்கள் கழட்ட முடியாத அளவில் இருக்கின்றன என்றாலும் இருளிலே எங்கே கம்பம் இருக்கிறது என்று தேடக்கூடிய நிலைதான் இருக்கிறது. கிராமப்புறங்களில் விளக்குகள் எரியவில்லை என்ற புகார்கள் அதிகமாக இருக்கின்றன.

விளக்குகள் எரிகிற வகையிலே நல்ல கண்காணிப்பு இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். சென்னை நகரம், கோவை நகரம் போன்ற பெரிய நகரங்களில் வீடுகளில் 5 நிமிஷம் விளக்கு அணைந்துவிட்டால், உடனே தொலைபேசி மூலம் அணுகி, 5 நிமிடம், 10 நிமிடங்களுக்குள் அல்லது ஒரு நாளைக்குள் மின் சாரத்தைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. விளக்கு வசதியைப் பெறக்கூடிய நிலைமை இருக்கிறது. கிராமப் பகுதிகளிலே பஞ்சாயத்துக்கள் தவறாமல் பணம் செலுத்தியிருந்தாலும், யூனியன் மூலமாகப் பணம் வசூலிக்கப்பட்டாலும், பல்வேறு தெருக்களில் விளக்குகள் எரியாமல் வாரக்கணக்கில், மாதக்கணக்கில் இருக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. அப்படிப்பட்ட குறைகள் உடனடியாகக் களையப்பட வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன்.

இன்னொரு குறிப்பையும் அமைச்சர் அவர்களுக்குச் சொல்ல ஆசைப்படுகிறேன். இந்தத் தெருகு விளக்குகள் எரியாமல் போவதற்கு முக்கியமான காரணம் கண்டிராக்டரைப் பொருத்திருக்கலாம் என்கின்ற சூழ்நிலையில் மின்சார வாரியத்தின் தலைவர் போன்றவர்கள் தெருக்களில் டியூப் விளக்குகளை அமைக்கலாம் என்று சிபார்சு செய்வதாகத் தெரிகிறது. கிராமப் பகுதிகள் டியூப் விளக்குகளை அமைப்பதற்கு முன் வராதது, நீண்ட விளக்குகளை அமைப்பதற்கு செலவு அதிகமாகலாம் என்று அவர்கள் நினைக்கிறதுதான் காரணம். எது எப்படி இருந்தாலும் இந்தப் பெரிய குறையைக் களைய மின்சார வாரியம் முயல வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

விசையேற்றங்களுக்கு மின்சாரம் வழங்குவதுபற்றி நான் என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். ஒரு ஆண்டு, 1½ ஆண்டுகளுக்கு முன்னால் விண்ணப்பம் செய்தவர்களுக்குக் கூட உடனடியாக மின்சாரம் வழங்கப்படாமல் இருப்பது பெரிய குறையாக இருந்து வருகிறது. அதற்குப் பல்வேறு காரணங்கள் கூறப்படுகின்றன. என்றாலும், அவைகளைக் கண்காணித்து, எந்தெந்தத் துறையிலே எதற்காக விண்ணப்பம் செய்திருக்கிறார்கள், விண்ணப்பத்தில் ஏதாவது தவறு, அல்லது இடையிலே இருக்கிற அதிகாரிகளின் தடங்கலா அல்லது தாமதம் செய்கிறார்களா என்பதைக் கண்டுபிடித்து, அந்த விண்ணப்பத்தாரர்களுடைய குறைகளைக் களைய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஒன்பது லட்சம் கிணறுகளிலே ஏறத்தாழ 3¼ லட்சம் கிணறுகளுக்குத்தான் மின்சார சப்ளை வழங்கப் பட்டிருக்கிறது என்ற குறிப்பினை அமைச்சர் அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். நாட்டிலுள்ள மூன்று கிணறுகளுக்கு ஒரு கிணற்றுக்குத்தான் மின்சாரம் தரப்பட்டிருக்கிறது, இன்னும் இரண்டு கிணறுகளுக்கு மின்சாரம் வழங்கப்படவில்லை. எங்கெல்லாம் அடி மட்டத்திலிருந்து தண்ணீர் வரவேண்டுமோ அங்கெல்லாம் மின்சாரம் போக வேண்டும். குறிப்பாக என்னுடைய பகுதியிலே ஏறத்தாழ 30 அடி, 40 அடி கீழே போனால் தான் தண்ணீர் கிடைக்கும், 60 அடி கீழே போய், அங்கிருந்து குழாய்க் கிணறு மூலம்தான் தண்ணீரை மேலே கொண்டுவர முடியும். அந்தப் பகுதிகளில் எல்லாம் கவலை ஏற்றத்தின் மூலம் அல்லது ஏற்றத்தின் மூலம் தண்ணீரை மேலே கொண்டு வரமுடியாத சூழ்நிலையில் இருக்கிறோம். இப்படிப்பட்ட பிற்போக்கான நிலைமைகளை ஆராய்ந்து, மின்சார வாரியம் இதுபோன்ற பிற்பட்ட பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதில் கொஞ்சம் தாராள மனப்பான்மை காட்ட வேண்டும், அந்தப் பகுதிகளிலிருந்து வரக்கூடிய விண்ணப்பங்களுக்கு முதலிடம் தரவேண்டுமென்று நான் மிகவும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன். ஏற்கனவே கிராமப் பகுதிகளில் விசை ஏற்றங்களுக்கு மின்சாரம் வழங்குவதற்காக ஒதுக்கப் பட்ட தொகை ரூ. 4 கோடியாக இருந்தது. இப்பொழுது அதற்கு ரூ. 6 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. புதிய பொறுப்பேற்றிருக்கிற இந்த அரசு அந்த அளவுக்கு விவசாயிகளுடைய பிரச்னைகளை மிகக் கருணையோடு அணுகுகிறது என்பதை அது எடுத்துக் காட்டுகிறது. ஆனால் இந்த 6 கோடி ரூபாயும் போதாமல் இருக்கக்கூடிய சூழ்நிலையில் நாம் இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, பம்பு செட்டுகளுக்கு வேண்டிய மின்சாரம் வழங்குவதற்கு இன்னும் அதிகமான தொகை ஒதுக்க வேண்டும் என்று நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். ஏனென்றால், தொகை முழுதும் தீர்ந்து விட்டது என்கிறார்கள். விவசாயிகள் முன் வந்து முதல் தொகை தந்தால், அதன் பிறகு மின்சார வாரியம் உதவி செய்வதாக வாரியத்தைச் சேர்ந்தவர்கள் சொல்லுகிறார்கள். ஒவ்வொரு பம்ப் செட்டுக்கும் மின்சார இலாகாவிற்கு ரூ. 2,000 வரை அட்வான்சாகக் கொடுத்து மின்சாரம் பெறக்கூடிய நிலையில் விவசாயிகள் இன்றைக்கு இருக்கவில்லை. நடுத்தர ஏழை விவசாயிகள் அல்லல் பட்டுக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, எந்த எந்த விண்ணப்பங்கள் வந்திருக்கின்றனவோ, அவற்றை நிறைவேற்றித் தர வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மொத்தத்தில் எடுத்துக் கொண்டால், மின்சாரத் துறை, தமிழகத்தில் பெரும் அளவில் முன்னணியில் இருக்கிறது என்பதை நாம் பெருமையாகச் சொல்லிக் கொள்ள முடியும். மீதம் இருக்கும் தனியார் உரிமங்களையும், வெகு விரைவில் எடுத்துக் கொண்டு, இருக்கும் சிறு சிறு குற்றங் குறைகளையும் அகற்ற முயற்சிகள் எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு நம் மின்சார வாரியம் மிகச் சிறப்பாக, நாமெல்லாம் பெருமைப் படும் வகையில் செயல்படுகிறது. இடையிலே இருக்கும் சிறு குற்றங்களும் களையப் பட்டால் பொன் மலர் மணம் பெற்றது போல ஆகும் என்று கூறி என் உரையை முடிக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, திரு. சுப்பராஜா அவர்கள், என்னுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி, ஐந்து நிமிடங்கள் பேசுவார்கள்.

**திரு. ஏ. அ. சுப்பாராஜா :** சபாநாயகர் அவர்களே, இந்த விவாதத்தில் நான் ஒரு சில வார்த்தைகள் சொல்லலாம் என்று நினைக்கிறேன். பொதுவாக மின்சாரத் துறையிலே தமிழ் நாடு முதன்மை பெற்று இருக்கிறது. இந்தக் குழுவைச் சேர்ந்தவர்கள், நல்ல முறையில் பணியாற்றி வருகிறார்கள். இருக்கும் நிலையில் ஒரு சில குறைகளையும், எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கஷ்டங்களையும் எடுத்துச் சொல்ல வேண்டும் என்று விரும்புகிறேன்.

பொதுவாக, இந்தத் துறைக்கு அதிகமாக வருவாய் வருவது நகரங்களில் இருக்கும் தெரு விளக்குகள் மூலம் தான். கிராமங்களிலும், நகரங்களிலும், அதிகமாக தெருவிளக்குகள் போட வேண்டும் என்று சேர்மென்களும் தலைவர்களும் ஏற்பாடுகள் செய்கிறார்கள். அதிலும், இப்பொழுது குழாய் விளக்குகள் போடுவதில் அதிகமாக அக்கறை காட்டும்போது, அதற்குக் கட்டணம் அதிகமாக இருந்தாலும், சிலர் போட்டு விடுகிறார்கள். ஆனால், சில நகரங்களில் போட முடியாமல் இருக்கிறார்கள். குழாய் விளக்குகள் போடுவதில் சிரமங்கள் இருக்கின்றன. டெண்டர் கால் பார்பண்ணுவது என்பதில், க்வாலிடி பற்றி ஒன்றும் சொல்ல முடியவில்லை. க்வாலிடி நன்றாக இல்லாமல், விலை குறைவாக இருக்கிறது என்று போட்டால், பிற்காலத்தில் அதிகமான செலவும் நஷ்டமும் ஏற்படுகின்றன. ஆகவே, கூடியவரையில், சம்பிரதாயங்களை தளர்த்திவிட்டு, நல்ல க்வாலிடியாகப் பார்த்து வாங்க வேண்டும். அதோடு, கம்பிகள், வயர், போல்கள் இவை, குறிப்பாக, எங்கள் பகுதிகளில் அதிகமாகக் கிடைப்பதில்லை. ஒரு நகர சபைத் தலைவன் என்ற முறையில் சொல்லுகிறேன். நகரத்தில், 200, 300 லைட்டுகள் போட வேண்டும் என்று சாங்ஷன் ஆனபிறகு போல்கள் கிடைப்பது சிரமமாக இருக்கிறது. அதைக் கவனித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகள் சிரத்தை எடுத்துக் கொண்டால், நன்றாக இருக்கும்.

இன்னொன்றும் சொல்ல விரும்புகிறேன். லோட் சரியாக இருப்பதில்லை. ஆகவே, அதற்குண்டான ட்ரான்ஸ்பார்மர் முதலியவற்றை நல்ல முறையில் உற்பத்தி செய்து, இந்த லோட்களெல்லாம் ஒரு விதமாக இருக்கும் நிலையை உண்டு பண்ண வேண்டும்.

இந்தத் துறை வருமானத்தில் அதிகமாக வருவாய் வருவது தெரு விளக்குகள் மூலமாகத்தான். ஆகவே, இதில் ஊக்கம் காட்ட, மின்சார இலாகாவினர் இதற்கென்று தனியாக ஸ்டாப் போட்டு, ஏன் சரியாக இவைகளெல்லாம் எரியவில்லை என்பதைக் கண்காணித்தால், அதிகமாக வரும் வருவாய் கூட இன்னும் சிறந்த முறையில் வரும். மக்களுக்கும் உதவியாக இருக்கும்.

விவசாயத்தைப் பொருத்த வரையில், நாம் இப்பொழுது 25 சதவிகிதம்தான் உபயோகிக்கிறோம். இன்னும் 40 சத விகிதம் வரை அதிகமாக உபயோகிக்கக் கூடிய முக்கியத்துவத்தை விவசாயத்திற்கு அளிக்க வேண்டும். கன்சம்ஷன் ரேட்டைக் குறைக்க



வேண்டும். அரிஜன் காலனிகளுக்கும், அரிஜன் கிராமங்களுக்கும் மிக முக்கியத்துவம் கொடுத்து, முதலிடம் கொடுத்து மின்சாரத்தைப் பெருக்கினாலும், வருவாய் பெருகுமாறு உதவிகள் செய்ய வேண்டும். மின்சாரக் கட்டு வரும்போது, இரவு நேரங்களில் தான் தண்ணீரைப் பாய்ச்ச வேண்டும் என்று இருக்கிறது. இது ரொம்பக் கஷ்டமாக இருக்கிறது. வேலைக்குப் பெண்களும் வருகிறார்கள். அவர்கள் இரவு நேரங்களிலும் வேலை செய்யக் கூடிய சூழ்நிலை இருப்பது அவ்வளவு நல்லதல்ல. ஆகவே, தொழில் நிலையங்கள் இரவில் எடுத்துக் கொண்டு விவசாயத்திற்குப் பகலிலேயே கொடுக்கக் கூடிய நிலையை உண்டாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

ஒரு யோசனை கூற விரும்புகிறேன். ஒவ்வொரு ஜில்லா லெவலிலும், ஒரு சிறிய குழு ஒன்றை அமைத்து, போர்டு சேர்மன் அவர்கள் அடிக்கடி ஜில்லா தலைநகரங்களுக்கு வந்து எம்.எல்.ஏ.-கள் யூனியன் சேர்மன்கள் இவர்களைக் கூட்டி, பேசக்கூடிய நிலை இருந்தால், அது நன்மை பயக்கும், அழகாகவும் இருக்கும். அந்த நிலையில், இன்றைக்கு 70 சத விகிதம் விவசாயத்தை நம்பியிருக்கும் மக்களுக்கு வேண்டிய தேவைகள் பூர்த்தி செய்யப்படவில்லை என்றால், பிற்காலத்தில், அவர்களால் மின்சாரத்தை உபயோகிக்கும் முறையிலே கெடுதல் ஏற்பட்டு, வருவாய் வரக்கூடிய துறையில் வருவாய் குறையக்கூடிய சூழ்நிலைதான் ஏற்படும். ஆகவே, ஒரு நல்ல சூழ்நிலை ஏற்படக்கூடிய முறையில், ஜில்லாவாரியாக வந்து அங்கே இருக்கும் குற்றங் குறைகளை நிவர்த்திக்க வகை செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* **திரு. நா. காசிராமன் :** தலைவர் அவர்களே, மின்சார உற்பத்தியிலும், விநியோகத்திலும், முன்பு இருந்த சர்க்கார் எவ்வளவு அக்கறை காட்டியிருக்கிறார்கள் என்பதற்குச் சில புள்ளிவிவரங்களைக் கொடுக்க விரும்புகிறேன். 1951-ம் வருஷம், விடுதலை பெற்று நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு, நாம் உற்பத்தி செய்த மின் சக்தி அளவு 156 மெ. வா. இன்றைக்கு நெய்வேலியிலிருந்து கிடைக்கும் 400 மெ. வா. ஐயும் சேர்த்து 1,470 மெ. வா. உற்பத்தி செய்கிறோம். கிட்டத்தட்ட எட்டு மடங்கு அதிகமாக மின்சாரத்தை உற்பத்தி செய்கிறோம். நீர் நிலைய மின்சார உற்பத்தி சம்பந்தப்பட்ட வரையில், நம் மாநிலத்தில் உள்ள எல்லா நீர் நிலையங்களிலும் மின்சார உற்பத்தியை மேற்கொண்டு விட்டோம். அதன் காரணமாக, நாம் குறைந்த விலையில் உற்பத்தி செய்ய முடிந்தது. நீர் நிலைய மின்சாரத்தில் நாம் கவனம் செலுத்திய காரணத்தால், அனல் மின்சார உற்பத்தியை அதிகரிக்க இப்பொழுதுதான் ஆரம்பித்து இருக்கிறோம். மின் விநியோகத்தைப் பொருத்த வரையில், முன்பு, 1951-ம் வருஷத்தில், 6,000 சொச்சம் கிலோ மீட்டர்தான் ஹெச்.டி. லைன் என்று சொல்லப்படும் அதிக அழுத்தக் கம்பிகள் இருந்தன. அது இன்றைக்கு 44,000 கி.மீ. ஆக உயர்ந்திருக்கிறது, கிட்டத்தட்ட எட்டு மடங்கு அதிகமாக இருக்கிறது. அதிக பட்ச, 'பீக் டிமாண்ட்' முன்பு 110 மெ. வா. ஆக இருந்தது, இன்றைக்கு

[திரு. நா. காசிராமன்] [1967 நவம்பர் 25

968 மெ. வா. ஆக இருக்கிறது என்றால், அதெல்லாம் தொழில் வளர்ச்சி நம் நாட்டில் எவ்வளவு ஏற்பட்டிருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டுகள். அக்ரிகல்சருக்கான பம்புசெட்டுகளை எடுத்துக் கொண்டால், அது இருபது மடங்கு உயர்ந்திருக்கிறது. 1951-ல் 14,373 ஆக இருந்தது, இப்பொழுது, 3,05,000 ஆக இருக்கிறது. அதே நேரத்தில், பம்பு செட்டுகளை அதிகப்படியாக உபயோகிக்கும் வகையில், அதிகமான கனெக்‌ஷன்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

முற்பகல் 11-00 அடுத்தபடியாக ஒன்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். கும்பகோணம் எலெக்ட்ரிசிடி விநியோகம், மன்னார்குடி எலெக்ட்ரிசிடி விநியோகம் இவைகள் எல்லாம் தனிப்பட்ட கம்பெனிகளிடம் இருந்து வருகின்றன. இவைகள் எல்லாம் நாளடைவில் தேசியமயமாக்கப்படும் என்று பட்ஜட் அறிக்கையில் கூறியிருக்கிறோம். ஆனால் எப்போது, எந்தத் தேதியில் அதைத் தேசியமயமாக ஆக்கப் போகிறோம் என்பதைக் குறித்துத் திட்டவட்டமாகத் தெரிவிக்கவில்லை. இதன்காரணமாக, அந்தத் தனிப்பட்ட கம்பெனிகள் புது முதலீடுகள் செய்வதில் தயக்கம் காட்டி வருகிறார்கள். அதனால் கும்பகோணம் பகுதியில் 70 விவசாயிகள் பம்பு செட்டுகள் வாங்கியும், அவர்களுக்குக் கனெக்‌ஷன் கொடுக்க முடியாத நிலைமை இருந்து வருகிறது. 1966-ம் ஆண்டு டிசம்பர் மாதம் கும்பகோணம் மின்வழங்கு கம்பெனி ஐந்து லட்சம் ரூபாய்க்குக் கடன் மனுக்கள் போட்டிருந்துங்கூட பதிலேது இல்லாததால் அது விவசாயிகளுக்குப் புதிய கனெக்‌ஷன்கள் கொடுக்க முடியவில்லை. ஆனால் சென்ற காங்கிரஸ் அரசினர் 18 லட்சம் ரூபாய் செலவிலே 580 பம்பு செட்டுகளுக்கு கும்பகோணம் எலெக்ட்ரிசிடி கம்பெனியார் மூலமாக அந்த ஏரியாவில் சப்ளை செய்து கொடுத்திருக்கிறார்கள்.

அதேபோல எனது தொகுதியில் சோழபுரம் புதுத்தெரு ஹரிஜன் காலனியில் மின்சாரக் கம்பங்கள் நடவோ, விளக்குப் போடவோ மேற்கொண்டு நடவடிக்கைகள் எடுக்க முடியாத நிலை இருந்துவருகிறது. தெருவிளக்குகள் போடப்படவில்லை. இவைகளை ஏற்று நடத்த புது முதலீட்டுச் செலவை சர்க்கார் ஏற்றுக் கொள்ளுமோ, ஏற்றுக் கொள்ளாதோ என்ற ஐயப்பாடு தனிப்பட்ட கம்பெனிகளுக்கு ஏற்பட்டிருப்பதைக் காணலாம். தனிப்பட்ட கம்பெனிகள் நாளடைவில் தேசிய மயமாக்கப்படும் என்று கடந்த ஜூன் மாதத்தில் அறிவிப்பு செய்யப்பட்டது. அதன் காரணமாக எந்தவிதமான புது வேலையும் நடக்கவில்லை. அப்படி கம்பெனிகள் புது முதலீடுகள் செய்து நடத்தும் வேலைக்கு ஆகும் செலவை சர்க்கார் ஏற்றுக் கொள்ளும் என்று முழுமையான உத்தரவாதம் அளிக்கும்படியான அறிக்கை விட்டால்தான் மேற்கொண்டு வேலை நடைபெற முடியும்.

மன்னார்குடி தொகுதியில் எடமேலையூர் என்ற ஊரில் இருக்கும் நடராஜன் என்பவர் மில் சொந்தக்காரர். அவர் 30 ஹார்ஸ் பவருக்கு லைசென்ஸ் வாங்கியாகிவிட்டது. அவருக்கு அந்த இடத்தில் மோட்டாருக்கு கனெக்‌ஷன் கொடுக்க அங்குள்ள டிரான்ஸ்பார்மரை மாற்றியாக வேண்டும். அங்குள்ளதை 10 கிலோவாட் மின்சக்தி உடையதாக மாற்ற வேண்டும். அந்த மில் சொந்தக்காரருக்கு கனெக்‌ஷன் கொடுக்க மேலும் இதில் முதலீடு செய்தால் சர்க்கார் ஏற்றுக்கொள்வார்களா என்ற ஐயம் அந்தக் கம்பெனிகளுக்கு ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, சர்க்கார் உடனடியாக இந்த ஐயத்தைப் போக்க வேண்டும்.



1967 நவம்பர் 25] [திரு. நா. காசிராமன்]

அடுத்தபடியாக நம்முடைய நண்பர் திரு. வேலுசாமி, எம்.எல்.ஏ., அவர்கள், மேட்டூர் அலுமினிய தொழிற்சாலைக்கு ஒரு யூனிட்டுக்கு ஒரு பைசா விதம் மின்சாரம் சப்ளை செய்யப்படுகிறது என்றார். அவ்வாறெனில் பொதுமக்களுக்காக நகராட்சிகளாலும், பஞ்சாயத்துக்களாலும், நடத்தப்படும் குடிநீர் திட்டங்களுக்கும், சாக்கடை நீர் வெளியேற்றும் திட்டங்களுக்கும் கொடுக்கப்படும் மின்சாரத்தின் கட்டணத்தை மிகக் குறைவாகக் கொடுத்தால் மிகவும் நியாயமாகவே இருக்கும். விவசாயிகளது பம்பு செட்டுகளுக்கு மின்சாரம் கொடுக்கும் போது ஒரு ஹார்ஸ் பவருக்கு ஒரு வருடத்திற்கு 60 ரூபாய் என்று மினிமம் சார்ஜ் வசூலிப்பதாகச் சொல்கிறார்கள். விவசாயத்தைப் பொறுத்தவரையில் இது நல்லதல்ல என்று கூறிக் கொள்கிறேன். காவேரி டெல்டாப் பகுதியில் மோட்டார் பம்புகளை மழைக் காலங்களில் உபயோகப்படுத்த முடியாது, அப்போது காவேரியில் தண்ணீர் வரும். அப்படி இருக்கும்போது அவர்களிடம் மினிமம் சார்ஜ் என்று வசூலிப்பது சரியாக இல்லை. மேலும் அதற்காக செக்யூரிட்டிக் கென்று 25 ரூபாய், 50 ரூபாய் என்ற அளவில் விவசாயிகளிடமிருந்து வாங்குவது, அவர்களுக்கு ஆதரவாக இருக்கக்கூடிய காரியம் அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக 1965-66-ம் ஆண்டுக்கான ஸ்டேட் எலெக்ட்ரிசிடி போர்டு ஆடிட் ரிப்போர்ட்டில் கணக்குகள் சரியாக வைத்துக் கொள்ளாததன் காரணமாக நன்றாகப் பரிசீலிக்க முடியவில்லை என்று கூறியிருக்கிறார்கள். இனி அம் மாதிரியான தவறுகள் எல்லாம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மேலும், 2.29 லட்சம் ரூபாய் மதிப்புள்ள சாமான்கள் குறைவாக இருக்கிறதென்று சொல்கிறார்கள். அதற்கெல்லாம் யார் காரணம் என்பதைக்கண்டு பிடித்து அக் குறைகளையெல்லாம் நீக்க வேண்டும்.

நிலக்கரி மானியமாக வந்த 48 லட்சம் ரூபாயை மின்சார உற்பத்திச் செலவில் வைக்காமல் டிபாசிட் கணக்கு வைத்திருக்கிறார்கள். அந்தத் தவறினால் உற்பத்தி செலவு அதிகரித்துக் காட்டும். சமீபத்தில் மின்சார விநியோகத்திலே யூனிட்டுக்கு 2 பைசா அதிகமாகப் போட்டிருக்கிறார்கள். சர்க்கார் அதைப் பரிசீலித்து, அதைக் குறைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சர்க்கார் தனிப்பட்ட மின்சாரக் கம்பெனிகளையெல்லாம் தேசியமயமாக ஆக்கும் நேரத்தில், அந்தக் கம்பெனிகளில் வேலை செய்யும் எல்லாவித ஊழியர்களுக்கும் சிரமமின்றி பாரபட்சம் செய்யாமல் எல்லோரையும் வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டும். அவர்

களுக்கு தற்போது தரப்பட்டு வரும் போனஸ் உட்பட சகல வசதிகளையும், உதவிகளையும் அளிக்க வேண்டும். அரசாங்கம், இந்தத் தேதியில், இந்த மாதத்திலிருந்து தனிப்பட்ட மின்சாரக் கம்பெனிகளை எடுத்துக்கொள்ளும் என்பதற்குத் திட்டவட்டமாக ஒரு அறிக்கையைப் பிறப்பித்தால் அவர்கள் வேலையில் ஊக்க முடன் ஈடுபட முடியும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வளவு நேரம் பேச வாய்ப்புக் கொடுத்ததற்கு என் நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

■ **திரு. சு. துரைசாமி**: சட்டமன்றத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் மீதான விவாதத்தில் எனக்குப் பேச வாய்ப்பளித்தமைக்கு என் பணிவான நன்றியை இந்தச் சந்தர்ப்பத்தில் தான் தெரிவித்துக் கொள்கிறேன். இந்தச் சந்தர்ப்பத்திலே நான் ஒன்றைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இந்த மின்சார வாரியத்திலே ஏறத்தாழ 60 ஆயிரம் தொழிலாளர்கள் வேலை செய்து வருகின்றார்கள். பழைய காங்கிரஸ் அரசாங்கம் இருந்த காலத்தில் அந்தத் தொழிலாளர்கள் தொழிற் சங்கம் அமைக்க உரிமை கேட்டதை மறுத்து வந்தார்கள். அது தொழிலாளர்களுடைய அரசாங்கமாக இல்லாத காரணத்தால் அந்த நியாயமான உரிமையைக்கூட மறுத்து வந்தது. திராவிட முன்னேற்றக் கழக அரசு தொழிலாளர்களுடைய அரசாக இருக்கிற காரணத்தால், அந்த மின்சார வாரியத்தின் தொழிற்சங்கத் தலைவரை அழைத்து உடன்பாட்டை உருவாக்கித் தந்த மாநில முதலமைச்சர்—அறிஞர் அண்ணா அவர்களைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

28—10—1967 அன்று மின்சாரம் உபயோகிப்போர் மாநாட்டை திருப்பூரிலே கூட்டியதன் காரணமாக அங்குள்ள ஏறத்தாழ 80 கிராமங்களுக்கு இன்றையதினம் மின்சாரம் கொடுக்கின்ற நிலைமையை உருவாக்கித் தந்த தலைவருக்குப் பாராட்டுத் தெரிவிக்கிறேன். அங்குள்ள கிராமத்து மக்கள் எல்லாம் இதனால் மகிழ்ச்சியடைந்து இந்த அரசாங்கத்திற்குப் பாராட்டுத் தெரிவித்திருக்கிறார்கள். கிராமத்து மக்கள் சார்பில், விவசாயிகள் சார்பில் மீண்டும் நன்றியையும் பாராட்டையும் முதலமைச்சருக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நான் கடந்த ஐந்தாண்டுக் காலமாக மின்சார வாரியத்தின் மீது பலர் பேசிய பேச்சைப் பார்த்தேன். அவர்கள் எல்லாம் மின்சாரக் கழகத்தை மிகவும் பாராட்டிப் பேசியிருக்கிறார்கள். நான் அந்த அளவு பாராட்ட முடியாத நிலையில் இருக்கிறேன். அதற்கான காரணம் எல்லாம் இன்றைக்கு மின்சார வாரியம் 1968-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் தேதியிலிருந்து 1978-ம் ஆண்டுவரை மக்களிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கின்ற நிலை இருந்து வருகிறது. 1963-64-ம் வருஷத்திலிருந்து மக்களிடமிருந்து வாங்கிய கடனைத் திருப்பிக் கொடுக்கின்ற முறையில் நிதி ஒதுக்குகின்ற காரியத்தை காங்கிரஸ் அரசாங்கம் செய்யத் தவறிவிட்டது. மின்சார வாரியத்திற்கு நாம் கடன் கொடுத்தால் ஒழுங்காகத்



திரும்பி வருமா என்று பொதுமக்கள் ஐயப்பாட்டுடன் இருந்து வருகிறார்கள். ஏப்ரல் மாதத்தில் 2 கோடியே 20 லட்சம் வாங்கிய கடனுக்கு 1 கோடியே 10 லட்சம் ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அதற்கு மேலும் கடன் எழுப்ப வேண்டிய நிலைமைக்குப் பழைய காங்கிரஸ் அரசாங்கம் விட்டுவிட்டுப் போயிருக்கிறது. மின்சார வாரியம் இன்றைக்கு வினியோகம் செய்யும் மின்சாரத்தின் அளவைச் சரியாக முறைப்படுத்தாததால் ஏறத்தாழ 68 கோடியே 6 லட்சம் யூனிட்டுகள் கவனிக்காமல் விரயமாகின்றன. அதன் காரணமாக இன்றைக்கு 12 கோடி ரூபாய்க்கு அதிகமாக பணம் விரயமாகிறது. இதற்குத் தனியான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தனிப்பட்ட கம்பெனிகளுக்கு வழங்கும் மின்சாரம் 1 பைசாவிலிருந்து 9 பைசா வரைக்கும் கொடுத்து வருகிறார்கள். அதை ஒழுங்குபடுத்தினால் அதனால் அரசுக்கு 2½ கோடி வருமானம் அதிகமாகக் கிடைக்கும், என்பதில் ஐயமில்லை. அதற்கெல்லாம் காரணம் ஏற்கனவே இருந்த காங்கிரஸ் அரசாங்கம் முதலாளிகளுக்குச் சலுகை காட்ட வேண்டும் என்ற நோக்கத்தோடுதான் செய்திருப்பதாக நான் சந்தேகப்படுகிறேன். அந்த நிலைமை மாற வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல் இன்றைக்கு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் அங்கே இருக்கிற தொழிலாளர்கள் சமீபத்தில் ஒரு உடன்பாடு செய்து கொண்டிருக்கிறார்கள். அதன்படி 30 லட்சம், 35 லட்சம் கொடுக்க வேண்டி நேரிடுகிறது. தனிப்பட்டவர்களுக்கு இன்றைக்குக் கொடுக்கப்படுகிற சலுகையை மாற்றினாலேயே 2½ கோடிக்கு அதிகமாக வருமானம் வரும். தொழிலாளர்களுக்கு 30 லட்சம் தருவதில் எவ்வித சங்கடமும் இருக்காது. மின்சார வாரியத் தொழிலாளர்கள் இன்றைய தினம் இந்த அரசினிடத்தில் அதிகமான நம்பிக்கையை வைத்திருக்கிறார்கள். அவர்களுடைய நம்பிக்கையைப் பூர்த்தி செய்ய வேண்டும்.

அடுத்து மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையில் எலெக்ட்ரிசிடி (சப்ளை) ஆக்ட் 1948 சட்டத்தின் 16-வது விதிப்படி ஸ்டேட் எலெக்ட்ரிசிடி கன்சல்டேடிவ் கவுன்சில் என்று இருக்கிறது. அது இப்போது இயங்காத நிலைமை இருக்கிறது. அது இயங்கக்கூடிய வாய்ப்பை ஏற்படுத்த வேண்டும். 17-வது பிரிவில் லோகல் அட்வைசரி கமிட்டி என்று இருக்கிறது. முன்பு இருந்த மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் லோகல் அட்வைசரி கமிட்டியே வேண்டியது இல்லை என்று பேசியிருக்கிறார்கள். ஆனால் இன்றைக்கு நான் கருதுகிறேன். லோகல் அட்வைசரி கமிட்டி என்பதாக எம்.எல்.ஏ., எம்.பி., பஞ்சாயத்து யூனியன் தலைவர், தொழில் உரிமையாளர் பிரதிநிதி, விவசாயியின் பிரதிநிதி, தொழிலாளர் பிரதிநிதி, மின்சார இலாகா எ. இ. ஆக இப்படி 7 பேர்களைக் கொண்ட லோகல் அட்வைசரி கமிட்டியை ஏற்படுத்தினால்தான் அங்காங்கே உள்ள விவசாயிகளுடைய விண்ணப்பங்கள், தெரு

விளக்குகள் ஆகியவைபற்றி முறையாகப் பரிசிலனை செய்து உடனுக்குடன் செயல்பட வழியேற்படும். ஆகவே இத்தகைய கமிட்டிகள் அமைக்கப்பட வேண்டும்.

அடுத்து இன்றையதினம் ஏ.இ., டி.இ., எஸ்.இ., ஆகியவர்கள் இவ்வளவு இவ்வளவு ரூபாய்க்குள்தான் செலவாகும் வேலைகளை எடுத்து நடத்தலாம் என்ற விதி இருக்கிறது. ஆகவே ஒரு 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் தெருவிளக்குப் போடவேண்டும் என்றால் கூட சென்னைக்கு வந்து அனுமதி பெற்று, திரும்ப கோவைக்கு அனுமதி வரவேண்டியதாக இருக்கிறது. இந்தச் செலவு விதம் 30 ஆண்டு காலத்திற்கு முன் ஏற்படுத்தியதாக இருக்குமென்று கருதுகிறேன். இன்றைக்குள்ள பொருள்களின் விலைவாசி நிலைமையைப் பார்க்கிற போது ஏ.இ.-ஐப் பொறுத்தவரை 20 ஆயிரம் வரை அவரே வொர்க் சாங்ஷன் செய்யலாம், டி.இ.-ஐப் பொறுத்தவரை 50 ஆயிரம் வரை செலவு செய்யலாம், எஸ்.இ. ஒரு லட்சம் வரை செலவு செய்யலாம் என்பதாக மாற்றி அமைத்தால் மிகவும் நலமாக இருக்குமென்று தெரிவித்துக்கொள்கிறேன். இதுபற்றியும் மின்சார வாரியத்தைச் சேர்ந்தவர்கள் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல மின்சார வாரியத்திற்கு இன்றையதினம் கிட்டத் தட்ட ஆண்டு ஒன்றுக்கு 20 கோடி ரூபாய் அளவுக்குச்சாமான்கள் வாங்கப்படுகின்றன. ஆகவே இப்படி மின்சார வாரியம் சாமான்கள் வாங்குவதைக் கண்காணித்துக் கொள்ளவும் பர்சேஸ் கமிட்டி என்பதாகப் போடவேண்டும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நமது மாநிலத்தில் கோயம்புத்தூர், பொள்ளாச்சி போன்ற இடங்களில் உள்ள மின்சார விநியோக நிலையத்தில் வேலை செய்பவர்கள் குறைந்த சம்பளத்தை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய உரிமை கிடைக்கவில்லை. மின்சார வாரியத்தில் உள்ளவர்கள் என்ன படிப்பு, என்ன தகுதி பெற்றிருக்க வேண்டுமோ அதையேதான் அங்குள்ளவர்களும் பெற்றிருக்கிறார்கள். இருந்தாலும் சம்பள வேறுபாடு இருக்கிறது அங்குளளவர்களுக்கும் நியாயம் கிடைக்க ஆவன செய்ய வேண்டும். அடுத்து திருப்பூரில் இருக்கிற வருவாய்த்துறை கட்டிடம் மிகவும் மோசமாக இருக்கிறது. ஊழியர்கள் மிகவும் நெருக்கடியான நிலைமையில் வேலை செய்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பணிமனையையும் புதிதாக நல்லமுறையில் உருவாக்கித்தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கடைசியாக நம்மிடம் அதிக நம்பிக்கை வைத்திருக்கிற தொழிலாளர்கள் இன்றையதினம் ஏற்படுத்திக் கொண்டிருக்கிற ஒப்பந்தத்தை விரைவில் நிறைவேற்றித் தரவேண்டும் என்று கேட்டு என் உரையை முடிக்கிறேன். வணக்கம்.

(Mr. Deputy Speaker in the Chair.)

DR. H. V. HANDE : Hon. Deputy Speaker, Sir, while I propose to offer a few remarks on the budget that is placed on the table of the House, I wish to say at the very outset that in my speeches on the Electricity Board Budget in the Upper House and I had to oppose the Congress Party mainly because of the adamant attitude taken by the then Minister for Industries.



I want to request this Government to examine the points which I am going to place before this House very carefully and dispassionately, not take the blame upon themselves but put the blame on the department which has been the legacy of the Congress Government, find out why these faults are there and how we can remove them by putting our heads together irrespective of party affiliations and irrespective of the fact that it may hurt the feelings of a few here and there.

I want to say that the Electricity Board is *ultra vires* of the Electricity (Supply) Act, 1948. According to me the Board is illegal and unconstitutional for the following reasons section 9 of the Electricity (Supply) Act reads :

" *Members not to hold interest in certain concerns.*—(1) A Member of the Board shall, prior to his appointment, give to the State Government intimation of, and shall, before taking charge of his office, sell or divest himself of, any interest which he may have for his own benefit whether in his own name or otherwise, . . ." I consulted some experts and 'otherwise' definitely means wife, but it may also mean daughter, daughter-in-law, etc.

". . . in any firm or company carrying on the business of supplying electricity or any fuel for the generation of electricity, or of the manufacture, sale or hire of machinery, plant, equipment, apparatus or fittings for the generation, transmission, distribution or use of electricity, or any interest in the managing agency or shares or securities of any such company;"

and this is where I request the Government to examine " and it shall not be lawful for a member of the Board, so long as he holds office, to acquire or purchase any such interest in any such firm or company and, if he, under any will or by succession or gift becomes entitled for his own benefit to any such interest, he shall sell the same . . ."

Section 10 of the Act relates to removal or suspension of member. It is here that I request the Government to dispassionately examine the point that I am going to place before the Government.

" (1) The State Government may suspend from office for such period as it thinks fit or remove from office any Member of the Board who . . . fails to comply with the provisions of section 10 . . ."

which I have already read. The question before the House is whether the Chairman of the Electricity Board has got any share in his own name or otherwise.

THIRU K. VINAYAKAM : I raise a point of order. The question before the House is discussion on the Electricity Board budget and not the constitution of the Board. He is attacking the very fundamentals of the Board which is not the subject before the

[Thiru K. Vinayakam.] *[1967 நவம்பர் 25*

House. Is it relevant and proper for a Member, however tall he may be and to whatever party he may belong, to talk on the floor of this House about individuals who are not here to defend themselves? I want a categorical ruling about it.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மின்சார வாரியநிதி நிலை அறிக்கை மீது விவாதம் நடைபெறுகிறபோது, மின்சார வாரிய அமைப்பு முறை பற்றிப் பேசுவது முறையற்றதாக ஆகாது. தனிப்பட்டவர்களைப் பற்றிக் குறிப்பிட்டுப் பேசுவதுதான் முறையாகாது.*

THIRU K. VINAYAKAM : My friend is now dwelling on the subject of an individual who happens to be the Chairman of the Board.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : இந்த இடத்தில் தனிப்பட்டவர்களைப் பற்றிப் பேச முடியாதே தவிர அமைப்பு முறையைப் பற்றிப் பேசுவது முறையற்றதாக ஆகாது.*

DR. H. V. HANDE : I request Mr. Vinayakam not to keep on interrupting me. Please listen to me.

The main point that I wish to bring to the notice of the House is that the Act is invalid.

THIRU K. VINAYAKAM : He is attacking the very Act; he is attacking the very basis. It has been there for many years. This is not the forum for attacking the Act.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : நான் ஏற்கனவே தீர்ப்புக் கூறியிருக்கிறேன். அமைப்பு முறை பற்றிப் பேசுவது முறையற்றதல்ல. அந்தக் கருத்தைத் தெரிவிப்பதில் தவறு இல்லை. தனிப்பட்டவர்களைப் பற்றிப் பேசுவதுதான் கூடாது.*

DR. H. V. HANDE : A number of contracts are entered into by the Electricity Board. Transactions involving heavy financial implications are undertaken by the Electricity Board because the Board has given money and has taken money. I want to keep my conscience very clear and tell this House that the Act has been faulty. When the Act is faulty, whatever financial decision is taken by the members of the Board will also be *ultra vires* of the Act and to-morrow it may be questioned outside why these particular arrangements were made and all those things.

THIRU K. VINAYAKAM : You go to the Court.

DR. H. V. HANDE : There is the House here. Do not go on interrupting me.

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : உறுப்பினர் ஒருவர் பேசுகின்றபோது இடையிடையே குறுக்கே பேசிக் கொண்டிருப்பது சபையினுடைய முறைக்குக் கேடானது. அந்த முறையைக்*



*1967 நவம்பர் 25] [மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்]*

*கையாள வேண்டாமென்று கனம் உறுப்பினர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.*

DR. H. V. HANDE : The Electricity Board has got some contracts with Transformers and Switch Gear, Limited, W.S. Insulators of India, Limited and India Meters. It has got contracts with Alvitâs Electric Company (P), Limited, which is a wonderful company and is in No. 5, Luz Church Road, Mylapore.

THE HON. THIRU C. N. ANNADURAI : I would request the hon. Member Dr. Hande to make all these revelations to me in private so that, if there is anything to be rectified they could be looked into. Now he can confine himself to his good and constructive suggestions for making this Electricity Board to become productive of good results.

DR. H. V. HANDE : I take the advice of the Hon. Chief Minister. May I request the Deputy Speaker to allow me to pass on copies of the share certificates owned by the wife of the Chairman?

Next I come to the method by which electricity from Neyveli is being consumed and the method by which electricity is produced at another point. We are not utilising the power available in Neyveli to the fullest extent. Before we fully utilise the electricity available in Neyveli, how can we go in for huge projects which cost a huge amount of money? It has been very clearly stated in the introductory speech of the Hon. Minister that about one-third of the total plan outlays is allotted to power sector and that the allotment for the current financial year is Rs. 28·60 crores. The amount that the Electricity Board is spending is fantastic. My submission is that it is practically a very very huge spending organisation. Therefore any account that passes through the Board and any orders that are placed by the Board must be very carefully looked into. That is my submission. Because the Hon. Chief Minister has asked me not to go into the details, I will not go into them.

I want to refer to one more point. Alvitas Electric Company is a company in Luz Church Road, Mylapore. It is understood that this is a private limited company formed in 1963. It was blacklisted by the Mysore State Electricity Board and this was communicated by that Board in a letter to the Madras State Electricity Board. All that I request the Hon. Chief Minister is to see why orders for a fantastic sum were placed with this blacklisted company and whether this company has floated any shares in the open market. Just because I respect the Chief Minister, I have completely controlled myself and I shall place before him further details which are really shocking and have a discussion. My allegations must be taken very seriously and not brushed aside with the contempt with which the previous Industries Minister was accustomed to brush them aside.

[Dr. H. V. Hande] [1967 நவம்பர் 25

The Government handed over to the Board at the time of its formation in 1957 assets worth about Rs. 72 crores. Now it has raised its capital to a fantastic amount.

| | | (RS. IN CRORES.) |
|---|---|---|
| Loans by Madras Government | ... ... | 120 |
| Loans subscribed by public ... | ... ... | 24 |
| Loans from Life Insurance Corporation | ... | 6 |
| Depreciation Fund ... | ... ... ... ... | 46 |
| Deposits from companies and others | ... | 20 |

My submission is that this Board, which has a huge amount, is not at all making any profit. The argument advanced by our friends is this: the Board, being a public utility concern, cannot be expected to make profits. My only submission is that this is not an argument which I can accept.

The average cost of generation per unit is of the order of 4 paise per unit taking into consideration purchase from Neyveli and Mysore. About 30 per cent of the energy sold goes towards bulk supply to private companies at less than the cost of generation.

| | | (PAISE PER UNIT.) |
|---|---|---|
| Madras Aluminium Company, Mettur | . ... | 1.5 |
| Chemplast, Mettur | ... ... ... ... | 1.5 |
| Dharangadhra Chemicals, Arumuganeri | ... | 1.75 |
| Mettur Chemicals, Mettur | ... ... ... | 1.75 |
| South India Viscose, Mettupalayam ... | ... | 1.75 |
| Indi-Swiss Synthetic Gem Factory, Mettupalayam. | | 1.75 |
| Cement factories (five or six) | ... ... | 3.5 |

When the cost of production is high, why should the Board be selling energy all these years at such a low rate to these companies? That is my only submission..

(The time bell was rung.)

Sir, please allow me five more minutes, as I have certain important points.

The total amount of loss to the Electricity Board on account of this under-rating or undercharging comes to nearly Rs. 3 crores a year. This loss could have been averted and it is rather unfair that the poor consumers should have been charged so heavily. I would like the Government to reconsider the whole thing.

I made similar allegations in my previous speeches. The case of the previous Minister for Industries was that these companies were paying a large amount by way of sales tax. I made a further research and found that the sales tax from the sale of products



1967 நவம்பர் 25] [Dr. H. V. Hande]

of the Madras Aluminium Company came to Rs. 15 lakhs a year, but the loss to the Electricity Board because of the under-charging is Rs. 60 lakhs. Why should not such companies be charged more? The argument is that they provide employment. But, are not these companies making profits and paying huge dividends? Why should not a little more be taken from their profits and passed on to the Electricity Board? If that is done, we will have more revenue and we can cut down the heavy charges of this Electricity Board.

Now, I come to the next point regarding Trade Unions. Now the trade union activity is completely nullified by the Electricity Board. Trade Unions are not allowed to function. There are several trade unions. There is one trade union for the employees working in the Engineering Section and another for those working in the Accounts Section. On the whole, there are about six or seven trade unions. Our argument always is that the political parties should not participate in trade union activities as far as possible and they should not exploit the trade unions for furthering their party ends. But the Chairman of the Electricity Board drives these people to go to political parties because trade union leaders are not respected. They are not given proper recognition. The moment a trade union is formed, its office-bearer is transferred and another person is brought in his place. This harassment of transfer has been there. I do not want to use strong words because I do not want to wound the feelings of the Hon. Chief Minister. But the Chairman of the Electricity Board has used certain words which are unparilamentary against the trade unions. Why should he show such an autocratic and dictatorial attitude towards these ordinary people who are drawing a pay of Rs. 100 or Rs. 150? I only request this House and this Government to see that whatever trade unions are formed in any governmental undertaking, they should set an example to private undertakings and should give protection to these innocent and poor trade union leaders who should not be transferred.

முற் பகல் 11-0

So far as bi-monthly electricity bills are concerned, according to me it is only a ruse planned by the Electricity Board and they want to give anaesthesia to the legislators. The Chairman wants to mislead us but we are not going to be misled by him. The bi-monthly electricity bills are going to increase the work-load of the employees because they are very heavy. Employees should at least be given increments.

Now I come to the last point. When the present party-in-power was in opposition they brought forward the Erukkancheri affair. Even after they have come into power, why the Chairman of the Electricity Board is still kept in office and why he has been given extension.

(At this stage Mr. Deputy Speaker sounded the gong and called upon the hon. Member Thiru Muthuselvan to speak.)

THE HON. THIRU C. N. ANNADURAI : Mr. Deputy Speaker, the hon. Member, Dr. Hande, has stated in his speech that he did not want to wound my feelings. But I may tell him that I am very happy about his speech. He has erased a wrong impression created in the minds of the public that the Swatantra Party is always for private institutions. He has now pleaded that these private institutions or private companies should pay more tax to the Government and I am glad he has stated so. Another erroneous impression about the Swatantra Party is that they are against trade unions. But my hon. Friend has pleaded for trade unions. If this is to be the policy of the Swatantra Party, hats off to the **Swatantra Party.**

* திரு. பு. செ. முத்துச்செல்வன் : மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைமீதும், துணை நிதிநிலை அறிக்கை மீதும் பேசுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தித் தந்த துணைத் தலைவர் அவர்களுக்கு என் அன்புகெழுமிய வணக்கத்தையும், நன்றியையும் முதற்கண் தெரிவித்துக் கொள்கிறேன். தமிழ்நாடு மின்சார வாரியம் இந்த மாநிலத்தில் நல்ல பல சாதனைகளை சாதித்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். இந்த மின்சார வாரியம் சென்ற இருபது ஆண்டு காலத்தில் காங்கிரஸ் ஆட்சியில் சாதித்ததை விட இந்த ஏழு மாத காலத்தில் நிரம்ப சாதித்திருக்கிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக இந்த ஏழு மாத காலத்தில் 26,000 பம்ப் செட்களுக்கு மேலாக கனெக்ஷன் கொடுத்திருக்கிறது. அதைக் கணக்கிட்டுப் பார்த்தால் சென்ற காலத்தில் அதே கால அளவில் கொடுத்த கனெக்ஷன்களின் எண்ணிக்கையை விட ஏறத்தாழ இரண்டரை மடங்குக்கு மேலாக இது ஆகிறது. இதை ஒரு பெரிய சாதனையாகவே ஏற்றுக் கொண்டு அவர்களை நாம் பாராட்டக் கடமைப் பட்டிருக்கிறோம்.

அடுத்தபடியாக, தமிழ்நாடு மின்சார வாரியம் பல நல்ல காரியங்களைச் செய்தாலும் அதை விரிவுபடுத்தி அதன் ஆக்கப் பணிகளை நல்ல முறையில் செய்தால் தமிழ்நாட்டில் விவசாய உற்பத்தி பெருகவும், தொழில் துறையில் நல்ல முன்னேற்றம் காணுவதற்கும் அது வழிவகையாக அமையும். அதே நோத்தில் தமிழ்நாட்டில் ஏறத்தாழ எட்டு தனியார் நிறுவனங்கள் இருக்கின்றனவென்று சொல்லப்படுகிறது. அந்த எட்டு நிறுவனங்களில் மூன்று நிறுவனங்களைத்தான் இன்று கையகப்படுத்துவது என்ற கொள்கையை நம் அரசு எடுத்திருக்கிறது. இந்த மூன்று நிறுவனங்களுக்குக் கூட இதுவரையில் நோட்டீஸ் பிறப்பிக்கப்படாமல் இருப்பதாகத் தெரிகிறது. அவர்களே கூட இதுவரையில் எங்களுக்கு நோட்டீஸ் கொடுக்கப்படவில்லையே, இனி என்ன செய்வார்களோ என்று எதிர்பார்க்கும் நிலையில் இருக்கிறார்கள். அதன் காரணமாக செய்யப்படவேண்டிய பல வேலைகள் சுணக்கமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அவர்களை அணுகி பல ஊர்களுக்கு மின்சார இணைப்பு வேலையைத் துரிதப்படுத்த வேண்டுமென்று கூறினால்



அவர்கள் வேலை செய்யாது தயக்கம் காட்டுகிறார்கள். அவர்கள் சொல்வதெல்லாம், எங்களுக்கு இதுவரையில் அரசு கொடுத்து வந்த கடன் தொகையை இப்போது பெறமுடியாத நிலையில் இருக்கிறோம், மேலும் முதலீடு செய்ய முடியாத நிலையிலும் இருக்கிறோம், நீங்கள் அந்தக் கடன் தொகையைப் பெற்றுத்தந்தால் செய்கிறோம் என்பதாகும். இன்னும் அந்தந்த ஊர்களில் உள்ள விண்ணப்பதாரர்களை கடன் கேட்கிற நிலையிலும் தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன. அப்படி கடன் அளித்தால்தான் அந்த ஊர்களுக்கு மின்சாரம் வழங்குவோம் என்ற நிலையில் இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களோ, அல்லது அரசோ சொன்னால்கூட அவர்கள் அலட்சியப்படுத்துகிற வகையில் இன்று தனியார் நிறுவனங்கள் இருக்கின்றன.

திருச்சி மாவட்டத்தில் சேஷசாயி கம்பெனியின் சவுத் மதராஸ் எலக்ட்ரிசிட்டி கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் இருக்கிறது. அந்த நிறுவனம் மிகவும் மோசமான நிலையில் அங்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறது. ஏழு ஆண்டுகளாக மனுச் செய்தும்கூட பம்ப் செட்டுகளுக்கு மின்சாரக் கனெக்ஷன் கொடுக்காதிருக்கும் நிலை இருக்கிறது. அதே நேரத்தில் மின்சார வாரியத்தில், விண்ணப்பித்த ஒன்றறை அல்லது இரண்டு ஆண்டுகளுக்குள் கனெக்ஷன் கொடுக்கம் நிலை இருப்பதைப் பார்க்கிறபோது மிகவும் பயங்கரமானதொரு நிலையை தனியார் நிறுவனங்கள் ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது என்றுதான் எண்ணவேண்டியிருக்கிறது. ஆகவே தனியார் நிறுவனங்களை உடனடியாக கையகப்படுத்த வேண்டிய நடவடிக்கைகளை அரசு எடுக்கவேண்டுமென்ற என் கருத்தைத் தெரியப்படுத்திக்கொள்ள விரும்புகிறேன். இன்னும் எடுத்துக் கொள்ள முடியாமல் இருக்கிற ஐந்து நிறுவனங்களையும் இந்த ஆண்டு முடியாவிட்டாலும் அடுத்த ஆண்டிலாவது அவற்றை எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சியில் நாம் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அப்படி எடுத்துக் கொள்ளாத நிலை இருக்குமானால் அவர்களுக்குக் கடன் உதவியாவது அளித்து அந்தந்தப் பகுதிகளில் உள்ள வேலைகளை விரைவுபடுத்திச் செய்ய வேண்டுமென்று அவர்களுக்கு ஆணை பிறப்பிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தனியார் நிறுவனங்களின் நிலை மேலும் மோசமாகாமல் இருப்பதற்காக அவற்றை கண்காணிக்க அந்தந்தப் பகுதியில் ஒவ்வொரு கமிட்டி அமைத்து அதில் சட்டமன்ற உறுப்பினர்களை இடம் பெறச் செய்து விவசாயப் பெருங்குடி மக்களின் பிரதிநிதிகளையும் இடம் பெறச்செய்து அவர்களின் குறைகளைத் தீர்க்கும் முறையில், அதற்கு வேண்டிய விதிமுறைகளைக்கூட அமைத்தால் நல்லது.

அடுத்தபடியாக, நம்முடைய தமிழ்நாடு மின்சார வாரியத்தில் கன்சல்டேட்டிவ் கமிட்டி என்று ஒன்று நிறுவப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அந்தக் கமிட்டி நிறுவப்பட்டும் அங்கத்தினர்கள் நியமிக்கப்படாமல் அது வெறுமனே இருந்து கொண்டிருக்கிற நிலை இருந்து வருகிறது. அந்தக் கமிட்டியை ஆக்கமுடையதாகச் செய்து அதில் அங்கத்தினர்களை நியமித்து அந்தக் கமிட்டி

[திரு. பு. செ. முத்துச்செல்வன்] [1967 நவம்பர் 25

யின் யோசனையின் பேரில் தமிழக மின்சார வாரியம் பல காரியங்களை விரைவுபடுத்திச் செய்ய உறுதுணையாக இருக்கும்படி அமைக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தக் கட்டண வீதங்களிலே இருக்கின்ற முறைகேடான நிலைமைகளையும் போக்கவேண்டும். விவசாயத்திற்கு யூனிட்டுக்கு 8¼ பைசா என்று சொல்லி, அதே நேரத்தில் தொழில் நிறுவனங்களிடமிருந்து யூனிட்டுக்கு ஒரு பைசா வாங்குகிற நிலைமை மிகவும் மோசமானது. அந்த நிலைமையை மாற்றி, உற்பத்திச் செலவு யூனிட்டுக்கு எந்த அளவுக்கு ஆகிறதோ அதே அளவில் தொழில் துறையில் இருக்கிறவர்களிடத்திலிருந்தும் பெற்று அந்தந் துறைக்கு வரக் கூடிய நஷ்டத்தை ஈடுகட்டிக்கொள்ளவேண்டுமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த மின்சார வாரியத்திலே காண்ட்ராக்ட் விடுவதிலேகூட தொகையை மிச்சப்படுத்தலாம். மின்சார வாரியத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு 10 லட்சம் கான்க்ரீட் போல்கள் தேவைப்படுவதாகத் தெரிகிறது. அந்த 10 லட்சம் போல்களிலே ஏறத்தாழ 1½ கோடி ரூபாய் லாபம் வரும் நிலைமை ஏற்பட்டிருக்கிறது. அதை காண்ட்ராக்ட் விடாமல், மின்சார வாரியமே போல்களை உற்பத்தி செய்தால் அதன் வாயிலாகக் கிடைக்கக் கூடிய லாபம் பெருமளவில் இருக்கும். ஏன் அப்படித் தானே செய்யாமல் இருக்கிறது என்று நினைக்கவேண்டியிருக்கிறது. அதே போல இன்ஸுலேட்டர்களையும் மின்சார வாரியமே உற்பத்தி செய்தால் அதன் வாயிலாகவும் நிறையத் தொகையை மிச்சப்படுத்திக்கொள்ளலாம்.

தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வு, ஊக்க போனஸ் அளித்து, தொழிலாளர்களுடைய தொழில் நுணுக்கத்தையும், திறனையும் பயன்படுத்தி மின்சார வாரியத்தின் வருமானத்தைப் பெருக்கி, அதே நேரத்தில் மின்சார உற்பத்தியையும், வினியோகத்தையும் விரிவுபடுத்தி, விவசாயத் துறையையும் தொழில் துறையையும் பெருக்கிக்கொள்ளலாம். அவர்களுக்குள்ள டிரேட் யூனியன்களை அங்கீகாரம் செய்யாது, அவைகள் செயல்படாமல் வைத்திருக்கிற நிலைமைகளை மாற்றி, செயல்படும் முறையில் வழிவகை காண அரசு ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவுக்கு மின்சார வாரியத்திலே பணியாற்றுகிற அத்தனை தொழிலாளர்களும் நல்ல முறையிலே பணியாற்றிக்கொண்டு வருவதற்காகவும், மேலும் நல்ல முறையிலே பணியாற்ற வேண்டுமென்று வேண்டி விரும்பிக் கேட்டுக்கொண்டு, பாராட்டி இந்த அளவோடு எனது உரையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

*திரு. என். சங்கரய்யா : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது நடக்கக் கூடிய இந்த விவாதத்திலே முதலாவதாக நான் வற்புறுத்தக்கூடிய அம்சம் என்னவென்றால், 300 கோடி ரூபாய்க்கு மேல் முதலீடு செய்திருக்கிற இந்தத் தொழில் 1966-67-ம் ஆண்டு 6.6 சத வீதம் ஆதாயமே பெற்றிருக்கிறது. 1968-69-ம் ஆண்டுக்குள் 11 சத வீதம்



1967 நவம்பர் 25] [திரு. என். சங்கரய்யா]

ஆதாயத்தைப் பெற வேண்டுமென்று வெங்கடராமன் குழு பரிந்துரை செய்திருப்பதாக அமைச்சர் அவர்களுடைய உரையில் கூறப்பட்டிருக்கிறது. இந்தத் தொழிலின் முக்கியத்துவம் கருதியும், பொதுத் துறையில் மாநில அரசு நடத்தும் மிகப் பெரிய தொழிலாக இருப்பதைக் கருதியும், ஆண்டுக்கு ஒரு முறை சட்ட மன்றத்தில் விவாதிப்பதற்குப் பதில், இதைப் பற்றி அடிக்கடி விவாதித்து ஆலோசனைகள் கூற, சட்டப் பேரவையின் நிலையான, நிரந்தரக் கமிட்டியை இந்தத் துறைக்கு நாம் ஏற்பாடு செய்ய முடிந்தால் அது அடிக்கடி கூடி, இது சம்பந்தமாக ஆலோசனைகள் கூறி, வேலைகளைச் செம்மையாக நடத்த மின்சாரக் கழகத்திற்குப் பயனுள்ளதாக இருக்கும் என்று தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

இன்று இங்கு நடைபெறக் கூடிய விவாதத்திலே சில பெரும் தொழில்களைப் பொறுத்த வரையில், உயர் அழுத்த மின்சாரத்தைப் பொறுத்த வரையில், விசேஷமான குறைந்த மின் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்ற செய்தி சொல்லப்பட்டிருக்கிறது. அது உண்மையானால், அது முற்றிலும் தவறான கொள்கையாக இருக்கும் என்று கூற விரும்புகிறேன். ஏற்கனவே அப்படிப்பட்ட பெரும் தொழில்களில் அதிக லாபம் சம்பாதிக்கும் நிலைமை இருப்பதால் நிச்சயமாக மற்ற தொழில்களைச் சேர்ந்தவர்கள் கொடுக்கக் கூடிய அதே கட்டணத்தை அந்தப் பெரும் தொழில்களைச் சேர்ந்தவர்களும் கொடுக்கவேண்டும், கொடுக்க முடியும். அப்படி இருந்தால்தான் மேலும் மேலும் மின்சார வாரியம் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளமுடியும்.

கடந்த காலத்தில் சட்ட மன்றத்தில் உறுப்பினர்கள் வழங்கிய கருத்துக்களைப் பற்றி விமர்சனம் செய்யும் முறையில் கொடுக்கப்பட்ட குறிப்பைப் பார்க்கும்போது, உயர் அழுத்த மின்சக்தியைப் பயன்படுத்துவோருக்கு யூனிட் ஒன்றுக்கு 4 காசுக்குமேல் கட்டணம் விதிக்கப்படுகின்றது என்றும், சராசரியாக யூனிட் ஒன்றுக்கு 6.5 காசு வீதம் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. குறைந்த அழுத்த மின்சாரத்தைப் பொறுத்த வரையில் உற்பத்திச் செலவு யூனிட்டுக்கு 17 காசுகள் ஆவதால் விவசாயத்திற்கு 8¼ காசுகளுக்குக் குறைந்து கொடுக்கமுடியாது என்று கூறப்பட்டிருக்கிறது. அதிலேயும்கூட நாம் ஒரு குறிப்பிட்ட வரையறையை ஏற்படுத்துவது பயனுள்ளதாக இருக்கும் என்று கருதுகிறேன். பெருமளவுக்கு நிலம் வைத்துக்கொண்டு விவசாயம் செய்கிறவர்கள் இருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்கள் பயன்படுத்தும் மின்சாரத்தின் அளவைப் பார்த்தால் அதிக அளவுக்குப் பயன்படுத்துவதாக இருக்கிறது. குறைந்த அழுத்த மின்சாரமாக இருந்தாலும், அப்படிப்பட்டவர் சற்று அதிகமாகக் கொடுக்கவேண்டும். மத்திய தர வகுப்பினருக்கும், சாதாரண மக்களுக்கும் தாங்கும் சக்தி குறைவு. அவர்களுக்குக் கொஞ்சம் குறைந்த கட்டணம் விதிக்கவேண்டும். இப்படிப்பட்ட பாகு

[திரு. என். சங்கரய்யா] [1967 நவம்பர் 25

பாடான முறையில் மின்சாரக் கட்டணத்தைத் திருத்தி அமைக்கும் முறையை ஆலோசிக்கவேண்டுமென்று நான் ஆலோசனை கூறிக் கொள்ளுகிறேன்.

கிராமப்புறங்களில் உள்ள ஏழை மக்கள் வீடுகளுக்கு, அவர்கள் பயன்படுத்துவது குறைந்த அழுத்த மின்சாரமாக இருந்தாலும், அவர்கள் கொடுக்கவேண்டிய மின்சாரக் கட்டணத்தில் சலுகை காட்டுவது பயனுள்ளதாக இருக்கும்.

இன்று மின்சார வாரியத்தின் வேலைகளில் காண்ட்ராக்ட் வேலை முறைகளை நீக்கிவிடுவது மிகவும் அவசியம். பல்லாயிரக்கணக்கான ஊழியர்களைக் கொண்டு பணியாற்றும் இலாகாவாக இருப்பதால், மாநில அரசு நடத்தும் பொதுத் துறை நிறுவனமாக இருப்பதால், இந்த இலாகாவே சகல வேலைகளையும் செய்வது என்பது சரியான முறையாக இருக்க முடியும். இதிலே தன்னிறைவு பெற முயற்சிக்கவேண்டும்.

உள்ளாட்சி மன்றங்களில் உள்ள தெரு விளக்குகளைப் பொறுத்த வரையில் பல்புகள் இல்லாத குறையைப் பொறுத்த வரையில், செப்புக் குமிழ்கள் உற்பத்தி செய்ய முடியாததாலும், வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய முடியாததாலும், போதிய அளவுக்கு சப்ளை செய்ய முடியவில்லை என்று குறிப்பிட்டிருக்கிறார்கள்.

(திரு. பெ. சௌந்தரபாண்டியன் தலைமை.)

நாட்டிலும், நம் மாநிலத்திலும் தொழில் வளர்ச்சி அதிகமாக ஏற்பட்டு வரும் நேரத்தில், இந்த மாநிலத்தில் அதை உற்பத்தி செய்ய மின்சார வாரியம் முயற்சி எடுத்துக்கொண்டால் அல்லது மாநில அரசு தொழில் உற்பத்தியாளர்களுக்கு ஊக்கம் அளித்தால், இந்தத் துறையிலும் தன்னிறைவு ஏற்பட்டு, பல்புகளுக்கு இன்று இருக்கக் கூடிய கிராக்கியை, பற்றாக்குறையைப் போக்க முடியும் என்று கூற விரும்புகிறேன்.

அதே போல, இன்று ஹரிஜனக் குடியிருப்புகளுக்கு மின் இணைப்புக் கொடுப்பதற்காக மின்சார வாரியத்திற்கு நம் மாநில அரசு 3 லட்சம் ரூபாய் உதவித் தொகையாகக் கொடுத்துக்கொண்டு வருகிறது. ஆனால், அவ்வாறு கொடுக்கும் 3 லட்சம் ரூபாய் மூலமாக ஆண்டு ஒன்றுக்கு 300 கிராமங்களுக்கு—ஹரிஜனக் குடியிருப்புகளுக்கு—மின் இணைப்புக் கொடுக்க முடியும் என்று கூறப்படுகிறது. மாநிலத்தில் இருக்கிற குடியிருப்புகளில் 2,600 குடியிருப்புகளுக்கு மட்டும் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. மாநிலத்தில் உள்ள மொத்த கிராமங்களில், 25,000—27,000 கிராமங்களில், 2,600 கிராமங்களுக்குத்தான் மின் இணைப்புக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதைப் பார்க்கும்போது ஹரிஜனக் குடியிருப்புகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் மின்சார இணைப்பு குறைவாக இருக்கிறது. ஆகவே 300 குடியிருப்புகள் என்பதை மூன்று மடங்காக உயர்த்த முயற்சி செய்தால்தான் ஒரு சில காலத்திற்குள் எல்லா ஹரிஜனக் குடியிருப்புகளுக்கும் கொடுக்க முடியும்.



1967 நவம்பர் 25] [திரு. என். சங்கரய்யா]

அதே போல, இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புவது, 1965-66-ம் வருஷத்திய மின்சார வாரியத்தின் ஆடிட் அறிக்கையில் 20-ம் பக்கத்தில் உற்பத்தியாகக் கூடிய மின்சாரம் 393 கோடி யூனிட் என்றும், விற்பனை ஆகக் கூடிய மின்சாரம் 330 கோடி யூனிட் என்றும், செலுத்துதல், வினியோகித்தல் முறையில் 68 கோடி யூட் விரயமாகிறது என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. 398 கோடி யூனிட் உற்பத்தியாவதில் 68 கோடி செலுத்துதல், வினியோகித்தலில் இழக்கிறோம் என்றால், இது பெருமளவு வேஸ்ட் என்று நான் அபிப்பிராயப்படுகிறேன். இதைக் குறைக்க மின்சார வாரியமும் மாநில அரசும் கவனம் செலுத்தவேண்டுமென்று குறிப்பிட விரும்புகிறேன். ஏனென்றால் கடந்த 7 மாதகாலத்தில் மாநிலத்தில் இருக்கக் கூடிய தொழில்களெல்லாம் உபயோகப்படுத்திய 70 கோடி யூனிட்டுகள் அளவுக்கு இந்த விரயம் இருக்கிறது என்று அமைச்சருடைய பிரசங்கத்திலிருந்து தெரிகிறது. சுமார் 70 கோடி யூனிட்டுகளுக்கு மேல் கடந்த 7 மாதங்களிலே தமிழ் நாட்டிலே உள்ள தொழிற்சாலைகள் பயன்படுத்தி இருக்கிறது. இவ்வளவு பெரிய அளவு மின்சாரம் செலுத்துதலில் வீணாகி இருக்கிறது. இதைக் குறைப்பதற்கு சர்க்கார் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே போல் இந்த 1967-63-ம் ஆண்டு ரெவின்யூ பட்ஜெட்டிலே மின்சார வாரியம் 9 கோடி ரூபாயை அரசாங்கத்திடமிருந்து வாங்கிய கடனுக்காக வட்டியாகச் செலுத்தியிருக்கிறது. 1965-66-ல் 6.1 சதவிகிதமாக இருந்த வட்டி படிப்படியாக உயர்ந்து 1966-67-ல் 6.6 சதவிகிதமாக ஆகியிருக்கிறது. ஒரு ஆண்டில் வட்டி உயர்வுத் தொகை மட்டும் 2 கோடி ரூபாய் ஆகியிருக்கிறது. 1967-68-ல் 44 கோடி ரூபாய் ரெவின்யூ கணக்கில் காட்டப்பட்டிருக்கிறது. அதில் வட்டியாக மட்டும் 11 கோடி ரூபாயை மின்சார வாரியம் செலுத்துகிறது. அதாவது மொத்த அளவில் கால் பங்கை வட்டியாக இன்றைக்குச் செலுத்துகிறது. இந்த அளவுக்கு வட்டி செலுத்தக்கூடிய நிலைமை இருந்தால் மின்சார வாரியம் போன்ற பொதுத் துறையில் எப்படி வளர்ச்சி ஏற்பட முடியும்? அதன் காரணமாகத்தான் இன்றையதினம் பொதுத் துறையிலே வளர்ச்சி ஏற்படவில்லை என்பதைச் சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இதை அரசாங்கம் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படிப்பட்ட நிலைமைகளைப் பார்க்கும்போது மின்சார வாரியத்திலே வேலை செய்யக்கூடிய ஊழியர்கள், தொழிலாளர்களுடைய நிலைமைகளைப் பற்றியும் கவனிக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும். இது ஒரு பொதுத் துறையாக இருக்கக் கூடிய காரணத்தால் இன்று மற்ற விஷயங்கள் எப்படி இருந்தாலும் கூட, தொழிலாளர்களுக்கு சம்பள விகிதங்களைக் கூட்டிக் கொடுப்பதைப் பின்னர் ஆய்வு செய்தாலும்கூட, இப்பொழுது இடைக்கால நிவாரணமாகக் கொஞ்சம் தொகை, கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இது மிகவும் அவசியமானதாகும். ஆகவே, அவர்களுக்கு இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டியதைப்பற்றி நாம் இன்றைக்கு ஆலோசிக்க வேண்டும்.

[திரு. என். சங்கரய்யா] [1967 நவம்பர் 25

அதே போல் நகரத்திலுள்ள மற்றவர்களுக்கெல்லாம் நகரஈட்டுப் படி கொடுத்திருக்கிற காரணத்தினால் சென்னை நகரத்தில் மின்சார வாரியத்திலே உள்ள ஊழியர்களுக்கும் அந்த நகரஈட்டுப்படியைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அந்த நகர ஈட்டுப் படி கொடுக்கப்படாமல் இருப்பதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை என்று சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

அதே போல்தான் இன்றைக்கு அந்த ஊழியர்களைப் பார்க்கின்ற நேரத்திலே அந்தத் தொழிலாளர்களுடைய பிராவிடென்ட் பண்டு, பென்ஷனுக்காக 1967-68-ம் ஆண்டிலே 13,93,000 ரூபாய் தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஒரு பொதுத்துறை தொழிற் சாலையிலே பிராவிடென்ட் பண்டு, பென்ஷனுக்காக ஒதுக்கப் பட்டிருக்கிற தொகை மிகவும் குறைவாக இருக்கிறது என்று சொல்ல விரும்புகிறேன்.

அதே போல் 1967-68-ம் ஆண்டிலே மின்சார வாரியத்திலே வேலை செய்யக்கூடியவர்களின் பிள்ளைகளுக்குக் கல்விச் செலவுக்காக வெறும் 2,000 ரூபாய்தான் ஒதுக்கப்பட்டிருக்கிறது. வெறும் 2,000 ரூபாயை பல்லாயிரக் கணக்கான ஊழியர்கள் வேலை செய்யக்கூடிய ஒரு பொதுத் துறையில் ஒதுக்குவதைவிட ஒதுக்காமலே இருந்தாலும் அதனால் அதிகப்படியான நஷ்டம் ஒன்றும் ஏற்படப் போவதில்லை. ஆகவே, கல்விச் செலவுக்காக ஒதுக்கப்பட்டிருக்கிற தொகையை மேலும் அதிகரிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சார வாரியத்திற்கு யோசனைகள் அளிப்பதற்கு ஒரு ஆலோசனைக்குழு—'கன்சல்டேடிவ் கவுன்சில்'—ஏற்படுத்தப்பட்டுள்ளது. சில உறுப்பினர்கள் குறிப்பிட்டார்கள் ஸ்தலத்திலே இருக்கிற ஆலோசனைக் குழுவையும் அந்த ஆலோசனைக் குழுவையும் நல்ல முறையிலே பயன்படுத்த வேண்டுமென்று. அந்த ஆலோசனைக் குழுவில் மின்சார ஊழியர்கள் சம்மேளனத்தின் பிரதிநிதிகள் இல்லை. அவர்களையும் அந்த ஆலோசனைக் குழுவில் உறுப்பினர்களாகப் போடுவதன் மூலம் இன்றைக்கு இருக்கக் கூடிய நிலைமையிலே தொழிலாளர்களுடைய ஆக்க பூர்வமான பங்கெடுப்பு இருந்தால், இந்த வாரியத்தினுடைய வளர்ச்சிக்கு மின்சார ஊழியர்கள் நல்ல முறையில் ஒத்துழைப்பார்கள் என்று குறிப்பிட விரும்புகிறேன்.

இன்றைக்கு நாமினல் மஸ்டர் ரோல் என்று சொல்லக்கூடிய பிரிவிலே இருக்கக்கூடிய தொழிலாளர்களின் நீண்ட நாள் கோரிக்கை, அவர்களை ஓ.எஸ்.எஸ். பிரிவில் சேர்க்க வேண்டுமென்பது. அதையும் கவனிக்கவேண்டியது மிகவும் முக்கியமாகும். அதே போல் காஷுவல் லேபர் பிரிவில் இருக்கக் கூடியவர்களது பிரச்சினை. அவர்களது பிரச்சினையும் மனிதப் பிரச்சினை என்று கூறி அவர்களது பிரச்சினையையும் தீர்க்க முற்பட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1967 நவம்பர் 25] [திரு. என். சங்கரய்யா]

ஆறு மாதம் சர்வீஸ் உள்ளவர்கள் நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையையும் கவனிக்க வேண்டும். ஆறு மாதம் ஆனவுடனேயே அவர்களை நிரந்தரமாக ஆக்கினால்---அவர்கள் நிரந்தரமாக்கப் பட்டால்—அந்தத் தொழிலாளர்களுக்கு ஒரு நம்பிக்கை ஏற்படும்.

அடுத்து தொழிலாளர்களுடைய பிரச்னைகளில் மற்றொன்று, வெளியில் வேலை செய்கின்ற ஊழியர்களுக்கு மின்சார வாரியத்தின் தலைமைப் பீடத்தில் வேலை கொடுக்க வேண்டுமென்பது. அதை அவர்கள் சம்மேளனம் அதிக நாட்களாகக் கேட்டுக் கொண்டிருக்கிறது. அதையும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, அந்த சம்மேளத்தின் கூட்டுக் காரியதரிசி திரு. எஸ். ஆர். நீலகண்டன் என்பவரைப் பற்றியது. அவரை வேலையிலிருந்து நீக்கிவிட்டது மின்சார வாரியம். அவரைத் திரும்ப எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கோரப்பட்டது. கோர்ட்டிலும் அவரை வேலைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுமென்று தீர்ப்புக் கூறப்பட்டது. ஆனால் மின்சார வாரியம் அவரை வேலைக்கு எடுத்துக் கொள்ளக் கூடாது என்று அப்பீல் செய்திருக்கிறது. தொழிலாளர்கள் சம்மேளத்தினுடைய கோரிக்கை அந்த அப்பீலை ரத்து செய்து மீண்டும் அவரை வேலையிலே சேர்த்துக்கொள்ள வேண்டுமென்பது. அவரை மீண்டும் வேலையில் சேர்த்துக்கொள்ள மின்சார வாரியத்திற்கு எந்தவித தயக்கமும் இருக்கக்கூடாது என்பதை நான் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அமைச்சர் அவர்கள் தன்னுடைய பிரசங்கத்தில் குறிப்பிட்டார்கள். இது அரசாங்க ஊழியர்களுடைய ஒரு நிறுவனம் என்ற நிலை மாறி தொழிலாளர்கள் வேலை செய்யக் கூடிய ஒரு நிறுவனமாக வந்து கொண்டிருக்கிறது என்று குறிப்பிட்டார்கள்.

அடுத்து, ஷாப்ஸ் அண்ட் எஸ்டாபிலிஷ்மெண்ட்ஸ் சட்டத்தின் கீழ் இந்த மின்சார வாரியத் தொழிலாளர்களைக் கொண்டு வருவதிலே மின்சார வாரியத்திற்கு அந்த சட்டத்திலிருந்து விதிவிலக்கு அளிக்க வேண்டுமென்ற முறையிலே இன்றைக்கு ஹைகோர்ட்டிலே அப்பீல் செய்திருக்கிறார்கள் மின்சாரத் துறையினர். இது அவ்வளவு சரியானதல்ல. ஆகவே, இதை உடனடியாக கவனிக்க வேண்டுமென்று அரசினரை நான் கேட்டுக் கொள்கிறேன்.

பொதுத் துறையை நடத்தக் கூடிய நாம் பிரைவேட் செக்டார்—தனியார் நிறுவனங்களுக்கு—தனிப்பட்ட முதலாளிகளுக்கு வழிகாட்டியாக இருக்க வேண்டுமென்ற முறையில், தொழிலாளர்களுக்கு உரிமைகளை வழங்குவதில் நாம் முதன்மையாக இருக்க வேண்டுமென்ற கருத்தை இந்த நேரத்தில் சொல்ல விரும்புகிறேன். அதை அரசாங்கத்தின் கவனத்திற்கும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதே போல்தான் மின்சார வாரியத்தில், சூப்பரின்டென்டின் இன்ஜினியர், எக்ஸிக்யூடிவ் இன்ஜினியர், டிவிஷனல் இன்ஜினியர் ஆகியவர்கள் இருக்கிறார்கள். இன்றைக்குத் தொழிலாளர்கள் அவர்களுடைய பாதுகாப்பு—(மணியடிக்கப்பட்டது.)

**புலவர் க. முருகையன்** : தலைவர் அவர்களே, இந்த வாய்ப் பளித்ததற்கு நன்றி. மின்சாரத் துறை பற்றியும், தொழிலாளர்கள் பற்றியும் மின்சாரத் துறைக்குப் பொருள்கள் வாங்குவது பற்றியும் என்னைவிட விவரமாக எனக்கு முன்னாலே பலர் சொல்லி விட்டதாலே தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே நான் முக்கியமாக சொல்லக் கடமைப்பட்ட சில கருத்துக்களை இங்கே சொல்ல விரும்புகிறேன்.

எனக்கு முன்பு பேசிய எங்கள் மாவட்ட சட்டமன்ற உறுப் பினர் திரு. காசிராமன் அவர்கள் சிலவற்றைக் குறிப்பிட்டார்கள். அதிலே இப்போது 26,000 பம்பு செட்டுகளுக்கு இணைப்புகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னால் அந்த இணைப்புகள் கொடுக்கக்கூடிய வசதியை முந்தைய சர்க்கார் செய்து இருந்தது என்பதை மறுக்க முடியாது என்று குறிப்பிட்டார்கள். அது உண்மை தான். ஆனால் இதற்கு முன்பு கொடுக்கப்பட்ட இணைப்பு கள் எல்லாம் பெரும்பாலும் வசதியுள்ளவர்களுக்கே கொடுக்கப் பட்டன. என்னுடைய தொகுதியைப் பற்றிச் சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் இது ஒரு பேரப் பொருளாகவே பயன் படுத்தப் பட்டது. இந்த சட்டை போட்டால் இது கிடைக்கும் என்கிற முறையிலே பயன்படுத்தப்பட்டது. அந்த நிலை கிட்ட தட்ட 3 ஐந்தாண்டுத் திட்டங்கள் வரை இருந்தது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு மின்சார மோட்டார்களுக்குக் கேட்கப் பட்ட இணைப்பு இதுவரையிலே கொடுக்கப்படாமல் இருக்கிறது. ஆனால் விவசாயிகளுக்குக் கொடுத்த கடன் வசூலுக்கு, சம்பந்தப் பட்ட சர்க்கார் இலாகாவிலிருந்து உத்தரவு வந்து விட்டது. அவர்கள் "இன்னும் எங்களுக்கு மின்சார இணைப்பே கிடைக்க வில்லையே; எந்த வருமானத்தை வைத்து நாங்கள் பணம் கொடுப் பது" என்று கேட்டு ஏறத்தாழ 50 பேர்களுக்கு மேல் தஞ்சை மாவட்ட கலெக்டர் அவர்களிடம் கடன் தவணை வசூலை ஒத்தி வைக்க வேண்டும் என்று கேட்டிருக்கிறார்கள். இதற்குக் காரணம் என்ன? அந்தப் பகுதியிலே இருக்கிற மின்சார இலாகா சர்க்கார் மேற் பார்வையிலே நடைபெறவில்லை. தனியார் துறையிலே இருக்கும் சேஷசாயி கம்பெனி, கும்பகோணம் எலெக்ட்ரிக் சப்ளை கார்ப்பரேஷன் இவைதான் அந்தப் பொறுப்பை ஏற்றிருக் கின்றன. அந்தக் கம்பெனிகள் சர்க்கார் கடன் எங்களுக்குக் கிடைக்கவில்லை என்று சொல்லியோ, வேறு பல காரணங்களைச் சொல்லியோ, இரண்டு ஆண்டுகளாக, 1½ ஆண்டுகளாக, ஓர் ஆண்டாக மின்சார மோட்டார்கள் கொடுக்கப்பட்டும் கூட, சாதாரண விவசாயிகளுக்கு இணைப்புக் கொடுக்கவில்லை. அதே நேரத்தில் அதே ஊரைச் சேர்ந்த வசதியுள்ளவர்களுக்கு, ஏற்ற துணி அணிந்துள்ளவர்களுக்குக் கொடுத்திருக்கிறார்கள். இது எதைக் காட்டுகிறது? மின்சாரத்தை உடனடியாக சர்க்கார்





உடமை ஆக்க வேண்டுமென்பதைத் தான் திட்டவட்டமாக எடுத்துக் காட்டுகிறது. எனவே, நம்முடைய இந்த சர்க்கார் உடனடியாக தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையிலே, தனியார் மின்சார நிறுவனங்களை எவ்வளவு சீக்கிரம் எடுத்துக் கொள்ள முடியுமோ அவ்வளவு சீக்கிரம் எடுத்துக் கொண்டு மின் கழகத்துடன் சேர்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத்தைப் பொறுத்தவரையிலே விவ சாயிகளுக்கு ஏற்படுகிற தொல்லைகளைக் குறிப்பிட விரும்பு கிறேன். சென்ற ஆண்டில் பல இணைப்புகள் கொடுக்கப்பட்டன. தஞ்சை மாவட்டத்தில் இரண்டு வகையான நிலப் பகுதிகள் இருக் கின்றன. இயற்கையாக பாசன வசதியற்ற மேட்டு நிலங்கள்— தஞ்சையிலே சரிபாதியும், ஒரத்தநாடு பகுதியிலே சரி பாதியும், அறந்தாங்கி முழுவதுமாக இப்படி அந்த நிலங்கள் இருக்கின்றன. மீதமுள்ள நிலங்கள் காவேரிப் பாசனத்திலே இருப்பவை. காவேரி நீர் கிடைக்கிற நிலம் போக மற்றைய நிலங்களுக்குத் தான் மின் சாரம் தேவைப்படுகிறது.

அடுத்து குறைந்த அளவுக் கட்டணம் என்று சொல்லும்போது 2 அல்லது 3 மாதங்களுக்கு மட்டுமே மின்சாரத்தை உபயோகப் படுத்துகிற விவசாயிகள் பாக்கி 9 மாதங்கள் சேர்த்து மின்சாரக் கட்டணம் கொடுக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. அவர்களால் அந்தக் கட்டணம் கட்ட முடியவில்லை. இதைச் சர்க்கார் மனத்திலே கொண்டு விவசாயிகள் அந்த மாதிரிப் பணம் கட்டாமல் இருக்க ஆவன செய்ய வேண்டியது அவசியமாகும் என்று கூறிக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்தபடியாக, பல்வேறு தொழில்களுக்கு ஒரு யூனிட் 1 ந.ப. 12-00
பைசா, 1¼ பைசா, 1½ பைசா என்று கொடுக்கப்படுகிறது. சென்னை மாநிலத்தைப் பொறுத்தவரையில் மிக முக்கியமான பிரச்னை உணவுப் பிரச்னை என்பதை இதற்கு முன்பிருந்தவர்கள் சரியாக இனம் கண்டுகொள்ளவில்லை என்றாலும், நடந்துவருகிற அரசு தொடக்கத்திலேயே அதை இனம் கண்டுகொண்டுவிட்டது. இந்தத் தமிழக அரசினுடைய முதல் அலுவல், தொழில் அபி விருத்தி செய்வதை விட விவசாய அபிவிருத்தி செய்வது தான். முன்பு சாத்தனூரைப் பாருங்கள், வைகையைப் பாருங்கள், பெரம்பூரைப் பாருங்கள் என்று சொல்லிக்கொண்டிருந்தார்கள். அவையெல்லாம் கண்ணின் ஆசையை நிரப்பக் கூடியவையே தவிர, வயிற்றை நிரப்பக்கூடியதன்று. நமது தமிழகத்தின் உயிர்நாடி விவசாயம் தான்—உணவு உற்பத்தி தான். அதை உணர்ந்து இந்த அரசு தக்க நடவடிக்கை எடுப்பதின் காரணத்தினால் தான், தமிழகத்தில் 6 மாதங்களில் மிகப் பெரிய மாற்றம் ஏற்பட்டு விட்டது, அகில இந்தியாவிலும் சென்னை மாநிலத்தில் உணவுப் பிரச்னை நன்றாக சமாளிக்கப்பட்டுவிட்டது என்று சொல்லப் படுகிறது. அமெரிக்கப் பிரதிநிதிகள் தமிழகத்தில் ஒரு பெரிய உணவுப் புரட்சி ஏற்பட்டுவிட்டது என்று சொல்கிற அளவுக்கு நிலைமை வந்திருக்கிறது. அந்த நிலையை மனதில் கொண்டு,

விவசாயத்திற்கு மின்சாரத்தை மிகவும் குறைந்த கட்டணத்தில் கொடுக்க முயலவேண்டும். ஏழை விவசாயிகள் அதிக விலை கொடுத்து மின்சாரத்தைப் பயன்படுத்தி, தகுந்த லாபத்தைப் பெறுவது என்பது கடினம் தான்.

நாட்டிலே இரண்டு விதமான நிலைமைகள் சொல்லப்படு கின்றன. ஒன்று, இப்பொழுது விவசாயிகளுக்குக் கிடைக்கின்றன விலை போதாது என்பது. உள்ளபடியே ரொம்ப நாட்களுக்கு முன்பே அதுபற்றித் தெரிந்துகொண்டு செயல்பட்டிருந்தால், அதில் பொருள் உண்டு. பார்வை கெட்ட பிறகு பரிதி வணக்கம் என்று சொல்வது போலத் தான் இருக்கும். விவசாயிகளுக்கு விலையைக் கூட்டிக் கொடுப்பது லாபகரமாக இருக்குமா? இருக்காதா? அல்லது விவசாயிகளுடைய பல்வேறு செலவினங்களைக் குறைப்ப தற்கு வழிவகைகள் செய்வது நல்லதா என்பது தான் கேள்வி. இவைகளில் எது நல்ல திட்டம், எது விவசாயிகளுக்குப் பயன் தரும் என்பதற்குத் தான் நாம் பதில் கண்டு பிடித்தாகவேண்டும். சிறிய விவசாயிகளுக்கு விலையைக் கூட்டிக் கொடுப்பதனால் பலன் ஏற்படாது. 5,000, 6,000 மூட்டைகள் விற்கக்கூடிய பெரும் விவசாயிகளுக்குத் தான் விலையைக் கூட்டிக் கொடுப்பதினால் லாப கரமாக இருக்கும். ஏழை விவசாயிகளுக்கு விலை ஏற்றம் பயன் தராது. சாதாரண விவசாயிகளுக்கு ஒரு ஏக்கர், இரண்டு ஏக்கர் நிலம் வைத்திருப்பவர்களுக்கு, 5 மூட்டை 6 மூட்டை மட்டுமே விற்கக்கூடிய நிலையில் உள்ள விவசாயிகளுக்கு, விலை ஏற்றம் நன்மை பயக்காது. 100 ஏக்கர், 200 ஏக்கர் நிலம் வைத்திருக்கும் நிலச்சுவான்தார்களுக்குத் தான் விலை ஏற்றம் பயன் அளிக்கும். அறுவடை முடிந்தவுடனேயே 10 மூட்டைகளை விலைக்கு விற்றுவிட்டு, 10 மாதங்களுக்கு விலைக்கு வாங்கிச் சாப்பிடும் விவசாயிகளுக்கு விலை ஏற்றம் பாதகத்தைத் தான் விளைவிக்கும். விவசாயிகளுக்குச் செலவினங்களைக் குறைப் பது தான் ரொம்பவும் முக்கியமானது. விவசாயிகளுக்கு மின் சாரம் மிகவும் மலிவான கட்டணத்தில் கொடுக்கப்படவேண்டும். அதுவும் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வெளி மா வட்டங்களுக்கு நெல்லைக் கொடுக்க நாங்கள் தயங்கவில்லை. இப்படி யெல்லாம் பறிக்கிறார்களே என்று சொல்வதற்கு தஞ்சை மாவட்டத் தில் இடமே இல்லை. சர்க்கார் இதைப்பற்றி யோசிக்கவேண்டிய தில்லை. விலையை ஏற்றிக் கொடுக்கா விட்டால் போராட்டம் நடத்துவோம் என்றெல்லாம் சொல்பவர்களைப் பற்றி சர்க்கார் கவலை கொள்ளவேண்டியதில்லை. விலையை ஏற்றவேண்டும் என்று போராடக் கூடியவர்கள் எங்கள் மாவட்டத்தில் 400, 500 பேர்கள் தான் இருக்கிறார்கள். அன்றாடம் விலைக்கு வாங்கிச் சாப்பிடக் கூடிய 15, 20 லட்சம் பேர்கள் நாங்கள் இருக்கிறோம்; எங்களைத் தான் உதவி புரிய வேண்டும். எப்படி தொழிற்சாலைகளுக்குக் தான் உதவி புரிய வேண்டும். எப்படி தொழிற்சாலைகளுக்குக் குறைந்த விலையிலே மின்சாரம் கொடுக்கப்படுகிறதோ அதைப் போல குறிப்பாக தஞ்சை மாவட்டத்தில், ஆற்றுப் பாசனமே இல்லாத பகுதிக்கு, நல்ல வளமுள்ள மண்கொண்ட பகுதிக்கு, அங்குள்ள ஏழை விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்கக்கூடிய



முறையில், அவர்களுக்கு மின்சாரத்தை உடனடியாக வழங்க வேண்டும். முதல்படியாக சர்க்கார் இந்தத் துறையிலே நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மின்சாரத் துறையிலே இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை வசூல் செய்வது என்ற ஒரு பிரச்னை இருக்கிறது. இன்னும் கொஞ்ச காலத்திற்கு அந்தத் தவணையை நீடித்துக்கொடுக்கவேண்டும். நாங்கள் மாதா மாதம் வருமானம் பெறுபவர்கள் அல்ல. கார் போகம், சம்பா போகம் என்று பயிர் போகம் செய்யக்கூடிய காலத்தில் வசூல் செய்வது தான் எங்களுக்கு வாய்ப்பாக இருக்கும். விவசாயிகள் மாதா மாதம் கொடுப்பது என்பது எளிதல்ல என்பது தான் என்னுடைய கருத்து என்று தெரி வித்துக்கொள்கிறேன்.

விளம்பரத்திற்கு மிக அதிகமாக மின்சாரம் செலவழிக்கப்படு கிறது. அதற்கு இன்னும் அதிகத் தொகையை விதித்து, விவசாயத் திற்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைப்பது நன்மை பயக்கும். பெரிய நகரங்களில் வீதிகளிலும், வியாபார ஸ்தலங்களிலும் விளம் பரத்திற்காக கோடிக்கணக்கான யூனிட்டுகள் மின்சாரம் செல வழிக்கப்படுகிறது. அதனால் நாட்டிற்குக் கிடைக்கின்ற பலன் ஒன்றும் கணிசமானது அல்ல. எனவே, வேறு துறைகளிலே, நாட்டிற்கு பயனற்ற துறைகளிலே, செலவழிக்கப்படுகிற மின்சாரத்திற்கு அதிகக் கட்டணத்தை விதித்து, ஏழை விவசாயி களுக்கு மின்சாரத்தை மிகவும் குறைந்த கட்டணத்தில் கொடுக்க முன்வர வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். தஞ்சை மாவட்டத்தில் உடனடியாக குறைந்த கட்டணத்தில் ஏழை விவசாயிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டு, விடைபெறுகிறேன்.

* திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார் : தலைவர் அவர்களே, ரூ. 300 கோடி மூலதனத்துடன் இயங்கக்கூடிய இந்த மின்சார போர்டு மூலமாக நாம் பல நன்மைகளை அடைந்திருக்கிறோம் என்பது என்போன்ற விவசாய மக்களுக்கு நன்றாகத் தெரியும். பம்பு செட்டுகளுக்கு மின்சார இணைப்புப் பெற்றதன் மூலம் எங்களுக்கு வாழ்க்கைத் தரம் உயர்ந்திருக்கிறது. நெல் உற்பத்திக்கு வழி ஏற்பட்டிருக்கிறது. எந்த மூலைக்குப் போனாலும், மின்சார இலாகாவைப் போல பயன் உள்ள இலாகா இல்லை என்று பாராட்டுதல் பெறக்கூடிய இலாகா இந்த இலாகா ஒன்று தான். ஆகவே, இந்த போர்டைப் பாராட்டுகிறோம், இந்தப் போர்டைச் சேர்ந்தவர்களையும் நாம் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். எங்களுக்குச் சோதனை காலம் ஏற்பட்டபோதெல்லாம் மின்சாரம் வரப்பிரசாதமாக இருந்திருக்கிறது. இந்த இலாகாவில் சில குற்றங்கள் இருக்கலாம். தனிப்பட்ட குற்றங்களாக இருந்தால் அவைகளை அமைச்சரிடத்திலே தான் சொல்ல வேண்டும். நாட்டில்

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1967 நவம்பர் 25

அபிவிருத்தி ஏற்படுவதற்கு வேண்டிய காரியங்களைப் பற்றி இங்கே சொல்லலாம். எனக்குத் தெரிந்தவரையில் விவசாய மக்கள் பாராட்டக்கூடிய நிலையில், எந்த மூலைக்குப் போனாலும் சாதாரண மக்கள் பாராட்டக்கூடிய நிலையில் இருக்கிற இலாகா ஒன்று இருக்கிறது என்றால், அது இந்த போர்டு தான். சில சீர்திருத்தங்கள் தேவையாக இருக்கலாம். விவசாய அபிவிருத்தியில் நாம் முன்னேற்றம் காணவேண்டும் என்றால் சில சலுகைகளைக் கொடுக்க வேண்டும் என்பது என்னுடைய யோசனை.

கமர்ஷியல், இண்டஸ்ட்ரியல் என்ற இரண்டு டாரிப்களை எடுத்துக் கொண்டால், யூனிட் கூட கூட, ரேட் குறைந்துகொண்டே வருகிறது. கமர்ஷியல் லோடிங் யூனிட் கூட கூட, 34 பைசாவிலிருந்து 32 பைசவாகக் குறைகிறது. அதே மாதிரி இண்டஸ்ட்ரியல் லோடை எடுத்துக்கொண்டால், 12 பைசாவிலிருந்து யூனிட் கூட கூட, 11 பைசாவாகக் குறைகிறது. இந்தச் சலுகையை என் விவசாயத்திற்கும் விஸ்தரிக்கக்கூடாது? அதனால் இன்னும் விவசாயத்திற்கு அதிகமான மின்சாரத்தை உபயோகப்படுத்தலாம். மழை இல்லை, நெல் சாகுபடி செய்கிறார்கள், அதற்கு அதிக மின்சாரம் தேவை. உற்பத்திச் செலவு அதிகமாகிறது. நாட்டின் தன்மைக்காக விவசாய உற்பத்தியைப் பெருக்குகிறோம். அப்பொழுது அதிகமாக மின்சாரம் செலவாகிறது. ஆகவே, அக்ரி கல்சரல் லோடுகளுக்கும், யூனிட் கூடக் கூட கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்பது தான் என்னுடைய தாழ்மையான வேண்டுகோள். மழை தவறிப் போய்விடுகிறது. நெல் உற்பத்தி பண்ண வேண்டும். மூன்று மாதம் தான் தண்ணீர் வேண்டும் செமி டிரை கிராப் உற்பத்தி செய்கிறோம். அப்படிப்பட்ட விவசாயிகளுக்குத் தான் சலுகை கொடுக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக 20 சதவிகிதம் எலக்டிரிசிடி டாக்ஸ் கொடுக்கிறோம். சர்க்காருக்கு வருவாய் தான். விவசாய மக்களுக்கு உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய நிலையில் அதை ஏன் தள்ளிக் கொடுக்கக்கூடாது ? அக்ரிகல்சர் சம்பந்தப்பட்டவரையில் எலக்ட்ரிசிடி டாக்ஸ் 20 சதவிகிதம் என்று இருப்பதைக் குறைப்பதற்கு வழி செய்யலாம்.

அது போக, மீட்டர் ரெண்டு வாங்குகிறோம். அக்ரிகல்சரைப் பொறுத்தவரையில், கிணறு வரையில் மின்சாரத்தைக் கொண்டு வருகிறோம். ஆயிரக்கணக்கில் நாம் செலவழிக்கிறோம். மீட்டர் ரெண்டை நாம் வாங்கவேண்டுமா என்பது பற்றி யோசிக்க வேண்டும். 75 பைசா சிங்கிள் பேஸ் மீட்டருக்கும், மற்ற மீட்டர்களுக்கு ரூ. 2-ம் மீட்டர் ரெண்டு வசூலிக்கிறோம். த்ரீ பேஸ் மீட்டர் கிட்டத்தட்ட ரூ. 150-க்கு மேல் இருக்காது. நான் கேட்டுக் கொள்வது என்னவென்றால், அந்த மீட்டர் ரெண்டை வசூலிக்காமல் விட்டுவிடலாம் என்பது தான். அதனால் அதிகமான நஷ்டம் ஏற்படாது என்று தான் நினைக்கிறேன். ஒன்று அதை நிறுத்தி விடுங்கள். இல்லையென்றால், அந்தத் தொகையை தவணை வைத்து



1967 நவம்பர் 25] [திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்]

வசூலிக்கலாம். நான் பத்து வருஷங்களாக மீட்டர் ரெண்டு கட்டுகிறேன். ஒரு ரிப்பேர் ஏற்படவில்லை. பத்து வருஷங்களாக வருஷத்திற்கு ரூ. 24 வசூல் செய்கிறார்கள். அந்த மீட்டர் விலை எவ்வளவோ அந்தப் பணம் வட்டியோடு வசூலானவுடன் மீட்டர் ரெண்டை நிறுத்திவிடுங்கள், அதை எப்பொழுதும் வசூல் செய்வதற்கான வழியை வகுக்கவேண்டாம். விவசாய மக்களுக்கு உற்சாகம் கொடுப்பதற்கு அது ஒரு வழி என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அது போக, 10 சதவிகிதம் லாபம் இருந்தால்தான் அதை ரெம்யூனரேடிவ் ஸ்கிமாக எடுப்பது என்று வைத்திருக்கிறார்கள். அக்ரிகல்சர் சம்பந்தப்பட்ட வரையில், இதில் விலக்கு அளிக்க வேண்டும். எப்படி நாம் அரிஜன காலனிக்கு அவைகள் அபிவிருத்தியடைய வேண்டும் என்று சலுகைகொடுக்கிறோமோ அதே போல, உணவு உற்பத்தி என்று நினைக்கும் போது, இந்த 10 சத விகிதம் என்கிறதிலிருந்து விலக்கு அளிக்க வேண்டும். அந்த வகையில் சலுகை கொடுத்தால்தான், அக்ரிகல்சருக்கு எலக்ட்ரிசிடி விரிவு ஏற்படமுடியும்.

டெலிபோன் கனெக்ஷன் கட்டாயமாகக் கொடுக்க வேண்டும். ஒவ்வொரு செக்ஷன் ஆபீசுக்கும் கனெக்ஷன் கொடுத்தால்தான் தப்பிதம் எங்கே ஏற்பட்டாலும், எங்காவது நின்று விட்டாலும், உடனடியாகத் தகவல் கொடுக்க முடியும்.

சர்வீஸ் கனெக்ஷனைப் பற்றிக் குறிப்பிட வேண்டும். அறிக்கையின் 22-ம் பக்கத்தில் டெபாசிட் கட்டிய ஒரு மாதத்தில் சர்வீஸ் கனெக்ஷன் கொடுப்பதாகவும் குறிப்பிட்டிருக்கிறது. அது வாஸ்தவம் தான். ஆனால், குறைபாடு எங்கிருக்கிறது என்றால், மனு கொடுத்த தேதியிலிருந்து குறிப்பிட்ட காலத்திற்குள் கனெக்ஷன் கொடுக்க வேண்டும். அதுதான் முக்கியமான பிரச்சினை. மனுக் கொடுத்த நிலையில் கீழ்த்தரச் சிப்பந்திகள் காலதாமதம் செய்கிறார்கள். அதற்கு ஒரு கால வரை வைத்து, மனுக்கொடுத்த இவ்வளவு நாட்களுக்குள் கனெக்ஷன் கொடுக்க வேண்டும் என்று போடவேண்டும். அப்படியொரு தவணை வைத்தால்தான் நலமாக இருக்கும்.

சிக்கனத்தைப் பொறுத்த வரையில் ஒரு சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். மின்சாரத்தை விரிவு படுத்தும் திட்டங்கள் குறைந்திருப்பதாகச் சொல்லப் பட்டிருக்கிறது. அதிலே 'கன்ஸ்ட்ரக்ஷன்' என்றும், 'கமர்ஷியல்' என்றும் இரண்டாகப் பிரித்திருக்கிறார்கள். முதலில் கமர்ஷியல் எஸ்டிமேட்டு எல்லாம் போட்ட பிறகு, கன்ஸ்ட்ரக்ஷனில் எக்சிக்யூஷன் ஆரம்பிக்கிறது. இந்த இரண்டையும் ஒன்றாக இணைத்து, க்ளப் செய்து செயல்பட்டால், செலவு குறையும் என்பது என்னுடைய அபிப்பிராயம். மேற்கொண்டு திட்டங்கள் வந்தால், அவசியமானால், மறுபடியும் விரிவு படுத்திக் கொள்ளலாம். இப்பொழுது சிக்கனத்தை மனதில் கொண்டு, இரண்டையும் ஒன்று சேர்ப்பதே நலமாக இருக்கும்.

[திரு. ஏ. ஆர். சுப்பையா முதலியார்] [1967 நவம்பர் 25

பில் கலெக்டர்கள் சம்பந்தப்பட்ட வரையில், இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வசூல் செய்ய வேண்டும் என்று இருப்பது சரியாகாது. என்னுடைய சிறு அனுபவத்தைச் சொல்லுகிறேன். மாதா மாதம் கொடுத்தால்தான் எங்களுக்கு நலமாக இருக்கும். பில் கலெக்டர் வேலையை இரண்டாகப் பிரிக்கலாம். ஒரு பில் கலெக்டருக்கு 500 செட்டுகள் என்று இருப்பதாகத் தெரிகிறது. அவற்றை இரண்டாகப் பிரித்து, 15 தேதி வரை ஒரு பகுதியும், பிறகு 30 தேதிக்குள் பாக்கி 250 செட்டு என்று செய்யலாம். அப்படிச் செய்தால் ஒரே மாதத்தில் வசூல் செய்துவிடலாம். மேற்கொண்டு அதிக ஆட்களையும் போடவேண்டிய அவசியம் இல்லை. அதே போல, லைன் ஸ்டாப், ரீடிங் எடுப்பதையும், பிரித்துச் செயல்பட்டால் நலமாக இருக்கும். அதிகமான சிப்பந்திகள் நியமிக்காமல் இருப்பதற்கும் வழி ஏற்படும்.

இன்றைக்கு 11 சதவிகிதம் இன்டரஸ்ட் என்கிற அடிப்படையில் நாம் வரவு-செலவு செய்கிறோம். சர்க்காரே 6 சதவிகிதம் தான் வாங்குகிறார்கள். 11 சதவிகிதம் ஒரு போர்டுக்குக் கொடுக்க வேண்டும் என்றால், இன்றைக்கு நாட்டில் இருக்கும் கஷ்டத்தில் அது மிகவும் பாதகமானதாக இருக்கிறது. அன்று அன்று இருக்கும் பாங்கு ரேட்டு அடிப்படையில் செய்தால் செலவு குறையும்.

சிக்கனத்தைக் கையாண்டு, விவசாயிகளுக்கு ஊக்கம் கொடுக்க வேண்டும் என்று கூறிக் கொண்டு என் பேச்சை முடித்துக் கொள்ளுகிறேன்.

* திரு. பெ. மலைச்சாமி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு கல்வி-தொழில் அமைச்சர் கொண்டுவந்திருக்கும் மின்சார வாரிய வரவு-செலவுகளைப் பாராட்டிப் பேசுகின்ற வாய்ப்புத் தந்தமைக்கு நன்றி கூறக் கடமைப் பட்டிருக்கிறேன். இந்தியாவிலேயே, குறிப்பாகத் தமிழகத்தில், மின் இயக்கம் எந்த அளவிற்கு நடைபெற்றுக் கொண்டு வருகிறது என்பதைப்பற்றியெல்லாம் பல உறுப்பினர்களும் எடுத்துக் கூறினார்கள். நானும் அதைப் பாராட்டாமல் இருக்க முடியாது. இருந்தாலும், நடைமுறைப் போக்குகளில் ஓரளவு மாற்றம் வேண்டும் என்று வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்ளுகிறேன். இன்றைக்கு ஒரு சிற்றூருக்கு மின்சாரம் தேவை என்றால், சம்பந்தப்பட்ட ஊராட்சி மன்றத் தலைவர் ஊராட்சியின் மூன்று ஆண்டு வரவு செலவுகளைக் கோட்டாட்சித் தலைவருக்கு அனுப்பி, கோட்டாட்சித் தலைவர், அந்த ஊராட்சியின் நிதி நிலை சரியாக இருக்கிறது என்று ஒரு சான்றிதழ் கொடுத்த பிறகுதான் அந்த ஊராட்சிக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. இது ஒரு பெரிய சிக்கல் என்று கருதுகிறேன். ஊராட்சிமன்றத்திலிருக்கும் வேளாண்மையில் ஈடுபட்டிருக்கும் அத்தனை பேருக்கும் மின்சாரத்தை விரைவில் வழங்கவேண்டும் என்கிற ஆசை இல்லாமல் இருக்கலாம். ஊராட்சிக்குத் தெரு விளக்குகள் வேண்டுமென்றால், தொடர்புள்ள கோட்டாட்சித் தலைவரின் சான்றிதழ் வேண்டும் என்று சொல்லுகிறார்கள். வேளாண்மைத்



1967 நவம்பர் 25] [திரு. பெ. மலைச்சாமி]

துறைக்கு மின்சாரம் வேண்டும் என்றால், அவர்கள் எந்த எந்த சர்வே நம்பரில் மின்சாரம் கேட்கிறார்களோ, அதையெல்லாம் தாராளமாகக் கொடுக்கும் அளவிற்கு முறையை மாற்ற வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். வேண்டுமானால், ஊராட்சி ஒன்றியப்பு மன்றங்களுக்குச் சென்று, தலைவர்களைச் சந்தித்து, சான்றிதழ் பெறக்கூடிய வாய்ப்பினை அரசு செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

பதினைந்து உழவர்கள் விண்ணப்பங்கள் கொடுத்தார்கள் என்றால் ரூம்கள் கட்டிய ஐந்து பேர்களுக்கு மட்டும் கொடுத்தால் ரிடர்ன் வராது என்று அதிகாரிகள் கொடுக்க மாட்டார்கள். ஐந்து பேர்கள், பணவசதி படைத்தவர்களாக இருக்கலாம். வேளாண்மைக்கு மின்சாரத்தை உபயோகிக்கவேண்டும் என்கிற ஆசையில் இருப்பார்கள். ஏனையவர்கள் பணவசதி இல்லாதவர்களாக இருப்பார்கள். அதனால் காலம் தாழ்த்தப்பட்டுவிடும். அதனால் ஏற்படும் சிக்கல்களைத் தவிர்க்க, யார் யார் எந்த எந்த நேரத்தில் மின்சார இணைப்புக் கேட்கிறார்களோ, அவரவர்களுக்கும் தனித்தனியாக இணைப்புக் கொடுத்தால் வேளாண்மைத் தொழிலுக்கு வசதியாக இருக்கும். அப்படிச் செய்வது பாடுபடும் ஏழை விவசாய மக்களுக்கு மிகவும் பயன்படும்.

மேலும் ஊராட்சி மன்றங்களில் இன்றைக்கு இணைப்புகள் இருந்தாலும் கம்பங்கள் தான் இருக்கின்றனவே அல்லாது, மின் குமிழ்கள் காணவில்லை. மதுரையைப் பொறுத்தவரையில், அந்த மாவட்டக் கலெக்டரிடம் அதுபற்றி அனைத்து உறுப்பினர்களும் முறையிட்டு இருக்கிறார்கள். மின் இணைப்புக் கொடுத்த இடங்களிலும், மின் கம்பங்கள் தான் இருக்கின்றனவே அல்லாது, மின் விளக்குக் குமிழ்களைக் காணமுடியவில்லை. தாமதம் ஏற்பட்டிருக்கிறது. இதை முறையாகக் கவனித்து தலைவர் அவர்கள் விரைவில் கிடைக்கச் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மின்சாரத் துறைக்குத் தேவைப்படும் சில பொருள்களை நமது வாரியம் கேரளம் ஆந்திரம் போன்ற மாநிலங்களில் இருந்து வாங்குவதாகக் கேள்விப்படுகிறோம். இவ்வாறு வெளியில் வாங்குகின்ற அதே பொருள்களை நமது அரசின் தொழிற்சாலைகளே உருவாக்குகிறது. இங்கே உற்பத்தி செய்யப்படுகின்ற பொருள்களையே வெளியில் இருந்து வாங்குவதானது இங்கே உருவாகின்றவை தரம் குறைவாக இருப்பதனால் இருக்குமா என்று தெரியவில்லை. எப்படி இருந்தாலும் விற்பனை வரியை வேறு மாநிலங்கள் தட்டிக் கொண்டு செல்கின்றன என்பதை நினைவுபடுத்த விரும்புகிறேன். நமது மாநிலத்திலே ஒரு தொழிலை உருவாக்குகின்றபோது நமது மாநில அரசின் எல்லைக்குக் கட்டுப்பட்ட ஒரு மின்சார வாரியம் இங்கே செய்யப்படுகின்ற பொருள்களை வாங்காது வெளி மாநிலங்களில் வாங்குவது பெரிய ஐயப்பாடாக இருக்கிறது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கிறேன். மேல் நாடுகளில் டிரான்ஸ்பார்மர்களில் மீட்டரைப் பொருத்துகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். டிரான்ஸ்பார்மரிலே மீட்டரைப்

பொருந்தினால் எந்தெந்த விதியில் எந்தெந்த ஊரில் மின்சாரம் காணாமல் போகிறது என்பதை தெளிவாக அறிய முடியும். இந்த முறை தமிழகத்துக்கு ஏற்குமா என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அண்ணா அவர்களும் இங்கே இருக்கிற வாரியத் தலைவர் அவர்களும் கவனிப்பார்கள் என்று நம்புகிறேன்.

திங்களுக்கு ஒரு முறை தயாரிக்கப்பட இருக்கின்ற பட்டியலைப் பற்றிச் சொல்லும்போது அங்கே பணிபுரிகின்ற பல தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஒரு அரசின் துறை வெற்றியுற வேண்டுமானால் அடித் தளத்திலே பணிபுரிகிற சின்னஞ்சிறு அதிகாரிகள் சிறப்பாகப் பணியாற்ற வேண்டும், அப்போதுதான் செம்மையாக இருக்கும் என்பது இயல்பு.

அதைப் போலவே, இந்தத் துறையில் பல அதிகாரிகளை மூன்று மாதங்களுக்கும் இரண்டு மாதங்களுக்கும் ஒரு முறை வேலையை விட்டு விலக்கி வீட்டுக்குப் போ என்று சொல்லும் நிலைமை இந்த வாரியத்தைப் பொறுத்தவரை இருந்து வருகிறது. இந்த இரண்டு மாதங்களுக்குள் பட்டியல் வருமானால் அவற்றைத் தயார் செய்கையிலும் பணத்தை வசூல் செய்வதிலும் வேலைக் குறைப்பு ஏற்பட்டு, அதன் காரணமாக ஆள் குறைப்பு ஏற்படும். இன்னும் சொல்லப் போனால், தமிழகத்தில் மின்சாரத்தை அனுபவிப்பவர்கள் பட்டியல் வந்த பிறகு காலம் தாழ்த்தித்தான் பணம் கட்டுகிறார்கள். இந்த முறையில் பணம் கட்டாத 90 விழுக்காடுகள் மாமூலாக இருக்கிறது. அரசுக்கு அதற்கான வருமானம் ரூபாய் 22 லட்சம் என்று கணக்கிடப்படுகிறது. இந்த முறையில் பார்க்கும்போது ரூபாய் 22 லட்சம் பாதிக்கப்படலாம் என்று கூறிக்கொள்கிறேன். மேலும் ஆய்வு அறிக்கையைப் பார்த்தால் வேலைப் பளுவின் காரணமாக முறையாக கணக்கிடுவதும் இயலாத காரணத்தினால் கிட்டத்தட்ட 3 லட்சம் ரூபாய் நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது என்று சொல்கிறார்கள். வருமானத்தைப் பெருக்கும் வழிகளை பார்க்கப் போனால் நண்பர்கள் பலர் குறிப்பிட்டதைப் போல ஹை டென்ஷன்—உயர் அழுத்த மின்சாரம்--பயன்படுத்துகின்ற தொழிற்சாலைகள் மீது கிட்டத் தட்ட ஒரு யூனிட்டுக்கு ஒரு காசு உயர்த்தினால் 2 கோடியே 20 லட்சம் ரூபாய் வருமானம் அரசுக்குக் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறார்கள். இந்த வருமானத்தை வைத்து வீடுகளிலும் கடைகளிலும் மின்சாரத்தை அனுபவிப்பவர்களுக்குக் கட்டணத்தை ஓரளவு குறைக்கலாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இங்கு இருக்கின்ற மாண்புமிகு சட்ட அமைச்சரவர்களும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. சங்கரன் அவர்களின் கருத்தை நினைவுபடுத்த விரும்புகிறேன். கண்டிராக்டர்கள் மூலம் தயாரிக்கப்பட்டு வாங்குகின்றவைகளை மின்சார வாரியம் தாமே தயாரிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சொல்லப் போனால், 24 அடியில் உள்ள ஒரு சிமெண்ட் போஸ்டை தயாரிப்பதற்கான செலவு ரூ. 72-ல் இருந்து 77 வரை ஆகிறது. 27 அடி கம்பத்தை மின் குழுவே தயாரித்தால் அதற்கான செலவு ரூ. 92-ல் இருந்து ரூ. 95 வரை ஆகிறது. ஆனால் இதே 24 அடி கம்பத்தை





கண்டிராக்டர்கள் மூலம் வாங்கினால் 85 ரூபாயும், 27 அடிக் கம்பம் 195 ரூபாயும் கொடுத்து வாங்க வேண்டி இருக்கிறது. இதன் காரணமாக மின் வாரியத்துக்கு ஏற்பாடும் நஷ்டம் ரூ. 10 லட்சம் ஆகிறது.

மின்சார வாரியத்தின் தலைவர் போன்றவர்கள் ஆந்திர மாநிலம் போன்றவைகளில் நான்-அபிஷியல் மெம்பராக உள்ளனர். தமது மாநிலத்தில் தலைவர் நான்-அபிஷியல் மெம்பராக இல்லாவிட்டாலும், உறுப்பினர்களையாவது நான்-அபிஷியல் மெம்பராகப் போடும்படி கேட்டுக் கொள்கிறேன்.

ஆகவே, இதையெல்லாம் சீர்தூக்கிப் பார்த்து மின் வாரியத்துக்கும் அரசுக்கும் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு மின் வாரியத்தின் நிதி நிலையை அபிவிருத்தி செய்வதற்குத் துணை புரிய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்த மன்றத்திற்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். வணக்கம்.

*திரு. என். எஸ். வி. சித்தன்: சட்டப் பேரவை தாற்காலிகத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1967-68 நிதி நிலை அறிக்கையின் மீது எங்கள் பேரியக்கத்தின் சார்பில் ஒரு சில கருத்துக்களை மன்றத்தின் முன்னால் வைக்க விரும்புகிறன்.

அறிவியல் வளர வளர மின்சாரத்தின் தேவை பெருகி வருகிறது என்பதை நாம் உணருகிறோம். காடுகழனிகளில் உழுகின்ற உழவர்கள் முதல் ஆலை அதிபர்கள் வரை இன்று மின்சாரத்தின் தேவையை உணர்ந்து இருக்கிறார்கள். 25 ஆண்டுகளுக்கு முன்னால் தமிழகத்திலே வசதி வாய்ந்தவர்களே மின்சாரத்தை அனுபவிக்க முடியும் என்று இருந்த நிலைமை மாறி, தொழிலாளர்களும், நடுத்தர மக்களும், அடித்தளத்தில் இருக்கும் ஏழை எளியவர்களும் கூட மின்சாரத்தைப் பெற முடியும் என்ற நிலையை எங்கள் காங்கிரஸ் அரசாங்கம் செய்திருக்கிறது. மறைந்த ஆசியஜோதி ஜவஹர்லால் நேருவும், பாரதப் பிரதமர் இந்திரா அம்மையாரும் மின்சாரம் கிட்டத்தட்ட எல்லா மாநிலங்களுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது என்றும், இந்தத் துறையில் தமிழகம் இந்தியாவிலேயே ஏனைய மாநிலங்களுக்கு வழிகாட்டியாக இருக்கிறது என்றும் சொல்லி இருக்கிறார்கள். இந்தத் துறையில் இந்த அளவு பெருமிதப் படுவதற்கு முன்னாள் தொழில் அமைச்சர் திரு. ஆர். வெங்கடராமன் அவர்களின் அயராத உழைப்பும், நுண்ணிய அறிவும், ஊக்கமுமே காரணம் என்று இந்த நேரத்திலே இந்த மன்றத்திலே பெருமிதத்தோடு சொல்கிறேன். மின்சார வாரியத்தின் அறிக்கை மீது மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் சிலபல கருத்துக்கள் கூறியிருப்பதைப் பொதுவாக வரவேற்கிறேன்.

தமிழகத்திலே 1,070 மெகாவாட், நெய்வேலி நீங்கலாக, உத்பத்தி ஆகிறது. நெய்வேலியில் மட்டும் 400 மெகாவாட் உற்பத்தியாகிறது. இதிலே 150 மெகாவாட் மின்சாரம் மட்டுமே பயன்படுத்தப்படுகிறது. 250 மெகாவாட் பயன்பட முடியாத நிலையில் தேங்கியிருக்கும் நிலையை பார்க்கிறோம். தொழில் அமைச்சரவர்

களின் அறிக்கையிலே 1972-ம் ஆண்டுக்கு முன் 3,700 மெகாவாட் உற்பத்தி ஆகுமென்று அறிவித்தார். ஏற்கனவே 250 மெகாவாட் பயன்படுத்த முடியாத நிலை இருக்கிறது. மேற்கொண்டு மின்சார உற்பத்தியை அதிகப்படுத்தும் அதே சமயத்தில் அதிகப்படியான மின்சாரத்தைப் பயன்படுத்துவதற்கான நல்ல வழிமுறைகளை ஆராய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும் எனக்கு முன்னர் பேசிய நண்பர் சொல்லியபடி, வாரியத்திற்குத் தேவையான பல்புகளையும், எலக்ட்ரிக் போஸ்டர்களையும் மின்சார வாரியமே தயாரிக்க வேண்டும். வெளியே வாங்கினால் அதிகமாகப் பணம் செலவாகிறது, மின்சார வாரியமே தயாரிக்குமானால் பணம் மிச்சமாகும்.

அத்துடன் காஷன் டெபாசிட் என்று முன் பணமாக மூன்று மாத மின்சாரத் தொகை எவ்வளவு இருக்கிறதோ அதை வசூலித்து விடுகிறார்கள். இதனால் பெரும்பாலும் விவசாயிகளே அதிக அல்லல் படுகிறார்கள், என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இந்த காஷன் டெபாசிட் தொகையை யாரும் திரும்பப் பெறுவது இல்லை. மின்சாரம் வேண்டாம் என்று சொன்னால்தான் அந்தத் தொகையை திரும்பப் பெறமுடியும். அப்படி மின்சாரம் வேண்டாம் என்று யாரும் சொல்லப் போவது இல்லை. ஆகவே, இனியாவது அந்தத் தொகையை கூடுமான அளவுக்கு விவசாயிகளிடம் குறைத்து வசூல் செய்ய வேண்டும்.

இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின்சாரக் கட்டணத்தை வசூலிக்கலாம் என்ற சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. ஒவ்வொரு மாதமும் மின்சாரக் கட்டணத்தைக் கட்டுவதற்கே விவசாயிகளும் நடுத்தர மக்களும் அவதிப்படுகிறார்கள். நான் நேரிலேயே பார்த்திருக்கிறேன். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை கட்டவேண்டுமென்று சொன்னால் பணம் கணிசமான அளவுக்கு செலுத்த வேண்டியிருக்கும். ஆகவே, தற்போதுள்ள முறைப்படி ஒவ்வொரு மாதமும் மின்சார கட்டணத்தை செலுத்தும் முறையையே நீடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இரண்டு மாதங்களுக்கு பில்லை அனுப்பும் முறையைக் கொண்டு வந்தால், 1,800 பேர் வேலை இழக்க நேரிடும், என்ற பயம் இருந்து வருகிறது. ஆகவே தற்போதுள்ள நிலையே நீடிக்கவேண்டும்.

இந்த வாரியத்தின் மீது பரவலாக சாட்டப்படுகிற குற்றச்சாட்டு சிறிய கிராமங்களில், சிற்றூர்களில், குக்கிராமங்களில் தெரு விளக்குகள் சரியாக எரிவதில்லை என்பது. உதய சூரியன் ஆட்சியில் கூட கிராமங்கள் இருளில் மூழ்கிக் கிடக்கின்றதே என்று பரவலாக பேசிக்கொள்கிறார்கள். அதிகாரிகளைக் கேட்டால் பல்புகள் ஸ்டாக் இல்லையென்று சொல்கிறார்கள். பல்புகளைக் குறித்த காலத்தில் வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, தெரு விளக்குகள் சரியாக எரிகின்றனவா என்பதைப் பார்க்க வேண்டும். தெரு விளக்குகள் சரியாக எரியாமல் இருந்தும், எரிந்ததாகக் கணக்குக் காட்டி கட்டணம் வசூலிக்கிறார்கள். பஞ்சாயத்துக்கள், பஞ்சாயத்து யூனியன்கள்—தெரு





விளக்குகள் எந்த அளவிற்கு எரிகின்றன என்பதைப் புரிந்து கொள்வதற்காக தெரு விளக்குகளுக்குத் தனியான மீட்டர் முறையை ஏற்படுத்தி, எரிந்த அளவுக்கான தொகையை மட்டும் வசூலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சாரத் தொழிலாளர்களின் வேலைப் பளு அதிகமாக இருக்கிறது. 25—8—1967 அன்று மின்சார போர்டு ஊழியர்களும், வாரியமும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டு, 1—4—1967-ம் தேதியன்று இருந்த அதே அளவு வேலையைச் செய்ய வேண்டுமென்று ஒப்பந்தமாகியிருக்கிறது. 30—9—1967-ம் தேதிக்குள் அதை அமல் நடத்த வேண்டும். அந்த ஒப்பந்தத்தின் 4-வது ஷரத்தின்படி 45 உயர் அதிகாரிகளையும் 60 கணக்காயர்களையும், 144 உதவியாளர்களையும் உடனடியாக நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

இன்று கிராமப்புறங்களில் மக்களுக்கு நல்ல குடிதண்ணீர் வழங்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன் மேல்நிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்டப்பட்டு வருகிறது. அம்மாதிரி பல்லாயிரக் கணக்கான ரூபாய் செலவழித்து நீர்தேக்கத் தொட்டிகளை அமைத்தபோதிலும், அதற்கான மின்சார இணைப்பைக் காலாகாலத்தில் கொடுக்காததால் தொட்டிகள் வீணாகியிருக்கின்றன. மக்களுக்குக் காலாகாலத்தில் நல்ல தண்ணீர் கிடைக்கவில்லை. ஆகவே, தேவையான காலத்தில் உடனடியாக மின்சார இணைப்பைக் கொடுக்க தக்க வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மதுரை மாவட்டத்தில் இன்னும் ஒரு Revenue Unit (வருவாய்ப் பிரிவு) அமைக்க விருக்கிறார்கள். அதை திருமங்கலத்தில் அமைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எனக்கு வாய்ப்பு அளித்ததற்காக நன்றியைத் தெரிவித்துக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, 1967-68-ம் ஆண்டு மின்சாரக் குழுவின் நிதிநிலை அறிக்கையின்மீது ஒருசில கருத்துக்களை இந்தச் சந்தர்ப்பத்தில் கூற விரும்புகிறேன். நம்முடைய மாநிலத்தில் 300 கோடி ரூபாய் மூலதனம் போட்டு நிர்வகிக்கின்ற இந்த ஸ்தாபனத்தினுடைய வரவு செலவுக் கணக்கைப் பார்க்கிற நோக்கில், அதனுடைய வருமானம் மிகமிகக் குறைவாக இருக்கிறது என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டும். இந்த ஸ்தாபனத்திற்கு மூலதனமாக மாநில அரசும், லைப் இன்ஷூரன்ஸ் காப்பரேஷன் போன்ற ஸ்தாபனங்களும் கொடுத்திருக்கின்றன. 300 கோடி ரூபாயிலிருந்து வரும் வருமானம் மிகமிகக் குறைவு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். இந்த மின்சாரக் கழகத்திலிருந்து நாம் கூடுதலான நிலைக்கு மின்சக்தியை உற் செய்து மிகப் பெரிய கம்பெனிகளுக்குக் குறைந்த செ... விநியோகித்து வருவதை. நாம் தடுத்து நிறுத்தியாக வேண்டும். நெல்லை ஜில்லாவில் தாரங்கதாரா கம்பெனி, கோயம்பத்தூர் ஜில்லாவில் இந்தியன் அலுமினியம் கம்பெனி போன்ற பெரிய பெரிய கம்பெனிகள்—

[திரு. மு. ச. சிவசாமி] [1967 நவம்பர் 25

ஒன்றுக்கு 1½ கோடி அல்லது 2 கோடி ரூபாய் லாபம் சம்பாதிக்கும் கம்பெனிகள்—போன்றவற்றிற்கு நாம் குறைந்த விலையில் மின்சார சப்ளை செய்து வருகிறோம். ஒரு யூனிட்டுக்கு 1½ பைசா, 4 பைசா என்று கொடுப்பதை நிறுத்தி, அவைகளுக்கு இன்னும் அதிகமான ரேட்டை நிர்ணயம் செய்து அதிகப்படியாக வசூலிக்க வேண்டும். இதனால் இந்த ஸ்தாபனம் அதிகமான வருமானத்தைப் பெற முடியும். அதேபோல், நம்முடைய சென்னை மாநிலத்தில் பல கோடிக் கணக்கான ரூபாய்களை லாபமாகப் பெற்றுவரும் பல சிமெண்ட் கம்பெனிகள் இருக்கின்றன. அவற்றுக்கும் நாம் குறைந்த விலையில்தான் மின்சாரத்தைக் கொடுத்துக்கொண்டு வருகிறோம். அவைகள் எல்லாம் ஆரம்ப நிலையில் இருக்கின்ற கம்பெனிகள் அல்ல. மேலும் சிமெண்ட் கம்பெனிகள் எல்லாம் என்றுமே லாபத்தோடு நடக்கக்கூடியவை. அவைகளின் தனிப்பட்ட வரவு செலவுக் கணக்கில் குறைந்தபட்சம் 10 சத விதம் க்ஷேம நிதிக்கு ஒதுக்குகிறார்கள். மற்றும் போனஸ் போன்றவைகள் வேறு. ஆனால் நாம் 1½ சத விதத்திலிருந்து 2½, 3 சதவிதம் டிப்ரிசியேஷன் கழிக்கிறோம்.

நம்முடைய பொதுத் துறையான மின்சாரக் கழகத்தைப் பார்க்கின்ற நேரத்தில் இந்த நிலையை நாம் மாற்றியாகத்தான் வேண்டும். அதே நேரத்தில் ஏழை எளிய மக்கள் உபயோகிக்கின்ற கரண்டுக்கு அதிகமாக வைத்துக் கொண்டு, பெரும் முதலாளிகள்—கேபிடலிஸ்டுகள்—போன்றோருக்கு 1 பைசா, 1½ பைசா என்று கொடுக்கும் முறையை மாற்றுவதற்கு தமிழக அரசும் மின்சார வாரியமும் முன்வர வேண்டும். மின் உற்பத்தி நிலையங்களில், குறிப்பாக நம்முடைய நீலகிரி மாவட்டத்தில் குந்தா எலெக்ட்ரிசிடி, பரம்பிக்குளம்-ஆளியாறு பகுதியில் வேலை செய்துகொண்டு வந்த அன்றாட தினக்கூலிகள் அந்தந்த ஸ்கீம் முடிந்தவுடன் அனாதைகளாக விடப்படுகிறார்கள். ஒரு ஸ்கீம் முடிந்து, வேறு இடத்தில் இன்னொரு புதிய ஸ்கீம் ஆரம்பிக்கிறபோது, புதிய இடத்தில் உள்ளவர்களையே வேலைக்கு எடுத்துக் கொள்கிறார்கள். ஒரு திட்டம் அமைக்க மனிதன் வனாந்தரங்களையெல்லாம் அழித்து, அங்கே சென்று ஆயிரம் அடி நீளமுள்ள குகைகளைத் தோண்டி, மலைகளை உடைத்து பல கஷ்டங்களை அனுபவிக்க வேண்டியிருக்கிறது. அப்படி கஷ்டப்பட்ட மனிதர்களை அந்தத் திட்டம் முடிந்தவுடன் அனாதைகளாக விட்டுவிடுவது நல்லதல்ல. குந்தா திட்டத்தை முடிக்க மூன்று ஆண்டுகளுக்கு மேல் தொலைப்பட்ட தொழிலாளர்கள் கோதையாறு திட்டத்தின் போது கைவிடப்படுகிறார்கள். நாகர் கோவிலில் ஆட்கள் எடுக்கின்ற முறையைத் தமிழக அரசாங்கம் கண்டிப்பாக மாற்றியாக வேண்டும். கோயம்புத்[illegible] மாவட்டத்தில் திட்டம் முடிந்துவிட்ட நிலையில், நெ[illegible] மாவட்டத்தில் திட்டம் ஆரம்பித்தால் அவர்கள் குந்தா திட்டத்திலிருந்தவர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும். புதிதாக ஆரம்பிக்கிற திட்டங்களுக்கு அவர்களைப் பயன்படுத்தினால் அவர்கள் படுகின்ற கஷ்டத்திற்கு சர்க்கார் ஓரளவு ஆதரவாக



1967 நவம்பர் 25] [திரு. மு. ச. சிவசாமி]

இருக்க முடியும் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கூறிக் கொள்கிறேன். அங்குள்ள தொழிலாளர்கள், "இந்த அணையை நாங்கள் தான் கட்டினோம். எங்கள் குடிசைகளைப் பாருங்கள். வேலை முடிந்தவுடன் எங்களைக் கைவிட்டு விட்டு புதிய ஆட்களை நியமிக்கிறார்களே, எங்களுக்கு இந்தத் தமிழக அரசிலாவது விமோசனம் கிடைக்காதா?" என்று என்னைக் கேட்டார்கள். அறிஞர் அண்ணா அவர்கள் இவர்களைப்பற்றி தயவுசெய்து கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

தூத்துக்குடி அனல் மின்சார திட்டத்தைப்பற்றிச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்றைய தமிழக அரசு நம்முடைய முதலமைச்சருக்குக் கடமைப்பட்டிருக்கிறது. ஏனென்றால், தூத்துக்குடி துறைமுகத் திட்டம் கைவிடப்படும் என்ற நிலையில் இருக்கும் நேரத்தில், அறிஞர் அண்ணா அவர்களின் ஆட்சி மூலம்தான் அந்தத் திட்டம் மீண்டும் புத்துயிர் பெற்றது. தூத்துக்குடி துறைமுகத் திட்டத்தில் அதிகமான ஏற்றுமதி இறக்குமதிக்கு அனல் மின்சாரத் திட்டம் ஒரு உபகரணமாக இருக்கும் என்பதை ஞாபகப்படுத்துகிறேன். தூத்துக்குடி அனல் மின்சார திட்டத்திற்கு பத்து லட்சம் ரூபாய் பூர்வாங்க வேலைகளுக்கு ஒதுக்கப்பட்டிருக்கிறது. தூத்துக்குடி அனல் மின்சார திட்டத்திற்கு நம்முடைய தமிழக அரசு மத்திய அரசாங்கத்திடம் போராடி அங்கீகாரம் பெற வேண்டும். தூத்துகுடி அனல் மின்சார திட்டத்தை நம்முடைய மாநில அரசாங்கம் ஆரம்பிக்க வேண்டுமென்று தமிழக மின்சாரக் கழகத்திற்கு ஒரு வேண்டுகோளையும் கொடுக்க விரும்புகிறேன். தூத்துக்குடி பகுதியில் அரசடி நுப்பாசிப்பட்டி ஸ்கீமுக்கு 1966-67-ல் 1 லட்சத்து 37 ஆயிரத்து சொச்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் அங்கே எந்த விதமான வேலையும் ஆரம்பிக்கப்படவில்லை. அங்கே நூற்றுக்கணக்கான உப்பளங்கள் இருக்கின்றன. அங்கே ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் வேலை பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வேலை தொடர்ந்து கிடைப்பதற்கு, குறைந்த விலையில் உப்பு உற்பத்தி செய்வதற்கு, விவசாயம் நல்ல முறையில் அபிவிருத்தி அடைவதற்கு அரசடி நுப்பாசிப் பட்டி ஸ்கீமை உடனடியாக ஆரம்பிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து திருநெல்வேலி மாவட்டத்தில் திருநெல்வேலி, சாத்தான்குளம் பகுதியில் மிகவும் வரண்ட நிலைமைதான் இருக்கிறது. பூமிக்கடியில் நல்ல தண்ணீர் இருக்கிறது. கிணறுகள் தோண்டி, பம்பு செட்டுகள் வைத்து இரண்டாண்டுகள் ஆகியும் அந்தக் கிணறுகளுக்கு மின்சார கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அந்தக் கிணறுகளுக்கு உடனடியாக மின்சார கனெக்ஷன் கொடுத்தால், பற்றாக்குறை பிரதேசமாக இருக்கிற [illegible] குளம், திருச்செந்தூர் பகுதியில் உடனடியாக வி[illegible] ஆரம்பிக்க உதவியாக இருக்கும். மின்சாரக் குழுவினர் இதில் கவனம் செலுத்த வேண்டுமென்று இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக் கொள்கிறேன். (மணி அடிக்கப்பட்டது.)

[1967 நவம்பர் 25

திரு. கே. பி. எஸ். மணி : மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கொண்டு வந்துள்ள மின் வாரிய அறிக்கையை ஆதரித்து எனது கருத்துக்களைச் சொல்ல ஆசைப்படுகிறேன்.

மின்சாரம் என்பது மனிதனுடைய ஜீவ நாடியாக மாறிவிட்டது. எந்த தேசம் மின் துறையில் துரிதமாக முன்னேற்றம் அடைகிறதோ அந்த தேசம்தான் தொழில் துறையிலும் சரி, மற்றத் துறைகளிலும் சரி அதிகமான முன்னேற்றத்தை அடைந்திருக்கிறது. உலக நாடுகளில் அதிக முன்னேற்றம் அடைந்துள்ளவை யாவும் மின் துறையில் அடைந்துள்ள வளர்ச்சியின் காரணமாகத் தான் அந்த நிலையை அடைந்திருக்கிறது என்றால் அது மிகை யாகாது அந்த நிலைக்கு மின் துறையில் நமது தமிழகம் முன்னேற்றம் காண்பதற்கு இடைவிடாது உழைத்து வருகிற தொழிலாளர்களுடைய நலனில் நாம் போதுமான கவனம் செலுத்தியாக வேண்டும். மின் துறையில் நாம் ஆற்றியிருக்கிற பணிகளைக் குறித்து, ஆற்ற வேண்டிய பணிகளைக் குறித்து, எனக்கு முன் பேசிய உறுப்பினர்கள் அத்தனைபேரும் அழகாகவும், தெளிவாகவும் எடுத்துக் கூறினார்கள். ஆனால் அத்துறையில் பணியாற்றி வருகிற தொழிலாளர்களுடைய நிலைமையைப் பார்த்தால் அவர்கள் பழைய கருப்பன் கருப்பனே என்ற நிலைமையில் இருக்கிறார்கள் என்று சொன்னால் மிகையாகாது. மின் திட்டங்களுக்காக அணைகள் கட்டுகிற, சுரங்கங்கள் வெட்டுகிற தொழிலாளர்கள் இன்றைக்கும் கூலிகளாகவே கருதப்படுகிறார்களே தவிர, அவர்களுடைய வாழ்க்கைப் பிரச்சினை கொஞ்சங்கூட உயர்வதாக இல்லை. லைன்களில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு தங்கள் தங்கள் உயிரைப் பாதுகாத்துக்கொள்ள போதுமான உடை பாதுகாப்பு இல்லை. வெளி நாடுகளில் இதுபோல வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு கரண்டு தாக்காத உடைகள் எல்லாம் அளிக்கப்படுகின்றது. இங்கே வேலை செய்கிறவர்கள் துரதிருஷ்டசாலிகள் என்று சொல்ல வேண்டும். அடிக்கடி உயிரை இழக்கக்கூடிய நிலையில் தான் இருக்கிறார்கள். ஆகவே அரசாங்கமும் சரி மின்சார வாரியமும் சரி உடனடியாக மின் துறையில் வேலை செய்கிற தொழிலாளர்களுக்கு மின்சக்தி தாக்காத உடைகளை அளிக்க முன்வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோல அத்துறையில் வேலை செய்கிற தொழிலாளர்கள் அத்தனை பேர்களையும் பர்மெனன்ட் செய்யவேண்டும் அவர்களுக்கு பிராவிடெண்ட் பண்டு திட்டத்தைக் கட்டாயமாக அமுலாக்கவேண்டும்.

அடுத்து, மின்சாரம் இன்றைக்கு நம்முடைய ஜீவநாடியாக இருக்கிற விவசாயத் துறைக்கு அதிகம் பயன்படுத்தப்பட வேண்டும். பயன்படுத்த தடையாக இருப்பவைகள் அகற்றப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இது சம்பந்தமாக தஞ்சை மாவட்டத்திற்கு அமைச்சர்கள் வரும்போதெல்லாம் ஒவ்வொருவரிடமும் எடுத்துச் சொல்லி வருகிறோம். தஞ்சை ஜில்லாவில் இரண்டு தனியார் மின் விநியோகக் கம்பெனிகள் இருக்கின்றன:



1967 நவம்பர் 25] [திரு. கே. பி. எஸ். மணி]

நாகப்பட்டினம் கும்பகோணம் கார்ப்பரேஷன், சேஷசாயி பிரதர்ஸ் கம்பெனி என்று இருக்கின்றன. அரசாங்கம் மின்சார விநியோகக் கம்பெனியை தேசியமாக்குவது என்று சொன்னவுடன் விநியோகக் கம்பெனியை தேசியமாக்குவது என்று சொன்னவுடன், அங்கு வேலைகள் அப்படியே நிறுத்தப்பட்டுவிட்டன. குறிப்பாக மின்சார போர்டுக்கு கனெக்ஷன் வேண்டுமென்று கேட்கிற போது 80 ரூபாய் கட்டினால் போதும், ஆனால் சேஷசாயி மிகவும் அக்கிரமமான நிலைமை என்று அமைச்சர்களிடத்தில் சொல்லியிருக்கிறோம். இப்போது வேலைகளையே நிறுத்திவிட்டார்கள். எனது தாலுக்கா பஞ்சாயத்து யூனியனை எடுத்துக்கொண்டால், 1,300 பம்பு செட்டுகள் கொடுத்திருக்கிறோம். 763 பம்பு செட்டுகள் தயாராகி விட்டன. அவற்றில் 300 பம்பு செட்டுகளுக்குத்தான் கனெக்ஷன் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இத்தகைய நிலைமை இருக்குமானால் நிச்சயமாக அந்த ஜில்லாவில் விவசாய அபிவிருத்தி பண்ண முடியாது. அதோடு கூட தஞ்சை ஜில்லாவில் சீர்காழி, மாயவரம், நன்னிலம், கும்பகோணம், நாகப்பட்டினம், மன்னார்குடி ஆகிய இடங்களில் மின்சார பம்பு செட்டுகள் நான்கு மாதங்களுக்குத் தான் தேவைப்படுகிறது. அறந்தாங்கி, பட்டுக்கோட்டை போன்ற இடங்களில் வருடம் பூராவும் தேவைப்படுகிறது. என்னைக் கேட்டால் அறந்தாங்கி, பட்டுக்கோட்டை பகுதியில் டீப் வெல்ஸ்களுக்கு முதலிடம் கொடுக்கவேண்டும்.

அடுத்தபடியாக, கிராமங்களை எடுத்துக்கொண்டு பார்க்கிற போது கிராமங்களில் குடியிருக்கிற ஹரிஜனங்களுடைய பகுதிகளுக்கு மின் விஸ்தரிப்புக் கொடுப்பதில்லை. பஞ்சாயத்து யூனியன் பகுதிகளிலே கூட உயர்சாதிக்காரர்கள், பாரம்பரியமான மிராசுதார்கள் ஆகியவர்கள் வசிக்கின்ற பகுதிகளுக்குத்தான் மின்சார வசதி செய்துகொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர, வன்னிய க்ஷத்திரியர்கள், ஆதித் திராவிட மக்கள் வசிக்கின்ற பகுதிகளுக்கு கனெக்ஷன் கொடுக்கப்படவில்லை. இதைப்பற்றி போர்டுக்கே எழுதினோம். அவர்கள் சர்க்காரிடம் பணம் கடன் கேட்டோம், கொடுக்கவில்லை, ஆகவே அந்த வேலைகளை எடுத்துக்கொள்ள முடியவில்லை என்று பகிரங்கமாகக் கடிதம் எழுதிவிட்டார்கள். இவர்கள் ஒரு திட்டம் வைத்திருக்கிறார்கள். பத்து லட்சம் ரூபாய் ஒரு கிராமத்திற்குச் செலவு செய்தால் என்ன வருமானம் வரும் என்று கணக்கிடுகிறார்கள். வருமானம் வராது என்கிறபோது கனெக்ஷன் கொடுப்பதில்லை. முதலில் மத்திய அமைச்சராக இருந்த மரகதம் சந்திரசேகரன் அவர்கள் அந்தப் பகுதியில் இதுபோல போதுமான வருமானம் வராத கிராமங்களுக்கு மின் விஸ்தரிப்புக் கொடுத்தால் அதனால் ஏற்படுகிற நஷ்டத்தை மத்திய அரசு மானியத்தின் மூலம் கொடுப்பதாகச் சொன்னார்கள். காவிரிப் பட்டணம், திருவெண்காடு போன்ற கிராமங்களுக்கு எல்லாம் அந்தத் திட்ட அடிப்படையில் தான் முன்பு விஸ்தரிப்புக் கொடுக்கப்பட்டது. ஆனால் கடந்த தேர்தலிலே அவர்கள் தோற்றுவிட்ட பிறகு அந்தத் திட்டமும் கை

[திரு. கே. பி. எஸ். மணி] [1967 நவம்பர் 25

விடப்பட்டுவிட்டதாக அறிகிறேன். ஒரு தொகுதியில் வெற்றி பெற்றால் ஒரு ஏற்பாடு, தோற்றுவிட்டால் இன்னொரு ஏற்பாடு என்கிற நிலை உண்மையிலேயே நல்லதா என்பதை யோசிக்க வேண்டும். ஆகவே, இன்று இருக்கிற தமிழக அரசு மத்திய சர்க்கார் கொடுக்கிற மானியத் தொகையை வாங்கி கிராமாந்திரங் களுக்கு மின் இணைப்புக் கொடுக்கிற வேலைகளை நிறைவேற்றிக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தொழிற் துறைக்கு மின்சாரம் தேவைதானென்றாலும், விவசாயிகளாகிய நாங்கள் அரிசி, கம்பு, சோளம் போன்றவற்றை உற்பத்தி செய்து கொடுத்தால்தான் அந்தத் தொழிலாளர்களும், தொழிலதிபர்களும், வசதி படைத்தவர்களும் வாழ முடியும் என்ற காரணத்தால், மனிதன் காசையோ, பணத்தையோ சாப்பிட முடியாது என்ற நிலையில், நாட்டு மக்களின் ஜீவநாடியாக இருக்கிற விவசாயிகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் முதலிடம் கொடுக்க வேண்டும். தற்போது 25 சதவிகிதம் கொடுப்பதை 40 சதவிகித மாக உயர்த்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, முடித்துக் கொள்கிறேன்.

*** திரு. அ. ஆறுமுகம் :** தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சாரக் கழகத்தின் 1967-68-ம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின் மீது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழக அரசு தமிழகம் பூராவும் ஏழை நடுத்தர மக்களுக்கு ஒரு படி அரிசித் திட்டத்தைப் போட்டு மக்கள் மனத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டது. அதே போல் தமிழகத்தில் இருக்கிற தமிழக மக்களுக்கும், உலகத் திலே வாழ்கின்ற அத்தனை மக்களுக்கும் உணவு அளிக்கக்கூடிய விவசாயிகளுடைய குறைகளைப் போக்குகின்ற வகையில் மின் சாரத்தை விவசாயத்திற்காக எங்கெங்கு, எந்தெந்த இடத்தில் கேட்கிறார்களோ அங்கெல்லாம் தாராளமாகக் கொடுத்து விவசாயி களுடைய மன நிறைவைப் பூர்த்தி செய்வதன் மூலம் அவர் களுடைய மனதிலும் இந்த அரசு ஓரிரு ஆண்டுகளில் நீங்காத இடம் பெற்றுவிடும் என்ற நம்பிக்கை இருக்கிறது.

விவசாயத்திற்குப் பயன்படுத்துவதற்காகத் தமிழக அரசு மின் சாரத்தை நல்ல முறையில் அளித்து வருகிறது. மின்சாரக் கழகத் தின் பொறுப்பில் இருக்கும் அதிகாரிகளும் சிறப்பாகவும், ஆர்வத் துடனும் வேலையில் ஈடுபட்டிருக்கிறார்கள். மேட்டூர் பகுதியில் உள்ள மின் திட்டத்தின் பெருமளவு மின் உற்பத்தியாகி கிணறு களில் வைக்கப்பட்டுள்ள மின்சார பம்ப் செட்களுக்கு மின்சக்தி வழங்கப்படுகிற நிலை இருக்கிறது. காவேரி ஆற்றில் பூலம்பட்டி பகுதியில் ஒரு நீர்த் தேக்கத்தைக் கட்டி மின்சாரத்தை உரு வாக்கினால் ஓரளவு அந்தப் பகுதியில் மின்சாரத்தை அதிக அளவு வழங்க வழி வகையாக இருக்கும்.



1967 நவம்பர் 25] [திரு. அ. ஆறுமுகம்]

விவசாயத்திற்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டு விண்ணப் பம் போட்டு மின்சார கனெக்ஷன் கொடுப்பதற்கு இரண்டு, மூன்று ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிடுகிறது. இந்தக் காலதாமதத்தால் விவசாயிகளுக்கு விவசாயத்திலே ஊக்கம் குறைந்து விடுகிறது. இன்றைக்கு விவசாயிகள் விவசாயத்திற்காக ஒரு ஜோடி மாடு வாங்க வேண்டுமென்றால் இரண்டாயிரம் ரூபாய் ஆகிவிடுகிறது. அதே நேரத்தில் பண்ணையில் வேலையாட்களை வைத்து வேலை செய்ய வேண்டுமென்றால் ஒரு ஆளுக்கு ரூ. 600 முதல் 700 வரை கூலியாக கொடுக்க வேண்டியிருக்கிறது. ஆகவே, ஏற்றம் இறைத்துத்தான் விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்றால், விவசாயி நம்பிக்கை இழந்து விடுவான், உற்சாகத்தை இழந்து விடுவான். ஆகவே, சினிமா காட்சிகளுக்கெல்லாம் கொடுக்கப்படு கிற மின்சாரத்தைக் குறைத்தாவது, விவசாயத்திற்கு அதிக அளவு மின்சாரத்தைக் கொடுப்பதற்கு வழிவகை செய்யவேண்டு மென்பதை நான் கூற விரும்புகிறேன்.

மின்சாரக் கழகத்தில் பணியாற்றும் ஊழியர்கள் தங்கள் உயி ரைப் பணயம் வைத்து பணி செய்து வருகிறார்கள், அப்பேர்ப்பட்ட தொழிலாளர்களுக்கு நம்முடைய அரசு கூலியை உயர்த்திக் கொடுப்பதோடு, அவர்களை நிரந்தரமானவர்களாகவும் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கரடுமுரடான பகுதி களில் அந்த ஊழியர்கள் இரவு பகல் பாராது பணியாற்றுவதற்காக அவர்களுக்கு என்னுடைய பாராட்டுதலைத் தெரிவித்துக் கொள் கிறேன்.

ஹொகனேகல் மின் திட்டத்தை நிறைவேற்றினால் பல மெகா வாட் மின்சாரம் அதிகமாகக் கிடைக்கும். இதனை நான் அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்து, இந்தத் திட்டத்தை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். மேட்டூர் இடது கரை வாய்க்கால் இருக்கிற பகுதியில் மின்சாரக் கிணறு களுக்கு மின்சாரம் தேவைப்பட்டால் சம்பந்தப்பட்ட ஆர்.டி.ஓ. அல்லது தாசில்தாரிடத்தில் பர்மிட் வாங்க வேண்டுமென்ற நிபந்தனை நம்முடைய அரசு நீக்கிவிட வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். விவசாயிகள்தான் நாட்டின் முது கெலும்பு. ஆகவே, அவர்களை ஊக்குவிக்கும் வகையில் வாய்க்கால் பகுதியிலுள்ள கிணறுகளுக்கும், இரண்டு பர்லாங் தூரத்திற்கு அப்பால்தான் இருக்க வேண்டுமென்ற நிபந்தனையை விதிக்காமல் எவ்வளவு அருகில் இருந்தாலும் மின்சாரம் தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய காங்கிரஸ் உறுப்பினர் சித்தன் அவர்கள் 'உதய சூரியன் ஆட்சியில் ஒளிபெறவில்லை' என்று சொன்னார்கள். உதய சூரியன் ஆட்சியில் ஒளி பெருகுகிறது என்று தென் சென்னை மக்கள் தீர்ப்பளித்து விட்டார்கள். தீர்ப்பளித்ததைப் புரிந்து கொள்ளாமல் பேசுவது வருந்தத்தக்கது. உதய சூரியன் ஆட்சியில் ஒளி பெருகிய மக்கள் நலமாக வாழ்கிறார்கள். இன்னும் ஓரிரு ஆண்டுகளில் விவசாயத்திலும் முன்னேறி விடலாம் என்ற

நம்பிக்கை அரசுக்கு இருக்கிறது. அந்த அடிப்படையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்தி வருகிறார்கள். இந்த அரசு விவசாயம் செழிக்க நல்ல வழிமுறைகளை வகுக்க வேண்டுமென்று கூறி இந்தச் சந்தர்ப்பத்தை அளித்த தலைவர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

* **திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர்** : தலைவர் அவர்களே, மின்சார வாரிய நிதிநிலை அறிக்கையின் மீது பேசக் கிடைத்த வாய்ப்புக்காக முதலில் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்டு சில வார்த்தைகள் பேச விரும்புகிறேன். மின்சாரம் ஆண்டவனை போல் எல்லா துறையிலும் கண்ணுக்குத் தெரியாமல் மக்களுக்கு உதவி செய்கிறது. எல்லா இயக்கங்களிலும் நமது மாநில மக்கள் மின்சாரத்தை உபயோகப்படுத்தி சந்தோஷப்பட்டுக் கொண்டுதான் இருக்கிறார்கள். இருந்தாலும் இந்த நிலையிலும் மின்சார இலாகாவின் மேல் பல குறைகளைப் பலரும் சொல்லத்தான் செய்கிறார்கள். நானும் கூடக் கொஞ்சம் சொல்லப் போகிறேன். இவற்றையெல்லாம் பற்றிக் குறை சொல்வதாகக் கருதாமல், காய்த்த மரத்தில் கல்லடி என்ற மாதிரி, நடைமுறையில் இருக்கின்ற சில தவறுகளைத் திருத்திக் கொள்வதற்கு வழிவகுக்கும் முறையில் எடுத்துக் கொள்ளவேண்டுமென்று தெரிவித்துக் கொள்கிறேன்.

விவசாயம், தொழில் இரண்டுக்கும் மின்சாரத்தை உபயோகப் படுத்துபவர்களில் நானும் ஒருவன். விவசாயத்திற்கு யூனிட்டுக்கு 8¼ பைசா என்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. அதிலும் பல வரிகள், சர்சார்ஜ், டாக்ஸ் என்று போட்டு அது 10 பைசாவுக்கு மேல் வருகிறது. நாங்கள் பத்து பைசாவுக்கு அதிகமாகக் கூடக் கொடுக்கத் தயாராக இருக்கிறோம். ஆனால் புதிய முறையில் உள்ள கஷ்டத்தைப்பற்றி மின்சார போர்டு தலைவர் அவர்களிடமும், சிப் எஞ்சினியர் அவர்களிடமும், அமைச்சர்களிடமும் எடுத்துச் சொல்லியிருக்கிறோம். அந்தக் கஷ்டத்திலிருந்து எங்களுக்குக் கொஞ்சம் விமோசனம் கொடுக்கவேண்டும். எங்கள் பகுதியில் தோட்டங்களில் குடியிருப்பவர்கள், காட்டிலேயே இருந்து கொண்டு விவசாயம் செய்து கொண்டிருப்பவர்கள் மாட்டுக்குக் குடிக்கக் கொஞ்சம் தண்ணீர் எடுத்தால் கூட அதற்கு இண்டஸ்ட்ரியல் டாரிஃப் 8 பைசாவுக்கு 12 பைசா என்று கூட்டி, அதற்கு மேல் இத்தனை வரிகளையும் போட்டு எங்கள் மீது சுமத்தப் பார்க்கிறார்கள்.

பிற பகல் 1-00 இது விஷயத்தை அவசியம் கவனிக்கவேண்டுமென்று முதல் அமைச்சர் அவர்களிடத்திலும், மின்சார இலாகாவில் உள்ளவர்களிடத்திலும் முறையிட்டிருக்கிறோம். அவசியம் காது கொடுத்து எங்கள் குறைகளைக் கேட்பார்கள் என்று நம்புகிறோம். இந்தச் சிறு மாறுதலை எவ்வளவு விளக்கினாலும் போதாது. ஒரு பத்து மணி நேரம் விவசாயத்திற்கு மின்சாரத்தை உபயோகப்படுத்தினால் ஐந்து அல்லது பத்து நிமிடங்களுக்குத்தான் சொந்த உபயோகத்



திற்காக அதை உபயோகிக்கிறோம். அந்தத் தண்ணீரை வெளியே கொண்டு போவதில்லை. குளித்தாலும் அல்லது பாத்திரங்கள் கழுவினாலும் அந்தத் தண்ணீர் அந்தக் காடுகளில் உள்ள செடி கொடிகளுக்குத்தான் செல்கிறது. ஆகவே சொந்த உபயோகத்திற்காக ஐந்து அல்லது பத்து நிமிடங்கள் உபயோகித்தால் அதற்கும் வரி போடப்படுகிறது. அக்ரிகல்சரல் டாரிஃபை மாற்றி இண்டஸ்ட்ரியல் டாரிஃப் என்று போடப்படுகிறது. விவசாயத்திற்காகத் தண்ணீரை முழுக்க முழுக்கப் பயன்படுத்தினாலும் இப்படிச் சொந்த உபயோகத்திற்காகச் சிறிய அளவு தண்ணீர் எடுத்தாலும் அபராதம் போடுவது போல் வரி போடுகிறார்கள். ஆகவே இதற்கு விலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்கள் வருவாயைக் குறைக்காத முறையில் சொல்ல வேண்டும். இப்போது வருவதைக் கொண்டு செயல்படுவதே கஷ்டமாயிருக்கும்போது வருவாயைக் குறைக்க வழி செய்கிறீர்களே என்று கேட்டார்கள். உண்மைதான். அவர்கள் பார்க்கவேண்டிய முறை அதுதான். வருவாயை நிச்சயமாக கவனித்துத்தான் காரியங்களைச் செய்ய வேண்டும். ஆனால் விவசாயத்திற்கு என்று தண்ணீர் எடுத்துக் கொள்ளும்போது ஒரு பைசாவாது குறைத்து தொழில்களுக்கு சிறிது கூட்டினாலும் பரவாயில்லை. விவசாயம், தொழில் இரண்டிற்கும் நான் மின்சாரத்தைப் பயன்படுத்துகிறேன். விவசாயத்திற்கு வரி விதிப்பதை இன்றுள்ள அளவோடு நிறுத்திக் கொண்டு மேற்கொண்டு கூட்டாமல் பற்றுக்குறைக்கு மற்ற தொழில்களின் பேரில் ¼ பைசா அல்லது ½ பைசா கூட்டினால் சௌகரியமாகயிருக்கும். உண்மையில் தொழில்கள் பற்பல வரிகளினால் நசுக்கப்பட்டுத்தான் இருக்கிறது. இருந்தாலும் தேவை என்ற இடத்தில் விவசாயத்தை நசுக்குவதை விட அதைச் செய்தால் சௌகரியமாகயிருக்கும். விவசாயத்தில் ஒருவன் மூலதனம் போட்டால் ஆண்டுக்கு 10 சதவிகிதம் கூட எதிர்பார்க்க முடியாது. ஆனால் தொழிலில் மாதத்திற்கு 10 சதவிகிதம்—அதற்கு மேலும் எதிர்பார்க்கும் தொழில்கள் இருப்பதால் இதை விட அது சௌகரியம் என்ற முறையில் இதை மாற்றி விவசாயிகளுக்கு தொந்தரவு கொடுக்காமல் பற்றுக்குறையை நிவர்த்தி செய்து கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். வள்ளுவர் கூறியபடி,

"ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை
போகா றகலாக் கடை."

வருகிற வழி குறைந்தாலும் போகிற வழியைக் குறைக்கவேண்டாம். இந்த இலாகாவில் வேண்டாத செலவுகள் பல துறைகளில் போய்க் கொண்டிருக்கின்றன. அந்தச் செலவுகளைக் குறைத்தால் நல்லது. 1967 ஆடிட் அறிக்கையில் கொடுக்கப்பட்டுள்ள கருத்துகளை ஊன்றி கவனித்துப் பார்த்தால் வேண்டாத செலவுகள், நஷ்டங்கள் எவ்வளவு இருக்கின்றன என்பது தெரியும். உதாரணமாக பல லட்சக்கணக்கான ரூபாய் பெறுமான சாதனங்கள் உபயோகப்படுத்தப்படாமல் ஸ்டோர்களில் சாமான்கள் வாங்கி

வைக்கப்பட்டிருக்கின்றன. அது 20 லட்சம் ரூபாய்க்கு மேல் இருக்கிறது. ரூபாய் ஐம்பது லட்சத்திற்கு மேற்பட்ட சாதனங்கள், பல்லாண்டு கால உபயோகத்திற்கு தேவைப்படாத சாதனங்கள் சேர்த்து வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றை ஒரு இடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு மாற்றிக் கொண்டு செல்லும் வகையில் அதற்கு பல ஆயிரம் ரூபாய் செலவு ஆவதாகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே இம்மாதிரி செலவுகளைக் குறைத்தால் உண்மையில் இந்தப் பற்றாக்குறையைச் சரி செய்ய முடியும்.

இந்த இலாகாவில் போடுகிற கணக்குகள் எல்லாம் உன்னதமான கணக்குகள். என் தோட்டத்திற்கு பக்கத்தில் ஒருவர் நாற்பது அடி தூரத்திற்கு மின்சாரக் கனெக்ஷன் கேட்டார். அதற்கு ரூ. 340 கட்டும்படி உத்தரவு வந்திருக்கிறது. இருக்கிற இடத்தில் ஒரு போஸ்ட் போட்டு நாற்பது அடி கம்பி போட்டுக் கொடுக்க ரூ. 340. இது ஒரு புதுமை அல்ல. சாதாரணமாக வேறு தனியாக ஒருவர் செய்தால் இதற்கு 100 ரூபாய் தான் ஆகும். அதற்கு ரூ. 340 கேட்கிறார்கள். இந்தக் கணக்குகளையெல்லாம் குறைப்பதற்கு வழிவகை செய்யவேண்டும்.

இன்னும் குடியானவர்களிடம் மின்சாரக் கடன் கேட்கப்படுகிறது. குடியானவர்களிடம் வாங்குகிற மின்சாரக் கடன்களுக்கு வட்டி 4½ சதவிகிதம் என்று இருக்கிறது, ஆனால் 3 சதவிகிதம் கூட கைக்கு வராது. அதையும் கூட சிரமப்பட்டுத்தான் வாங்க வேண்டும். அதுவும் நேராக கைக்குக் கிடைக்காது. அதற்கு சர்சார்ஜ், இன்கம் டாக்ஸ், சூப்பர் டாக்ஸ் என்றெல்லாம் போட்டு விடுகிறார்கள், அவர்கள் இம்மாதிரிப் பெயர்களைக் கூட கேட்டிருக்க மாட்டார்கள். அந்தக் குடியானவன் அந்தப் பணத்தைக் கட்ட மாதம் ஐந்து ரூபாய் வட்டிக்கு வாங்கியிருப்பான். பம்ப் செட் வேண்டுமென்றால் கடன் கொடுத்தால்தான் கிடைக்கும் என்ற நிலையில் அவனிடம் கசக்கிப் பிழிந்து வாங்கப்படுகிறது. அதுவும் ஸ்டேட் பாங்குக்குச் சென்றுதான் வாங்க வேண்டும். போய் வரச் செலவு ஐந்து ரூபாய் ஆகிவிடுகிறது. ஆகவே, இந்தக் கஷ்டங்களையெல்லாம் நீக்கிக் கொடுத்து அவர்கள் நிம்மதியாக வாழ வழிவகை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

கரும்பாலைகளுக்கும், கிணற்றில் துளை போடவும், கருநடிக்கும் யந்திரம் போன்றவற்றிற்கும் மின்சாரத்தை பயன்படுத்துகிறார்கள். ஆர்.எஸ்.சி. ஆக மாற்றி உபயோகிக்கும்போது இதுவரையில்லாத முறையில் புதிதாக பத்து ரூபாய் விண்ணப்பிக்கும்போதே கட்ட வேண்டுமென்று உத்தரவு இருக்கிறது. பத்து ரூபாய் கட்டி கனெக்ஷன் எடுத்துக் கொண்டாலும் அதற்கென்றுள்ள லைசென்ஸ்தாரிடம் கையெழுத்து வாங்கவேண்டும். அதற்கு அவருக்கு பத்து, இருபது ரூபாய் கொடுக்கவேண்டும். இவற்றையெல்லாம் மாற்றியமைத்து விவசாயிகளுக்கு நல்ல ஊக்கத்தையும், உற்சாகத்தையும் கொடுக்கவேண்டும். இன்றைய நிலையில் காவேரிப் பாசனத்தில் ஆறு லட்சம் ஏக்கர்கள்தான் இருபோக பாசனத்தின்





கீழ் இருக்கிறது. மீதி உள்ள நிலங்களில் 16 லட்சம் ஏக்கர் மின்சாரத்தின் உதவியால் தண்ணீர் பாய்ச்சப்பட்டு நாட்டின் உற்பத்தி பெருகிக் கொண்டிருக்கிறது. இத்துறை மேலும் குடியானவர்களுக்கு உதவியாக இருந்து அவர்கள் நல்வாழ்விற்கும், நாட்டின் நல்வாழ்விற்கும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

**திரு. இல. பலராமன்:** மதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையின் பேரில் பேச எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு இன்று மின் விசையோ பொன்விசையோ என்ற நிலையில் மின்சாரம் இல்லையென்றால் மனித இயக்கமே கிடையாது என்றதொரு நாகரீக உலகில் நாம் திளைத்துக் கொண்டிருக்கிறோம். பொதுவாக நகரப்புற மக்களுக்குத்தான் அந்த உரிமை என்ற நிலை மாறி இன்று கிராம மக்களும் இதை அனுபவிக்கவேண்டும், அவர்களுடைய பொருளாதாரமும் வளரவேண்டும் என்ற பெரு நோக்கோடு கடந்த கால அரசாங்கம் காங்கிரஸ் அரசாங்கம் மின் உற்பத்திக்காக பல திட்டங்களைத் தீட்டி பல கோடிக்கணக்கான ரூபாய் மூலதனம் போட்டு விவசாயமும், பொருளாதாரமும் முன்னேறவேண்டும் என்று நல்லபல திட்டங்களை இட்டுத் தந்தது. அத்திட்டங்கள் இன்று செயல்படும் போது ஊர் எல்லாம் வெளிச்சமும், உள்ளமெல்லாம் பூரிப்புமாக திகழ்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் அதில் செயலாற்றும் தலைவரும், அதிகாரிகளும் நல்லமுறையில் செயலாற்றிக் கொண்டு வருகிறார்கள் என்றுதான் குறிப்பிட வேண்டும். மேலும் பல குறைகள் இருந்தாலும் தற்போதிருக்கும் நிலை மிகவும் உசிதமானது என்பதை நினைவூட்ட விரும்புகிறேன்.

குறிப்பாக வட ஆற்காடு மாவட்டம் இயற்கை வளம், நீர் வளம் இல்லாததொரு மாவட்டம். அங்கு அத்தனை பேர்களும் விவசாயிகளாக இருக்கிறார்கள். விவசாயத்தில் தஞ்சைக்கு அடுத்தபடியாக விளைபொருள் உற்பத்தி செய்யும் மாவட்டம் அது என்றால் அதற்குள்ள மூலதனம் மின்சாரம்தான். கிராமங்களுக்கு மின்சாரம் வழங்கப்படுகிறது. கிணறுகளுக்காக மின்சாரம் வழங்குவதில் பலவற்றில் காலதாமதம் ஆகிறது. அக்காலதாமதத்தைத் தவிர்ப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும். ஒவ்வொரு கட்டத்திலும் விவசாயிகள் அதிகாரிகளை அணுகவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. மனு கொடுக்கும்போதிலிருந்து எஸ்டிமேண்ட் செய்து கம்பத்தை ஏற்றி கம்பி இழுப்பது வரையில் அவர்கள் ஒவ்வொரு நேரத்திலும் தமிழ்நாடு மின்சார போர்ட் ஊழியர்களாக மாறிவிடுகிறார்கள். கம்பத்தை ஏற்றிச் செல்வது கூட அவன் வேலையாக இருக்கிறது. கம்பி எங்கு இருக்கிறது என்று பார்த்து பல மைல்கள் கடந்து சென்று எடுத்து வரவேண்டிய நிலைமை இருக்கிறது. விவசாயத்திற்கா இந்த நிலைமை என்று பார்க்கும் போது பரிதாபமாக இருக்கிறது. தற்போது உணவு நிலைமை நெருக்கடியாக இருக்கக்கூடிய நேரம். இந்த நேரத்தில் விவசாயி உணவுப் பொருள்களை விளைவிக்கிறான் என்றால், நாம் முன்

[திரு. இல. பலராமன்] [1967 நவம்பர் 25

நின்று எங்கு பம்ப் செட் வேண்டுமென்று கேட்டுக் கொடுக்க வேண்டுமே தவிர, அவனைத் தேடி வந்தும் பல இன்னல்களைக் கொடுப்பது நல்லதல்ல என்று ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

மனுக்கள் கொடுத்தாலும் காலதாமதம் ஆகிறது. காலதாமதம் ஒரு சில மாதங்களாக இருந்தால் நியாயமான காரணங்கள் இருக்க முடியும். பல ஆண்டுகள் கூட கடந்து விடுகின்றன. இதை நிவர்த்தித்தால் தஞ்சையை மிஞ்சக்கூடிய அளவுக்கு வட ஆற்காடு மாவட்டம் இருக்கும் என்று இந்த அவைக்கு ஞாபகமூட்ட விரும்புகிறேன்.

தற்போது தொழில்களுக்கு வழங்கும் மின்சாரம் குறைந்த விலைக்கு விற்கப்படுகிறது. ஆனால் விவசாயத்திற்கோ கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. விவசாயிகளுக்கு ஊக்கமூட்டவேண்டுமென்றால், அவர்களுக்குக் குறைந்த விலைக்கு மின்சாரத்தை விநியோகிக்கவேண்டும் என்பது எனது அபிப்பிராயம். இதை அடுத்த வருஷத்திலாவது அமல் நடத்தும் முறையில் இந்த வாரியம் கவனித்து குறைந்த விலையில் விவசாயத்திற்கு மின்சாரம் வழங்க ஒரு வழியை ஏற்படுத்தும் என்று நினைக்கிறேன்.

வீடுகளுக்குக் கொடுக்கும் மின்சாரத்தின் கட்டணத்தை 30 காசுகளிலிருந்து 32 காசுகளாக உயர்த்தியிருப்பது வருத்தத்திற்குரியது. அதையும் குறைக்கவேண்டுமென்று நான் வற்புறுத்திக் கொள்ளுகிறேன். மீட்டர் ரெண்ட் என்று வசூலிக்கிறார்கள். அதை வெகுவாகக் குறைத்தால், அல்லது மீட்டருக்கு உரிய ரூபாய் வந்த பின்னால் மீட்டர் ரெண்ட் இல்லாமல் நீக்கினால் நலமாக இருக்கும் என்று அபிப்பிராயப்படுகிறேன்.

அதோடு இல்லாமல் மூன்று மாத டெபாசிட் என்று மூன்று மாத சார்ஜின் விலையை திடீரென்று கேட்கிறார்கள். விவசாயி தன்னுடைய வாழ்க்கையின் முக்கியமான ஒரு பொருளாக மின்சார மோட்டாரை இயக்கி வருகிறான். விவசாயியின் கவலையைத் தீர்க்கும் பொருளாக அது இருக்கிறது. மூன்று மாத டெபாசிட் கொடுக்கவேண்டும் என்று சொல்லும்போது வேதனைப்படுகிறான். அவன் டெபாசிட் செய்த அமவுண்ட்டுக்குக் கூட தகவல் இல்லாமல் இவ்வளவு ரூபாய் கட்டவேண்டுமென்று சில அறிக்கைகள் வருகின்றன. அந்த அறிக்கைகளைப் பார்க்கும்போது விவசாயி தன் தொழிலிலிருந்து தூர விலகும்படி செய்கிறது. அதோடு கட்டிய கிணறுகளுக்கு மின்சாரம் கொடுப்பதில் பல காலதாமதங்கள் ஏற்படுகின்றன. அதையும் நிவர்த்திக்க மின்சார போர்டார் மிகவும் விரைவான நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இதற்கு வட்டாரவாரியாக அதிகாரப் பற்றில்லாத குழுக்களை நியமித்து விவசாயிகளுக்கு எப்படி அளித்தால் நல்ல முறையாக இருக்கும் என்பதைக் கேட்டுக் கொண்டு செய்யவேண்டும்.



1967 நவம்பர் 25] [திரு. இல. பலராமன்]

வட ஆற்காடு ஜில்லாவிலே உள்ள பாலாறு பேசின் ஏரியாவிலிருந்து விலக்கு அளித்து எல்லாக் கிணறுகளிலும் மின்சார மோட்டார் அமைத்து விவசாயத் தொழிலை அபிவிருத்தி செய்ய வழி வகுத்துத் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நெய்வேலி மின் சக்தியில் 400 மெகவாட் உற்பத்தி ஆவதில் 150 மெகாவாட் தான் உபயோகம் ஆகி, 250 மெகாவாட் உபயோகப்படாமல் போவதைத் தவிர்த்து, இந்த 250 மெகாவாட் சக்தியை விவசாயத்திற்கு கொடுக்க ஒரு திட்டத்தை வகுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

புதிய அரசாங்கமான தமிழக அரசு மைசூர் சர்க்காருடன் இணைந்து ஹொகேனக்கல் போன்ற திட்டங்களை வகுத்து மேலும் கிராமப்புற மக்களுக்கு மின்சாரம் வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பல கிராமங்களில் பல்புகள் இல்லாமல் இருந்தாலும் இருந்ததாகக் கணக்கிட்டு கட்டணம் வாங்குவதைத் தவிர்க்க ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரம் கேட்கும் விவசாயிகள் பரவலாக வட ஆற்காடு மாவட்டத்தில் இருந்தும் அவர்களுக்கு வழங்காமல் இருப்பதைத் தவிர்த்து, வட ஆற்காடு மாவட்டத்திற்கு அதிகமான மின்சாரத்தை வழங்க முன்வரவேண்டும் என்று முதலமைச்சர் அவர்களையும், மின்சாரக் கழகத்தின் தலைவரையும் பணிவோடு கேட்டுக் கொள்கிறேன்.

இந்த முறையில் மின்சாரத்தை அதிகமாக வழங்கினால், வட ஆற்காடு மாவட்ட விவசாயிகளுக்கு ஊக்கம் தந்தால், தஞ்சையில் இயற்கையாக காவிரி பாய்ந்து விளையக்கூடியதை மிஞ்சும் அளவுக்கு வட ஆற்காடு மாவட்டம் விளைவிக்கும் என்று கூறி, எனக்கு இந்த வாய்ப்பு அளித்ததற்காக நன்றி கூறி முடிக்கிறேன். வணக்கம்.

**திரு. எம். சுப்பிரமணிய கவுண்டர் :** தலைவர் அவர்களே, இந்த மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையைப் பற்றி நடக்கும் விவாதத்திலே நானும் கலந்துகொண்டு எனது சில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன்.

தர்மபுரி மாவட்டம் ரொம்பவும் பிற்போக்கான மாவட்டம். அங்கே மின்சார வசதி மிகவும் குறைவாக இருக்கிறது. அங்குள்ள விவசாயிகள் எந்தவிதமான நீர்ப்பாசன வசதியும் இல்லாமல், கிணற்று பாய்ச்சலை நம்பி வாழ்கிறார்கள். முக்கியமாக தர்மபுரி, ஹசூர், ஹொஸூர் ஆகிய மூன்று தாலூக்காக்களிலும் விவசாயிகள் கிணற்றுப் பாய்ச்சலையே நம்பியிருக்கிறார்கள். அவர்களுக்கு மின்சார வசதி ரொம்பவும் குறைவாக இருக்கிறது. மூன்று-நான்கு ஆண்டுகளாக பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கிடைக்காமல் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். நமது தமிழக அரசில் நில

அடமான பாங்குகள் மூலமாகவும், பிளாக் டெவலப்மெண்ட் மூலமாகவும் லட்சக் கணக்கான ரூபாய்களை எங்கள் பகுதிக்கு ஒதுக்கியிருக்கிறார்கள். அப்படி ஒதுக்கியிருந்தும், அந்த விவசாயிகள் பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் கேட்டால், டிரான்ஸ்ஃபார்மர் ஓவர் லோடு இல்லை, எப்படிக் கொடுப்பது என்று சொல்லிவிடுகிறார்கள். சிறு சிறு மின்சாரத் தொழிலாளர்கள் நல்ல முறையிலே வேலை செய்துகொண்டுதான் வருகிறார்கள். ஆனால் பெரிய உத்தியோகஸ்தர்கள் விவசாயிகள் போய் அணுகினால் அவர்களை விரட்டுகிறார்கள். அந்த சாமான் இல்லை, இந்த சாமான் இல்லை, கம்பம் இல்லை, மின்சாரக் கம்பிகள் இல்லை, சரியான முறையில் மெட்டல்கள் இல்லை, நான் என்ன செய்வது என்று விவசாயிகளை விரட்டுகிறார்கள். நமது தமிழக அரசிலே, நமது அமைச்சர்களெல்லாம் உண்மையிலேயே ஒரு படி அரிசித் திட்டத்தை அமல் நடத்தி தமிழகமெங்கும் சீர்தூக்கும் வகையில் செய்துகொண்டு வருகிறார்கள். விவசாயிகள் உண்மையிலேயே முதுகெலும்பு போன்றவர்கள். அந்த விவசாயிகளை ஒவ்வொரு மின்சார இலாகா அலுவலகத்தின் வாயிலும் நின்றுகொண்டு வருக, வருக என்று வரவேற்க வேண்டும். அப்படி வரவேற்று அவர்களுக்கு பம்ப்செட் வேண்டுமா, வேண்டுமா என்று கேட்கக் கூடிய அளவில் மின்சார போர்டு இருக்கவேண்டும்.

அந்த விவசாயிகள் ஏதோ நல்ல உடை இல்லாமல், பெரிய விவசாயிகளாக இருந்தாலும் கூட ஏதோ 4 முழ வேஷ்டியைத்தான் இழுத்துக் கட்டிக் கொண்டு அந்த மின்சார போர்டு அலுவலகத்திற்கு வந்து எங்களுக்கு மின்சாரம் வேண்டுமென்று கேட்டால்—என் தர்மபுரியைப் பொறுத்த வரையிலே அவர்கள்—விரட்டப்படுகிறார்கள். ஒவ்வொரு முறையும் நான் சென்னைக்கு வரும்போதெல்லாம் 10 பேர்கள் என்னுடன் வருகிறார்கள். எங்களுக்குப் பம்பு செட்டு வேண்டுமென்று கேட்டுக் கொண்டு அவர்கள் வருகிறார்கள். எங்கள் மாவட்டத்திற்கு ஒரு மாதத்திற்கு ஒரு தரமாவது மின்சார இலாகா மந்திரி வந்து சுற்றிப் பார்த்து, என்ன ஆனது, ஏன் இவ்வளவு நாள் டிலே ஆனது என்று மின்சார இலாகாவினரை கேட்பாரானால் உண்மையிலேயே எங்கள் ஊர் விவசாயிகள் எல்லாம் பெருமைப்படுவார்கள், பாராட்டுவார்கள். தமிழக அரசாங்கத்தைப் பாராட்டுவார்கள். அந்த அளவிலே மின்சார இலாகாவிலே இருக்கிறவர்கள் ரொம்பவும் பொறுப்பற்ற நிலையிலே இருக்கிறார்கள். தீபாவளி வந்தபொழுது தர்மபுரியிலே மூன்று நாளும் இருட்டுத்தான் இருந்தது. ஏனென்றால் 30 வருடங்களுக்கு முன்னாலே அங்கு வைக்கப்பட்ட டிரான்ஸ்பார்மர்கள் எல்லாம் இன்னும் அப்படியே மாற்றப்படாமல் இருக்கின்றன. எப்பொழுது பார்த்தாலும் தர்மபுரியிலே இருக்கிற வியாபாரிகள் மின்சார போர்டை திட்டிக்கொண்டே தான் இருப்பார்கள். அங்கு மின்சார போர்டை திட்டாதவர்களே கிடையாது. நல்ல நேரத்தில் அவர்கள் இருட்டிலே வியாபாரம் செய்யக்கூடிய நிலையிலே இருக்கிறார்கள். நல்ல நேரங்களிலேதான் சிறிய வியாபாரிகளும் பெரிய வியாபாரிகளும் வியாபாரத் துறையிலே கொஞ்சம் பணம்



சம்பாதிப்பார்கள். ஆனால் தீபாவளி நேரத்திலே தர்மபுரி மாவட்டம் இருண்டு விடுகிறது. நான் அப்படிப்பட்ட ரோடுகளிலே போனால் திட்டாதவர்கள் கிடையாது. அந்த அளவிலே மின்சாரம் தர்மபுரி மாவட்டத்திலே சீர்கெட்டு இருக்கிறது. தர்மபுரியிலே—அதிகமான் நெடுமானஞ்சி ஆண்ட ஒரு நல்ல ஊர், ஔவையார் ஆண்ட ஊர் என்று சொல்லக்கூடிய ஊரிலே—மின்சார வசதி ரொம்பவும் குறைவாக இருக்கிறது. அங்கு மின்சார இலாகா அமைச்சரவர்கள் அடிக்கடி வந்தால் விவசாயிகள் நிச்சயம் பாராட்டுவார்கள். விவசாய அமைச்சர் அவர்களும் ஸ்தல ஸ்தாபன அமைச்சர் அவர்களும் கொஞ்ச நாட்களுக்கு முன் வந்தார்கள். அவர்கள் பெயரைச் சொல்லி சில கிராமவாசிகள் நன்மை அடைந்தார்கள். அதேபோல மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் அடிக்கடி ஒவ்வொரு தாலுகாவிற்கும் வந்து மின்சார வசதி நல்ல முறையிலே அந்தப் பகுதியிலே கிடைப்பதற்கு ஆவன செய்ய வேண்டும். தர்மபுரி மாவட்டம் ரொம்பவும் பிற்போக்கான மாவட்டம். ஏதோ கிருஷ்ணகிரியில் மட்டும் ஒரு டாம் இருக்கிறதே தவிர எந்தவிதமான திட்டமும் தர்மபுரி மாவட்டத்திலே இல்லை. ஆகவே, மின்சார வசதியை அந்த மாவட்டத்திற்கு செய்து கொடுத்து, அவர்களுக்கு பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் செய்து கொடுத்தால் தமிழக அரசாங்கத்தை நல்ல முறையிலே பாராட்டுவார்கள். அவர்கள் உண்மையிலே மகிழ்ச்சியடைவார்கள். ஐந்து ஏக்கர் நிலம் உள்ள விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்கு மின்சார கனெக்ஷன் கொடுக்க ஆவன செய்தால், நல்ல முறையிலே 100 மூட்டை நெல் கிடைக்கக்கூடியவர்களுக்கு 200 மூட்டை நெல் கிடைக்கக்கூடிய நிலைமை ஏற்படும். பெரியவர்கள் 'முதலை கிடைக்கிறது' என்று சொல்வார்கள். அதை ஒத்த முறையிலே விவசாயிகளுக்கு நல்ல உற்சாகத்தைக் கொடுக்கக்கூடிய அளிலே, இந்த தமிழக அரசாங்கம் வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என் தொகுதியிலே பல பகுதிகளிலே ஹரிஜன மக்கள் வாழ்கிறார்கள். பெருவாரியான மக்கள் தர்மபுரி பகுதியிலே வாழ்கிறார்கள். அவர்கள் வாழ்கிற ஒவ்வொரு பகுதியையும் எடுத்துக் கொண்டால் மின்சாரமே கிடையாது. அந்தப் பகுதியைச் சேர்ந்த பல நண்பர்கள் இப்பொழுது வந்திருக்கிறார்கள். "நாங்கள் 2 வருஷம் 3 வருஷங்களுக்கு முன்னாலேயே பணம் கட்டியும் மின்சாரம் கிடைக்கவில்லை" என்று சொல்கிறார்கள். நமது அமைச்சரவர்கள் தயவு கூர்ந்து மின்சார போர்டார் அவர்களுக்கு உத்தரவிட்டு தர்மபுரியிலே ஒவ்வொரு பகுதிக்கும் பம்பு செட்டு கனெக்ஷன் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் நில அடமான பாங்கிலே டைரக்டராக இருக்கிறேன். ஐந்து இலட்சம் ரூபாய் நமது தமிழக அரசாங்கம் விவசாயிகளுக்காக ஒதுக்கியிருக்கிறது. அவ்வளவு பணம் ஒதுக்கியும்கூட விவசாயிகள் அதைப் பயன்படுத்த முடியாத நிலையில் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கடன் வாங்கி பம்பு செட்டு வாங்கியும் கனெக்ஷன் கிடைக்காமல் ரொம்ப கஷ்டப்படுகிறார்கள். அவர்களுக்கு உடனடியாக கனெக்ஷன் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு புது டிரான்ஸ்ஃபார்மர்கள் போட்டும் தர்மபுரி வாழ் விவசாயிகளுக்கும் குடியானவர்களுக்கும், சிறிய வியாபாரிகளுக்கும், பெரிய வியாபாரிகளுக்கும் நைட் நேரங்களிலே, இரண்டு நாள் மூன்றுநாள் நைட் நேரங்களில் இருளாவதைத் தடுக்க நல்ல முறையிலே ஆவன செய்ய வேண்டுமென்று நமது தமிழக அரசாங்கத்தைக் கேட்டுக்கொண்டு இத்துடன் என் சிற்றுரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. எம். சுரேந்திரன் : தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தின் நிதிநிலை பற்றி பேசும்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஜூன் மாதம் 17-ம் தேதி இந்தச் சபையிலே ராஜ்ய நிதி நிலை அறிக்கையை சமர்ப்பித்து அதிலே ஒரு கொள்கையை வலியுறுத்தியிருக்கிறார்கள். அந்தக் கொள்கையை மையமாகக் கொண்டுதான் எல்லாப் பிரச்சினைகளையும் பார்க்க வேண்டுமென்று நான் கருதுகிறேன். அந்தக் கொள்கையிலே மிகப் பிரதானமாக ஒன்று குறிப்பிடப்பட்டு இருக்கிறது. வருமானம் குறைவானவர்களுக்கும் எளியவர்களுக்கும்தான் இந்த அரசு எல்லாவிதமான சலுகைகளையும் அளிக்கும் என்று உறுதியாகக் கூறப்பட்டு இருக்கிறது. ஆனால் இந்த நிதிநிலை அறிக்கை சம்பந்தப்பட்டவரையிலும் இந்த மின்சார வினியோகத்தைப் பற்றிப் பார்க்கும்போது அதிக வசதி உள்ளவர்களுக்குக் குறைவான விலைக்கு மின்சாரம் வினியோகிக்கப்படுவதை நாம் பார்க்கிறோம். இங்கே பேசிய பல உறுப்பினர்கள் இந்த விஷயத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்கள். மேட்டூரிலே உள்ள மெட்ராஸ் அலுமினியம் தொழிற்சாலைக்கு மிகக் குறைவான விலையிலே மின்சாரம் வழங்கப்படுகிறது. கெம்ப்ளாஸ்கர் தொழிற்சாலைக்கு குறைவான விலையிலே மின்சாரம் வழங்கப்படுகிறது. தாரங்கதாரா தொழிற்சாலைக்கும் குறைவான விலையிலே மின்சாரம் வழங்கப்படுகிறது. இந்த தொழிற்சாலைகள் எல்லாம் கோடிக் கணக்கான ரூபாய்களை மூலதனமாகப் போட்டு கோடிக்கணக்கான ரூபாய்கள் லாபம் பெறுகிற நிலையிலே இயங்கிக் கொண்டிருக்கின்றன. ஆகவே அந்த தொழிற்சாலைகளுக்கு அம்மாதிரியான சலுகைகள் அளிப்பதற்கான காரணம் அவைகள் அபிவிருத்தி அடையவேண்டும், இந்த தேசத்திலே தொழிற்சாலைகள் பெருக வேண்டுமென்று காரணம் சொல்லப்படும். ஆனால் அதனுடைய பலன் தொழிற்சாலை அபிவிருத்தி என்பதைவிட அந்தத் துறையிலே மூலதனம் போடுகின்றவர்களுக்கு கொடுக்கின்ற சலுகைதான் என்று எடுத்துக்கொள்ள வேண்டியிருக்கிறது. அதே





நேரத்திலே இன்னொரு பக்கத்திலே நாம் பார்க்கிறோம். இன்றைக்கு உணவு நெருக்கடி இருக்கிற நேரம். உணவைப் பெருக்க வேண்டுமென்று எல்லா இடங்களிலும் எல்லாவிதமான சக்திகளையும் திரட்டி ஒருமைப்படுத்துகின்ற நேரம். இந்த நேரத்திலேகூட விவசாயிகளுக்கு அளிக்கின்ற மின்சாரத்திற்கு வாங்குகிற விலைக்கும் பெரும் தொழிற்சாலைகளுக்கு அளிக்கின்ற மின்சாரத்திற்கு வாங்குகின்ற விலைக்கும் எவ்வளவு பெரிய வித்தியாசம் இருக்கிறது என்பதை இந்த சபை கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அன்றைக்கு முதலமைச்சர் அவர்கள் சொன்ன கருத்துக்கு இது முரணாக இருக்கிறது. அந்தக் கொள்கைக்கு இந்தக் கொள்கை வேறுபட்டு இருக்கின்றது. ஆகவே இந்த வகையில் தீர்மானிக்கிற ஒரு கொள்கையானது எல்லாப் பகுதிகளிலும் எல்லா அமைப்புகளிலும் செயல் பட்டால்தான் அந்தத் தொகை நல்லதாக இருக்குமே தவிர ஒரு அம்சத்திலே மட்டும் ஒரு கொள்கையை வைத்துக்கொண்டு மற்ற அம்சங்களில் மாற்றம் செய்யக்கூடியதானது முரண்பாடானதாகவும் செயலுக்கு விரோதமாகவும் ஆகிவிடும். ஆகவே இந்த அரசு மின்சார வினியோகம் சம்பந்தப்பட்டவரையிலும் சாதாரணமாக இன்றைக்கு இந்த தேசத்திலே, இந்த ராஜ்யத்திலே இருக்கிற மக்களுக்கு இதை மிக எளிய முறையில், மிகக் குறைந்த விலையிலே வினியோகிக்க வேண்டுமென்று முறை ஒன்று இருக்க வேண்டும். அதே நேரத்தில் கோடிக்கணக்கான ரூபாய்களைப் போட்டு தொழிற்சாலைகள் நடத்தி லாபம் சம்பாதிக்கிறவர்கள் அதிகமான விலை கொடுப்பதில் எவ்விதமான தவறும் இல்லை என்று எனக்குத் தோன்றுகிறது. அதுவும் இந்த அரசினுடைய கொள்கைக்கும் பொருத்தமானது. ஆகவே, இந்த விஷயத்தை இந்தச் சபை நினைவில் எடுத்துக்கொள்ள வேண்டும். பிற பகல் 1–0

அடுத்தபடியாக, மின்சார வினியோகம் பொறுத்தவரையில், எல்லாப் பகுதிகளிலும் கிணறுகளிலுள்ள பம்பு செட்டுகளுக்கு மின்சார கனெக்ஷன் சரியாகக் கிடைப்பதில்லை. நான் மேட்டூரிலிருந்து வருகிறேன். மேட்டூரில் மின்சார நிலையம் இருக்கிறது. அங்கே இருக்கிற, பக்கத்தில் இருக்கிற வீடுகளுக்குக்கூட இன்னும் மின்சார விளக்குகள் போடப்படவில்லை. மின்சாரம் உண்டாக்குகிற பகுதியிலேயே, அதைச் சுற்றியுள்ள மக்கள் வாழுகின்ற இடங்களிலேயே இன்னும் மின்சார விளக்குகள் இவ்வளவு வருஷங்கள் ஆகியும் போடப்படவில்லை என்றால், அது இந்த மின்சார இலாகாவிற்கு ஒரு சிறந்த பாராட்டுதலாக இருக்க முடியாது. அதைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு, பிற்போக்கு கிராமங்களுக்கு, மலைப் பகுதிகளுக்குகூட இன்னும் மின்சாரம் வழங்கப்படவில்லை. அதிலும் அரிஜனங்களுக்கு விசேஷமான சலுகைகள் அளிக்கப்படுகின்றன என்று கூறப்படுகிறது. அரிஜனங்கள் வாழ்கின்ற பகுதிகள் இன்றைக்கு இருளாக இருக்கிறது. அங்கு வெளிச்சம் இல்லை. அரிஜனங்களைவிட இன்னும் பிற்போக்கான மக்கள்கூட அந்தப் பகுதிகளில் வாழ்கிறார்கள். மலை ஜனங்கள் வாழ்கிறார்கள். பாலமலைப் பிரதேசம்

என்று ஒரு பிரதேசம் இருக்கிறது. அங்கே மலை ஜனங்கள் வசிக்கிறார்கள். அந்தப் பகுதியிலே இன்னும் மின்சாரம் எட்டிப் பார்க்கவில்லை. எட்டிப் பார்க்க வேண்டும் என்ற எண்ணம் இருப்பதாகவும் தெரியவில்லை. அம் மாதிரி இடங்களுக்கு மின்சாரம் வழங்குவதில் நாம் முதல் இடம் அளிக்க வேண்டும். எந்தெந்த விதத்தில் நாம் மின்சாரம் வழங்குவதில் முதல் இடம் அளிக்க வேண்டும், எந்தப் பகுதிக்கு மின்சாரம் முதலாவதாக அளிக்கப்பட வேண்டும், எங்கே இரண்டாவதாக அளிக்கப்பட வேண்டும், எதற்கு குறைவான விலையில் அளிக்க வேண்டும், எதற்கு அதிகமான விலையில் அளிக்க வேண்டும் என்ற ஒரு குறிக்கோளை மின்சார இலாகா தீர்மானம் செய்து வைத்திருப்பது நல்லது. ஒன்பது லட்சம் கிணறுகள் இருப்பதாகவும், மின்சாரம் அவைகளில் மூன்றிலே ஒரு பங்குக்குத்தான் அளிப்பட்டிருக்கிறது என்றும், இன்னும் மூன்றில் இரண்டு பங்கு அளிக்கப்படாமல் இருக்கிறது என்றும் கூறப்பட்டிருக்கிறது. ஆயிரக்கணக்கான ரூபாய் கடன் வாங்கி கிணறுகளை வெட்டி, மின்சாரம் வழங்குவதற்கு விண்ணப்பங்கள் போடப்பட்டிருந்தும், 3 வருஷங்கள், 4 வருஷங்கள் ஆகியும் மின்சாரம் வழங்கப்படவில்லை என்ற புகார்கள் ஏராளமாக வந்துகொண்டிருக்கின்றன. எந்தெந்த மாதிரியான கொள்கை அடிப்படையில் மோட்டாருக்கு மின்சாரம் அளிக்கப்படுகிறது என்பது நமக்குத் தெரியவில்லை. இன்றைக்கு கிணறு வெட்டி, மோட்டார் வைத்து, நாளைக்கே மின்சார தொடர்பு பெறக்கூடியவர்களும் இருக்கிறார்கள். விண்ணப்பம் போட்டு விட்டு, வருடக்கணக்கு ஆகியும், மின்சார இணைப்பு கிடைக்காமல் இருப்பவர்களும் இருக்கிறார்கள். அதற்குக் காரணம் கீழே இருப்பவர்கள், சூபர்வைசர்கள் போன்றவர்கள் வேறு விதமான முறைகளை கையாளுகிறார்கள் என்று கேள்விப்படுகிறோம். அம்மாதிரி புகார்கள் நிறைய இருக்கின்றன. விவசாயி என்று சொன்னாலே, படிக்காதவர்கள், நாகரிகத்தில் வளராதவர்கள், சாதாரண மக்கள், அவர்களுக்கு ஏன் இவ்வளவு தூரம் மதிப்பு கொடுக்க வேண்டும், அவர்களிடத்திலிருந்து எவ்வளவு தூரம் கிடைக்குமோ அவ்வளவு தூரம் பெற்றுக்கொள்ளலாம் என்ற எண்ணம் கீழ்மட்டத்தில் இருக்கிற மின் இலாகா ஊழியர்களிடையே வளர்ந்திருக்கிறது. ஒரு மோட்டாருக்கு மின்சார இணைப்புத் தருவதற்கு ரூ. 300, 400 தரவேண்டும் என்று கேட்பதாக புகார்கள் வருகின்றன. அது உண்மையாகவும் இருக்கலாம், உண்மையாக இல்லாமலும் இருக்கலாம். ஆனால் நமக்குத் தெரிந்தவரை, எல்லா இலாக்காக்களிலும் பழைய தன்மை தொடர்ந்து நீடித்துக் கொண்டு வருகிறது. ஊழல்களும், லஞ்சமும் மலிந்து கொண்டிருக்கின்றன. இந்த நிலையை மாற்றி அமைப்பதற்கு தீவிர முயற்சிகள் எடுத்துக்கொள்ள வேண்டும். சாதாரண முயற்சிகள் எடுத்துக்கொண்டால், இந்த நிலையை மாற்றிவிட முடியாது. லஞ்சம் கொடுப்பவர்களும் சரி, வாங்குகிறவர்களும் சரி, அது





வெளிப்பட முடியாத நிலையில் செயல்படுகிறார்கள். எனவே விசேஷ முயற்சிகள் எடுத்துக்கொண்டால்தான் இந்தக் காரியத்தைச் செய்ய முடியுமே தவிர, சாதாரண முயற்சிகளின் மூலம் இந்த நிலைமையை மாற்றிவிட முடியாது. அந்த நிலை மாற வேண்டும் என்று இந்தச் சபை விரும்புகிறது, அமைச்சர்கள் விரும்புகிறார்கள், மேல் மட்டத்தில் இருக்கக்கூடியவர்கள் விரும்புகிறார்கள். அந்த விருப்பத்தை நாம் எப்படி நிறைவேற்றி வைப்பது என்பது தான் கேள்வி. இதைப்பற்றி நாம் சரியான முறையில் சிந்திக்க வேண்டும். அந்த மாதிரி செய்வது சரிதானா என்று சிந்திக்கக் கூடிய நிலையில் மக்கள் வளரவில்லை. மின்சாரம் தக்க நேரத்தில் வழங்கப்படவில்லை என்றால், அவர்களுக்கு நூற்றுக்கணக்கான ரூபாய்கள் நஷ்டம் ஏற்பட்டுவிடும், நிர்ப்பந்தமாக அந்தக் காரியத்தை அவர்கள் செய்யவேண்டிய நிலையில் இருக்கிறார்கள். படிக்காதவர்களாக இருக்கிறார்கள், நமக்கு தண்ணீர் கிடைக்கும் என்று ஆசை ஏற்படுகிறது, எப்படியாவது மின்சாரத்தைப் பெற வேண்டும் என்ற நிலையில், அவர்கள் அப்படிச் செய்வது தவறா, தவறு இல்லையா என்று ஆராய்ந்து செய்வதற்கு ஏற்ற அறிவு இன்னும் அவர்களிடையே வளரவில்லை. ஆகவே, மின்சார இலாகாவில் இருக்கிற இந்த நிலைமையை மாற்றுவதற்கு முயற்சி செய்ய வேண்டும்.

மின்சார இலாகாவில் மேட்டூர் டன்னலில் வேலை செய்தவர்களில் வி.எல்.ஆர்., என்.எம்.ஆர்., ஓ.எஸ்.எஸ்., என்று பல பிரிவு தொழிலாளிகள் வேலை செய்தார்கள். வேலை முடிந்தவுடன் அவர்களெல்லாம் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு மீண்டும் அந்த இலாகாவில் வேலை கொடுக்க வேண்டும் என்ற நியதி இருக்கிறது. இன்றைக்குக்கூட தொழிற் தகராறு சட்டப்படி 15 பேர்கள் புகார் செய்திருக்கிறார்கள். என்.எம்.ஆர். தொழிலாளர்கள் வேலையிலிருந்து நீக்கப்பட்டால், மீண்டும் வேலை இருந்தால் அவர்களுக்கு முதன்மையான சந்தர்ப்பம் அளிக்க வேண்டும் என்று சட்டத்தில் இடம் இருக்கிறது. அப்படி இருந்தும்கூட, இந்தத் தொழிலாளர்களை விட்டு விட்டு, என்ஜினியர்கள் வீடுகளில் வேலை செய்து கொண்டிருப்பவர்களுக்கு வேலை கொடுக்கப்படுகிறது என்ற புகார்களும், தகராறும் இருந்து கொண்டிருக்கின்றன. அந்தத் தொழிலாளர்களை வேலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டும் என்று போர்டு சேர்மனிடத்தில் நான் கூறியிருக்கிறேன். ஆகவே, அந்தத் தொழிலாளர்களை மீண்டும் வேலைக்கு எடுத்துக்கொள்ளாமல் இருப்பது நியாயமல்ல. அங்கே ஒரு வொர்க்ஷாப் இருக்கிறது. அந்த வொர்க் ஷாப்பில் . . . . **(மணி அடிக்கப்பட்டது)**

**மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. பெ. சௌந்தரபாண்டியன்) :** சபை இத்துடன் கலைந்து, பிற்பகல் 3-30 மணி அளவில் கூடும். பிற்பகல் 1-35

பிறகு சபை பிற்பகல் 3-30 மணி வரையில் ஒத்திவைக்கப் பட்டது.

(பிற்பகல் 3-30 மணி)

(மாண்புமிகு துணைப் பேரவைத் தலைவர் தலைமை)

* திரு. ந. தருமலிங்கம் : சட்டப் பேரவையின் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் 1967-68-ம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையின்மீது பேசுகின்ற வாய்ப்பு அளித்தமைக்கு என் நன்றியைத் தெரிவிக்கிறேன். நேற்றையதினம், நம்முடைய அமைச்சரவர்கள், இந்த நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்து, உரையாற்றினார்கள். தமிழகத்தைப் பொருத்தவரையில், மின்சார இணைப்பு தமிழ்நாடு எங்கிலும், சிற்றூர்களுக்கும், கொடுக்கப் பட்டிருப்பதாக அந்த அறிக்கையில் காணப்படுகிறது. அது மகிழத்தக்க ஒன்றுதான். இருந்தாலும்கூட, இன்னமும் தமிழ் நாட்டில் பல்வேறு இடங்களில், சிற்றூர்களுக்கு மின்சாரம் செல்லவில்லை என்பதனை இந்த மாமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன். அது மட்டுமல்ல. இந்த ஆண்டு, நிதி நிலை அறிக்கையில், தஞ்சை மாவட்டத்தில் தனியாருக்குச் சொந்தமான மூன்று நிறுவனங்களை, அரசாங்கமே எடுத்துக் கொள்ளும் என்று அறிக்கை விட்டதன் காரணத்தினாலோ என்னவோ, அந்த நிறுவனங்களுடைய வேலைகள் தாமதப்பட்டு, அதிகமான அளவில் அவர்கள், 'நமக்கென்ன, அரசாங்கம்தான் எடுக்கப் போகிறதே' என்று, பழுதுபட்ட மின் கருவிகளையும், லைன்களையும் போட்டு போதுமான அளவிற்கு வெளிச்சம் இல்லாமலும், அதனால் ஆபத்துக்கள் அதிகமாகவும் ஏற்பட்டிருப்பதை, இந்த மன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு வரவிரும்புகிறேன். அது மட்டுமல்லாமல், இன்னொன்றையும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். திருத்துறைப்பூண்டி தாலுகா, ராயநல்லூர் என்னுமிடத்தில் வடிகால் திட்டத்திற்கென மின் இணைப்புக் கொடுக்கப்பபடாததற்குக் காரணமாக, நிதி நிலை அறிக்கையைக் காட்டி அதன்படி, விரைவில் அரசாங்கமே எடுக்கப் போகிறது என்று சொல்லிவிட்டு, இணைப்பு தரப்படவில்லை என்பதை அரசாங்கத்தின் கவனத்திற்கு அந்தப் பகுதி மக்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். இதிலிருந்து என்ன தெரிகிறது ? நாம் எடுக்கப் போவதாக அறிவிப்புக் கொடுத்த பின்பு, அதிக காலதாமதம் செய்வது சரியல்ல. உடனடியாக எடுக்க ஆவன செய்ய வேண்டும் என்று சர்க்காரைக் கேட்டுக்கொள்ளுகிறேன். இந்த ஆண்டு அறிக்கையில், அமைச்சரவர்கள், ஒரு அறிவிப்புக் கொடுத்தார்கள், இந்தக் கோடையில் மின்சார வெட்டு கிடையாது என்று. அது மகிழ்ச்சிக்கு உரிய ஒன்றாகும். ஒவ்வொரு கோடையிலும், மின் வெட்டு ஏற்படுவதால், உற்பத்திக் குறைவு ஏற்படுவதோடு மட்டுமல்லாமல், தொழிலாளர்கள் வேலையிழந்து தவிக்கும் நிலைமைகளும் ஏற்படுகின்றன. இந்த ஆண்டு வெட்டு இல்லை என்பதானது மிக்க மகிழ்ச்சிக்கு உரியதாகும்.

இன்றைக்கு நம் நாட்டில் 27,000 கிராமங்களுக்கும், சிற்றூர்களுக்கும் மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அது மிகவும் போற்றுதற்குரியது. என்றாலும், இன்னும் பல கிராமங்களுக்கு



மின்சாரம் வரவில்லை. அங்கெல்லாம் வர விரைவில் இந்தக் குழு பணிபுரிய வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். சேரிகளுக்கு ஆதிக் குடிகள் வாழும் பக்கங்களில் மின் இணைப்புக் கொடுப்பதில் காலதாமதத்திற்கு இடம் இருக்கிறது. 27,000 கிராமங்களுக்கு இணைப்புக் கொடுத்து விட்டோம் என்று சொல்லும்போது, இந்த நிலைமையையும் பார்த்தால் மிக்க வேதனையாக இருக்கிறது. இன்னும் சில இடங்களில் வேறு வேறு சிரமங்கள் இருக்கின்றன. ஒரு கிராமம் மூன்று மைல் சுற்றளவு கொண்டது என்றால், இங்கொன்றும், அங்கொன்றும் கம்பங்கள் நட்டிருக்கும்; முக்கியமான வீதிகளில் மட்டும், தெரு மூலைகளில் மட்டும் கம்பங்கள் இருக்கும். கிராமங்களுக்கு மின் இணைப்பைக் கொடுத்தோம் என்பது மகிழ்ச்சி என்றாலும், கிராமத்தின் பல இடங்களிலும் வெளிச்சம் இல்லாமலே என்றாலும், கிராமத்தின் பல இடங்களிலும் வெளிச்சம் இல்லாமலேயே இருக்கிறது. 27,000 கிராமங்கள் என்று சொல்லும்போது மகிழ்ச்சி என்றாலும், கிராமங்களில் அது இன்னமும் பூர்த்தியாகவில்லை என்பதையும் கவனிக்க வேண்டும். அரிஜனச் சேரிகளில் கூட பூர்த்தியாகவில்லை. அந்த அளவில் ஊக்கம் குறைந்திருக்கிறது. எங்கள் தஞ்சை மாவட்டத்தைப் பொறுத்தவரையில், வினியோகம் சரிவர நடைபெறவில்லை.

அனல் மின்சார நிலையம் ஒன்றை தூத்துக்குடியில் அமைக்க வேண்டும், வேறு பல இடங்களில் அமைக்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். நான் ஒரு அபிப்பிராயம் சொல்ல விரும்புகிறேன். தஞ்சை மாவட்டத்தில், தென் கிழக்குக் கோடியில், பாயிண்ட் கலிமீர், கோடிக்கரை பகுதியிலோ அல்லது நாகைப் பகுதியிலோ அப்படி ஒரு நிலையத்தை அமைக்கச் சாத்தியக் கூறுகள் இருப்பதாக வல்லுநர்கள் அறிவித்திருக்கிறார்கள். வேதாரண்யத்திலோ அல்லது நாகப்பட்டினத்திலோ அமைத்தால், நம் குறைபாடுகளை வெகுவாகச் சமாளிக்க முடியும்.

தஞ்சை மாவட்டத்தில் வடிகால் செம்மையாக இல்லை. வெட்டிவிடும் தண்ணீர் வெளியே போக வழியில்லை. மின்சாரத்தின் மூலம் தான் வழிகாண வேண்டும். ஆகவே, அதற்கான அதிகப்படியான மின்சாரத்தை அந்தப்பகுதிக்குக் கொடுக்க வேண்டும்.

பழுதான இயந்திரங்களை வைத்துக் கொண்டு இருப்பதால் ஆபத்துக்கள் ஏற்படுகின்றன. அண்மையில் தஞ்சைப் பக்கத்தில் மின்சாரக் கம்பத்தில் ஏற்பட்ட விபத்துக் காரணமாக உயிர்ச் சேதமே ஏற்பட்டது என்கிற தகவல் எல்லோருக்கும் தெரியும். ஆகவே அங்கே இருக்கும் நிலைமைகளைச் செம்மைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு என் உரையை முடிக்கிறேன்.

* திரு. சி. கோவிந்தராசன் : துணைத் தலைவர் அவர்களே, இந்த மின்சாரக் கழக நிதி நிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன். பொதுவாக, தொழில் துறையாக இருந்தாலும், விவசாயத் துறையாக இருந்தாலும், மின்சாரம் மிக மிக இன்றியமையாதது என்பதை எல்லோரும் உணர்வார்கள்.

[திரு. சி. கோவிந்தராசன்] [1967 நவம்பர் 25

குறிப்பாக நீர்ப்பாசன வசதி இல்லாத இடங்களில், மின்சாரத்தையே நம்பி வாழ்கிறார்கள். போர் வெல்களையும், லிப்ட் இர்ரிகேஷனையும் பிரதானமாக நம்பியுள்ள பல இடங்களில் இந்த மின்சார வசதிகள் கிடைப்பது அரிதாக இருக்கிறது. மின்சாரத்தை மேலும் மேலும் விஸ்தரிக்க வேண்டும் என்றால், அதற்கு வேண்டிய போஸ்டுகள், காப்பர் வொயர்கள் இவையெல்லாம் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது. இருப்பினும் முக்கியமாகக் கொடுக்கப்படவேண்டிய இடங்களுக்கு பிராதானம் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதே சமயத்தில், விவசாயத்திற்கு யூனிட்டுக்கு 8¼ பைசா என்றிருப்பதைக் குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன். அதனால் ஏற்படக் கூடிய ரெவின்யு நஷ்டத்தை ஈடுசெய்ய, ஹைச்.டி.பவர் உபயோகிக்கும் தொழில் அகங்களுக்கு அதிகமாக வரி விதிக்கலாம். அப்படிப் போடுவதால் தொழில்கள் ஒன்றும் பாதிக்கப்பட மாட்டா. ஏனென்றால், கடந்த 10 ஆண்டு காலமாக சாதாரண டொமஸ்டிக் கன்ஸ்யூமர்களுக்கும், அக்ரிகல்சரிஸ்டுகளுக்கும் தான் அதிகமாக வரிவிதிக்கப்பட்டிருக்கிறது. கிட்டத்தட்ட 50 சத விகிதம் உயர்த்தப்பட்டிருக்கிறது. அதே சமயத்தில், தொழில் அகங்களுக்கு 30 சத விகிதம்தான் அதிகம். ஆகவே, எப்படிப் பார்த்தாலும், இந்த ரேட்டு குறைப்பால் ஏற்படும் இழப்பை அவர்களால் கொடுக்க முடியும். ஏராளமாக லாபம் பெறுகிறார்கள். ஆகவே, அவர்களிடமிருந்து வாங்கி இதைச் சரிக்கட்டிவிடலாம். சரிக்கட்டும் அளவிற்கு கட்டணத்தை உயர்த்திவிடலாம்.

இன்னொன்று. பல இடங்களில் லைனில் வோல்ட் குறைவாக இருக்கிறது. அதற்குக் காரணம் லைன் லாஸ் ஆகும். இதனால் சுமார் 10 சதவீதம் சாதாரணமாகக் குறையலாம் என்று சொல்லப்படுகிறது. சிலவிடங்களில் 17½ சதவீதம், 20 சதவீதம் வரையில் வோல்ட் குறைகிறதென்றால், அப்படிப்பட்ட இடங்களில் இருக்கக் கூடிய பெரிய தொழிலதிபர்கள், நிலச்சுவான்தார்கள், தங்களுடைய மீட்டருக்குச் சம்பந்தப்படாமல் பக்கத்தில் இருக்கக்கூடிய கனெக்ஷனை வேறுவிதமாகத் திசை திருப்பி விடுகிறார்கள். அப்படிப்பட்ட நிலைமையினால் ஏராளமான நஷ்டம் ஏற்படுகிறது. இதைத் தடுப்பதற்கு என்னுடைய ஆலோசனை என்னவென்றால், டிரான்ஸ்பார்மரில் மீட்டரைப் பொருத்திவிட்டால், இதனைத் தடுக்க முடியும். இதற்காக பிரத்தியேகமாக செக்கிங் இன்ஸ்பெக்டர்களைப் போட்டும் தடுக்க முடியும். இதனால் இப்படிப்பட்ட பெருச்சாளிகள், இடையில் இழுத்துக்கொண்டு போவதைத் தடுக்க முடியும். ஆகவே இதற்கான ஏற்பாடுகளை உடனடியாகச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரத்தை அபிவிருத்தி செய்வதில் தொழிலாளர்களுடைய நலம் எவ்வளவு முக்கியமானது என்பதை யாருமே குறைத்து மதிப்பிட முடியாது. மாநில அரசு இதை நன்கு உணர்ந்திருக்கிறது. மத்திய அரசும் உணருகிறது. நம் மாநில அரசின்



1967 நவம்பர் 25] [திரு. சி. கோவிந்தராசன்]

குந்தா பிராஜெக்டை ஒரு தொழிலாளியைக் கொண்டே துவக்கி வைக்கும் விழா ஏற்பாடு செய்யப்பட்டதை நான் அறிவேன். அப்படிப்பட்ட தொழிலாளர்களுடைய பிரச்சினைகள் நன்கு கவனிக்கப்படுகின்றனவா என்றால் அது திருப்திகரமாக இல்லையென்றே கூறவேண்டும். பல உறுப்பினர்கள் பொதுத் துறையில் தொழில் உறவு சுமுகமாக இல்லையென்பதை எடுத்துக் காட்டினார்கள். பொதுத் துறையில் நடைபெறக்கூடிய ஒரு ஸ்தாபனத்தில் தொழிலாளர்களோடு சுமுக உறவு வைத்திருக்க வேண்டியது மிக மிக அவசியம். அதிர்ஷ்டவசமாக இந்த ஸ்தாபனத்தில் போட்டி சங்கங்கள் இல்லை. இத் துறையில் தமிழ் நாடு மின்சார தொழிலாளர் சம்மேளனம் என்ற ஒரு சம்மேளனம் இருக்கிறது. வேறு போட்டிச் சங்கங்கள் இல்லை—இந்தச் சம்மேளனத்தை ஆரம்பக் காலத்திலிருந்தே அங்கீகரிக்க வேண்டுமென்றும், பல்வேறு பிரச்னைகளையும் கலந்துபேச வேண்டும் என்றும் கோரிக்கை எழுப்பப்பட்டு வந்திருக்கிறது. இதை நல்ல முறையில் தீர்த்து வைப்பதற்குப் பதிலாக தனிப்பட்ட துறையிலும் இல்லாத அளவுக்கு இங்கே பழிவாங்குதல் நடைபெற்றுக்கொண்டு வருகிறது. நான் ஒரு பட்டியலைப் படிக்கிறேன். சங்கங்களில் இருக்கக்கூடிய பொறுப்புள்ளவர்கள் எவ்வாறு பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கவனியுங்கள்.

திரு. எஸ். ஆர். நீலகண்டன், ஜெனரல் செக்ரெட்டரி, எம்பளாயிஸ் யூனியன், மதரால்.

சி. ஏ. கணபதி, ஜெனரல் செக்ரெட்டரி, வேலூர் எலெக்ட்ரிசிடி ஸிஸ்டம்.

பி. சி. வேலாயுதன், பிரசிடென்ட், திருநெல்வேலி ஒர்க்கர்ஸ் யூனியன்.

எல். அனந்தராமன், ஜெனரல் செக்ரெட்டரி, மதுரை ஒர்க்கர்ஸ் யூனியன்.

கே. ராமசாமி, வைஸ் பிரசிடெண்ட், திருநெல்வேலி எம்ப்ளாயிஸ் யூனியன்.

எம். மீனாட்சிசுந்தரம், பிரசிடெண்ட், மதுரை ஒர்க்கர்ஸ் யூனியன்.

எம். ஆர். எஸ். மணி, செங்கல்பட்டு ஸிஸ்டம் ஒர்க்கர்ஸ் யூனியன்.

டி. ஜானகிராமன், ஜெனரல் செக்ரெட்டரி, மதராஸ் எம்ப்ளாயிஸ் யூனியன்.

இப்படி தொழிலாளர்களாகவே பணியாற்றுபவர்கள், தொழிற்சங்க நிறுவனங்களில் வரும்போது அவர்கள் பல்வேறு காரணங்களுக்காகப்பழி வாங்கப்படுகிறார்கள். தோழர் நீலகண்டன் என்பவரைப் பழி வாங்கியது நியாயம் அல்லவென்ற ஹைகோர்ட் தீர்ப்புக்

Y211, 31 'N67



[திரு. சி. கோவிந்தராசன்] [1967 நவம்பர் 25

கூறிய பிறகும், மின்சாரக் கழகம் அத்தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்திருக்கிறது. இந்த அப்பீலை வாபஸ் வாங்க வேண்டுமென்று நான் தொழிலாளர்கள் சார்பில் கேட்டுக்கொள்கிறேன். தொழிலாளிக்கு அநீதி வழங்கப்பட்டிருக்கிறது என்று ஹைகோர்ட் சொல்லியும்கூட, மின்சாரக் கழகம் மீண்டும் அப்பீல் செய்வது நியாயமாகாது, பொருத்தமாகாது. அந்த அப்பீலை வாபஸ் வாங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே மாதிரி அந்தத் தொழிலாளர்களுக்கு கன்சல்டேட்டிவ் கவுன்சிலில் பிரதிநிதித்துவம் கொடுக்க வேண்டும். எலெக்ட்ரிசிடி கட்டணத்தை உயர்த்தும்போது கன்சல்டேட்டிவ் கவுன்சிலைக் கலந்தாலோசிக்க வேண்டும் என்று எலெக்ட்ரிசிடி சப்ளை ஆக்ட் 9-வது விதியில் கூறப்பட்டிருக்கிறது. இன்றைக்கு அந்தக் கமிட்டி உருப்படியாக இயங்குகிறதா என்றால் அதுபற்றி ஒன்றுமே தெரியவில்லை. புதிய கவுன்சிலையும் நியமிக்கவில்லை. மேற்படி கவுன்சிலின் சம்மதம் பெறாமலேயே 2 பைசா கட்டணம் உயர்த்தப்பட்டிருக்கிறது. சொல்லப்போனால், இப்படிச் செய்தது சட்ட விரோதம் என்றுகூடச் சொல்லலாம். பொது மக்களுடைய கட்டணத்தைக் குறைப்பதற்குப் பதிலாக, அதிகப்படுத்துகிறார்கள். தொழிலாளர்களுடைய நிலைமை என்று வரும்போது தொழிலாளர்களைப் பழிவாங்குகிறார்கள். ஒருபுறம் தொழிலாளர்களை என்.எம்.ஆர். முறையில்—தினக் கூலிகளாக வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தனிப்பட்ட கம்பெனிகளிலும் கூட—அதாவது பிரைவேட் கம்பெனிகளிலும்கூட வேலை செய்யும் தொழிலாளி ஆறு மாதங்கள் கடந்த பிறகு நிரந்தரமாக்கப்பட வேண்டுமென்று நாம் சொல்லுகிறோம். ஆனால் பொதுத் துறையான இந்தக் கழகத்தில் பல ஆண்டுகள் வேலை செய்தபோதிலும்கூட தொழிலாளர்கள் நிரந்தரமாக்கப்படவில்லை. "மின்சாரத் தொழிலாளர்கள் வேஜ் போர்டு" ஒன்று இருக்கிறது. பல தொழிலகங்களில் இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டும் என்று நாம் வற்புறுத்தி வந்திருக்கிறோம். இடைக்கால நிவாரணம் கொடுக்கப்படாத காரணத்தினால் வேலை நிறுத்தங்களும் நடைபெறுகின்றன. நமது மாநிலத்தில் என்ஜினியரிங் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் ஏற்படவே, இடைக்கால நிவாரணம் கொடுக்க வேண்டுமென்று எல்லா முதலாளிகளுக்கும் ஒரு சுற்றறிக்கை புதிய அரசினால் அனுப்பப்பட்டது. ஆனால் மாநில அரசாங்கத்தின் கீழ் இருக்கக்கூடிய மின்சார போர்டு தன்னுடைய சிப்பந்திகளுக்கு ஒரு இடைக்கால நிவாரணம் கொடுக்காமல் இருப்பது வியக்கத்தக்கதாகும். இதை உடனடியாகச் செய்ய வேண்டும். மற்றும் ஒன்று, தொழிலாளர்களுடைய பிரச்சினைகளை மறுப்பதற்காக காங்கிரஸ் அரசாங்கம் ஒரு ரிட் மனுவை ஹைகோர்ட்டில் தாக்கல் செய்திருந்தது. நம்முடைய புதிய அரசு இதை வாபஸ் வாங்கிக்கொண்டது வரவேற்கத்தக்கது. தொழிலாளர்கள்பால் இந்த அரசு நம்பிக்கை வைத்திருக்கிறது என்பதையே இது எடுத்துக்காட்டுகிறது. இப்படி ஒரு நிலைமை ஏற்பட்டிருந்தும்கூட, ஆறு மாத காலம் ஆகியும்கூட, அந்தப்



N67.6-2

1967 நவம்பர் 25] [திரு. சி. கோவிந்தராசன்]

பேச்சு வார்த்தை எந்த நிலையில் இருக்கிறது என்பது பற்றி இன்னும் ஒன்றும் தெரியவில்லை. அனாவசியமாக காலம் கடத்தப்படுகிறது. மின்சாரத் தொழிலாளர்கள்தான் இந்த சம்பந்தத்தில் பிரதான பாத்திரம் வகிப்பவர்கள். சட்டபூர்வமாக அவர்களுடைய உரிமைகளை அவர்கள் பெற அரசாங்கம் ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இத்துடன் என்னுடைய உரையை முடித்துக் கொள்ளுகிறேன்.

64979

* திரு. எஸ். முருகையன் : சட்டமன்றத் துணைத் தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தின் முன் வைத்திருக்கும் மின்சாரக் கழகத்தினுடைய நிதிநிலை அறிக்கை மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

நேற்றிலிருந்து இந்த மன்றத்திலே மின்சாரக் கழகத்தின் நிதி நிலை அறிக்கைபற்றி விவாதம் நடந்துகொண்டிருக்கிறது. அந்த வாதத்தினுடைய தன்மையைப் பார்க்கப்போனால், மின்சாரமே கிடைக்காதது போலவும், மின்சாரத்திற்கு தவம் செய்ய வேண்டுமென்பது போலவும் ஒருசிலர் பேசுவதைப் பார்த்தேன். இந்திய உபகண்டத்திலேயே மிக அதிகமான அளவில், 52 சதவீத அளவில் மின்சார இணைப்புகள் பெற்றிருப்பது தமிழகமே. அதிலே ஏறக்குறைய 30 சதவீதத்தை என்னுடைய மாவட்டமான வட ஆர்க்காடு மாவட்டம் பெற்றிருப்பதில் நான் மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்தந்தத் தொகுதியிலுள்ள சட்ட மன்ற உறுப்பினர்கள் மின்சார இணைப்புகள் பெறுவதின் மீது கொஞ்சம் தனிக் கவனம் செலுத்திக் கொண்டு வந்தால் நிச்சயம் எல்லா பகுதிகளுக்கும் உடனடியாக மின்சாரம் கிடைக்க வசதியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன். நேற்றைய தினம் இருந்து நானும் பார்த்துக்கொண்டிருக்கிறேன். இந்த மன்றத்தில் பேசியவர்களில் சிலர், தெருவிளக்கு கிடையாது, விவசாயத்திற்கு கனெக்‌ஷன் கிடைப்பது கிடையாது, மின்சாரமே இல்லை என்பதுபோலப் பேசினார்கள். நிச்சயமாக நான் சட்ட மன்ற உறுப்பினர்களுக்குச் சொல்லிக்கொள்வேன். எந்த எந்த முறையில் மின்சாரக் கழகத்தோடு தொடர்பு கொண்டு பணியாற்ற வேண்டுமோ அந்த அந்த முறையில் சட்ட மன்ற உறுப்பினர்கள் செயல்பட்டால் இந்தச் சட்ட மன்றத்தில் வந்து இப்படி புகார் செய்வதற்கே இடமிருக்காது. குறிப்பாக என்னுடைய தொகுதியை எடுத்துக்கொண்டால் 183 கிராமங்கள் இருக்கின்றன. 1962-ஆம் ஆண்டு நான் இந்தச் சட்டமன்றத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு வந்தபோது 70 கிராமங்கள் மின்சார வினியோகத்தை... மின்சார விநியோகத்தைப் பெற்றிருந்தன. பாக்கி நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களுக்கு மின்சாரம் வராமல் இருந்தது. சென்ற ஐந்தாண்டுக் காலத்திலும், இந்த ஒன்பது மாத காலத்திலும் நான் மின்சார கழகத்தோடு தொடர்பு கொண்டு செய்ய வேண்டிய வேலைகளைச் செய்ததன் காரணமாக இரண்டு கிராமங்களைத் தவிர மற்ற 181 கிராமங்களும் இன்றைய்தினம் மின்சார வசதியைப் பெற்றிருக்கிறது. அந்த இரண்டு கிராமங்களுக்கும் கூட என் வரிவில்

என்று கேட்கலாம். அந்த கிராமத்தில் உள்ளவர்கள் மின்சாரம் எடுத்துக்கொள்ள தங்களுடைய பொருளாதார நிலைமையை உத்தேசித்துத் தயங்குகிறார்களே தவிர மின்சாரக் கழகம் மின் விநியோகம் கொடுக்கவில்லை என்று சொல்ல முடியாது. என்னுடைய தொகுதி மட்டும் அல்ல. வடாற்காடு மாவட்டத்தை எடுத்துக் கொண்டால் பத்து கிராமங்கள், எட்டு கிராமங்களுக்கு மின்சாரம் வராமல் இருக்கலாமே தவிர இன்றையதினம் அநேகமாக எல்லா கிராமங்களும் மின்சார வசதியைப் பெற்றிருக்கின்றன. இதற்குக் காரணம் இன்றையதினம் மின்சாரக் கழகமானது தலை சிறந்த ஒரு நிர்வாகியின் தலைமையில் செயல்பட்டுக்கொண்டு வருகிறது. அதன் காரணமாகத்தான் தமிழகத்தைப் பொறுத்தவரையில் 52 சதவீதம் மின்சார வசதி பெற்றிருக்கிறோம். இது இந்திய உபகண்டத்திலேயே நாம் தலைசிறந்து நிற்பதற்குக் காரணமாக இருக்கிறது. இதற்குக் காரணம் ஒரு சிறந்த நிர்வாகியின் கீழ் இந்த மின்சாரக் கழகம் செயல்பட்டு வருகிறது என்பது தான். அதற்காக நம்முடைய பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்ள வேண்டுமே தவிர குறைசொல்லிப் பயன் இல்லை. குறைகளே இல்லை என்று சொல்லாவிட்டாலும் அங்கு ஒன்றும், இங்கு ஒன்றுமாக இருக்கலாம், அதைப் பெரிதுபடுத்தி சட்டமன்றத்தில் சொல்லிக் கொண்டிருப்பது சரியாகாது. சரியான முறையில் நாம் எப்படிச் செயல்படவேண்டும் என்று தெரிந்துகொண்டு செயல்பட்டாலேயே அடுத்த ஆண்டு மின்சாரக் கழகத்தின் நிதிநிலை அறிக்கைபற்றி விவாதிக்கும் போது இங்கே இப்படி குறைகளை எடுத்துச் சொல்லக்கூடிய நிலைமை இருக்காது என்பதை சட்ட மன்ற உறுப்பினர்களுக்குத் தலை வணங்கித் தெரிவித்துக் கொள்கிறேன்.

1970–71-ம் ஆண்டில் நம்முடைய மாநிலத் தேவை 2,000 மெகா வாட்டாக இருக்கும் என்று சொல்லப்படுகிறது. நாம் நம்முடைய தேவையை இரண்டாயிரம் மெகாவாட் என்று வைத்துக்கொண்டு அதை அடைய முயற்சி செய்கிறபோதே அந்தக் காலத்திற்குள் நம்முடைய தேவையும் அதிகப்பட்டுக்கொண்டே வருகிறது. விவசாயத் துறையிலும் இன்றைக்கு நம்முடைய தேவை அதிகரித்துக் கொண்டே போவதற்குக் காரணம் விவசாயிகள் ஆக்கமும் ஊக்கமும் பெற்று வருகிறார்கள். இன்றைக்கு நம்முடைய உற்பத்தியில் 23 சதவீதம் விவசாயத்திற்குக் கொடுக்கிறோம் என்றால் இது போதாது. இன்னும் அதிகமாக ஒதுக்கியாகவேண்டும். மின்சார கழகம் சரியான முறையில் செயல்பட்டு வருகிற காரணத்தினால் தான் கடந்த ஆறு மாத காலத்திலே 26 ஆயிரம் பம்பு செட்டுகள் விவசாயத்திற்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் சரியான முறையில் செயல்படவில்லை என்றால் இப்படி ஆறு மாத காலத்திற்குள் 26 ஆயிரம் பம்பு செட்டுகளுக்குக் கொடுக்க முடியுமா? இன்றையதினம் தமிழகத்தில் 9 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. இவற்றில் மூன்றில் ஒரு பாகத்திற்குத்தான் மின்சார கனெக்ஷன் கொடுக்கப்பட்டுள்ளது. மற்றவற்றிற்கும் நாம் கொடுத்தாக வேண்டும்.





அடுத்து விவசாயிகளுக்கு இருக்கக்கூடிய ஒரு குறையும் உண்டு. விவசாயத்திற்கு 8¼ பைசாவுக்கு யூனிட் வழங்கப்படுகிறது. உற்பத்திச் செலவே ஒரு யூனிட்டுக்கு 17 பைசா வரை ஆகிறது. விவசாயிகளுக்கு 8¼ பைசாவுக்குக் கொடுப்பதே ஒரு சலுகைதான் என்று சொல்கிறார்கள். உண்மையில் விவசாயிகளுக்கு இது ஒரு வரப்பிரசாதம் தான். ஆயினும் நமக்கு உற்பத்திச் செலவு 17 பைசாவாக இருக்கும்போது, கோடிக் கணக்காக லாபம் சம்பாதிக்கிற பெரிய தொழில்களுக்கு யூனிட் 1¼ பைசா, 2 பைசா என்று கொடுக்க வேண்டிய அவசியம் என்ன? அவர்களுக்கு எட்டு பைசா, பத்து பைசா என்று விதித்தால் அவர்களுக்குக் கிடைக்கிற லாபம் கொஞ்சம் குறையும். அதே சமயம் விவசாயிகளுக்கு 5 பைசா என்ற அளவுக்காவது குறைத்துக் கொடுக்கலாம்.

இன்னொரு தொல்லையும் விவசாயிகளுக்கு இருக்கிறது. அணைக்கட்டின் மூலம் பாசனம் பெறுகிற பகுதியில் உள்ள விவசாயிகள் 40 ரூபாயைத் தண்ணீர்த் தீர்வை என்று கட்டிவிட்டு இரண்டுபோகச் சாகுபடி செய்கிறார்கள். அதே சமயம் மின்சாரத்தின் மூலம் தண்ணீர் பாய்ச்சுகிறவர்களுக்கு ஏக்கருக்கு 80 ரூபாய், 90 ரூபாய், வரை செலவாகிறது. இது என்னுடைய மாவட்டக் கணக்கு. ஒருவித செலவும் இல்லாமல் அணைக்கட்டு பாசனத்தின் மூலம் 40 ரூபாயைக் கட்டிவிட்டு இரண்டுபோகம் சாகுபடி செய்கிறார்கள். அதே நேரத்தில் இரண்டாயிரம், மூவாயிரம் என்று செலவு செய்து பம்பு செட்டு வைத்து, ஏக்கருக்கு 80 ரூபாய் 90 ரூபாய் என்பதாக தொடர்ந்து மின்சாரத்திற்குக் கொடுத்துக்கொண்டு இவர்கள் சாகுபடி செய்கிறார்கள். ஆகவே அவர்களுக்கு கொஞ்சம் வாடர் ரேட்டை உயர்த்தினால் இவர்களுக்குக் கொஞ்சம் குறைத்துக் கொடுக்க வசதி ஏற்படும். இதனால் எல்லா இடங்களிலும் உள்ள விவசாயிகளுக்கு ஒரே விதமாக அமைய வழியேற்படும். அதோடு மட்டுமல்ல. ஹரிஜனங்களுக்கு பம்பு செட்டு வைத்துக்கொள்ளக் கூடிய நிலம் இருந்தாலும் வைத்துக்கொள்ள முடியாத நிலை இருக்கிறது. இதை உணர்ந்து முதலிலேயே ஒரு கிராமத்திற்கு இவ்வளவு பம்பு செட்டுகள் கொடுப்பது என்றால் அதில் இவ்வளவு ஹரிஜனங்களுக்கு என்று ஒதுக்கவேண்டும். மேலும் அவர்கள் கட்ட வேண்டிய டெபாசிட் தொகை, முழுச் செலவுத் தொகை ஆகியவற்றை அரசாங்கமே கொடுத்து உதவுவதற்கு வழி செய்ய வேண்டும் என்று தெரிவித்துக் கொள்கிறேன். அதோடு தெரு விளக்குகள் போடுகிற காலத்திலும் ஹரிஜனக் காலனிகளுக்கு முதலில் போட்டுவிட்டே மற்ற தெருக்களுக்கும் போடுவது என்கிற முறை இருக்க வேண்டும். கிராமங்களில் [illegible] போடும்போது ஹரிஜன காலனிகள் விடப்படுகின்றன. இதற்கு ஒரு சட்டமே செய்தால் வசதியாக [illegible] என்று தெரிவித்துக்கொள்கிறேன். வடாற்காடு [illegible] இதுவரை 70 ஆயிரம் பம்பு செட்டுகளுக்கு கனெக்ஷன் [illegible] பட்டிருக்கின்றன என்றாலும் இன்னும் 30 ஆயிரம் [illegible] இருந்து கொண்டிருக்கின்றன. எல்லாவற்றுக்கும் [illegible]

[திரு. எஸ். முருகையன்] [1967 நவம்பர் 25

செய்யவேண்டும். அதுமட்டுமல்ல, மின்சாரக் கழகத்தில் பணி புரிகிறவர்களில் சிலர் பணம் வாங்குகிறார்கள் என்றால் அது கழகத்திற்கே கெட்ட பெயரை உண்டாக்குகிறது. அப்படி யாராவது பணம் வாங்கினார்கள் என்று தெரிந்தால் அவரை வேலையைவிட்டே எடுத்துவிடக்கூடிய கடுமையான நடவடிக்கை எடுத்துக்கொண்டால் தான் நிச்சயமாக மின்சாரக் கழகத்திற்கு நல்லபெயர் ஏற்படும். கடைசியாக எனக்குப் பேசச் சந்தர்ப்பம் அளித்த உதவி சபாநாயகர் அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என்னுடைய வார்த்தையை முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

பி.ப. 4-00 * திரு. வ. ஜார்ஜ்: மாண்புமிகு உதவித் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கையைப் பொதுவாக வரவேற்று, சாதாரணமாகக் காணப்படுகிற சில இன்னல்களைச் சுட்டிக்காட்டி, அதற்கு மாநில மின்சார வாரியம் பரிகாரம் தேட வேண்டுமென்று கூற ஆசைப்படுகிறேன். குறிப்பாக, வீடுகளுக்கு மின்சாரம் வழங்கும்போது மின்சார அழுத்தம் தேவையான அளவுக்கு இல்லாமல் இருப்பதால் 40 வாட்ஸ் பல்பு போட்டால் கூட 15 வாட்ஸ் பல்பு அளவுக்குத்தான் வெளிச்சம் கிடைக்கிறது. இரவு பத்து மணிக்கு மேல்தான் நல்ல வெளிச்சம் இருக்கிறது. வீடுகளுக்கு ஒளி தேவைப்படுவது இரவு பத்து மணி வரைதான். ஆகவே, வீடுகளுக்கு தேவையான அளவு மின் அழுத்தத்துடன் மின்சாரத்தை வழங்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வீடுகளுக்கு மின்சாரக் கட்டணம் வசூலிப்பதில் ஒரு மாதம் கழிந்து விட்டால் அடுத்த மாதம் 25-ம் தேதி மின் தொடர்பு அறுக்கப்பட்டு விடுகிறது. பலர் மறதியாகவோ, தற்செயலாகவோ பணம் கட்டாமல் இருந்திருக்கலாம். மின் தொடர்பு அறுக்க வருகிற நிலையில் உடனடியாகப் பணத்தைக் கொடுக்கத் தயாராக இருந்தால் கூட, மின்சாரத் தொடர்பை அறுத்து விடுவதன் காரணமாக ஒருசில நாட்களுக்கு மின்சாரத் தொடர்பு இல்லாமலும், அதற்குப் பிறகு தொடர்பு பெறுவதற்கு பெனல்டியாக 5 ரூபாய், 10 ரூபாய் என்று கட்ட வேண்டிய நிலையும் இருக்கிறது. ஆகவே மின் தொடர்பை அறுக்க வரும்போது அந்த வீட்டில் உள்ளவர்கள் பணத்தைக் கொடுக்க முன்வந்தால் அதை வாங்கிக் கொண்டு மின் தொடர்பை அறுக்காமல் இருப்பதற்கான வழி வகுக்க விதிகளை வகுக்க வேண்டுமென்று கூற விரும்புகிறேன்.

வீடுகளுக்கு மின்சாரத் தொடர்பு கொடுக்கக் கூடிய வயர்கள் பழமையானால் உடனடியாகப் புதுப்பிப்பது இல்லை. அதனால் ப்யூஸ் ஆகி மின்சாரத் தொடர்பு அற்றுப் போனவுடன் மின் இணைப்பு அலுவலரைக் கூப்பிட்டால் 'கால் சார்ஜஸ்' கொடுக்க வேண்டிய நிலை இருக்கிறது. அந்த மாதிரி இடங்களில் வயர்களை உடனடியாக மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமே யொழிய 'கால் சார்ஜஸ்' வசூலிக்கக்கூடாது.



1967 நவம்பர் 25] [திரு. வ. ஜார்ஜ்]

(திரு. வி. எஸ். கோவிந்தராஜன் தலைமை.)

விவசாயத்தைப் பெரிதும் ஊக்குவிக்கின்ற இந்த அரசாங்கத்தில் பம்ப் செட்டுகளுக்குக் கடன் வழங்கினாலும், அவற்றுக்கு மின்சாரத் தொடர்பு கொடுக்கின்ற நேரத்தில் மின்சார வாரியக் கடன் பத்திரங்களை வாங்கவேண்டுமென்று வற்புறுத்துகிறார்கள். அதைப் பெற்ற பின்னர்தான் மின்சாரத் தொடர்பைக் கொடுக்கின்ற வழக்கம் நடைமுறையில் இருந்து வருகிறது. அரசாங்கம் ஒரு கையால் கொடுப்பது போல் கொடுத்துவிட்டு இன்னொரு கையால் திருப்பி வாங்கிக் கொள்வது பொருத்தமாகாது. இந்த முறை நீக்கப்பட வேண்டும். கடன் பெற்று பம்ப் செட் வைத்திருப்பவர்களிடமிருந்து இந்த மாதிரி மின்சார போர்டு கடன் வாங்கக் கூடாது என்ற கொள்கை நிச்சயமாக இருக்க வேண்டுமென்று குறிப்பிட ஆசைப்படுகிறேன்.

எனக்கு முன்பு பேசிய மெம்பர் குறிப்பிட்டது போல் விவசாயிகளிடமிருந்து பம்ப் செட்டுகளுக்கு ஆகும் மின் கட்டணத்தை ஒரு போகத்திற்கு ஒரு தடவை என்று வசூலித்தால் வசதியாக இருக்கும். ஆனால் வீட்டுக்கு இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வசூலிப்பது என்ற சமீபத்தில் அறிவித்திருக்கும் முறையை மாற்றி பழைய படியே வசூலிக்க வேண்டும். இரண்டு மாதத்திற்கு ஒரு முறை என்று மாற்றினால் அது சாதாரண மக்களுக்குக் கஷ்டத்தை விளைவிக்கக்கூடியதாக இருக்கும். இப்போது இருப்பது போலவே மாதந்தோறும் வசூலிப்பது நலம் என்று கூறிக் கொள்ள ஆசைப் படுகிறேன்.

தெரு விளக்குகளைப்பற்றிப் பல மெம்பர்கள் குறிப்பிட்டார்கள். கன்னியாகுமரி மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களில் இதைப் பற்றிப் பரிசீலித்து தீர்மானம் ஒன்று நிறைவேற்றப்பட்டது. ஆனால் இன்னும் அங்கு நிலைமை திருந்தவில்லை. இப்போது இங்கே பேசுவதைப் பார்த்தால் மாநிலம் முழுவதும் அதே நிலைமைதான் இருக்கிறது என்று அறிகிறேன். அதற்குக் காரணமாக வேண்டிய திருகு பல்புகளைப் பொருத்துவதற்கான செப்புக் குமிழ்கள் இம்போர்ட் செய்ய வேண்டியிருப்பதுதான் என்று நிதிநிலை அறிக்கையில் கூறியிருக்கிறார்கள். ஏதோ ஒரு சில இடங்களில் பல்புகள் திருடு போனாலும் சாதாரண பல்புகளைப் போட்டாவது தெரு விளக்குகளுக்கு மின்சாரத் தொடர்பு கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்,

தக்கலையில் செயல்பட்டு வந்த டெபுடி சீஃப் அக்கவுண்டண்ட் ஆபீசை சிக்கனத்தின் காரணமாக மூலச்சல் என்ற ஊருக்கு மாற்றினார்கள். அங்கு பஞ்சாயத்து எல்லையில் அரசாங்கக் கட்டடம் இருக்கிறது என்று மாற்றினார்கள். இதன் காரணமாக தக்கலை, பத்மனுபபுரம் பகுதி மக்கள் மின்சாரக் கட்டணத்தைக் கட்ட மூலச்சல் கிராமத்திற்குச் செல்ல வேண்டிய நிலைமை இருக்கிறது. டெபுடி சீஃப் அக்கவுண்டண்ட் அலுவலகம் அங்கு [illegible]

பட்டாலும் கூட. மின்சாரக் கட்டணத்தை வசூலிப்பதற்கு ஒரு கிளை அலுவலகத்தை தக்கலையிலேயே தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கோதையாறு மின்சாரத் திட்டம் சீரிய முறையில் நடைபெற்று வருகிறது. ஆனால் அங்கு வேலைக்கு எடுத்துக் கொள்வதில் அந்த இடத்து மக்களைப் பயன்படுத்தவில்லை என்று கருதுகிறார்கள். அவ்வாறு கருதுவதற்கு இடம் கொடுக்காமல் மின்சார வாரியம் செயல்பட வேண்டும். அங்குள்ள தொழிலாளர்களையும், காண்ட்ராக்டர்களையும் சரியான முறையில் பயன்படுத்தவில்லை என்று பொது மக்கள் பரவலாக நம்புகிறார்கள். அதில் உண்மை இருந்தாலும் இல்லாவிட்டாலும் பரவலான பேச்சுக்கு இடம் கொடுக்காத முறையில், நல்ல முறையில் வாரியம் நடந்து கொள்ள வேண்டுமென்று கூற ஆசைப்படுகிறேன்.

இப்போது அரசாங்கம் விவசாயக் கிணறுகளுக்கு, பம்ப் செட்டுக்கு மின் தொடர்பு கொடுப்பதில் அதிகக் கவனம் செலுத்தி வருகிறது. கன்னியாகுமரி மாவட்டத்தில் கிணறுகளுக்கு பம்ப் செட் வைக்கும் வழக்கம் பரவலாக இல்லை. அங்கு அநேகமாக எல்லோரும் சானல் நீர்ப்பாசனத்தை நம்பித்தான் பயிரிடுகிறார்கள். இப்போது சானல் நீர்ப்பாசனத்தில் கூட கடை வாரங்களில் சில இடங்களில் தண்ணீர் கிடைப்பது அரிதாக இருக்கிற காரணத்தால் அந்தப் பகுதிகளில் மக்கள் கிணறுகளை வெட்டி பம்ப் செட் வைக்கத் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அதற்கு பி.டபிள்யூ.டி.-யினர் இடைஞ்சலாக இருக்கிறார்கள். அது சானல் ஆயக்கட்டுக்கு உட்பட்ட பகுதி என்று சொல்கிறார்கள். மின்சார விசை பம்ப் செட் வைப்பதால் அந்த இலாகாவினருக்கு எந்த வித நஷ்டமும் கிடையாது. ஆனால் இப்போது இருக்கும் விதியை அனுசரித்து அனுமதி வழங்குவதில்லை. இதைப் பற்றி அரசாங்கம் பரிசீலித்து அந்தப் பகுதிகளிலும் பம்ப் செட்டுகளுக்கு மின் தொடர்பு கொடுக்க அனுமதி அளிக்கும் வகையில் விதிகளைத் திருத்தவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்திலே இப்போது மின்சார விஸ்தரிப்பு வேலை பொதுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. கிராமப் புறங்களுக்கு மின்சாரத் தொடர்பை விஸ்தரிக்க வேண்டும். கடந்த இரண்டு மூன்று வருஷங்களாக எந்த விதமான மின்சார விஸ்தரிப்பு நடைபெறாமல் இருக்கிறது. இந்த நிலையை மாற்றியாக வேண்டும். கன்னியாகுமரி மாவட்டத்திலும் கிணறுகளுக்கு மின்விசைப் பம்புகளுக்கு மின்விசை கொடுப்பதற்கு வழி செய்தால் விவசாயத் துறையில் மேலும் அபிவிருத்தி செய்ய முடியும் என்று கூறி, கிராமப் புறங்களுக்கு மின்சாரத்தை அளிப்பதில் ஊக்கம் காட்ட வேண்டுமென்று கேட்டுக் கொண்டு முடித்துக் கொள்கிறேன்.

**திரு. கொளத்தூர் கோதண்டம்** : கனம் தலைவர் அவர்களே, மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்களால் கொண்டு





வரப்பட்டிருக்கிற தமிழ்நாடு மின்சாரக் குழுவின் 1967–68-ம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையை ஆதரித்து நான் சில வார்த்தைகள் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். என் கருத்தைச் சொல்வதற்கு முன் அண்மையில் என் தொகுதியைப் பொறுத்தவரையில் புயலால் பாதிக்கப்பட்டு மிகவும் சீர்கேடு அடைந்த அந்தப் பகுதியை மிகக் குறுகிய காலத்தில் அங்குள்ள நிலையைச் சீர்செய்யும் காரியத்தில் மற்ற எந்தத் துறையினரும் செய்யாத அளவிற்கு இத்துறையினர் அதில் பெரும் பங்கு கொண்டு ஏறக்குறைய பதினைந்து நாட்களில் அங்குள்ள நிலைமையைச் சீர் செய்வதற்காக என் தொகுதி மக்கள் சார்பில் மின்சார வாரியத்திற்கு நன்றி செலுத்த கடமைப் பட்டிருக்கிறேன். இருந்தாலும் நான் அவர்களை பாராட்டுகிற நேரத்தில், நன்றி தெரிவிக்கிற நேரத்தில் இன்றைய தினம் அங்குள்ள பிரச்சினைகளை இம்மன்றத்தில் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

என் தொகுதி செங்கல்பட்டு மாவட்டத்தில் நல்ல விளைச்சலுக்குப் பெயர் போன தொகுதியாக இருந்தாலும் இன்றையதினம் 300-க்கு மேற்பட்ட பம்ப் செட்டுகளுக்கு இன்னும் மின்சார கனெக்‌ஷன் கொடுக்கப்படவில்லை என்ற குறையை நான் பலமுறை வலியுறுத்தியிருக்கிறேன். அதற்கு காரணங்கள் பலவாகயிருந்தாலும் அங்குள்ள விவசாயப் பெருங்குடி மக்கள் நாங்கள் மனு போட்டு இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் கூட எங்களுக்கு கனெக்‌ஷன் கிடைக்கவில்லையே என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். அதற்குக் காரணம் முன்னாலிருந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அதில் ஈடுபடவில்லையோ என்பதுபற்றி நான் அழுத்தமாகச் சொல்ல முடியாது. இன்றையதினம் இந்தப் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்ட பிறகு இந்த இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப் பட்டிருக்கிறேன். சர்க்காரிலிருந்து கொடுக்கப்பட்ட கடன் மூலம் பம்ப் செட்டுகள் வாங்கி வைத்துக் கொண்டு இரண்டு மூன்று ஆண்டுகளாகியும் இணைப்பு கிடைக்காமல் வீட்டில் அவை துரு பிடித்துப் போகும் அளவிற்கு மின்சார பம்ப் செட்டுகள் அங்கிருக்கின்றன. இனிமேலாவது அவர்களுக்கு பம்ப் செட்டுகள் வழங்கப்படவேண்டுமென்ற நல்லெண்ணம் மின்சாரத் துறையினருக்கு வரும்போது அவர்களுக்கு கொடுக்கப்படுகிற சர்டிபிகேட் உரிய இடம் இருந்து இணைப்பு கொடுக்கமுடியுமானால்தான் அப்பேர்ப்பட்ட சர்டிபிகேட்கள் கொடுக்கப்பட வேண்டும்.

விவசாயிகளுக்கு இரவு காலங்களில் தண்ணீர் பாய்ச்ச அனுமதி வழங்கப்படுகிறது. சில கிராமங்களில் பகல் நேரங்களில் பாய்ச்ச அனுமதிக்கப்படுவதில்லை. வறண்ட காலங்களில்தான் இரவு காலங்களில் இறைத்துக் கொள்ள அனுமதிக்கப்படுகிறார்கள். அங்கு கூடுமான வரையில் புன்செய் பயிர்கள்தான் பயிர் செய்கிறார்கள். வேர்கடலை அல்லது கேழ்வரகு போன்ற தானியங்களைப் பயிரிடும் போது இரவில் தண்ணீர் பாய்ச்ச நிச்சயமாக வசதியிருக்காது. நெல்லாக இருந்தால் வசதியாக இருக்குமே தவிர இதுபோன்ற

புன்செய் பயிர்களுக்கு இரவு காலங்களில் தண்ணீர் பாய்ச்ச முடியாது. ஆகவே அதற்கு விதிவிலக்கு அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மிக முக்கியமான பிரச்சினை என் தொகுதியில், என் பகுதியில், நான் இருக்கிற ஊரில் இதுவரை மின்சார இணைப்பே இல்லை. ஏறத்தாழ நாற்பதுக்கு மேற்பட்ட கிராமங்களில் நான்கு ஆண்டுகளாக வருடத்திற்கு ஒரு முறை வந்து கணக்கு எடுக்கிறார்கள். அந்த ஆண்டு முடிந்தவுடன் இதற்கு போதுமான ஹார்ஸ் பவர் இல்லை என்ற காரணத்தினால் கொடுக்க முடியவில்லை என்று சொல்லிவிடுகிறார்கள். அந்தப் பேப்பர் மீது அடுத்த ஆண்டு நடவடிக்கை எடுக்கப்படுகிறதா என்றால் இந்த ஆண்டு யார் யார் புதிதாக இணைப்பு கொடுக்கிறீர்கள் என்று கேட்கிறார்கள். ஆக அங்குள்ள மக்கள் மனதில் நம்பிக்கை இழக்கும் ஒரு தன்மை ஏற்படுகிறது. ஆண்டுதோறும் கணக்கு கேட்கிறார்களே, என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று மக்கள் பேசிக் கொள்கிறார்கள். ஆகவே மதுராந்தகம் வட்டத்தில் இடக்கீழ்நாடு போன்ற கிழக்கரைச்சாலை கிராமங்களுக்கு உடனடியாக மின்சார வசதி கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பல ஊர்களின் மின்சார இணைப்பு இருந்தும் அங்கு பம்ப் செட்கள் போட வேண்டுமென்று விவசாயிகள் மனு போட்டாலும் அங்குள்ள டிரான்ஸ்பார்மர்களில் போதுமான லோட் இல்லை, ஆகவே விஸ்தரிக்க முடியாது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். குறிப்பிட்ட விவசாயிகள் பம்ப் செட்டுக்கு அப்ளை செய்து ஏறக்குறைய 25, 50 ஹார்ஸ்பவர் அங்கு கிடைக்குமானால் உடனடியாக டிரான்ஸ்பார்மர்களை மாற்ற வழிவகை செய்து தரவேண்டும். மழையை நம்பி விவசாயம் செய்வதை விட பம்ப் செட்டுகளை நம்பி விவசாயத்தை பெருக்குவதில் இன்றையதினம் விவசாயிகள் பெருமுயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே இதுவரையில் செய்த நல்ல காரியங்களைத் துணை கொண்டு இனிமேலும் நல்ல காரியங்களை விவசாயிகளுக்குச் செய்து கொடுப்பதில் இத்துறை மேலும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். பாலாறு பேசின் ரூல்ஸ் என்று ஒன்று இருக்கிறது. அதனால் செங்கற்பட்டு மாவட்டம் கரையோரங்களில் என் தொகுதி கரையோரங்களை எடுத்துக் கொண்டால் பம்ப் செட்ஸ் போட வேண்டிய நிலைமையிருந்தும் பாலாறு பேசின் ரூல்ஸ் இருப்பதால் உடனடியாக சம்பந்தப்பட்ட துறையினர் அதை ரத்து செய்யவோ அல்லது குறிப்பிட்ட தூரத்திற்கு மேல் உள்ள மற்றயிடங்களுக்கு அதை விஸ்தரிப்பு செய்வதற்கோ உடனடியாக ஏற்பாடு செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பஞ்சாயத்து மன்றங்கள் இருக்கும் ஊர்களில் பல்ப் இல்லாத குறையிருக்கிறது. எந்த ஊராட்சிமன்றத்தை எடுத்துக் கொண்டாலும் சர்க்காரால் கொடுக்கப்படுகிற தெரு பல்ப்தான் பொருத்தப்படவேண்டும் என்ற நிலையிருப்பதால் அவை வெளி மார்க்கட்டில் விற்கப்படுவதில்லை. ஆக முப்பது தெரு



விளக்குகள் இருந்தால் அதில் தினந்தோறும் பத்து விளக்குகள் எரியாத நிலையில்தான் இருக்கிறது. ஆகவே குறிப்பாக அந்த விளக்குகளை பூட்டி வைக்கிற அளவிற்கு வலையாவது போட்டால் வெளியிலிருந்து வாங்கிக் கொள்வதற்கு வசதியாக இருக்கும். அதை இந்தத் துறையினர் செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக என் பகுதியில் பம்ப் செட்டுகள் அதிகமாக இருக்கின்றன. இதுபற்றி நான் பல முறை எழுதியிருக்கிறேன். அதுகுறித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மாதாந்திர அடிப்படையில்தான் விவசாயிகளிடத்திலும் மற்றவர்களிடத்திலும் வசூலிக்கவேண்டுமென்கிற கருத்தை மற்ற மாண்புமிகு உறுப்பினர்கள் வலியுறுத்தியதுபோல் நானும் வலியுறுத்த விரும்புகிறேன். அதேபோல் தொழில் துறைக்கு கொடுக்கப்படுகிற சலுகைகளில் சிறிது அளவிற்குக் கூட விவசாயத்திற்காக கொடுக்கப்படுவதில்லை. இன்றையதினம் விவசாயிகளுக்குள்ள பலவித சிக்கல்களில் மின்சாரத்துறையாவது அவர்கள் பேரில் இரக்கம் கொண்டு ஓரளவிற்கு அவர்களுக்கு மின்சாரக் கட்டணத்தைக் குறைத்துக் கொடுப்பதில் அதிகம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இந்தத் துறை செய்திருக்கிற காரியங்களை நாங்கள் நிச்சயமாகப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். விவசாயிகள் என்ற முறையில் இன்னும் மேலே ஒரு படி கூடச் சென்று அவர்களது நல்லெண்ணங்கள், அவர்களது உழைப்புத் தன்மை இவை வளர வேண்டுமென்று சொல்ல கடமைப்பட்டாலும் எங்கள் தொகுதி மக்கள் குறைகளையும் கூற நான் கடமைப்பட்டிருக்கிறேன். அண்மையில் வீசிய புயலில் இத்துறையினர் தலைவர் உட்பட அதில் பணியாற்றுகிற சாதாரண தொழிலாளர் வரை எடுத்துக் கொண்ட முயற்சிகளுக்கு, பற்பல மாவட்டங்களிலிருந்து எங்கள் மாவட்டத்திற்கு வந்து பல இன்னல்களை அனுபவித்தும் மின்சார இணைப்பு வருமா வராதா என்ற நிலை இருந்தபோது பதினைந்து நாட்களில் நிலைமையைச் சீர் செய்திருக்கிறார்கள். அதற்காக அத்துறையினருக்கு என் தொகுதி மக்கள் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொண்டு நான் குறிப்பிட்டுள்ள காரியங்களை எல்லாம் உடனடியாக நடைமுறைக்கு எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனக்கு இந்த வாய்ப்பை அளித்தமைக்கு தலைவர் அவர்களுக்கு நன்றி கூறி விடுக்கிறேன். வணக்கம்.

* திரு. கே. எம். ராமசாமி கவுண்டர் : சட்டமன்றத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியம் நிதிநிலை அறிக்கையின் மீதுள்ள விவாதத்தில் பங்கு கொள்ளும் வாய்ப்பு கிடைத்தமைக்கு நான் மகிழ்ச்சியடைகிறேன். இந்த மின்சார வாரியம் இதுவரை ஆற்றியுள்ள பெரும் சாதனைகளையும், மின்சாரத்தை இம்மாநிலத்தில் மேலும் விரிவுபடுத்த அது கொண்டுள்ள [illegible] நாம் பாராட்டத்தான் வேண்டும். குறிப்பாக இந்த மின்சார வாரியத்தின் தலைவர் அவர்களையும், அத்துறையில் [illegible] பொறியாளர்களையும் பாராட்டுகிறேன். [illegible]

[திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்] [1967 நவம்பர் 25

தில் குறைகளும் இருந்து கொண்டுதானிருக்கும். நடைமுறையில் குறைபாடுகள் மிகுந்து கொண்டிருக்கின்றன. எனக்கு முன்னால் இரண்டு நாட்களாகப் பேசிய பல உறுப்பினர்களுடைய கருத்துக்களை நான் மீண்டும் மீண்டும் வலியுறுத்த வேண்டிய அவசியமில்லை. ஆதலின் மேலெழுந்தவாரியாக இரண்டொரு முக்கிய விஷயங்களை மட்டும் இங்கே கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

கோவை மாவட்டத்திலே, கோபிச்செட்டிப்பாளையம் வட்டத்திலே இரண்டு சப்-ஸ்டேஷன்கள் இருக்கின்றன. ஒன்று செண்பகப்புத்தூர் சப்-ஸ்டேஷன்; இன்னொன்று ஓலப்பாளையம் சப்-ஸ்டேஷன். செண்பகப்புத்தூர் சப்-ஸ்டேஷனுக்கு 40 மைல்களுக்கு அப்பால் உள்ள சோமனூர் என்ற இடத்திலிருந்து கம்பி இழுக்கப்பட்டிருக்கிறது. ஓலப்பாளையம் சப்-ஸ்டேஷனுக்கு 30 மைல்களுக்கு அப்பால் உள்ள ஈங்கூர் என்ற இடத்திலிருந்து கம்பி இழுக்கப்பட்டிருக்கிறது. ஆனால், இந்த சப்-ஸ்டேஷன்களுக்கு மிக அண்மையில் மோயார்-ஈரோடு மெயின் லைன் வந்துகொண்டிருக்கிறது. அந்த மெயின் லைனிலிருந்து கரண்ட் வழங்கப்படுமானால் இப்போது ஏற்படுகிற குறைபாடுகள் மிகவும் குறையும். மழைக் காலங்களில், இடி மின்னல் காலங்களில், தூரத்திலிருந்து மின்சாரம் வழங்கப்படுவதால் குறைபாடுகள் அதிகம் ஏற்பட்டுக் கொண்டே இருக்கின்றன. முன்கூட்டியே இது சீரமைக்கப்பட்டு மோயார்-ஈரோடு லைனிலிருந்து இந்த இரண்டு சப்-ஸ்டேஷன்களுக்கும் கரண்ட் வழங்கப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது. டிரான்ஸ்ஃபார்மர்களை மாற்ற வேண்டியிருந்ததாலோ, வேறு வகையில் செலவு அதிகம் ஆகும் என்ற காரணத்தினாலோ அது நடைபெறவில்லை. டிரான்ஸ்ஃபார்மர்களை மாற்ற அதிகத் தொகை செலவானாலும் அதைப் பெரிதாகக் கருதாது, மக்களுக்கு ஏற்படும் நன்மையை சீர்தூக்கி உடனடியாக அதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, மின்சார இணைப்புகள் வழங்குவதில் ஏற்படுகிற குறைபாடுகளைப் பற்றி பொறியாளர்களிடத்தில் கேட்டால் கம்பங்கள் கிடைக்கவில்லை, கம்பிகள் வரவில்லை, மற்ற உபகரணங்கள் வந்து சேரவில்லை என்று சொல்லுகிறார்கள். மின்சார விஸ்தரிப்புக் காலங்களில் முன்கூட்டியே கம்பங்களை உற்பத்தி செய்வது அவசியம். இரும்புக் கம்பங்கள் கிடைக்கவில்லை என்றால் சிமெண்ட் கம்பங்கள் உற்பத்தி செய்யலாம். அப்படி அதைச் செய்ய காண்ட்ராக்ட் சென்னை போன்ற இடங்களில் உள்ளவர்களுக்கு கொடுத்திருப்பதால், அவர்கள் வந்து இந்தக் கம்பங்களைச் செய்வதில் காலதாமதம் ஏற்பட்டுக்கொண்டு வந்திருக்கிறது. இதைக் குறைக்கும் வகையில், கூடுமான வரையில் கம்பங்கள் தயாரிப்பது போன்ற சிறு காண்ட்ராக்ட்களை ஆங்காங்கே நல்ல முறையில் நேரில் இருந்து கவனித்துச் செய்யக் கூடிய ஆர்வம் உள்ளவர்களுக்குக் கொடுத்தால், கம்பங்கள் இல்லை என்ற குறையைப் போக்க முடியும். இதை மின்சார வாரியத் தலைவரும் சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளும் கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



1967 நவம்பர் 25] [திரு. கே. எம். ராமசாமி கவுண்டர்]

அடுத்தபடியாக, பம்ப் செட்டுகளுக்கு மின்சாரம் வழங்குவதில் அவசியமில்லாத தடைகளெல்லாம் இருந்துகொண்டிருக்கின்றன. உதாரணத்திற்கு லோயர் பவானி ஆயக்கட்டுப் பகுதிகளை எடுத்துக் கொள்வோம். சாதாரணமாக 'நோ-அப்ஜெக்ஷன்' சர்ட்டிஃபிகேட் என்று ஒன்றை பொதுப் பணித் துறையிலிருந்து வாங்கிக் கொடுத்தாலன்றி மின்சார இலாகா மேற்கொண்டு காரியம் செய்வதில்லை. இந்த சர்ட்டிஃபிகேட் வாங்குவதில், பொதுப் பணித் துறை, ரெவின்யூ இலாகா இவைகளில் காலதாமதம் மாதக் கணக்காக ஆகிறது. வருஷக் கணக்காகக் கூட ஆவதுண்டு. இது அவசியமா? ஆயக்கட்டு பூமிகளுக்கு இதுவரையில் மெயின் கால்வாய்களுக்கு இரண்டு ஃபர்லாங் என்றும், கிளை வாய்க்காலுக்கு ஒரு ஃபர்லாங் என்றும் இருந்ததைக் குறைத்து முறையே 50 மீட்டர் என்றும், 25 மீட்டர் என்று அண்மையில் ஒரு புதிய உத்திரவு வந்தது; ஆனால், அந்த உத்திரவு கூட அவசியமா? உணவு உற்பத்தி பெருகவேண்டும், பெருகி மக்கள் சௌகரியமாக வாழ வேண்டும் என்று கருதும் நேரத்தில், 50 மீட்டர், 25 மீட்டர் என்பதை அளந்து பார்த்துக்கொள்ள முடியாதா? அங்கிருந்து சர்ட்டிஃபிகேட் வர வேண்டுமா? மாதக் கணக்கில், வருஷக் கணக்கில் காத்திருக்க வேண்டுமா? 25 மீட்டர், 50 மீட்டர் என்பதைத் தோராயமாகப் பார்க்க வேண்டாம், அளந்தே மின்சார விண்ணப்பம் வந்தவுடன் பைசல் செய்யலாம். அதை விட்டு வேறு இலாகாவிலிருந்து சர்ட்டிஃபிகேட்டுக்காக நீண்ட நாள் காத்திருக்க வேண்டியிருக்கிறது. இப்படிப்பட்ட குறைபாடுகளையெல்லாம் உடனடியாகக் கவனித்து மின்சார வாரியத் தலைவர் அவர்களும், மற்றவர்களும் ஆவன செய்யவேண்டுமென்று கேட்டுக் கொண்டு எனது உரையை முடித்துக்கொள்கிறேன்.

* திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் : தலைவர் அவர்களே, நமது மதிப்பிற்குரிய தொழில் அமைச்சர் அவர்கள் 1967-68-ம் ஆண்டுக்கான மின்சார வாரியத்தின் நிதி நிலை அறிக்கையைச் சமர்ப்பித்திருக்கிறார். அதன் மீது பல அங்கத்தினர்கள் பல கருத்துக்களைச் சொன்னார்கள். அதிலே நானும் எனது கருத்துக்களைச் சொல்ல கடமைப்பட்டிருக்கிறேன் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

நீண்ட நெடுங்காலமாக தென் ஆர்க்காடு மாவட்டத்திற்குத் தனி சிஸ்டம் வேண்டுமென்று வலியுறுத்தி வந்தோம். எங்களுடைய வற்புறுத்தலுக்கு இணங்க தென் ஆர்க்காடு மாவட்டத்தை தனி சிஸ்டமாக ஆக்கிக் கொடுத்திருக்கிறார்கள். தனி சிஸ்டமாக அதை ஆக்கிக் கொடுத்தார்களே தவிர, அதனுடைய முழுப் பலனையும் நாங்கள் அனுபவிக்க முடியவில்லை. காரணம், 1966-ம் ஆண்டு நவம்பர் மாதத்திலே அடித்த புயலினால் எங்கள் பகுதி பெருவாரியாக பாதிக்கப்பட்டுவிட்டது. அப்படி பாதிக்கப்பட்டு விட்ட காரணத்தினாலே, பாதிக்கப்பட்ட பகுதிகள் இன்னும் சரிக்

கட்டப்பட முடியாமலேயே இருந்துகொண்டு வருகின்றன. தென் ஆர்க்காடு மாவட்டத்தை தனி சிஸ்டமாகப் பிரித்துக் கொடுத்தமைக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கிறேன். அதே நோத்தில் தென் ஆர்க்காடு மாவட்டத்தின் மூலைக் கோடியில் இருக்கிற செஞ்சி, திண்டிவனத்திற்குத் தனி டிவிஷன் இருக்க வேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். அதிகாரிகளும் அப்படித்தான் கருதுவார்கள் என்று நினைக்கிறேன். உடனடியாக அந்த வேலையைச் சீக்கிரத்தில் பூர்த்தி செய்து, ஏழை விவசாயிகளின் குறைகள் நீங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதை கண்டிப்பாகச் செய்ய வேண்டுமென்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

அதே மாதிரி, திண்டிவனத்தை டிவிஷனாகப் பிரித்தவுடன் மைலத்தில் ஒரு சப்-ஸ்டேஷன் இருக்கவேண்டும் என்று பல அபிப்பிராயங்கள் இருக்கின்றன. நாங்களும் அப்படி விரும்புகிறோம். அப்படி இருந்தால்தான் மின்சாரம் கிராமங்களுக்குப் பரவ வாய்ப்பும் வசதியும் இருக்கும், இல்லையென்றால் சங்கடமாக இருக்கும் என்று சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதே போல நீண்ட நெடுங்காலமாக அசிஸ்டெண்ட் எஞ்சினியர் இருக்கிற அந்தப் பகுதியிலே ஆஃபீசிலே கிளார்க்குகளைப் போட்டிருக்கிறார்கள். எத்தனையோ பிரிவை விரிவுபடுத்தியிருந்தும், சூபர்வைசர்களை அதிகப்படுத்தியும், வேலை செய்கிற கணக்கர் ஒருவர்தான் இருக்கிறார். அவருக்கு வரக்கூடிய கடிதங்களை ரிஜிஸ்டர் செய்யக் கூட நேரம் காணவில்லை. அதே நேரத்திலே வந்து கேட்கிறவர்களுக்கு பதில் சொல்லுகிற முறையைக் கூட, வந்தவர்களுக்கு பதில் சொல்லுகிற
பிற்பகல் 4-30 அளவுக்குக் கூட நேரம் கிடைக்காமல் இருக்கிறது. இது ரொம்ப காலமாக இருந்து வருகிற முறை. குறைந்த பட்சம் இன்னொரு குமாஸ்தா அந்த ஆபீசில் ஏ.ஈ. ஆபீசில் போட்டு, அங்கு வருகிற மனுக்களை பரிசீலனைச் செய்து அதை ரிஜிஸ்தர் செய்வதற்கும் வருகிற விவசாயிகளுக்கு போதுமான பதிலைச் சொல்லுவதற்கும் ஒரு வாய்ப்பு செய்திருந்தால் வருகிறவர்களுக்கும் வசதி, அதிகாரிகளுக்கும் வசதி, இந்த ஊரிலிருந்து இன்னார் வந்தார், இன்னது கேட்டார், இன்ன தகவலைச் சொல்லி விட்டுப் போனார் என்று அதிகாரிகளுக்கும் தகவல் சொல்ல வசதியாக இருக்கும். அதன்மேல் நடவடிக்கையும் எடுக்க முடியும். ஒரே ஆள் வேலை செய்வதாலே, விவசாயிகள் எதையாவது சொன்னால் ஏதோ கேட்கவேண்டுமென்ற முறையிலே கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்த வேலை பளு அதிகமாக இருக்கிறது. அவசியம் இதை பரிசீலனை செய்து, எ.ஈ. ஆபீஸ்களுக்கும்—எல்லா பகுதிகளிலும், தமிழகத்திலே எல்லாப் பகுதிகளிலும் அப்படித்தான் இருக்கிறது என்று கேள்விப்பட்டேன்—இன்னொரு க்ளார்க்கை போட்டு அங்கிருக்கிற வாய்ப்பையும் வசதியையும் அதிகம் செய்து தரவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

பொதுவாக, தமிழகத்திலே 9 இலட்சம் கிணறுகள் வெட்டப்பட்டிருக்கின்றன என்று இந்த அறிக்கையிலே கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த 9 இலட்சம் கிணற்றிலே 3,15,000 கிணற்றுக்கு பம்பு





செட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன—மின்சார விஸ்தரிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன். அதே நோத்திலே திண்டிவனம் வட்டத்தைப் பொறுத்தவரையிலே ஏரியை நம்பி வாழ்கின்ற பகுதி அதிகம். இப்பொழுது இன்னும் கூட சில பகுதிகளிலே ஏரிகளில் தண்ணீர் கிடையாது. காய்ந்த காட்சியே இருக்கிறது. எப்படித்தான் விவசாயிகளுக்குத் தண்ணீர் கிடைக்கப் போகிறது என்பதே புரியவில்லை. ஒரு பகுதியிலே ஏரியிலே தண்ணீர் கிடையாது. அங்கு பெரும் பகுதிகள் கிணற்றை நம்பித்தான் வாழ்கின்றன. இதில்தான் பயிர் செய்வது. இதில் தான் ஜீவனம். ஆகிய எல்லாம் கிணற்றில் தான். அந்த நிலை இருக்கிற காரணத்தாலே இந்த 9 இலட்சம் கிணற்றிலே 3 இலட்சம் கிணற்றுக்கு பம்பு செட்டு வழங்கியதைப் போலவே எங்களுடைய வட்டத்தைப் பொறுத்தவரையில் கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மற்றவர்களுக்கு வேண்டுமானால் எப்படியும் இருக்கலாம். ஆனால் எங்களுடைய பகுதியிலே வாழ்கின்ற மக்களுக்கு, தென்னார்க்காடு மாவட்டத்திலே, குறிப்பாக, சொன்னால் வானூர் பகுதியிலே கிணற்றை நம்பித்தான் அங்குள்ள மக்கள் வாழ்கிறார்கள். அவர்கள் ஜீவனம், விவசாயத்திற்கு வேண்டிய நீர், விதைகளுக்கு, ஆகிய எல்லாவற்றுக்குமே கிணற்றை நம்பித்தான் அவர்கள் வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். ஆகவே அந்தப் பகுதியிலே விவசாயத்திற்கு வேண்டிய பம்பு செட்டுகளை விஸ்தரிப்பதிலே தக்க கவனம் செலுத்தி கூடிய சீக்கிரம் ஆவன செய்யவேண்டுமென்று மிக்க பணிவன்போடு கேட்டுக் கொள்கிறேன். அதிலே குறிப்பாக சென்ற ஆண்டு ஸ்டேட் எலெக்டிரிசிடி லோன் என்று ஒன்றை வசூல் செய்தார்கள். அப்பொழுது ஏழை விவசாயிகள் இந்த கடன் கொடுத்தால் மின்சார விஸ்தரிப்பு தருகிறீர்களா என்று கேட்டபோது தருகிறோம் என்று உத்தரவாதம் கொடுத்தும், பிறகு பல பகுதிகளிலே அந்த வாக்குறுதி நிறைவேறாமல் இருக்கிறது. அதை உடனடியாக பரிசீலனை செய்து எந்தெந்த ஊரிலே வாக்குறுதிகள் தந்தார்கள், எந்தெந்த ஊரிலே விவசாயிகள் கடன் கொடுத்தார்கள் என்று விசாரித்து, முதல்—அதாவது ஃபஸ்டு பிரையாரிடி என்று சொல்லுகிற அளவுக்கு அவர்களுக்கு அந்தச் சலுகை அளிக்க வேண்டும். உடனடியாக பரிசீலனை செய்து அவர்களுக்கு ஆவன செய்ய வேண்டும். அந்தப் பகுதிகளுக்குப் பம்பு செட்டுகளை விஸ்தரிப்பதற்கு வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

நல்ல காலமாக விவசாய அமைச்சரவர்கள் வந்து விட்டார்கள். ஒரே ஒரு குறையை அவர்களிடத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். விவசாயத்தைப் பெருக்க வேண்டுமென்று நினைக்கிறோம். அதிலும் விளைச்சலை அதிகரிக்க வேண்டுமென்றும் கருதுகிறோம். ஒருவன் கிணற்றை வைத்து, பம்பு செட்டு வைக்க வேண்டுமென்று விரும்பினால், அவன் கிணற்றுக்கு பணம் கடன் வாங்க வேண்டுமென்று சொன்னால், பம்பு செட்டு வைத்துவிட்டு வா, கடன் தரு

கிறோம் என்கிறார்கள். சரி பம்ப் செட்டாவது வைக்கலாம் என்று அதற்குப் போய் கடன் கேட்டால், கிணறு வைத்துவிட்டு வா, கடன் தருகிறோம் என்கிறார்கள். ஒரு பக்கம் பெறுவதில் கஷ்டம் இருக்கிறது. இன்னொரு பக்கம் பம்பு செட்டு வைப்பது கஷ்டமாக இருக்கிறது. விவசாயிகள் கடன் தொல்லை தாங்கமுடியாமல் இருப்பதால்தான் பம்ப் செட்டு வாங்கி அதன் மூலம் லாபம் பெறலாம் என்று நினைக்கிறார்கள். ஆனால் பம்ப் செட்டுக்கும் கடன் வாங்குவதில் கஷ்டம் இருக்கிறது. அதுவும் பிளாக்குகளிலே சர்க்கார் சம்பந்தப்பட்டவரை டிஸ்டிரிக் லெவலிலே அபிவிருத்தி மன்றங்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு 5, 6 என்ற முறையிலே தான் பம்பு செட்டுகளுக்கு லோன் தருகிறார்கள். என் பகுதியைப் பொறுத்த அளவிலே இன்றைக்கு மட்டும் 50 பம்பு செட்டுகளுக்கு சர்க்கார் கடன் கொடுத்து உதவுவதற்கு 50 பேர்களுக்கு மேலாக போட்ட அப்ளிகேஷன்கள் அப்படியே இருக்கின்றன. வானூர் பகுதியிலும் அப்படித்தான். மரக்காணம் பகுதியிலும் அப்படித் தான் இருக்கிறது. மற்றப் பகுதிகளிலும் அப்படித்தான் இருக்குமென்று நான் கருதுகிற காரணத்தாலே தயவு செய்து . . .

**மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி :** வானூர், மரக்காணம் என்று மொத்தமாக சொல்வதற்குப் பதிலாக, எந்தெந்த கிராமத்திலே மின்சாரம் விஸ்தரிக்கப்படவில்லை என்று சொன்னால் அவசியம் விஸ்தரிப்பதற்கு வசதியாக இருக்கும். கிராமங்களின் பெயரைக் குறிப்பிட்டுச் சொல்லும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**திரு. ஏ. கோ. பாலகிருஷ்ணன் :** தலைவர் அவர்களே, நான் பேசும்போது அமைச்சர்கள் குறுக்கிடுவது வாடிக்கையாகி விட்டது. ஆனால் அமைச்சரவர்கள் எங்களுக்கு நல்லது செய்கிறேன் என்று சொல்லுகின்ற காரணத்தாலே அவருக்கு நன்றி செலுத்திக் கொண்டு அவர் குறிப்பிட்டதற்கு நான் பதில் சொல்லி விடலாம் என்று கருதுகிறேன். தென்கோடிபாக்கத்தில் 3 பம்ப் செட்டுகளுக்கு கடன் கொடுக்கப்பட்டிருக்கிறது. இன்னும் அவர்களுக்குப் பம்ப் செட்டு வாங்க பணம் வந்து சேரவில்லை. எங்கள் ஊரிலே சுமார் 15 பம்ப் செட்டுகளுக்குக் கடன் கொடுத்திருக்கிறார்கள். கடன் கொடுத்தவர்கள் எல்லாம் என்னைப் பார்த்து கரண்டு எங்கே என்று கேட்கிறார்கள். நான் மட்டும் 1,500—கடன் வாங்கிக் கொடுத்து இருக்கிறேன். அது இன்னும் வந்து சேரவில்லை. அதைக் கேட்டுக்கொண்டே இருக்கிறார்கள். அதே மாதிரி எல் ஊரில் 15 கடன் கேட்ட அப்ளிகேஷன் பாக்கி. தென் கோடிபாக்கத்தில் ஒரு 8, 9 அப்ளிகேஷன்கள் பாக்கி, உப்பு வேலூரில் ஒரு 200-க்கு மேலே பாக்கி இருக்கிறது. பம்ப் செட்டு தரவேண்டியதையும் 5, 6 வருஷமாக சொல்லிக்கொண்டே வருகிறேன். அந்த மாதிரி அப்ளிகேஷன்கள் பாக்கி இருப்பதற்கு என்ன காரணமோ, எங்கே தப்பு நடைபெறுகிறதோ, யார் தான் தப்பு பண்ணுகிறார்களோ எனக்குப் புரியவில்லை. தயவுசெய்து நான் குறை சொல்லுவதாக நினைக்கவேண்டாம்.



எங்கள் தொகுதியிலே ஒரு 300 பம்ப் செட்டுகள் போட்டுக் கொடுத்தால் நான் மட்டும் அல்ல என் தொகுதி மக்கள் அனைவரும் எப்பொழும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டவர்கள் என்பதை நான் சொல்லாமல் இருக்க முடியவில்லை. மின்சார பம்ப் செட்டுகளுக்குக் கடன் வழங்குவதில் என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரை—மற்றவர்களுக்கு எப்படியிருந்தாலும்—எங்களுக்கு கொஞ்சம் சலுகை கொடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். எங்களுடைய பகுதி கிணற்றை நம்பி வாழ்கிற பகுதியாதலால், இதை உடனடியாக கவனித்து, யாரிடத்திலே சொல்ல வேண்டுமோ எங்கே கொடுக்க வேண்டுமோ, அதை கவனித்து ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். நாங்கள் கொஞ்சம் கஷ்டப்பட்டு மின்சாரத்தை வாங்கிக்கொள்ளுகிறோம். அவர்களும் தயாராக இருக்கிறார்கள். ஆனால் அங்கே ஒரே ஒரு தொல்லை என்னவென்றால் இந்த புயல் அடித்து விட்ட காரணத்தினால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு அதிகமாக செலவு செய்தாகி விட்டது. அதாவது கம்பங்களுக்காக அதிகமாக செலவு செய்தாகி விட்டது. இனிமேல் கம்பங்கள் போட்டால் தான் புதிய இடங்களுக்கு மின்சார விஸ்தரிப்பு கிடைக்கும் என்று சொல்கிறார்கள். ஆனால் செங்கல்பட்டு பகுதியிலே அதிகமான கம்பங்கள் இருப்பதாகச் சொல்கிறார்கள். எங்களுக்கு நிறையத் தேவை இருக்கின்ற காரணத்தால் அதை உடனடியாக பரிசீலனை செய்து எங்கள் மாவட்டத்திற்கு அதுவும் குறிப்பாக திண்டிவனம் வானூர் பகுதிக்கு அதிகமான கம்பங்கள் கொடுத்தால் நலமாக இருக்கும் என்று நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன்.

அதே மாதிரி தான் உப்புவேலூர், அனுமந்தை, பொம்மைபாளையம், பூத்துரை, புதுப்பாக்கம், காட்ரும்பாக்கம், நல்லாவூர்; உலகாபுரம், பேராவூர், ஆதனப்பட்டு, தென் சிறுவளூர் ஆகிய பகுதிகளுக்கு இன்னும் மின்சார விஸ்தரிப்பு வரவில்லை. அந்த ஊர்களுக்கு அப்ளிகேஷன்கள் எல்லாம் போட்டு பல நாட்கள் ஆகிவிட்ட காரணத்தாலே அவைகளை ரிவைஸ்டு எஸ்டிமேட் போடு என்று சொல்லி திருப்பி அனுப்பிக்கொண்டிருக்கிறார்களே தவிர, அதற்கு ஒன்றும் வழி பிறக்கவில்லை. ஆகவே தயவு செய்து அதை உடனடியாகப் பரிசீலனை செய்து ஒரே எஸ்டிமேட்டாகப் போட்டு வேலையை முடிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதே நேரத்திலே ஒரு ஊருக்கு மின்சாரம் தந்துவிட்டால் அந்த ஊரிலே முடிந்து விட்டதாக நாமும் கருதுகிறோம், அரசாங்கமும் கருதுகிறது. ஆனால் இந்த ஆண்டிலே 10 கிணறுகளுக்கு மின்சார விஸ்தரிப்புக் கொடுத்தால் அடுத்த ஆண்டிலே அதே ஊரிலே 10 கிணறுகளுக்கு மின்சார விஸ்தரிப்பு கொடுப்பதற்கு—சந்தர்ப்பம் ஏற்படுவதற்கு வாய்ப்பும் வசதியும் இருக்கிறது. அந்த மாதிரி நேரங்களிலே கேட்டால் போன வருஷம் போட்டபோதே [illegible] பொழுதே வாங்கிக் கொள்வதற்கென்ன என்று கேட்கிறார்கள். [illegible] பொழுது அவர்களுக்கு வாய்ப்பு, வசதி இருக்கி[illegible] பொழுது மற்றவர்கள் சௌகரியம் அடைகிற நேரத்திலே [illegible]

போது அவர்களும் சௌகரியத்துக்காக வைத்துக்கொள்ளலாம் என்று கருதுகிறார்கள். ஆகையால் அதை மறுபடியும் எக்ஸ்டென்ஷன் கொடுக்கிற நேரத்திலே தயவு செய்து காலாகாலத்தில் விவசாயிகளுக் கிடைப்பதற்கு வழி வகை செய்ய வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக விவசாயத்திற்கு 23 சத விகிதம் மின்சாரம் உபயோகப்படுத்தப்படுகிறது, மற்ற துறைகளுக்கு 50 சத விகிதம், மற்றவற்றிற்கு 15 சத விகிதம் என்றெல்லாம் கணக்குக் கொடுத்திருக்கிறார்கள். நமது நாட்டிலே விவசாயம் முதுகு எலும்பு என்று பல ஆண்டுகளாகச் சொல்லிக்கொண்டிருக்கிறோம். விவசாயத்தைத்தான் பெருக்கவேண்டும் என்று அத்தனை பேர்களும் கருதுகிறார்கள். விவசாயத்திற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்று கருதுகிறோமே தவிர, அந்த நிலையில் விவசாயத்திற்கு 23 சத விகிதம் மின்சாரம் கொடுப்பது மிகமிகக்குறைவு என்றுதான் நான் சொல்லவேண்டியிருக்கிறது. விவசாயத்திற்கு முதல் இடம் கொடுக்கவேண்டும் என்ற நிலையில், நமது தமிழகத்தின், அதிலும் குறிப்பாக எங்கள் பகுதியில், காய்ந்த, வறண்ட பிரதேசங்களில், ஆற்று நீரே பாயாத பகுதிகளில் 60 சத விகிதம் மின்சாரமாகிலும் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன் (மணி அடிக்கப்பட்டது). யாரும் பேசமாட்டேன் என்கிறார்களே, நானாவது கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருக்கிறேனே (சிரிப்பு) ஆண்டு ஒன்றுக்கு 300 கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்படுவதாக கணக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது. 1957-லிருந்து ஆண்டு ஒன்றுக்கு 300 கிராமங்கள் என்றால், 300-ஆல் பெருக்கினால் எத்தனை கிராமங்களுக்கு மின்சாரம் விஸ்தரிக்கப்பட்டிருக்கவேண்டும்? எங்கெல்லாம் இருக்கிறது? எங்கே போயிற்று? என்று கண்டுபிடிக்க முடியவில்லை. போனது போகட்டும், இனிமேலாவது காலனிப் பகுதிகளுக்கு மின்சாரத்தை விஸ்தரிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். ஊருக்கு மின்சாரம் போகும்பொழுது, வழியிலே இருக்கிற சேரிக்கும் மின்சாரம் போகவேண்டும். அந்தப் பகுதிகளிலெல்லாம் இனிமேல் மக்கள் பொருத்திருக்க மாட்டார்கள். அவர்கள் தான் செய்யவில்லை என்றால், நீங்களாவது செய்யக்கூடாதா என்று மக்கள் எங்களைப் பிடித்துக் கொள்கிறார்கள். அவர்களுக்கு பதில் சொல்ல முடியவில்லை. எங்களை எப்படிவேண்டுமானாலும் வைத்து வேலை வாங்குங்கள். ஆனால் அவர்கள் இம்மாதிரி எங்களைப் பார்த்துக் கேட்கக்கூடிய அளவுக்கு விட்டுவிடாதீர்கள். நாங்கள் நிலைமையை சொல்லுகிறோம். இருந்தாலும் மக்கள் கேட்பதில்லை. அவர்களால் தான் முடியவில்லை, ஏன் நீங்களாவது செய்யக்கூடாது (குறுக்கீடு) காங்கிரஸ்காரர்கள் தான் செய்யவில்லை, ஏன் நீங்களாவது செய்யக் கூடாது என்று கேட்கிறார்கள். அந்த நிலையில் மறுபடியும் மக்கள் எங்களைக் கேட்க வைத்துவிடாதீர்கள் என்று மறுபடியும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். தலைவர் அவர்கள் 2, 3 தடவை





மணி அடித்து என்னை நிறுத்தி விட்டார்கள். இன்னும் சில விஷயங்களைப்பற்றி சொல்லவேண்டியிருக்கிறது. இருந்தாலும் பாதகம் இல்லை. அதிகமாகச் சொல்லிக்கொண்டிருந்தால், அந்த வேலைகள் நடக்காது என்று சொல்லுகிறார்கள், நான் சுருக்கமாகத் தான் சொல்லியிருக்கிறேன். ஆகவே, அந்தக் காரியங்களையாவது செய்துதரவேண்டும், வருகிற அறிக்கையில் அந்தக் காரியங்கள் செய்யப்பட்டுவிட்டன என்று குறிப்பிடப்பட்டிருந்தால் நலமாக இருக்கும் என்று சொல்லிக்கொண்டு, எனக்குப் பேசுவதற்கு வாய்ப்புத் தந்த தலைவர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

திரு. க. இராமமூர்த்தி: மாண்புமிகு தலைவர் அவர்களே, தமிழ் நாடு மின்சார வாரியத்தின் நிதிநிலை குறித்து அமைச்சர் அவர்கள் ஆற்றிய உரையை படித்தால், கடந்த காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் எவ்வளவு நல்ல முறையிலே இந்த மின்சார நிர்வாகத்தை நிர்வகித்து வந்திருக்கிறது என்பது தெரியவரும், அதற்கு அமைச்சர் அவர்களுடைய உரையைவிட மிகச் சிறந்த ஒரு சான்றிதழ் வேறு யாரும் கொடுக்க முடியாது. அவர்களுடைய அறிக்கையைப் படித்தால், கடந்த காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் செய்து முடித்த பல்வேறு திட்டங்கள் இன்றைய தினம் நல்ல முறையில் எப்படி மக்களுக்கு பயன் அளித்து வருகின்றன என்பதைச் சொல்கிற அளவுக்கு அது அமைந்திருக்கிறது. குறிப்பாக காங்கிரஸ் சர்க்கார் மூலமாக என்று சொல்லவில்லை என்றாலும் கூட, இன்றைக்கு இருக்கிற நிலையில் அமைச்சர் அவர்கள் சொல்லிய முறையில் கடந்த காலத்தில் காங்கிரஸ் சர்க்கார் ஒரு சிறந்த நிர்வாகத்தையும், நிர்வாகியையும் ஏற்படுத்தி, அந்த நிர்வாகத்தையும் நிர்வாகியையும் இன்றைக்கு உள்ள சர்க்காரிடம் மிகப் பெருமையோடு விட்டுச் சென்றிருக்கிறது. அந்த முறையிலேயே மறுபடியும் அவர்கள் திரும்பி எங்களிடம் திருப்பித்தர வேண்டும் என்று சொல்லிக்கொள்வதால் நான் பெருமைபடுகிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே அமைச்சர் அவர்கள் ஓரிரண்டு விஷயங்களைக் குறிப்பிட்டிருக்கிறார்கள். அவர்கள் குறிப்பிட்ட சிலவற்றிலே ஒன்றைப்பற்றி நான் என்னுடைய கவலையைத் தெரிவிக்கவேண்டியிருக்கிறது. விவசாயிகளுக்குத் தரப்படுகிற மின்சாரக் கட்டணத்தைப் பற்றி சொல்கின்ற நேரத்தில், அது மிகவும் குறைந்தது, அதற்காக ஆகின்ற செலவு அதிகம். ஆகவே, விவசாயிகளைப் பொறுத்தவரையில் யூனிட்டுக்கு இப்பொழுது இருக்கிற விகிதத்தைவிட இன்னும் அதிகப்படியான விகிதத்தில் தரலாம், ஆனாலும் அதை நான் இப்பொழுது அதிகரிக்க முன்வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். 'ஆனாலும்' என்று சொல்லியிருப்பதால், அதில் பயங்கரமான பொருள் இருக்கிறது. இப்பொழுது கட்டணத்தை உயர்த்துவதற்கு முன்வரவில்லை என்ற

அமைச்சர் அவர்கள் சொல்லியிருந்த போதிலும், பின்னாலே வருங் காலத்திலே, இந்த ஆண்டு இல்லாவிட்டாலும், அடுத்த ஆண்டிலே அந்தக் கட்டண விகிதம் உயர்த்தப்படலாம் என்ற ஒரு சந்தேகம் இருக்கிறது. அந்த சந்தேகத்தைப் போக்குகிற அளவுக்கு அமைச்சர் அவர்கள் உறுதி அளிக்க வேண்டும். இந்தக் கட்டணம் இன்னொரு முறை உயர்த்தப்படமாட்டாது என்று உறுதி கூற வேண்டும். கட்டணத்தைக் குறைப்பதற்கு அமைச்சர் அவர்கள் முயல வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். காரணம், இந்த நாட்டிலே விவசாயம் தான் மிகவும் அதிகமாக செலவு செய்து, குறைந்த வருமானம் தருகிற ஒரு தொழில். இப் பொழுது உள்ள சர்க்காருக்குத் தெரியும். இப்பொழுது நெல்லுக்கு நிர்ணயிக்கப்பட்டிருக்கிற விலை மிகவும் குறைவானது. நஷ்டத்தில் பயிர் செய்து இந்த நாட்டிற்குத் தந்து கொண்டிருக்கிற விவசாயி களுக்கு மின்சாரக் கட்டணம் குறைந்த அளவிலே கொடுக்கிற ஒரு நிலையை இந்தச் சர்க்கார் உறுதிப்படுத்த வேண்டும். எப்படிப்பட்ட நிலை ஏற்பட்டாலும், எந்த நேரத்திலும் விவசாயிகளைப் பொறுத்த வரையில், மின்சாரக் கட்டணம் உயர்த்தப்படக் கூடாது, வருங் காலத்தில் அதைக் குறைப்பதற்கு முயல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின் சாரக் கட்டணத்தை வசூலிக்கலாம் என்ற ஒரு திட்டம் வகுக்கப் படுவதாக செய்திகள் கிடைத்திருக்கின்றன. இதில் இருக்கிற ஒரு மிகப் பெரிய சிக்கல் என்னவென்றால், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை மின்சாரக் கட்டணம் செலுத்துவதன் காரணமாக, ஏறத்தாழ 1,500 பேர்களுக்கு அதிகமாக மின்சார இலாகாவி லிருந்து வேலையில்லாமல் வீட்டிற்கு அனுப்பப்படுவார்கள். அந்த நிலை ஏற்படும். இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை பணம் கட்டுவது என்பது மற்ற தொழில்களில் இருப்பவர்களுக்கும், மில் களுக்கும் பொருந்தும் என்றாலும் கூட ஏழை விவசாயிகளுக்கு அது உதவியாக இருக்காது. இப்படிப்பட்ட நிலை ஏற்பட்டால், மாத மாதம் கொஞ்சம் பணம் கட்டிக் கொண்டிருந்த நிலை மாறி, இரண்டு மாதங்களுக்கு ஒரு முறை அதிகமாகப் பணம் செலுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. விவசாயிகள் அதிகமாகப் பணம் சேர்த்து வைக்கக்கூடிய நிலைமையில் இல்லை. அப்படித் தான் அவர் களுடைய பொருளாதார நிலைமை இருந்து கொண்டிருக்கிறது. கட்ட வேண்டிய நேரத்தில் பணம் கிடைக்காமல், பணத்தைச் சேர்த்துக் கட்ட முடியாமல், இருக்கும் பணத்தையும் செல வழித்துவிட்டு, முழித்துக் கொண்டிருப்பார்கள். ஆகவே, இந்தத் திட்டத்தை கைவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மின்சாரக் கட்டணத்திற்கு பில் வருகிறது. அதைப்பற்றி நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். என்னுடைய தொகுதியிலே, என்னுடைய தாலுகாவிலே தவறாக பில்கள் தயாரிக்கப்பட்டு வரு கின்றன. அதாவது ஒரு விவசாயி ஒரு பம்பு செட்டுக்கு ரூ. 40, 50



கட்ட வேண்டுமென்றால், யூனிட் சார்ஜ் அதிகமாகப் போடப்பட்டு பில் வருகிறது. ஒரு குறிப்பிட்ட விவசாயி ரூ. 40 கட்டுவதற்குப் பதிலாக ரூ. 300 கட்ட வேண்டும் என்று பில் தரப்பட்டது. அதிலே இருக்கிற சங்கடம் என்னவென்றால், மற்றத் துறைகளில் இல்லாத மின்சாரத் துறையில் இருக்கிற சங்கடம் என்னவென்றால், பில்லில் உள்ள தவறைத் திருத்த வேண்டுமென்றால், விவசாயி முதலில் பணத்தைக் கட்டிவிட்டு, பிறகுதான் மேலதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டிய நிலை இருக்கிறது. இதனால் விவசாயிகள் மிகுந்த கஷ்டத்திற்கு உள்ளாகிறார்கள். இம்மாதிரி பில்களில் தவறுகள் நேறுவது நீக்கப்பட வேண்டும், இதில் பொதுமான கவனம் செலுத்தப்படவேண்டும். தவறுக்குக் காரணமாக இருப்பவர்கள்மீது உடனடியாக கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும். அவ்வாறு செய்தால் விவசாயிகளுக்கு நன்மை பயக் கக்கூடியதாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இப்படிப்பட்ட சில நிகழ்ச்சிகளைப்பற்றி எங்களுடைய வட்டாரத் தாலுகா அதிகாரியிடமும், கலெக்டர் அவர்களிடம்கூட எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

அடுத்தபடியாக, விவசாயிகளுக்கு குறைந்தபட்சம் இவ்வளவு கட்டணம் கட்ட வேண்டும், செக்யூரிடி டெபாசிட் கட்ட வேண்டும் என்ற நிலை இருக்கிறது. செக்யூரிடி டெபாசிட் கட்டினால்தான் மின்சார மோட்டார் கிடைக்கும். அது கிடைத்த பிறகு ஆண்டு ஒன்றுக்குக் குறைந்த அளவு கட்டணம் கட்டியாக வேண்டும் என்ற ஒரு நிர்ணயம் இருக்கிறது. விவசாயிகளைப் பொறுத்த அளவிலே தண்ணீர் இறைப்பதற்குத்தான் அவர்களுக்கு மின்சாரம் தேவைப்படுகிறது. அவர்கள் எந்த அளவுக்கு உபயோகப்படுத்த முடியுமோ அந்த அளவுக்கு உபயோகப் படுத்துவதற்கு தவறுவது இல்லை. அந்த அளவுக்கு அவர்கள் மின்சாரம் உபயோகப்படுத்துகிற அவசியம் ஏற்படாவிட்டால், குறைந்த அளவுக்கு மின்சாரம் உபயோகப்படுத்தியிருந்தாலும், அதிகப்படியான பணம் தர வேண்டும் என்று சொல்வது முறை யாகாது. ஆகவே, குறைந்தபட்ச கட்டணம் கட்ட வேண்டும், செக்யூரிடி டெபாசிட் கட்ட வேண்டும் என்ற இரண்டு நிலைகளையும் விவசாயிகளைப் பொறுத்தவரையில் நீக்கிவிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய தொகுதியைப் பொறுத்த வரையிலும், இன்னொரு பெரிய நன்றியை இந்தக் கழகத்திற்குச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த நவம்பர் மாதம் அடித்த புயலால் மிக அதிகமாகப் பாதிக்கப்பட்டது திண்டிவனம் பகுதி தான். அங்கே மின்சாரக் கம்பங்கள், இரண்டு மூன்று என்று முறிந்து, பழுது பட்டுப் போயின, இவையெல்லாம் மறுபடியும் அமைக்கப்படுமா என்று சந்தேகப்பட்டுக் கொண்டு இருந்தோம். ஆனால், அதே நேரத்திலே அந்த இலாகாவைச் சேர்ந்த பெரிய பெரிய அதிகாரிகளும், ஏன், தலைவரவர்களே கூட, திண்டிவனத் திற்கு வந்து, ஒரு வார காலத்திற்குள்ளாக எல்லாவற்றையும்

புனரமைப்பு செய்திருக்கிறார்கள். அதற்கு நாங்கள் அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம். அப்படிப்பட்ட நிகழ்ச்சிகள் எங்கள் ஆட்சி காலத்தில் நடந்தது என்பதையும், அதே முறையில் இந்த ஆட்சியிலும் அவர்கள் செயல் பட்டு வருகிறார்கள் என்றும் சொல்லி இந்தத் துறையினரைப் போற்றிப் பாராட்டுகிறேன்.

நான் ஒன்று சொல்ல விரும்புகிறேன். போதுமான அளவிற்கு, பல்புகள் கிடைக்காததால், கஷ்டங்களை அனுபவிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். போதுமான பல்புகள் கிடைக்க வில்லை என்று சொல்லும்போது, ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். இந்தியாவிலேயே, மற்ற மாநிலங்களைவிட நம் மாநிலம் தான் மின் சாரத்துறையில் முன்னேறியிருக்கிறது. அதற்கு ஈடான முறை யில், இந்த பல்பு போன்றவைகளையும் நாமே உண்டாக்குவதிலும் நாம் முன்னேற்றம் காண வேண்டும். அதற்கான வகையிலே அரசாங்கம் வேறு சாக்குகள் சொல்லாமல், அப்படிப் பட்ட பல்புகளை நாமே உற்பத்தி செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவி, நமக்கு ஏற்பட்டிருக்கும் பற்றாக்குறையைத் தீர்க்க வேண்டும் என்று கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

என்னுடைய திண்டிவனம் தாலுகாவைப் பொறுத்தவரையில், எனக்கு முன்பாகப் பேசிய, என் தொகுதியைச் சார்ந்த திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் மாண்புமிகு திரு. பாலகிருஷ்ணன் குறிப்பிட்டது போல, அங்கே தனியாக ஒரு சப்-டிவிஷன் வேண்டும். அப்படிப் போட வேண்டும் என்று மின்சாரத் துறை யில் சிபாரிசுகள் செய்யப்பட்டு, கொள்கையளவில் ஏற்றுக் கொள்ளப்பட்டு, பொருளாதார நிலை காரணமாக கைவிடப் பட்டி ருப்பதாகத் தெரிகிறது. அந்தப் புதிய அமைப்பு அவசியம் என் பதை உணர்ந்து, அங்கே உள்ள விவசாயிகளுக்கு இந்த அமைப் பின் மூலம் நன்மை ஏற்படும் என்று கவனத்தில் கொண்டு, செல வைப் பொருட்படுத்தாமல், திண்டிவனம் பகுதிக்கு ஒரு தனி சப்-டிவிஷன் அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். அதோடு, அந்தப் பகுதியில் பெருவாரியான கிராமங்கள், மின்சாரம் இல்லாத கிராமங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட கிராமங் களுக்கும் உடனடியாக மின்சாரம் கொடுத்து அவற்றின் தேவைகளையும் பூர்த்தி செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நம்முடைய சர்க்கார் தனியார் நிறுவனங்களை எடுப்பதாக அறி வித்தும், அந்த வகையில் உடனடியாக எடுக்காததன் காரணமாக, போதுமான அளவு அவர்கள் அபிவிருத்தி வேலைகளில் அக்கறை காட்டுவதில்லை. வருங்காலத்தில் நிலைமை எப்படியாயிருக்குமோ என்று எண்ணி அவர்கள் செலவு செய்து பணிகளை மேற்கொள்ள விரும்பவில்லை. 'நாம் ஏன் செலவு செய்ய வேண்டும்' என்று சும்மா இருந்து விடுகிறார்கள். அதன் காரணமாக விவசாயிகள் மின்சாரத்தை அனுபவிக்க முடியாமல் மிகவும் பாதிக்கப்பட்டிருக் கிறார்கள். ஆகவே, இந்தச் சிக்கல் தீர, இந்தச் சர்க்கார் காலந்



தாழ்த்தாமல், இப்படிப்பட்ட நிறுவனங்களை, இந்தக் காலவரைக் குள் எடுப்போம் என்று தெளிவாக வரையறுத்துச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இன்றைக்கு மின்சாரத்தை உற்பத்தி செய்யும் நிலையில் தேவைக்கு அதிகமாகவே மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. அதே நேரத்திலே, விவசாய உற்பத்திக்கு முழுக்க முழுக்க அனுபவிக்க முடியாத நிலையில் இருக்கிறது. உற்பத்தியாகும் மின்சாரம் முழுவதையும் உபயோகிக்க முடியாத நிலைமை இருக் கிறது. ஆளும் கட்சி அங்கத்தினர்களே குறிப்பிட்டதைப் போல, ஒரு தலை சிறைந்த நிர்வாகியின் கீழ், ஒரு தலை சிறந்த நிர்வாகம் இயங்குகிறது. அதற்கு அதிகமாகப் பணம் கொடுத்து, மின்சார விஸ்தரிப்புக்கு உதவி செய்து, நம் மக்களுக்கு நல்லது செய்து உதவ வேண்டும் என்று கேட்டுக் கொண்டு முடிக்கிறேன்.

* **திரு. ஆர். நாகசுந்தரம்**: தலைவர் அவர்களே, சென்ற சில ஆண்டுகளாகவே, ஒவ்வொரு ஆண்டும், மின்சாரத் தட்டுப்பாடு வந்து நாட்டிலே உள்ள ஆலைகள் அனைத்தும் மூடப்பட்டு, சினிமாக் கொட்டகைகள் மூடப்பட்டு, விவசாயிகளும் பாதிக்கப்படும் நிலை மையும், பொதுமக்கள் அவதிப்படும் நிலைமையும் இருந்து வந்திருக் கிறது, என்பதை நாடு அறியும். இந்த அமைச்சரவை பதவி ஏற்ற பிறகு, இயற்கையின் ஒத்துழைப்பின் காரணமாக தட்டுப்பாடு இல்லாமல் பொதுமக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள். அதுமட்டு மல்லாமல், இங்கே அமைச்சரவர்களும், வரும் ஆண்டு கூட, தட்டுப் பாடு இல்லாத வகையில் நடவடிக்கைகள் எடுக்கிறோம் என்று குறிப்பிட்ட செய்தி, நாட்டுக்கு தேனென இனிக்கும் செய்தி யாகும். நண்பர் திரு. முருகையன் அவர்கள் குறிப்பிட்டது போல, இந்த மின்சாரக் கழகம் நல்ல வகையில் இயங்கி வருகிறது என்றாலும் கூட, அதிலே உள்ள ஒரு சில குறைபாடுகளை நீக்கி விட்டால், நூற்றுக்கு நூறு நல்ல அளவிலே அது பணியாற்ற முடியும் என்ற அளவிலே நானும் ஒருசில குறைகளைக் குறிப்பிட விரும்புகிறேன்.

பொதுத் துறையில் செலவிடப்படும் ஒவ்வொரு ரூபாயும், சொந்தப் பணத்தைச் செலவிடுவது போல நினைத்துச் செலவு செய்யப்பட வேண்டும், என்பதில் கருத்து வேற்றுமை இருக்க முடியாது.

கொள்ளிமலை ஹைட்ரோ எலெக்ட்ரிக் ஸ்கீம், இன்வெஸ்டிகேஷன் எல்லாம் முடிந்துள்ளது. அதனை அவசரமாக செயல் படுத்த முனைந்தால், ஒரு பெரும் அளவில் மின்விசை கிடைக்கும். மேட் டூரிலிருந்து, திருச்சி, தஞ்சைக்குப் போகும் மின்சாரம், வேறு பல தொழில்களுக்கும் பயன்படும் நிலையில் இருக்கும். ஆகவே, அந்தத் திட்டத்தை உடனடியாக அமல் படுத்த வேண்டுமென்று கூறிக் கொண்டு இன்னொன்றையும் குறிப்பிட விரும்புகிறேன்.

[திரு. ஆர். நாகசுந்தரம்] [1967 நவம்பர் 25

சிற்சில இடங்களில், விவசாயத்திற்கு இரவு நேரத்தில்தான் கரண்ட் கொடுக்கிறார்கள், பகலில் கொடுப்பதில்லை. அதைச் சரியாகப் பயன்படுத்த முடியாத அளவில் விவசாயிகள் இருக்கிறார்கள். ஆகவே, அப்படிப்பட்ட கட்டுப்பாட்டை அகற்றிவிட்டு, எந்த விதமான கட்டுப்பாடும் இல்லாமல் விவசாயிகளுக்கு மின்விசை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன். இன்னும், விவசாயத்திற்கு இலவசமாகவே மின்விசையைக் கொடுக்கலாம். செமண்ட், சர்க்கரை போன்ற ஆலைகளுக்கு அதிகமாகச் சார்ஜ் செய்து விட்டு, விவசாயத்திற்கு இலவசமாகக் கொடுத்தால், விவசாய உற்பத்தி நல்ல அளவில் நடைபெற உற்சாகமும், ஊக்கமும், அளித்ததாக இருக்கும்.

நம்முடைய மின்சாரக் கழகத்தில், 1965-66-ம் ஆண்டுக் கணக்கில் ஏறத்தாழ 15 கோடி ரூபாய்க்கு மின்சார சாதனங்கள் வாங்கி, மழையில் நனைந்து துருப்பிடித்து வெயிலில் காய்ந்து, அந்த சாமான்களைப் பயன் படுத்த முடியாமல் போயிருக்கிறது. அப்படிச் செய்யாமல் தேவையான சாமான்களை மட்டும் வாங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

அண்மையில் 50 மைல் டவர் லைன் கன்ஸ்ட்ரக்ஷன் செய்ய, அதற்காக செகோஸ்லோவேகியாவிலிருந்து இன்ஸுலேட்டர்கள் வாங்கி இருக்கிறார்கள். அந்த இன்ஸுலேட்டர்கள் சரியாக இல்லாமல் போய், மறுபடியும் ஜப்பானிலிருந்து வேறு இன்ஸுலேட்டர்கள் வாங்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இதனால் இரட்டைச் செலவு ஏற்பட்டிருக்கிறது.

இன்னொன்று, 'ஓர்க்ஸ் ஆர்டர் க்ளோசிங்' லே, ஒவ்வொரு முறையும் வேலைக்குக் கிடங்கிலிருந்து அதிகமான சாமான்களைப் பெற்றுக் கொண்டு, கடைசியாக எப்படியோ, ஓர்க்ஸ் ஆர்டரை க்ளோஸ் செய்திருக்கிறார்கள். அதனால் விரயம் அதிகமாவதாகச் சொல்லப்படுகிறது. இதை மின்சாரக் கழகம் கவனிக்க வேண்டும். ஒவ்வொரு ஆண்டுக்கும் தேவையான சாமான்களை மட்டும் வாங்காமல், அதிகமாக சாமான்கள் வாங்குவதால், துருப்பிடித்தும், மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் சேதம் ஏற்படுகிறது. மின்சாரக் கழகம் அதையும் கவனித்து, அவற்றைத் தவிர்க்க வேண்டும்.

பிற். மணி. 5-00

அடுத்து, அசிஸ்டெண்டு அட்மினிஸ்ட்ரேஷன் என்ற ஒரு பதவி இந்த மின்சாரக் கழகத்தில் இருக்கிறது. அது தேவையற்ற பதவி. அதனால் எந்தவிதமான நல்ல பயனும் ஏற்படவில்லை. மேல் அதிகாரிக்கும், கீழ் சிப்பந்திகளுக்கும் இடையே நல்லவிதமாக செயல்படுத்தப்பட வேண்டிய பதவி. எந்த நிலையிலும் அந்தப் பதவி தேவையற்ற பதவியாக இருந்து வருகிறது. அதனால் நல்ல சூழ்நிலை ஏற்படவில்லை.

மேலும் டெம்பரரி கேஷுவல் லேபர்ஸ் என்ற அளவில் ஏராளமாகச் செலவு செய்யப்படுகிறது. இதை நல்ல விதத்தில் கண்காணிக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1967 நவம்பர் 25] [திரு. ஆர். நாகசுந்தரம்]

முன்பெல்லாம் எலெக்ட்ரிசிடி ஜீப்கள் எல்லாம் சினிமாக் கொட்டகைகளிலும், மீன் மார்க்கெட்டிலும் இருப்பதாகச் சொல்லி வந்தோம், இப்போதுகூட அப்படி சில ஜீப்கள் இருந்து வருகின்றன. அதிகாரிகள் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும். பெட்ரோல் தண்ணீர் போல உபயோகப்படுத்தப்படுகிறது. ஒரு அதிகாரிக்கு மட்டும் ஒரு ஜீப்புக்கு 2 ஆயிரம் ரூபாய்க்குமேல் அதிகமாக பெட்ரோல் செலவு ஏற்படுகிறது என்பதை அறியும் போது உள்ளபடியே வேதனையாக இருக்கிறது. அரசாங்கம் அதனைக் கொஞ்சம் கவனிக்க வேண்டும். அதிகாரிகளும் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும்.

அடுத்து, எல்.டி. மீட்டர்கள் பொருத்தப்பட்டவுடனேயே ரிப்பேர் ஆகி விடுகிறது. எதையாவது சார்ஜ் செய்து பணம் வாங்கிக் கொண்டு விடுகிறார்கள். இதனால் பணம் அதிக விரயமாகிறது. மின்கழக பாலன்ஸ் ஷீட் Commercial முறையில் தயாரிக்கப்படவில்லையென்று அக்கவுண்டன்ட் ஜெனரல் குற்றம் சாட்டியிருக்கிறார்கள். பாலன்ஸ் ஷீட் Commercial முறையில் போடுவதால் எலெக்ட்ரிசிடி போர்டுக்கும் ஆதாயமாக இருக்கும், அதை அதிகாரிகள் பரிசீலனை செய்ய வேண்டும்.

கடைசியாக, அண்டை மாநிலமான கேரளாவில்கூட தொழிலாளர் பிரதிநிதி ஒருவரை போர்டுக்கு நியமித்திருக்கிறார்கள். இங்கும் தொழிலாளர்கள் சார்பில் ஒரு பிரதிநிதியை போர்டுக்கு நியமிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த அளவில் எனக்கு வாய்ப்பளித்தமைக்காக என்னுடைய நன்றியைத் தெரிவித்துக் கொண்டு என் உரையை முடித்துக்கொள்கிறேன்.

திரு. மு. சின்னசாமி: தலைவர் அவர்களே, தொழில் அமைச்சர் அவர்கள் இந்த மன்றத்தில் வைத்திருக்கின்ற மின்கழக நிதிநிலை அறிக்கையின்மீது என்னுடைய கருத்துக்களைச் சொல்ல வாய்ப்பளித்தமைக்கு நன்றிகலந்த வணக்கத்தை முதலிலேயே தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

கடந்த இரண்டு நாட்களாக அனைத்துக் கட்சி நண்பர்களும் பேசிய பிறகு என்னுடைய கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். உதாரணமாக, ஒரு சிறிய ஸ்தாபனத்தின் நிர்வாகம் ஆரம்பத்தில் சீராகவும் செம்மையாகவும் இருக்க வாய்ப்பு ஏற்படுகிறது. மின்சாரக் கழகம் தமிழகம் பூராவுக்கும் சக்திவாய்ந்த மாபெரும் ஸ்தாபனமாக பரந்து விரிந்து இருக்கிறது. எவ்வளவுதான் அறிவும் ஆற்றலும், சக்தியும் படைத்த தலைமை இருந்தாலும், இவ்வளவு பெரிய ஸ்தாபனத்தில் கீழ்மட்டத்தில் இருப்பவர்களால் தான் ஆங்காங்கே வியாதிகள் ஏற்பட்டுவிடுகின்றன. இந்த அமைப்பிலே மேல் மட்டத்தில் இருக்கக்கூடிய அதிகாரத்தைக் கொஞ்சம் குறைத்து, மாவட்ட ரீதியாக சிறு சிறு அமைப்புக்களாக உருவாக்கிவிட்டால் அத்தகைய தவறுகள் ஏற்படாது என்று என்னுடைய கருத்துக்களைச் சொல்லிக்கொள்கிறேன். பொதுத் துறையிலிருந்து உற்பத்தியாகின்ற இந்த மின்சார விசையிலே சுமார் 17 விழுக்காடு மின்சாரம் எங்கோ திருடு போய

விடுகிறதென்று அதிகார பூர்வமான அறிக்கையைக் கொடுத்திருப்பதைப் பார்க்கும்போது உள்ளபடியே மிக்க வேதனையாக இருக்கிறது. 17 சதவீதம் எங்கோ போய்விடுகிறதென்றால், இந்தக் கேள்வியை நாட்டைப் பார்த்துக் கேட்பது மட்டுமல்ல— நம்மை நாமே கேட்டுக்கொள்ள வேண்டிய நிலையில் இருக்கிறோம்.

என்னுடைய தொகுதியில் உள்ள வியாபாரப் பெருமக்கள் தங்களுடைய திறமையின் காரணமாக எப்படி மின்சாரத்தை உபயோகப்படுத்துகிறார்கள் என்பதைப்பற்றி அறிந்துகொள்ள வேண்டும். அதற்கான அதிகாரபூர்வமான செய்தி என்னிடம் உள்ளது. மின்சார போர்டு தனக்கிருக்கும் அதிகமான பொறுப்பின் காரணமாக இந்தக் குற்றங்களை அறிந்து உடனடியாக அகற்ற முடியவில்லை. இந்த மாதிரியான குற்றங்களை உடனே கண்டுபிடித்து மேலும் பரவாமல் தடுத்து நிறுத்த வேண்டும். இந்தப் பொறுப்பு மின்சார போர்டினுடைய அதிகாரத்திற்குட்பட்டது. மாநில அரசும், மின்சார போர்டும் விரும்பினால் தனிப்பட்ட ஒரு போலீஸ் நிறுவனத்தையே வைத்து அத்தகைய குற்றங்களைக் கண்டுபிடிக்கலாம். பொறுப்புள்ள அதிகாரத்திலுள்ள பெரியவர்கள் இந்த யோசனையை அருள்கூர்ந்து சிந்தித்துப் பார்க்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

என்னுடைய தொகுதியான ஈரோட்டுக்கு அடுத்து காவேரிக் கரையோரத்தில் சிறிய மின்சாரக் கம்பெனிகள் இருந்து கொண்டிருக்கின்றன. இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குமுன், மின்சாரம் திருடு போவதைக் கண்டுபிடிக்க இந்த நிர்வாகம் தெருவிலே இருந்த கம்பத்தின்மீது மீட்டர்களைப் பொருத்தி வைத்து, திருட்டைக் கண்டு பிடித்தது, மின்சார போர்டில் இருப்பவர்களுக்கு நன்கு தெரியும், 17 விழுக்காடு திருடுபோவதை முதலில் தடுத்து நிறுத்தியாக வேண்டும். அதைத் தடுத்து நிறுத்தினால் சுமார் 10 அல்லது 12 கோடி ரூபாய் வருவாய் வரும் என்று கூறுகிறேன்.

கிராமங்களிலே சுமார் 9 லட்சம் கிணறுகள் இருக்கின்றன. அதில் 3 லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்பு வசதி செய்து கொடுத்திருக்கிறார்கள். இன்னும் 6 லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்பு வசதி செய்து கொடுத்தாக வேண்டும். மேலும் ஒரு கிணறுக்கு மின் இணைப்புத் தருவதற்கு 2,500 ரூபாய் வரையில் தேவைப்படுகிறது. இன்னும் 6 லட்சம் கிணறுகளுக்கு மின் இணைப்புக் கிடைத்த பிறகுதான் விவசாயப் பெருமக்கள் பூரண நிம்மதியுடன் இருக்க முடியும், உணவு உற்பத்தியையும் பெருக்க முடியும். ஒரு கிணறுக்கு 2,500 ரூபாய் என்று கணக்குப் போட்டு, 6 லட்சம் கிணறுகளுக்கு என்று 2,500-ஐ 6 லட்சத்தால் பெருக்கி வரும் தொகையைப் பார்க்கும்போது நமக்கு உண்மையிலேயே மயக்கம் வருகின்ற தொகையாக இருக்கின்றது. ஆகவே நாம் முதலில் செய்தாகவேண்டியது அந்த 17 சதவீதம் திருடுபோவதைத் தடுத்து நிறுத்தியாக வேண்டும் என்பதேயாகும். இரண்டாவதாக, இந்த அமைப்பின் மேல்மட்ட அதிகாரத்தைக் கொஞ்சம் குறைத்துப் பரவலாகச் செய்தால் இந்தக் குற்றங்களை அறவே நீக்க முடியும்.



மின்சாரக் கட்டணத்தைப் பற்றிக் கருத்துப்பரிமாற்றங்கள் நடந்தது. விவசாயிகளுக்கு தரப்படும் மின்சாரக் கட்டணம் அதிகம் என்றுகூட நான் சொல்வேன். கோடிக்கணக்காக, லட்சக்கணக்காக லாபம் சம்பாதிக்கக்கூடிய பெரிய பெரிய கம்பெனிகளுக்கு நாம் 1 பைசா, 1-3/4 பைசா, 2 பைசா என்று கொடுத்துக் கொண்டு வருகிறோம். சர்வ கட்சிகளும் ஒன்றுகூடி விவசாயிகளுக்குக் கொடுக்கக்கூடிய கட்டணத்தைக் குறைத்து, பெரு லாபம் சம்பாதிக்கக்கூடிய முதலாளிகளுக்குக் கட்டணத்தைக் கூட்ட வேண்டும். தொழிற்சாலைகளுக்குத் தரப்படும் மின்சாரத்தின் கட்டணத்தைக் கூட்டினால் அது தொழில் வளர்ச்சிக்கு ஆக்கம் தருவதாகாது என்று சிலர் அபிப்பிராயப்படலாம். கம்பெனிகளுக்கு ஒரு பைசா என்று தருவதை விவசாயிகளுக்கும் அதே விகிதத்தில் தர வேண்டுமென்பதில் கருத்துவேற்றுமை இருக்க முடியாது என்பதை இந்த நாடும் நல்லவர்களும் அறிந்திருக்கிறார்கள். மின்சாரக் கழகத்தில் இருக்கக்கூடிய பெரியவர்கள் இதை உணர்ந்து விவசாயிகளுக்கு ஊக்கமளிக்க வேண்டும். அப்போதுதான் உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். என்னுடைய ஆசையெல்லாம் இந்த மின்சார போர்டுக்கு அதிகப்படியான பணம் தேவை என்பதுதான். நான் மின்சார போர்டு நிர்வாகத்தில் தொடர்புள்ளவன் என்ற முறையிலே இதைச் சொல்லுகிறேன். எவ்வளவுக்கெவ்வளவு அதிகப்படியான பணம் இந்த போர்டுக்குக் கிடைக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு விரைவில் அதிகமாக உணவு உற்பத்தியைப் பெருக்க முடியும். இதில் வேலை செய்யும் ஐம்பதாயிரம் தொழிலாளர்களும் உறுதுணையாக இருந்து பணிபுரிகின்ற காரணத்தால் விரைவில் அதிக வசதிகளை மக்களுக்குச் செய்து தரமுடியும். மின்சாரக் கழகத்தின் அமைப்பு முறையைக் கொஞ்சம் மாற்றியமைத்தாக வேண்டும்.

உதாரணமாகச் சொல்வேன். இப்போது ரெவின்யூ வட்டம் இருக்கிறது. கோவை, மதுரை, சேலம், திருச்சி என்பதாக சாதாரண மக்களுக்கும் தெரிந்த இந்த ரெவின்யூ வட்ட அடிப்படையில் மின்சார போர்டாரும் தங்கள் வட்டங்களை மாற்றி அமைத்துக் கொண்டாக வேண்டும். ஆரம்ப காலத்தில் இப்போதுள்ள முறை சரியாக இருக்கலாம். இப்போது மின்சார போர்டும் மாநிலம் பூராவும் பரவலாகச் செயல்பட்டுக் கொண்டு வருவதனால் ரெவின்யூ வட்ட அடிப்படையிலேயே மாற்றி அமைத்தாக வேண்டும். பொதுமக்களுக்கும் இதுதான் வசதியாக இருக்கும். இன்றைக்கு ஒரு சட்டமன்றத் தொகுதியை எடுத்துக் கொண்டால் ஒரு கிராமத்து விவசாயி மேட்டூருக்குப் போக வேண்டும். அந்த கிராமத்திற்கு ஐந்து மைல் தள்ளி இருக்கக்கூடிய ஒரு விவசாயி கோயம்புத்துருக்குச் செல்ல வேண்டும், மின்சாரக் கழக அலுவலகத்தோடு தொடர்பு கொள்ள என்று இருப்பது சரியல்ல. இன்றைய தினம் கிராமத்தில் உள்ள விவசாயிகள் எப்படி படிக்காதவர்களும் கூட கலெக்டர் காரியாலயத்தோடு தொடர்பு கொள்கிறார்களோ அதேபோல மின்சார போர்டின் அலுவலகமும் ரெவின்யூ வட்ட அடிப்படையிலேயே இருந்தால் ஒருவருக்கொருவர் என்.ஜி.

ஆபீஸ் எது, டி.ஓ. ஆபீஸ் எது, எஸ்.இ. ஆபீஸ் எது என்று தெரிந்துகொண்டு நேரிலேயே சென்று காரியங்களைக் கவனித்துக் கொள்ள வழியேற்படும். ஆகவே அவசர உணர்ச்சியும், நிர்வாக ஆற்றலும் கொண்டு மின்சார போர்டு தலைவர் அவர்கள் உடனடியாக இப்படி ரெவின்யூ வட்ட அடிப்படையில் அலுவலகங்களைப் பிரித்து அமைக்க நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். ஒரு வேலை என்று எடுத்துக்கொண்டால் அவர் 24 மணி நேரத்தில் செயலாற்றக்கூடிய ஆற்றல் படைத்தவர் என்பது எனக்குத் தெரியும். என்னுடைய வட்டத்தில் ஆயிரத்து முந்நூறுக்கும் மேற்பட்ட பம்புசெட்டுகள் கனெக்ஷன் கொடுக்கப்படாமல் இருக்கிறது என்கிற தகவலை நான் சென்ற தடவை இங்கே குறிப்பிட்ட பின்னர் ஈரோடு வட்டத்தில் எப்படி விவசாயிகளைத் தேடித் தேடிச்சென்று கனெக்ஷன் கொடுக்கப்பட்டு வருகிறது என்பதை நான் அறிவேன். அதற்காக மகிழ்ச்சியும் அடைகிறேன். ஆனால் என்னுடைய வேண்டுகோள் இப்படி சட்டமன்ற உறுப்பினர், எதிர்க்கட்சித் தலைவர், அமைச்சர் என்று இவர்களைப் பார்த்த பிறகுதான் வேலை நடக்கிறது என்பது இல்லாமல் கடைகோடியில் இருக்கக்கூடிய விவசாயி ஒரு விண்ணப்பம் போட்டால் மின்சார போர்டார் அதற்கும் உடனடியாகக் கவனம் செலுத்துகிற நிலைமை வருகிறபோதுதான் என்னுடைய மகிழ்ச்சி தூய்மையான மகிழ்ச்சியாகும். அதற்கு எவ்வளவு பணம் தேவையானாலும் பரவாயில்லை. எதிர்க்கட்சித் தலைவர் அவர்களே பகிரங்கமாகக் குறிப்பிட்டிருக்கிறார்கள். பணம் அதிகமாக ஒதுக்கி, அதற்காக அதிகமான வரி போடுவது என்றாலும் எதிர்க் கட்சியினர், ஆளும் கட்சியினருக்கு உறுதுணையாக இருக்க ஒப்புதல் கொடுக்கிற நிலைமை இருக்கிறது. ஆகவே நிர்வாகம் பரந்து கிடக்கிறபோது எல்லாவற்றையும் மேல்மட்டத்திலேயே செய்வது என்கிற போது கீழ் மட்டத்திலே புரையோடிக் கொண்டிருக்கிறது. நான் குற்றம் சொல்வதற்காகச் சொல்லவில்லை. குறை காணவேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. கீழ் மட்டத்தில் புரையோடிக் கொண்டிருக்கிற ஆபத்து வந்துவிட்டது. நானும் மேல் மட்டத்தில் இருந்தால் இதை உணர்ந்து கொள்ள ஓராண்டாவது பிடிக்கும். வெளியே இருப்பதனால் ஏற்பட்டுள்ள ஆபத்தான நிலைமையை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆகவே கீழ் மட்டத்தில் ஏற்பட்டு வருகிற குறைபாடுகளை உடனடியாகக் களைய நிர்வாகத்தைச் சீரான முறையில் பிரித்தாக வேண்டும். ஒரு கண்காணிப்புப் படையை ஏற்படுத்தியாக வேண்டும். மேட்டூரில் எஸ்.இ. இருக்கிறார். நாணயமாகவும், நேர்மையாகவும் பணியாற்றுகிறார், பாராட்டுகிறோம். கீழ் மட்டத்தில் நடைபெறும் குறைபாடுகளை எடுத்துச் சொல்கிற போது, அவற்றை கவனிக்கவே நேரம் இல்லை, வேலை அவ்வளவு அதிகமாக இருக்கிறது என்கிறார். ஆக குற்றம் நடப்பது உண்மை என்பதை ஒப்புக் கொள்கிறோம். குற்றம் புரிகிறவர்களைக் கண்டு பிடிக்க இப்போதுள்ளவர்களுக்கு நேரம் இல்லை. ஆகவே கண்காணிப்புப்படைக்கு ஒரு லட்சம் செலவாகும் என்றாலும்கூட ஏற்படுத்தியாக வேண்டும். இன்றைக்கு 17 சதவிகிதம் மின்சாரம் திருட்டுப் போவதைத் தடுத்தாலேயே ஐந்து



லட்சம், பத்து லட்சம் மேலே கிடைக்கும். ஒரு லட்சம் இந்தக் கண்காணிப்புப் படைக்குச் செலவு செய்தால் தவறு ஆகாது. அவசரமாக, உடனடியாக இதைச் செய்தாக வேண்டும்.

ஆக மன்றத்தலைவர் மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன். முதலாவதாக மேல் மட்டத்தில் அதிகாரம் குவிந்து கிடப்பதைப் பரவலாக்க வேண்டும். இரண்டாவதாக ஆங்காங்கே ரெவின்யூ வட்ட அடிப்படையில் அலுவலகங்கள் அமைக்கப்பட்டாக வேண்டும். மூன்றாவதாக, தொழில் துறைக்கும், விவசாயத் துறைக்கும் விநியோகிக்கப்படுகிற மின்சாரக் கட்டண விகிதம் சமன் செய்யப்பட வேண்டும்,—இப்படிச் சொல்கிறபோது விவசாயிகளுக்கு இப்போதுள்ள ரேட்டைக் குறைக்க வேண்டுமென்று கூடச் சொல்லவில்லை. எனக்குத் தெரியும். ஒரு மின்சார மோட்டாருக்குக் கனெக்ஷன் கொடுக்க மின்சார போர்டுக்கு 2,500 ரூபாய்க்கு மேல்செலவாகிறது. இதில் ஒரு பகுதியை வேண்டுமானாலும் விவசாயிகள் கொடுக்க வேண்டுமென்றால் வசூலித்துக் கொடுக்க நான் தயாராக இருக்கிறேன். அடுத்து நான்காவதாக, கீழ் மட்டத்தில் புரையோடி வருகிற குறைபாடுகளைக் களைய கண்காணிப்புப்படையை ஏற்படுத்த வேண்டும். ஆக இந்த நான்கைந்து அம்சங்களை மின்சார போர்டார் கவனிக்க வேண்டுமென்று கேட்டு, எனக்கு இந்த வாய்ப்பினை அளித்த தலைவருக்கு நன்றி கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

■ திரு. நா. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தமிழகத் தொழில் அமைச்சர் கொண்டு வந்துள்ள தமிழ்நாடு மின்சாரக் குழுவின் 1967-68-ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கை மீது எனது கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். தமிழகத்தைப் பொறுத்தவரையில் மின்சாரத் துறையானது நல்ல அபிவிருத்தி அடைந்திருக்கிறது. அதற்கு மூலகாரணம் முந்திய காங்கிரஸ் ஆட்சி என்று சொன்னால் மிகையாகாது. குழுத் தலைவரும், தலைமைப் பொறியாளரும், அலுவலர்களும் சிறந்த முறையில் பணியாற்றி அத் துறையில் நாம் பெருமைப்படும்படியான வளர்ச்சியைக் கண்டிருக்கிறார்கள். அதற்காகப் பாராட்டுகிறேன். இப்போது கொடுக்கப்பட்டுள்ள அறிக்கையில் எண்ணூர் அனல் மின்சார நிலையம், கல்பாக்கம் அனல் மின்சார நிலையம், நெய்வேலி அனல் மின்சார நிலையம் ஆகியவை அமைக்கப்பட இருக்கிறது. இவற்றின் மூலம் 1970-71-இல் நமக்குத் தேவைப்படக்கூடிய அளவு மின்சக்தியைப் பெற முடியும் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது. இது வடக்கு மாவட்டங்களுக்கு குறிப்பாகத் தொழில் அபிவிருத்திக்குப் பயன்படும் என்றால் மிகையாகாது. இதே அடிப்படையில் தூத்துக்குடி அனல் மின்சார நிலையம் அமைக்கப்பட வேண்டும் என்பது வற்புறுத்தப்பட்டு, மத்திய அரசாங்கம் அதற்குச் சம்மதித்து நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த அறிக்கையில் அதுபற்றி சிறிதளவே காணப்படுகிறது. அது எப்போது துவக்கப்படும் என்ற குறிப்பு இல்லை. அமைச்சர் அவர்கள் தம் முடிவுரையில் அதுபற்றிக் குறிப்பிடுவார்கள் என எண்ணுகிறேன். தூத்துக்குடி துறைமுக அபிவிருத்தி வேலையோடு, தூத்துக்குடி

[திரு. நா. சௌந்தர பாண்டியன்] [1967 நவம்பர் 25

அனல் மின் திட்டத்தையும் எடுத்துக் கொண்டால் தான் அப்பகுதியில் தொழில்துறையில் நல்ல அபிவிருத்தி ஏற்பட வசதியாக இருக்கும். அடுத்து மின்சாரக் குழுவினர் விவசாயப் பெருமக்களுக்கு மீட்டர் கட்டணத்தைக் கூட்டியிருக்கிறார்கள். இந்த வாடகை மூலமாக ரூபாய் பத்து லட்சத்து ஐம்பதாயிரம் கிடைக்கும் என்று தெரிகிறது. முன்பு 25 பைசா என்று இருந்ததை 50 பைசா என்று உயர்த்தி இருப்பதன் மூலம் 21 லட்சம் ரூபாய் மொத்தத்தில் கிடைக்கலாம். இது ஏழை மக்களையே பாதிப்பதனால் மீண்டும் இதை மின்சாரக்குழு பரிசீலனை செய்து மீட்டர் வாடகையை குறைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். வீடுகளுக்கு உபயோகிக்கும் மின் கட்டணத்தை யூனிட் ஒன்றுக்கு 2 பை கூட்டியிருப்பதை உடனடியாக குறைக்க நடவடிக்கை எடுக்க கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்தபடியாக, எப்போது பார்த்தாலும் சர்சார்ஜ் என்று போட்டுக் கொண்டே போவதன் காரணமாக மக்கள் வேதனை அடையக் கூடிய நிலை இருக்கிறது. விவசாய மக்களுக்கு இது பெருந் தொல்லையாக இருக்கிறது. இவற்றை யெல்லாம் ஒன்று சேர்த்து ஒரு முகப்படுத்தி ஒரே கணக்காக யூனிட் ஒன்றுக்கு இவ்வளவு என்று நிர்ணயித்தால் நலமாக இருக்கும்.

முன்பெல்லாம் விவசாயிகளுக்கு பம்பு செட்டுகளுக்குத் துரிதமாக மின்சாரம் வழங்கப்பட்டது. அதற்காகப் பஞ்சாயத்து யூனியன்கள் மூலம் கடன் பெறுவதற்கு மின் கழகத்தில் இருந்து ஒரு அத்தாட்சிப் பத்திரம் கொடுக்கிறார்கள். அந்த அத்தாட்சிப் பத்திரத்தில் 'இந்த விவசாயிக்கு கிணற்றுக்கு மின்விசை கொடுக்க சம்மதிக்கிறோம்' என்று கூறுகிறார்கள். அந்த அடிப்படையில் ஊராட்சி ஒன்றியங்கள் கடன்கள் வழங்குகின்றன. கடன்கள் வழங்கி இரண்டு ஆண்டுகள் ஆகியும் பம்பு செட்டு நிறுவியும் கூட கனெக்ஷன் கொடுக்காமல் இருப்பது விவசாயப் பெருமக்களுக்கு வேதனையைக் கொடுக்கிறது என்பதைச் சொல்லிக் கொள்ளுகிறேன். இதைப் பற்றிக் குழுத் தலைவரிடத்திலும், தலைமைப் பொறியாளரிடத்திலும் கூறி அவர்கள் நடவடிக்கை எடுத்தாலும் கூட, கீழ்மட்டத்தில் இருப்பவர்கள் தகுந்த முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என்று சொல்லிக் கொள்கிறேன்.

மின் கட்டணம் வசூலிப்பதில் தற்போது மாதத்திற்கு ஒருமுறை வசூலிப்பது என்ற முறையை மாற்றி இரண்டு மாதத்திற்கு ஒரு முறை வசூலிப்பது என்ற திட்டத்தை அமல் படுத்த இருப்பதாக அறிகிறேன். ஐந்து குதிரை வேகமுள்ள மோட்டார் வைத்துள்ள
ஏழை விவசாயி 7 ஏக்கர் 8 ஏக்கர் புஞ்சைப் பயிர் [illegible] இருந்தாலும்
கூட மாதம் 40 ரூபாய் மின் கட்டணமாகக் க[illegible]டிய நிலை
யில் இரண்டு மாதத்திற்கு ஒரு முறை [illegible] ரூபாய்,
100 ரூபாய் என்று கட்ட வேண்டிய நி[illegible]வனால்
ஒழுங்காகக் கட்ட முடியாது. [illegible]மும்
பாதிக்கும், விவசாயிகளுடைய[illegible]கப்
பற்றி இந்தக் குழு மீண்டும் [illegible]
கேட்டுக் கொள்ளுகிறேன் [illegible]



1967 நவம்பர் 25] [திரு. நா. சௌந்தரபாண்டியன்]

இப்போது இராக் காலங்களில் சர்விஸ் கொடுக்கலாம் என்று உத்தரவிடப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கது. அதை கீழ்மட்டத்தில் நல்ல முறையில் அமல்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். விவசாயிகளுக்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற திட்டத்தை ஒத்து இருந்தாலும் கூட, கீழ் உள்ளவர்களால் புறக்கணிக்கப்படுகிற நிலையும், காலதாமதமாகிற நிலையும் இருக்கிறது. இதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் தலைவர் அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பாக, வானம் பார்த்த குளங்கள் அமைந்த இடங்களில் திருநெல்வேலியில் உள்ள நாங்குநேரி வட்டாரமும் ஒன்று. இந்த வருஷம் நல்ல மழை பெய்தாலும் கூட அதிகமாகக் குளங்கள் பெருகவில்லை. கிணற்றை நம்பித்தான் வாழ வேண்டியிருக்கிறது, அந்த அடிப்படையில் பார்த்து பின் தங்கிய பிரதேசங்களுக்கு முதலிடம் கொடுத்து நல்ல முன்னேற்றத்திற்குக் கொண்டு வருவதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ளவேண்டும். இராதாபுரத்திலுள்ள கூடங்குளம், ஆவுடையாள்புரம், வைராகிணர் ஸ்கிமுக்கு அனுமதி பெற்று இரண்டு ஆண்டுகள் ஆகியும், பம்பு செட்டுகளுக்கு மின் இணைப்பு கொடுக்க முடியாத நிலை இருக்கிறது. இதைப் பற்றி மின் குழுத்தலைவரைப் பார்த்துச் சொன்ன சமயத்தில் மோட்டாரை அமைத்து விட்டால் உடனடியாகக் கனெக்ஷன் கொடுத்து விடுகிறோம் என்ற உறுதியை அளித்தார்கள். மின் குழு எழுப்பிய கடன் திட்டத்திற்காக அந்தப் பகுதியில் உள்ளவர்கள் 100 ரூபாய், 200 ரூபாய் என்று செலுத்தியிருக்கிறார்கள். அந்த நிலையில் கூட வைராகிணற்றில் 17 கிணற்றுக்கு பம்பு செட் அமைத்தும் கனெக்ஷன் பெற முடியாத நிலைதான் உள்ளது. இதனை உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கும்பளம்பாடு ஸ்கீம் இரண்டு மூன்று ஆண்டுகளுக்கு முன்னால் அனுமதிக்கப்பட்டது. எல்லா கிணறுகளுக்கும் பம்பு செட்டுகள் அமைக்கப்பட்டு விட்டன. இங்கு கனெக்ஷன் கொடுப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

தங்கையம், நாகபுரம், வில்வனம்புதூர் ஆகியவை விவசாயப் பெருமக்கள் நிறைந்த பகுதி. கிட்டத்தட்ட 45 மோட்டார் பம்பு செட்டுகள் சரியாக இருக்கின்றன. அவைகளுக்கு மின்சாரம் உடனடியாக வழங்க முயற்சி எடுத்துக் கொள்ள வேண்டும். அழகநேரி, குமாரபுரம், பழவூர், முப்பந்தல் ஸ்கீமில் 60 கிணறுகள் இருக்கின்றன. அனுமதி பெற்று ஓராண்டுக் காலமாகிறது. ஆனால் வேலை துவக்கப்படவில்லை. ஆலங்கிணறு திருமலாபுரத்தில் 47 கிணறுகளுக்கு பம்பு சட்டுகள் அமைக்கப்பட்டு இருக்கிறது. அதிகாரிகள் பூர்வாங்க சர்வே செய்தும் கடைசியில் மேல் மட்டத்தில் போய் உத்தரவு பெற்றுத்தான் அமல் நடத்த முடியும் என்ற நிலையில் இருக்கிறது. இப்படிப்பட்ட பல திட்டங்களை விரைவில் செய்தால் விவசாயப் பெருமக்களுக்கு நல்ல முறையில் உதவி செய்வதாக முடியும். இப்படி ஊராட்சி ஒன்றியங்கள் மூலமாக

[திரு. நா. சௌந்தரபாண்டியன்] [1967 நவம்பர் 25

கடன் கொடுத்துச் செய்யப்படுகிற திட்டங்களுக்கு முதலிடம் கொடுக்க வேண்டும். இவற்றுக்கெல்லாம் உடனடியாகக் கனெக்ஷன் கொடுக்க கொடுப்பதற்கு நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனது பகுதியைப் பொறுத்த வரை மின்கழகத்திற்கு ஒப்பந்தம் எழுதி முடித்து இரண்டு மூன்று ஆண்டு காலமாகியும் விவசாயிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கவில்லை. ஊராட்சி மன்றப் பகுதிகளில் தெருவிளக்குகள் ஒழுங்காக எரியவில்லை என்ற புகார் பரவலாகக் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் புகார் எல்லா மாவட்டங்களிலிருந்து கூறப்பட்டிருக்கிறது. குறிப்பாக இதைப் பற்றி மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் எடுத்துக் கூறியிருக்கிறோம். எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரை நீண்ட காலமாக எல்லா தெருவிளக்குகளும் எரியவில்லை என்றாலும், கட்டணம் முழுவதும் வசூலிக்கப்படுகிறது. தலைமை துணைக் கணக்காயரிடம் எடுத்துச் சொன்னாலும் கூட, நல்ல முறையில் செய்யவில்லை. தலைவர் இதைப்பற்றி நல்ல முறையில் ஆலோசனை செய்யவேண்டும்.

வருவாய்த் துறை டெபுடி சீப் அக்கவுண்டண்ட் யூனிட் ஒன்றை திருநெல்வேலி மாவட்டத்தில் திறக்க ஆலோசனை இருப்பதாக அறிகிறேன். அதனை வள்ளியூரில் திறக்க வேண்டும். அங்கு விவசாயப் பெருமக்கள் அதிகமான அளவில் இருக்கிறார்கள். அவர்கள் இப்போது 30 மைலுக்கு அப்பாலுள்ள திருநெல்வேலிக்குப் போக வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, அங்கு அதனை அமைத்தால் உதவிகரமாக இருக்குமென்று கூறி முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

* திரு. டி. டி. எஸ். திப்பையா: தலைவர் அவர்களே, மின்சாரக் கழக நிதிநிலை அறிக்கையின் மீது பேச வாய்ப்பளித்தமைக்காக முதலில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். முக்கியமான இரண்டொரு விஷயங்களை மட்டும் சொல்லி முடிக்க விரும்புகிறேன். என்னுடைய தொகுதி மேட்டுப் பாளையம் தொகுதி. அந்தப் பகுதியில் விவசாயம் செய்யக்கூடியவர்கள் மிக அதிகமாக இருக்கிறார்கள். அங்கு மின்சார கனெக்ஷன் வேண்டுமென்று விண்ணப்பம் செய்து இரண்டு மூன்று ஆண்டுகள் ஆகியும் கூட, எந்த விதமான நடவடிக்கையும் அதற்காக எடுக்காமல் இருப்பதாகப் பலவிதமான புகார்கள் வருகின்றன. மேட்டுப்பாளையம் தொகுதி என்று எடுத்துக் கொண்டால் இரு பிரிவாகப் பிரிக்கப்படுகிறது. மேட்டூர் சிஸ்டத்தைச் சேர்ந்த அலுவலகத்தில் இருந்து நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அதே போல் ஒரு பகுதி பைகாரா சிஸ்டத்தைச் சேர்ந்ததாக இருக்கிறது.

அதில் மேட்டூரிலிருந்து எந்த விதமான காரியங்களும் சீக்கிரத்தில் ஆவதில்லை என்ற புகார்கள் நிறைய வருகின்றன. அதை [illegible]லிடங்களுக்கும் தெரிவித்திருக்கிறார்கள். பக்கத்திலுள்ள பைக் [illegible] டிப்பார்ட்மென்ட் பகுதியில் சீக்கிரத்தில் ஒவ்வொரு காரிய [illegible]சலாகி அவர்கள் ஒன்றிரண்டு மாதங்களுக்குள் கனெக்ஷன் [illegible]ள்வதாகக் கூறப்படுகிறது. ஆகவே மேட்டுப்பாளையத்



1967 நவம்பர் 25] [திரு. டி. டி. எஸ். திப்பையா]

தைப் பொறுத்தவரையில் மேட்டூர் சிஸ்டத்திலிருந்து பைக்காராவிற்கு மாற்றவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறார்கள். அதை நான் இந்த சபையில் தெரிவித்துக் கொள்கிறேன். கோவையில் உள்ள பைக்காரா அலுவலகத்திற்கு அதை மாற்றித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பஞ்சாயத்து யூனியனிலிருந்து கிணறுகள் வெட்டுவதற்கும், பம்பு செட்கள் வாங்குவதற்கும் நிறையக் கடன்கள் கொடுக்கப்படுகின்றன. ஒரு கிணறு வெட்ட ரூ. 5,000 மதிப்பீடு கொடுத்தால் அவர்கள் குறிப்பிட்டுள்ள அளவிற்கு வெட்டவேண்டும், அப்படி குறிப்பிட்ட அளவில் வெட்டவில்லையென்றால் அத்தொகை பூராவும் திருப்பித் தரவேண்டுமென்ற விதி இருக்கிறது. ஆனால் கிணறு வெட்டும்போது முப்பது அடி வெட்டவேண்டுமென்று வைத்துக் கொண்டால் இருபது அடி வெட்டியவுடன் தண்ணீர் உற்பத்தியாகிறது. அதை உடனடியாக பம்பு செட்கள் வைத்து இறைத்து கிணறு வெட்டவேண்டுமென்றால் இப்போது ஆயில் என்ஜின்கள் வைத்து வெட்டுவது சாத்தியம் இல்லை. கிணறு வெட்டும்போது பம்பு செட்ஸ் வாங்குவதற்கும் கடன்கள் ஒதுக்கப்படுகின்றன. பம்பு செட்களை வாங்கி வைத்து கிணறுகளை வெட்டி பூர்த்தி செய்ய முடியாமல் விவசாயிகள் கஷ்டப்படுகிறார்கள். அரசாங்கத்திலிருந்து கடன் கொடுக்கும்போது அவசியம் அதற்குச் சலுகை கொடுக்கவேண்டும். உணவு உற்பத்தித் திட்டம் வெற்றிகரமாக நடைபெறவேண்டுமென்றால் கிணற்றுக்கு கடன் கொடுக்கப்படுவது நடைமுறையில் அதற்கு உபயோகப்படுத்தப்படவேண்டும். பம்பு செட்களுக்கு கொடுக்கக் கூடிய பணம் பம்பு செட்ஸ் வாங்கி உபயோகிக்கப் படவேண்டும் என்ற முறையில் இருக்கவேண்டும்.

பஞ்சாயத்து போர்டுகளில் வீதிவிளக்குகள் போடுகிறார்கள். அதில் 50 அல்லது 60 லைட்கள் போடுகிறார்கள் என்றால் அதில் மூன்றில் ஒரு பாகம் எரிவதேயில்லை. அடிக்கடி அதில் கோளாறு ஏற்படுகிறது. கேட்டால் அதற்குத் தகுந்த பல்புகள் கிடைப்பதில்லை என்று சொல்கிறார்கள். அந்த சமாதானத்தை நாம் ஏற்றுக் கொள்ளலாம். ஆனால் அதனால் பஞ்சாயத்து போர்டு தலைவர், யூனியன் தலைவர், சட்டமன்ற உறுப்பினர் இவர்கள் பொது மக்களின் அதிருப்திக்கு ஆளாக வேண்டியிருக்கிறது. ஒவ்வொரு ஊரிலும் எல்லா விளக்குகளும் எரியும்போது இங்கு எரிவதில்லை என்றால் மக்கள் அதிருப்திப்படுகிறார்கள். இந்தக் குறையை நிவர்த்தி செய்து தரவேண்டும்.

அடுத்தபடியாக, பல நண்பர்கள் பேசினார்கள், மின்சார உதவி கொண்டு, பம்பு செட்ஸ் வழி எடுக்கும் தண்ணீரை கால்நடைகளுக்கோ அல்லது குடியிருப்புக்கோ தனிக் குழாய் வைத்து எடுத்து உபயோகப்படுத்தினால் தனி வரி போட்டு வசூலிக்கிறார்கள் என்று அதை குற்றமாக எடுத்துக்கொள்ளக்கூடாது. ஒவ்வொருவர் ஒவ்வொரு விதமாகப் பேசுவார்கள். மிகக் குறைந்த அளவில் தான் அதற்காக தண்ணீர் செலவழிக்கப்படுகிறது. அந்த சலுகையை விவசாயிகளுக்கு அளிக்கவேண்டும். அதற்காக

[திரு. டி. டி. எஸ். திப்பையா] [1967 நவம்பர் 25

அதிகப்படித் தொகையை கட்டணமாக வசூலிக்காமல் இருக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, என் உரையை முடித்துக் கொள்கிறேன்.

* திரு. பெ. பெரியசாமி: தலைவர் அவர்களே, இந்த மின்சார இலாகா நிதிநிலை அறிக்கையின்மீது நானும் ஒரு சில வார்த்தைகள் கூற ஆசைப்படுகிறேன். கடந்த எட்டு மாத காலத்தில் விவசாயத்திற்கு மின்சாரம் அளிப்பதில் மின்சாரக் குழுத் தலைவர் அவர்கள் தீவிரக் கவனம் செலுத்தி நல்லமுறையில் நடவடிக்கை எடுத்திருப்பது விவசாயம் நல்லமுறையில் முன்னேற ஏதுவாகயிருந்திருக்கிறது. என் ராசிபுரம் தொகுதியில் நூற்றுக்கணக்கான பம்பு செட்கள் கேட்ட நேரத்தில் 24 மணி நேரத்தில் கொடுத்து அநேகமாக ஒவ்வொரு கிராமத்திற்கும் நூற்றுக்கணக்கான பம்பு செட்கள் கொடுத்து நம் அரசுக்கு நல்ல புகழைத் தேடித் தந்திருக்கிறார்கள். அதனால் விவசாயத் தொழில் செழிப்படைந்து உணவுப் பற்றுக்குறை தீர ஏதுவாகயிருக்கிறது. கடந்த கால சர்க்காரால் மின்சாரம் கொடுக்காமல் இருந்த என் தொகுதியில் பல கிராமங்களுக்கு இப்போது மின்சாரம் கொடுப்பதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைகிறார்கள். மேலும் நம் சர்க்கார் மின்சாரத்திற்கு அதிக நிதி ஒதுக்கித் தரவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். குறைந்த கட்டணத்தில் விவசாயிகளுக்கு மின்சாரம் கிடைக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதனால் நமது உணவுப் பிரச்னை தீரவும் ஏதுவாகயிருக்கும். என் தொகுதிக்கு அடுத்தாற்போல் உள்ள சங்கரித் தொகுதிக்கு சென்றிருக்கிறேன். அங்கு விவசாயிகளுக்கு மின்சாரப் பம்பு செட்கள் அதிகமாகக் கொடுக்கப்படாமல் இருக்கிறது. அவர்களுக்கும் அதிகப்படியாக மின்சார பம்பு செட்களைக் கொடுத்து ஆக்கமும் ஊக்கமும் அளிக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதிக சக்தி வாய்ந்த டிரான்ஸ்மிட்டர்கள் பொருத்தி விவசாயிகளுக்கு நாள் முழுவதும் மின்சாரம் கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். என் மாவட்டத்தில் விவசாயத்திற்கு அடுத்தபடியாக குச்சிவள்ளி பயிர் செய்கிறார்கள். அந்தக் கிழங்கைக் கொண்டு ஜவ்வரிசியாக்கி ஸ்டார்ச் மாவாக பயன்படுத்தி அது மில் துணிக்குப் போட பயன்படுகிறது. அதை சிறுதொழில் என்று நிர்ணயித்திருக்கிறார்கள். அதற்கு தண்ணீர்தான் அதிகமாக தேவைப்படுகிறது. அந்தத் தண்ணீருக்கு விவசாயத்திற்கு போடுவதைவிட அதிக கட்டணம் வசூலிக்கிறார்கள். அந்தத் தண்ணீர் மறுபடியும் விவசாயத்திற்குத்தான் பயன்படுகிறது. அந்தத் தொழிலைச் செய்பவர்கள் அதிகமாக விவசாயிகள்தான். அந்தக் கிழங்கைக் கொண்டு ஜவ்வரிசி, ஸ்டார்ச் போன்றவை செய்கிறார்கள். ஆகவே அதற்காக பயன்படுத்தும் தண்ணீருக்கான மின்சாரக் கட்டணத்தைக் குறைத்து விவசாயிகளுக்கு நல்ல ஊக்கத்தைக் கொடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அரை ஹார்ஸ்பவர் அல்லது ஒரு ஹார்ஸ்பவர் உள்ள விசைத் தறிகளை பயன்படுத்தும் நெசவாளர்களுக்கு மின்விசை தருகிறார்கள். அவர்களுக்கும் நிறையக்



1967 நவம்பர் 25] [திரு. பெ. பெரியசாமி]

கொடுத்து சிறிய தொழில்கள் வளர்ச்சியடைய ஊக்கம் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த ஆறு மாத காலத்தில் என் தொகுதியில் மட்டும் 500, 600 பம்பு செட்களைப் பொருத்தி நல்ல பெயரைத் தேடித் தந்த மின்சாரக் குழு தலைவர் அவர்களுக்கும் தமிழக அரசுக்கும் நன்றி கூறி விடைபெறுகிறேன். வணக்கம்.

* திரு. என். வரதராஜன்: தலைவர் அவர்களே, மின்சாரத் துறையில் தமிழ்நாடு மற்ற பல மாநிலங்களை விட முன்னேற்றம் அடைந்திருப்பது நமக்கு மிக்க மகிழ்ச்சியைத் தருவதாகும். நம் நாட்டிலுள்ள கிராமப்புற விவசாயிகள் மேலும் மின்சாரத்தை உபயோகப்படுத்தத் தக்கவாறு அதில் அபிவிருத்தி காணவேண்டுமென்பது என் வேண்டுகோள். கிராமங்களில் இன்று, மனுக்கள் போட்டு பல ஆண்டுகளாகியும் மின்சாரம் கிடைக்க காலதாமதமாகிறது என்ற குற்றச்சாட்டு இருக்கிறது. சில சமயங்களில் சில கிராமங்களுக்கு முன்னாலேயே கொடுத்து விடுகிறார்கள், சிலவற்றிற்கு பின்னால் கொடுக்கிறார்கள். இதில் செல்வாக்கு உட்படுகிறது என்ற குற்றச்சாட்டு வருகிறது. ஆகவே இதைத் தவிர்க்கும் முறையில் அந்தந்தக் கிராமங்களிலிருந்து வரும் மனுக்களை எ.இ. ஆபீசில் ரிக்கார்டு வரிசைக் கிரமமாக இருக்க முயற்சி செய்யவேண்டும். என்னுடைய தொகுதியிலே, எரியோடு பகுதியிலே, நாகையன் கோட்டை என்ற கிராமத்திலும், எம். களத்தூர் என்ற கிராமத்திலும் மனுக்கள் போட்டு 4-5 வருஷங்கள் ஆகியும் இன்னும் சாங்ஷன் ஆகாமலும், சாங்ஷன் ஆகியும் கனெக்ஷன் கிடைக்காமலும் இருக்கிற நிலையில் மின்சாரக் கழக அலுவலகங்களுக்குப் படையெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தாமதங்களைத் தவிர்க்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல நிர்வாகத் துறையில் இருக்கிற சிக்கல்களைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். வேடசந்தூர் தொகுதி, பாளையம் பகுதியில் சாங்ஷன் ஆகியும் இன்னும் கனெக்ஷன் கொடுக்கவில்லை. கரூர் அலுவலகத்திலே போய்க் கேட்டால், அந்தப் பகுதியின் நிர்வாகம் மதுரைக்கு மாற்றப்பட்டிருப்பதாகக் கூறுகிறார்கள். மதுரையில் சென்று கேட்டால் சரியான ஆர்டர் வரவில்லை என்று கூறுகிறார்கள். இவ்வளவு காலமாக, 3-4 வருஷங்களாக அலைந்தும் மோட்டார்களை வாங்கி வைத்தும், சாங்ஷன் ஆகியும், கனெக்ஷன் கொடுக்காமல் இருப்பது உணவு உற்பத்தியைப் பெருமளவுக்கு பாதிக்கும், விவசாயிகளுக்கு மனச்சோர்வு உண்டாக்கும், அதே நேரத்தில் அதிகாரத்தில் இருக்கிறவர்களிடையே ஊழலை ஏற்படுத்தும். உடனடியாக இதைக் கவனித்து, அந்தப் பிரதேசத்தின் நிர்வாகத்தை மதுரை மாவட்ட டி.ஈ. கவனித்துக்கொள்ள வேண்டுமென்று உத்தரவிடவேண்டும். சாங்ஷன் ஆன எல்லா ஆர்டர்களையும் உடனடியாக அமல் நடத்த நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல, மின்சாரத் துறையில் கீழே இருக்கிற நிர்வாகத்தில் பல்வேறு ஊழல்கள் இருக்கின்றன என்று சுட்டிக் காட்ட விரும்புகிறேன். இவைகளைக் களைந்தெறிய முயற்சிகளை எடுக்க வேண்டும். நிர்வாகத்தில் ஊழல்கள் என்று சொன்னவுடனே நிர்வாகம் பூராவும் பாழாகிக்கொண்டிருக்கிறது என்று எண்ணாமல், ஏன் இப்படி வந்தது என்று பார்க்கவேண்டும். கனம் அங்கத்தினர் சுப்பையா முதலியார் அவர்கள் கூட எலெக்ட்ரிஸிடி போர்டு நிர்வாகம் சிறந்து விளங்குகிறது என்று சொன்னார்கள். கிராம மக்களிடத்திலிருந்து அவனூறு வரக் கூடிய இலாக்காக்களில் ரெவின்யூ இலாகா ஒன்று, அடுத்து மின்சார இலாகா இந்த நிலைமையில் இருக்கிறது. மேலே என்ன திட்டமிட்டாலும், கீழே நிர்வாகத்தில் இருக்கிற இப்படிப்பட்ட சிக்கல்களைத் தீர்க்கும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தவேண்டும். உறுப்பினர்களுக்கு அச்சிட்டு கொடுத்திருக்கும் புத்தகத்தில் சென்ற ஆண்டு மன்ற உறுப்பினர்கள் சொன்ன குறைகளை எப்படித் தீர்த்திருக்கிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாவட்ட அபிவிருத்தி மன்றங்களில் சொன்ன அபிப்பிராயங்களைக் கேட்டுச் சீர்திருத்துகிறோம் என்று குறிப்பிட்டிருக்கிறார்கள். மாவட்ட அபிவிருத்தி மன்றங்கள் சாதாரணமாக இரண்டு மணி நேரம் நடைபெறுகின்றன. இரண்டு மணி நேரத்தில் எல்லாப் பிரச்னைகளும் வருகின்றன. இருக்கக் கூடிய பிரச்னைகளைக் கூறி அவற்றைத் தீர்ப்பதற்கு ஆலோசனை சொல்லும் மன்றங்களாக அவைகள் இல்லை. அதற்குப் பதிலாக வேறு உருவத்தில் ஒவ்வொரு வட்டாரத்திலேயும் இப்படிப்பட்ட குறைகளைக் கூறி ஆலோசனை சொல்ல மின்சார ஆலோசனைக் குழுக்களை நியமித்தால் ஊழல்களைத் தவிர்க்க முயற்சி செய்யலாம். என்னால் ஊர், பெயர் முதலியவைகளைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். ஆனால் நான் அவைகளைச் சொல்ல விரும்பவில்லை. குறிப்பிட்ட ஊழல்கள் தவிர்க்கப்படவேண்டும். கிராமப்புறத்தில் 200 ரூபாய் கொடுத்தால் தான் கனெக்ஷன் கிடைக்கும் என்ற நிலைமை இருப்பதைத் தவிர்க்கவேண்டும். இதையெல்லாம் உத்திரவுகளால் மட்டும் செய்துவிட முடியாது. நிர்வாகஸ்தர்களைக் கட்டுப்படுத்துவதில் ஆலோசனை சபை உகந்த வழிகாட்டும் என்று சொல்ல ஆசைப்படுகிறேன்.

தொழிலாளர்கள் பிரச்னைகள் சம்பந்தப்பட்ட மட்டிலும் துரிதமாகக் கவனம் செலுத்தவேண்டும். சென்ற பல ஆண்டு காலமாகப் பல்வேறு குறைகளைப் பிரதிநிதிகள் சொல்லி வந்திருக்கிறார்கள். நாம் ஒரு புதிய அரசை அமைத்து, அந்தப் புதிய அரசின் கீழ் இந்த பட்ஜெட்டை விவாதித்துக்கொண்டிருக்கிறோம். நம்மிடமிருந்து மின்சாரத் தொழிலாளர்களும், சிப்பந்திகளும் ஏராளமான நன்மைகளை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் கோருவதைக் கொடுத்துவிட முடியாவிட்டாலும், இன்றைக்குப் புதிய திருப்பம் ஏதாவது தேவை என்று வற்புறுத்துகிறேன். நம் நாட்டிலே பெரிய முன்னேற்றம் ஏற்படவேண்டுமென்று சொல்லும் நேரத்தில், இந்த போர்டிலே தொழிலாளர் பிரதிநிதி ஒருவரை சேர்த்துக்





கொண்டால் அவர்களுடைய சிறந்த ஆலோசனை போர்டுக்கு உதவி செய்யும், தொழில் வளர்ச்சிக்கு உதவி செய்யும், அதைக் கவனத்தில் எடுத்துக்கொள்ளவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதே போல பல்வேறு பிரச்னைகளைத் தீர்ப்பதில் நேரடியாகப் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்க்கக் கூடிய முறையைக் கடைப்பிடிக்கவேண்டும். அப்படிக் கடைப்பிடித்து ஏற்பட்ட ஒப்பந்தங்களை அமல் நடத்துவது சம்பந்தமாக இருக்கும் தயக்கத்தை உறுப்பினர்களுக்கெல்லாம் கொடுத்திருக்கிறார்கள். அவைகளைப் பார்த்தால், ஏற்கனவே ஏற்பட்ட ஒப்பந்தங்கள் பல மின்சாரக் கழகத்தினால் அமல் நடத்தப்படவில்லை என்று வற்புறுத்துகிறார்கள். தனிப்பட்ட முதலாளிகள் செய்து கொள்ளும் ஒப்பந்தத்தை ஒரு நிர்வாகத்தினால் ஒப்பந்தம் அமல் நடத்தப்படவில்லையென்றால் நீதி மன்றத்திற்குச் செல்லும் போக்கைப் பார்க்கிறோம். அதிகாரம், பணம், பலம் இருக்கிறவர்கள் கோர்ட்டுக்குச் சென்று வாதாடக் கூடிய நிலைமை இருக்கிறது. ஏற்பட்ட ஒப்பந்தங்களை அமல் நடத்துவதில் தாமதம் ஏற்பட்டால் சிப்பந்திகளுக்கு வாழ்வே நாசமாகும், அதிருப்தியைக் கிளப்பும். ஒப்பந்தங்களை அமல் நடத்துவதில் கறாராக இருக்கவேண்டும். அது கணக்காயர் சங்கமாக இருந்தாலும் சரி, சம்மேளனமாக இருந்தாலும் சரி, இந்தப் பிரச்னைகளில் கவனம் செலுத்தவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக பழி வாங்கப்பட்டிருக்கிற பல சிப்பந்திகள் பெயர்களைத் தங்கள் லிஸ்டில் கொடுத்திருக்கிறார்கள், தொழிற் சங்கத்திலிருந்து கடந்த பல ஆண்டுகளாகத் தொழிற் சங்க இயக்கத்தில் இருந்த காரணத்திற்காகச் சிலர் மீது குற்றம் சாட்டி பழி வாங்கி அவர்கள் கோர்ட்டுக்கு அலைந்துகொண்டிருக்கிறார்கள். மேலும் மேலும் அவர்களைக் கோர்ட்டுக்குப் போகாத அளவுக்குச் செய்யவேண்டும் புதிய சர்க்கார். எலெக்ட்ரிஸிட்டி போர்டுக்கு நஷ்டம் ஏற்படுத்தவேண்டும் என்று விரும்புகிறவர்களல்ல அவர்கள். இன்னும் 10 கிராமங்களுக்கு, 100 கிராமங்களுக்கு மின்சாரம் கொடுக்க வேண்டும் என்று எண்ணக் கூடிய உழைப்பாளிகள் தான், கணக்காயர்கள் தான் அவர்கள். அவர்களைப் பழி வாங்கி மின்சாரக் கழகத்தை அபிவிருத்தி செய்துவிட முடியாது. அப்படிப்பட்ட நிலைமைகளைத் தவிர்க்க முயற்சி செய்யவேண்டும். இந்தத் துறையில் புதிய சர்க்காரிடத்திலே மிகப் பெரிய அளவுக்கு தொழிலாளர்களும், பொது மக்களும் எதிர்பார்க்கிறார்கள். குறிப்பாக, மின்சாரக் கழகத்தின் தலைவருடைய பதவிக் காலத்தை மீண்டும் ஒரு ஆண்டுக்குப் புதிய தமிழக அரசு நீட்டிக் கொடுத்திருக்கிறது. ஏன் அவ்வாறு செய்தார்கள் என்று நமக்கு விளங்கவில்லை. இப்படிப்பட்ட நிலையில், தொடர்ச்சியாக அவர் நிர்வாகத்தில் பலர் பழிவாங்கப்பட்டிருக்கிறார்கள், பலவித நெருக்கடிகள் ஏற்பட்டிருக்கின்றன என்று தெரிந்தும், பல்வேறு நிலைமைகளைப் புரிந்துகொண்டும், ஒரு வருஷ காலம் அவருடைய பதவியை நீட்டிக் கொடுக்கவேண்டுமென்ற அவசியம் ஏன் ஏற்பட்டது என்று

என்றால் புரிந்துகொள்ள முடியவில்லை. அப்படிப்பட்ட பிரச்னைகளில் இன்னும் சரியாக இருக்கவேண்டும். அதுதான் தமிழ் நாட்டில் ஜனங்களிடத்தில் மேலும் மேலும் வரவேற்பைக் கொடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நேரத்தில் வீட்டுக்கு உபயோகப்படுத்தும் மின் சக்திக்கு கட்டணத்தை இரண்டு காசுகள் கூட்டியிருக்கிறோம். அது சரியானதல்ல என்று எடுத்துக்காட்ட விரும்புகிறேன். விலைவாசிகளெல்லாம் உயர்ந்து வாழ்க்கைச் செலவு உயர்ந்து போய்விட்டது என்பது தெரியும். இரண்டு காசுகள் கூட்டுவதற்கான காரணங்களைக் குறிப்பிட்டிருப்பதைப் படித்துப் பார்க்கும்போது, நிலக்கரி எண்ணெய் போன்ற எரிபொருள்களின் விலை ஏறியிருக்கிறது, உற்பத்திச் செலவு உயர்ந்திருக்கிறது என்று சொல்லுவதெல்லாம் சரிதான். மத்திய சர்க்காரிடத்தில் சண்டை போட வேண்டிய அவசியத்தில் இருக்கிறோம். அதே நேரத்தில் பார்லிமெண்ட்டில், நெய்வேலியிலிருந்து அதிக கரண்ட் கொடுக்கத் தயார், அதிக விலை தமிழக சர்க்கார் கொடுக்க வேண்டும் என்று அங்குள்ள அமைச்சர் சொல்லுகிறார். இல்லையென்றால் வேறு ஏற்பாடு செய்யத் தயார் என்று எச்சரிக்கும் முறையிலும், பயமுறுத்தும் முறையிலும் அமைச்சர் பதில் சொல்லியிருப்பதைப் பார்க்கிறோம். நெய்வேலி அனல் மின்சார நிலையம் தமிழக சர்க்காரிடத்தில் இருக்கவேண்டுமென்று வற்புறுத்த வேண்டிய காலம் வந்துவிட்டது. அதிலெல்லாம் கொஞ்சம்கூட வித்தியாசம் இல்லை. இருப்பினும் இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய இந்த உயர்வைச் சரிக்கட்டும் முறையில் தொழிலாளர்கள் பிரதிநிதிகளும் மற்றவர்களும் கீழ்க்காணும் ஆலோசனைகளை சொல்லுகிறார்கள். மிகப் பெரிய அளவுக்கு உற்பத்தித் துறையில் லாபம் பெறும் தொழில்களுக்குக் குறைந்த கட்டணமும், சாதாரணமாக கிராமப்புரத்தில் இருக்கக்கூடிய விவசாயிகளுக்கு அதிகக் கட்டணமும், வீடுகளுக்கு மின்சாரம் உபயோகப்படுத்தும் ஏழை மக்களுக்கும், நடுத்தர மக்களுக்கும் அதிகக் கட்டணமும் இருக்கக்கூடிய நிலையைத் தவிர்த்து பெரிய தொழில்களுக்குக் கட்டணத்தை உயர்த்துவது பற்றி மீண்டும் ஆலோசிக்கவேண்டுமென்பது எனது மிக முக்கியமான வேண்டுகோள். அதே நேரத்தில் பல ஆண்டுகளாக பல டெப்போக்களில் வேஸ்ட்டாக ஸ்டாக் செய்யப்பட்டிருக்கிற பொருள்கள் துருப் பிடித்துப் போயிருக்கின்றன என்று ரிப்போர்ட்டுகள் வருகின்றன. அவற்றையெல்லாம் பரிசீலனை செய்து அந்த நஷ்டங்களைத் தவிர்த்து, பெரிய தொழில்களுக்குக் கட்டணத்தை உயர்த்தி, சாதாரண மக்களுக்குக் கட்டணத்தைக் குறைத்து, மின்சாரத் துறையில் அபிவிருத்தி செய்யவேண்டுமென்று கேட்டுக்கொண்டு முடித்துக்கொள்கிறேன். வணக்கம்.

**திரு. என். ராஜாங்கம்** : பெருமதிப்பிற்குரிய தலைவர் அவர்களே, இந்த மின்சார இலாகாவினுடைய நிதி நிலை அறிக்கைமீது என்னுடைய கருத்துக்களை சிறிதளவு சொல்ல விரும்புகிறேன். இந்த அரசாங்கம் நடத்துகிற எல்லா துறைகளைக் காட்டிலும் மின்சாரத்துறை மட்டும் 300 கோடி ரூபாயை அடக்கியுள்ள ஒரு





துறை. இதற்கு இவ்வளவு தொகை அளிப்பதற்குக் காரணம் உலகத்தில் இன்றைக்கு மின்சாரம் இல்லாமல் மனிதன் வாழ முடியாது என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. நாம் எதை செய்தாலும், படித்தாலும் அல்லது சட்டசபையே நடந்தாலும், இரயில் ஓடினாலும், தொழில் துறைகள் நடந்தாலும், விவசாயம் நடந்தாலும், எதற்கும் மின்சாரம் இல்லாமல்—ஒரு காரியத்தை யும் செயல்படுத்த முடியாது. ஆகவேதான் அரசாங்கம் மற்ற எல்லா துறைகளையும்விட இதற்கு இவ்வளவு அதிக அளவு தொகையை ஒதுக்கியிருக்கிறது. அந்தத் தொகை ஒதுக்கியிருக்கிற அளவுக்கு அந்த இலாகாவினர் நல்ல முறையில் வேலை செய்கிறார்கள் என்று நான் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆனால் வேலை செய்கிறபோது சில குறைகள் மற்றவர்களால் சுட்டிக்காட்டப்படுகின்ற அளவுக்கு, தெரிகின்ற காரணம், அந்த இலாகாவினர் முன்பு என்ன சட்ட விதிகளை வைத்திருந்தார்களோ அதே விதிகளைத்தான் இப்பொழுதும், அதே கட்டுப்பாடுகளைத்தான் இப்பொழுதும் கடைப் பிடிக்கிறார்கள். அந்த விதிகளைத் தளர்த்தினால், விவசாயிகளுக்கு உதவக்கூடிய முறையில் தளர்த்தினால், விவசாயிகள் நினைக்கிறபடி, தொழிலாளர் நினைக்கிறபடி மாற்றினால் யாரும் குறை சொல்ல முடியாத அளவுக்கு அந்த இலாகா இருக்கும் என்று சொல்ல விரும்புகிறேன். அதோடு, எல்லா ஏழை எளிய விவசாயிகளுக்கும் மின்சாரம் கிடைக்கும் ஒரு நிலைமை ஏற்படும். ஆனால் அந்த சட்ட விதிகளை அரசாங்கமும் மின்சாரக் கழகமும் சேர்ந்துதான் மாற்ற வேண்டும்; அல்லது தளர்த்த வேண்டும். அந்த விதிகளை மாற்ற வேண்டுமென்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்னாலே இந்தச் சட்டமன்றத்தில் பல்வேறு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை மீண்டும் இப்பொழுது நினைவு படுத்த விரும்புகிறேன். விதிகளைக் கொஞ்சம் தளர்த்தினால் அந்த இலாகாவில் வேலை செய்கிற ஆட்கள்—உள்ளபடியே வேலை செய்கிறார்கள், செய்ய விரும்புகிறார்கள்—இன்னும் நன்றாக வேலை செய்வார்கள் என்று கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஒருவருக்கு ஆபத்து நேரத்தில்தான் மின்சார இலாகாவினர் என்ன செய்கிறார்கள் என்று நாம் உணருகிறோம்—உணர முடிகிறது. ஒரு புயல் காற்று அடிக்கிற போதோ, அல்லது மழைக் காலங்களிலோ, இயற்கையினால் தொல்லைகள் ஏற்படுகிற எல்லா நேரங்களிலும் மின்சாரத் துறையினர் செய்கிற வேலைகள் ஆபத்தான வேலைகள், மிகத் தேவையான வேலைகள் என்பதை நாம் உணருகிறோம். மக்களைக் காப்பாற்ற அப்படிப்பட்ட வேலைகளை அவர்கள் செய்தாலும், சில இடங்களில் குறைபாடுகள் இருக்கத்தான் செய்யும். நாம் கூடிய விரைவில் விதிகளை, கட்டுப்பாடுகளைத் தளர்த்தினால் அந்த இலாகாவில் எத்தகைய குறைபாடுகளும் இருக்காது என்று நான் நம்புகிறேன். அதற்குக் காரணம் சில இடங்களில் ஏதாவது தவறு நடந்துவிட்டால் அது தலைமைப் பீடத்திற்குத் தெரியுமா என்று கேட்டால் அந்த அளவிற்கு அவர்களுக்கு அவகாசம் இல்லை. தவறு நடந்தது அந்த நபருக்குத் தெரிவதற்குள் அந்த ஆளே

அந்த இடத்தை விட்டு மாறிவிடுகிற நிலைமை வரும். இப்படியெல்லாம் அவர்கள் நடந்தாலும் இந்த நாட்டிற்கு நல்ல மின்சார சப்ளை செய்ய வேண்டுமென்ற தலைவர் அவர்களைக்கொண்ட அந்த இலாகா நல்ல முறையில் நடந்து வருகிறது.

எல்லாத் துறைகளையும்விட ஆபத்து நிறைந்த இலாகா அந்த இலாகாதான். மனிதன் உயிரோடு போராடுகிற ஒரு இலாகா இருக்குமானால் அது மின்சார இலாகாதான். குறிஞ்சிப்பாடியில் நடந்த ஒன்றை அந்த இலாகா தெரிந்துகொள்ள வேண்டுமென்பதற்காக சொல்ல விரும்புகிறேன். ஒரு இடத்தில் மின்சார சப்ளை செய்வதற்காக வேலை செய்துகொண்டிருக்கும்போது வேலை செய்துகொண்டிருந்த ஒருவர் அடிபட்டு இறந்துவிட்டார். அவர் கூடவே வேலை செய்துகொண்டிருந்த தொழிலாளிக்கு அதைப் பார்த்ததும் பயித்தியம் பிடித்துக்கொண்டது. உயிர் போவதைப் பார்த்துக்கொண்டு இருந்த அந்தத் தொழிலாளிக்குப் பயித்தியமே கண்டு விட்டது. அவர் அந்த ஊரில் எந்தக் கம்பத்தைப் பார்த்தாலும் கிலி பிடித்தவராகிறார். அவரை டாக்டர்கள் எல்லாம்கூட பரிசோதித்தார்கள். ஆனால் பயித்தியத்தைப் போக்க முடியவில்லை. இதை அதிகாரிகள் உணருகிறார்கள். அப்படிப்பட்ட வேலை செய்கிறபோது ஆபத்துத் தருகின்றது ஒன்று இருக்கின்றது என்றால் அது மின்சார இலாகாதான். அதில் வேலை செய்கிறவர்கள்தான் அப்படிப்பட்ட ஆபத்தான நிலைமையில் வேலை செய்கிறார்கள்.

தொழிலாளிகள் பழி வாங்கப்பட்டார்கள் என்று எனக்கு முன்னால் பேசிய கனம் உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டார்கள். தொழிலாளர்கள் ஏதாவது தவறு செய்தாலும் அதை மறந்து மீண்டும் அவர்களுக்கு நல்ல முறையில் அந்த இலாகாவில் தொடர்ந்து வேலை கொடுத்து, அவர்கள் எந்த எந்த குறைகளைச் சொல்கிறார்களோ அவைகளை அதிகாரிகள் முதலில் கவனித்து, மின்சார இலாகா, அரசாங்கத்திற்கு சொல்ல வேண்டுமென்பதை மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.

பொதுவாக, நெய்வேலிக்குப் பக்கத்தில் நான் இருப்பதால் ஒன்று சொல்ல விரும்புகிறேன். நெய்வேலிக்குப் பக்கத்தில் திருச்சிக்குப் போக வேண்டி இருக்கிறது மின்சார அனுமதி பெற. அந்த நிலையில் தென்னாற்காடு மாவட்டம் இருக்கிறது. தென்னாற்காடு மாவட்டத்தில் 'செராமிக்' சென்டர் இருக்கிறது. இன்னும் கிழக்கே போனால் சேஷசாயி இண்டஸ்ட்ரிஸ் இருக்கிறது. இப்படிப்பட்ட தொழிற்சாலை நிறுவனங்கள் தென்னாற்காடு மாவட்டத்திலே அதிகம் இருக்கின்றன. நான் இரண்டு ஆண்டுகளாகக் கோரி வந்த கோரிக்கைகளை தென்னாற்காடு மாவட்ட மின்சார நிறுவனத்தார் நிறைவேற்றியதற்காக அவர்களுக்கு நான் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.





அடுத்தபடியாக நெய்வேலியில் உள்ள அனைத்து மின்சார நிறுவனம் மத்திய அரசாங்கத்தின் மேற்பார்வையில் இருக்கிறது. அப்படி இருப்பதனால் இலாப நஷ்டம் எல்லாம் மத்திய அரசாங்கத்திற்குப் போகிறது. மாநில அரசாங்கமே--தமிழக அரசே—முழுப் பொறுப்பையும் ஏற்று நடத்தினால் மின்சாரம் நிறையக் கிடைக்கும். தென்னாற்காடு மாவட்டத்திலிருக்கிற பல கிராமங்களுக்கு வசதி கிடைக்கும். தென்னாற்காடு மாவட்டத்தில் நஞ்சை பயிர்களும் நிறைய இருக்கிறது. அங்கு, தஞ்சையிலுள்ளதைப் போல் மோட்டார் பம்பு செட்டு வசதி கொடுத்தால் அங்குள்ள பல கிராமங்களுக்கு குறிப்பாக 7 கிராமங்கள் உடனடியாகப் பயன் பெறும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன். ஆகவே நெய்வேலி மின்சாரத்தை நாம் பயன்படுத்த வேண்டுமென்ற முறையில், மாநில அரசாங்கம் முழுப்பொறுப்பையும் ஏற்றுக்கொண்டு மின்சாரத்தை வழங்குவதற்குரிய காரியத்தில் ஈடுபடவேண்டுமென்று கேட்டுக் கொண்டு, எனக்கு முடிக்கவேண்டுமென்று ஆணை பிறந்ததால் இத்துடன் முடித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு மாற்றுத் தலைவர் (திரு. வி. எஸ். கோவிந்தராஜன்): இத்துடன் இன்றைய நடவடிக்கைகள் முடிவடைகின்றன. மீண்டும் திங்கட்கிழமை (27—11—1967) காலை 9 மணியளவில் பேரவை கூடும்.

பின்னர் பேரவை ஒற்றிவைக்கப்பட்டது. பி. ப. 5-37

## 6. பேரவைமுன் வைக்கப்பட்ட ஏடுகள்

### A. Statutory Rules and Orders.

112. *Notification issued with G.O. Ms. No. 55, Legislative Assembly, dated the 27th September 1967, making certain amendments to the Madras Legislature Travelling Allowance Rules, 1955, published at pages 131–138 of the Rules Supplement to Part II of the* Fort St. George Gazette, *dated the 27th July 1955, as subsequently amended. [Laid on the Table of the House under section 14 (3) of the Madras Payment of Salaries Act, 1951 (Madras Act XX of 1951).]*

113. *Notification issued with G.O. Ms. No. 1648, Rural Development and Local Administration, dated the 9th September 1967, making an amendment to the rules prescribing the remuneration and conditions of appointment of the Chairman of the Taxation Appeals Committee of the Corporation of Madras, published at page 126 of the Rules Supplement to Part I-A of the* Fort St. George Gazette, *dated the 14th November 1956. [Laid on the Table of the House under section 348 (d) of the Madras City Municipal Corporation Act, 1919 (Madras Act IV of 1919).]*

**B. Reports, Notifications and other papers.**

* 11. *Speech of Hon. Thiru V. R. Nedunchezhiyan, Minister for Education and Industries, initiating the discussions in the Madras Legislature on the Annual Financial Statement for* 1967–68 *and the Supplementary Financial Statement for* 1966–67 *of the Madras State Electricity Board* (English and Tamil).

* 12. *Statement showing the action taken on the suggestions made by the Members of the Madras Legislature during the discussions on the Annual Financial Statement of the Madras State Electricity Board for the year* 1966–67 (English and Tamil).

D 1
V211,31 N67
N67.6.2

64979

*Placed on the table of the House on 24th November 1967.

## LIST OF AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS.

### IN MADRAS CITY.

Messrs. Account Test Institute, Egmore, Madras-8.
The City Book Co., Mylapore, Madras-4.
Messrs Higginbothams, Private Limited Madras-2.
Messrs. New Century Book House (Private) Limited, Madras-2.
Messrs. P. Varadachari & Co., Madras-1.
Messrs. C. Subbiah Chetty & Sons, Madras-5.
Sri S. S. Srinivasaraghavan, Royapettah, Madras-14.
The Educational Agencies, Book-sellers, Madras-1.
The Universal Book House, Moore Market, Madras-3.
Messrs. Rukmani Corporation, Vepery, Madras-7.
Messrs. Mohan Pathipagam and Book Depot, Madras-5.
Messrs. Book Corner, Book-Sellers, No. 2/4. Mount Road, Madras-2.

### IN MUFASSAL OF MADRAS STATE.

Sri E. M. Gopalakrishna Kone, Madurai, Madurai district.
The Oriental Book House, Madurai.
Messrs. Vivekananda Press, Printers, Publishers and Book-sellers, Madurai.
Sri A. Venkatasubban, Vellore, North Arcot district.
Messrs. Bharatha Matha Book Depot, Thanjavur, Thanjavur district.
Messrs. P. V. Nathan & Co., Kumbakonam, Thanjavur district.
Messrs. Appar Book Stall, Thanjavur.
Messrs. P. N. Swaminathasivam & Co., Pudukkottai, Tiruchirappalli district.
Messrs. S. Krishnaswamy & Co., Tiruchirappalli.
Messrs. Palaniappa Brothers, Tiruchirappalli.
Sri S. R. Subramania Pillai, Tirunelveli, Tirunelveli district.
Messrs. Nellai Puthaga Nilayam, Book-sellers, 10, Thana Muna Buildings, Tirunelveli Junction.
Sri B. Aruldoss, Villupuram Town, South Arcot district.
Sri V. B. Ganesan, Villupuram, South Arcot district.
Messrs. Vasantham Stores, Book-sellers, Cross Cut Road, Coimbatore.
Messrs. Mercury Book Company, 223, Raja Street, Coimbatore.
Sri S. M. Jagannathan, Book-seller and Publisher, Nagercoil, Kanyakumari district.
Messrs. A. K. Chandriah Chettiar & Sons, Salem.
Messrs. Meenakshi Pathipagam, Pudukkottai.
Messrs. K. V. Narayana Iyer & Sons, Dindigul, Madurai district.
Messrs. Balaji Book House, Vellore, North Arcot district.
Messrs. Jayakumari Stores, Nagercoil, Kanyakumari district.
Messrs. Baby Stores, Book-sellers, Villupuram, South Arco (district.
Messrs. Dinamani Stores, Coimbatore-18.
Messrs. Bharathi Puthaga Nilayam, Publishers and Book-sellers, 1-B, Town Hall Road, Madurai-1.

### IN OTHER STATES.

Messrs. Janatha A[illegible]cies, Book-sellers, Gudur.
Messrs. Jain Book Agency, New Delhi-1.
Messrs. International Book House, Trivandrum.
Messrs. Firma K. L. Mukhopadhyay, Calcutta-12.
Messrs. Book Links Corporation, Narayanaguda, Hyderabad-29
Messrs. The Books Syndicate, Hyderabad-1.
Messrs. Labour Law Publications. Hyderabad.

PUBLISHED UNDER RULES 234 AND 237 OF THE MADRAS LEGISLATIVE ASSEMBLY RULES AND PRINTED BY THE DIRECTOR OF STATIONERY AND PRINTING, MADRAS.



| (1) | (2) | (1) | (2) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |
| | | | |